தமிழ்நாடு அரசு

# எட்டாம் வகுப்பு

## முதல் பருவம்

### தொகுதி 1

## தமிழ்

## ENGLISH

விற்பனைக்கு அன்று

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு
இலவசப்பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

© தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு – 2012
திருத்திய பதிப்பு – 2013
திருத்திய பதிப்பு – 2014
(பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006

நூல் அச்சாக்கம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006

இந்நூல் 80 ஜி எஸ் எம் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது

விலை : ரூ.

வெப் ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

பாடநூல் வலைதளம்

www.textbooksonline.tn.nic.in

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

# THE NATIONAL ANTHEM

Jana–gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Punjaba-Sindhu-Gujarata-Maratha-
Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
Uchchhala-jaladhi-taranga
Tava subha name jage,
Tava Subha asisa mage,
Gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
Bharata-bhagya-vidhata
Jaya he, jaya he, jaya he,
Jaya jaya, jaya, jaya he.

- Rabindranath Tagore.

**SHORT VERSION**

Jana-gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Jaya he, jaya he, jaya he
Jaya jaya, jaya, jaya he.

## AUTHENTIC ENGLISH TRANSLATION OF THE NATIONAL ANTHEM

Thou art the ruler of the minds of all people,
Thou dispenser of India's destiny.
Thy name rouses the hearts of the Punjab, Sind,
Gujarat and Maratha, of Dravid, Orissa and Bengal.
It echoes in the hills of the Vindhyas and Himalayas,
mingles in the music of the Yamuna and Ganges
and is chanted by the waves of the Indian Sea.
They pray for Thy blessings and sing Thy praise
The saving of all people waits in Thy hand,
Thou dispenser of India's destiny.
Victory, Victory, Victory to Thee.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல், பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

## INVOCATION TO GODDESS TAMIL

Bharat is like the face beauteous of Earth clad in wavy seas;

Deccan is her brow crescent-like on which the fragrant 'Tilak' is the blessed Dravidian land.

Like the fragrance of that 'Tilak' plunging the world in joy supreme reigns Goddess Tamil with renown spread far and wide.

Praise unto 'You, Goddess Tamil, whose majestic youthfulness, inspires awe and ecstasy.'

## THE NATIONAL INTEGRATION PLEDGE

"I solemnly pledge to work with dedication to preserve and strengthen the freedom and integrity of the nation."

"I further affirm that I shall never resort to violence and that all differences and disputes relating to religion, language, region or other political or economic grievances should be settled by peaceful and constitutional means."

## A STUDENT'S VOW BEFORE MOTHER INDIA

Name :

Class : School :

I shall overcome the obstacles raised by caste and communal prejudices and work for the greatness of my Motherland putting to the fullest use the benefits that I derive through education.

Vandemataram!

Signature

## பொருளடக்கம்

### தமிழ் (1 – 89)


| இயல் | | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | செய்யுள் | வாழ்த்து | 2 |
| | | திருக்குறள் | 3 |
| | உரைநடை | தமிழ் வளர்த்த சான்றோர்கள் | 8 |
| | துணைப்பாடம் | ஜி.யு.போப் | 12 |
| | இலக்கணம் | குற்றியலுகரம், குற்றியலிகரம், முற்றியலுகரம் | 15 |
| 2. | செய்யுள் | இனியவை நாற்பது | 35 |
| | | தமிழ்ப்பசி | 37 |
| | உரைநடை | செய்தி உருவாகும் வரலாறு | 39 |
| | துணைப்பாடம் | மகிழ்ச்சிக்கான வழி | 44 |
| | இலக்கணம் | இலக்கியவகைச் சொற்கள் | 46 |
| 3. | செய்யுள் | திருவள்ளுவமாலை | 60 |
| | | நளவெண்பா | 61 |
| | உரைநடை | உலகம் உள்ளங்கையில் | 67 |
| | துணைப்பாடம் | ஆவணம் | 73 |
| | இலக்கணம் | இயல்பு வழக்கு, தகுதி வழக்கு | 75 |


### மனப்பாடப் பகுதி

| இயல் | செய்யுள் | அடிகள் |
|---|---|---|
| 1 | வாழ்த்து | 2 |
| | திருக்குறள் (2,3,5,6,8) | 10 |
| 2. | இனியவை நாற்பது (2) | 4 |
| 3. | நளவெண்பா (8) | 4 |
| | மனப்பாட அடிகள் மொத்தம் | 20 |

(பாடநூலுள் * இவ் உடுக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப் பகுதி)

# தமிழ்

## எட்டாம் வகுப்பு

### முதல் பருவம்

# வாழ்த்து

முத்தே பவளமே மொய்த்தபசும் பொற்சுடரே
சித்தேஎன் னுள்ளத் தெளிவே பராபரமே
கண்ணே கருத்தேயென் கற்பகமே கண்ணிறைந்த
விண்ணே ஆனந்த வியப்பே பராபரமே. *

– தாயுமானவர்



பொருள் : மேலான பரம்பொருளே! நீ முத்தாகவும் பவளமாகவும் பொன்னொளியாகவும் பேரறிவாகவும் என் உள்ளத் தெளிவாகவும் இருக்கின்றாய். கண்ணாகவும் என் கருத்தாகவும் கேட்டவற்றை எல்லாம் வழங்கும் கற்பக மரமாகவும் கண்ணுள் நிறைந்த விண்ணாகவும் மகிழ்ச்சியில் தோன்றும் வியப்பாகவும் காட்சியளிக்கின்றாய். உன் அருள் வேண்டி நிற்கின்றேன், அருள்வாயாக.

சொற்பொருள் : சுடர்–ஒளி; ஆனந்தம் – மகிழ்ச்சி; பராபரம் – மேலான பொருள், இறைவன்.

ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | தாயுமானவர். |
| பெற்றோர் | : | கேடிலியப்பர் – கெசவல்லி அம்மையார். |
| மனைவி | : | மட்டுவார்குழலி. |
| ஊர் | : | நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருமறைக்காடு (வேதாரண்யம்). |
| நூல் | : | தாயுமானவர் திருப்பாடல் திரட்டு. |
| பணி | : | திருச்சியை ஆண்ட விசய ரகுநாத சொக்கலிங்கரிடம் கருவூலஅலுவலர். |
| காலம் | : | கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டு. |

நூல் குறிப்பு : வாழ்த்தாக இடம்பெற்றுள்ள பாடல், தாயுமானவர் திருப்பாடல் திரட்டு என்னும் நூலில் பராபரக்கண்ணி என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது. இந்நூல், தெய்வத் தமிழின் இனிமையும் எளிமையும் பொருந்திய செய்யுள் நடையால் ஆனது; கற்பார்க்கு மனத்தூய்மை, பத்திச்சுவை ஆகியனவற்றை ஊட்டும்.

திருச்சிராப்பள்ளி மலைமீது எழுந்தருளியுள்ள இறைவனான தாயுமானவரின் திருவருளால் பிறந்தமையால், இவருக்குத் தாயுமானவர் என்று பெயர் சூட்டப்பட்டது. தாயுமானவர் நினைவு இல்லம் இராமநாதபுரம் மாவட்டத்து இலட்சுமிபுரத்தில் உள்ளது.

* மனப்பாடப் பகுதி

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. பொருள் எழுதுக.

1. சுடர் ________ 2. ஆனந்தம் ________ 3. பராபரம் ________

2. பிரித்து எழுதுக.

1. பசும்பொற்சுடர் ________ 2. கண்ணிறைந்த ________

3. சேர்த்து எழுதுக.

1. என் + உள்ளம் ________ 2. பெருமை + அறிவு ________

4. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. வாழ்த்துப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் ________.
2. தாயுமானவர் பிறந்த ஊர் ________.

ஆ) குறுவினா

தாயுமானவர் – குறிப்பு எழுதுக.

இ) சிறுவினா

இறைவன், தாயுமானவருக்கு எவ்வாறு காட்சியளிக்கிறார் ?

தமிழ்

# திருக்குறள்

## நட்பு

1. செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

பொருள் : நட்பைப்போலச் செய்துகொள்வதற்கு அரிய உறவுகள் எவையும் இல்லை. அந்த நட்பைப்போலச் செய்கின்ற செயலுக்குச் சிறந்த பாதுகாப்பு வேறு எவையும் இல்லை.

சொற்பொருள் : வினை – செயல்; காப்பு – காவல்.

2. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு. *

பொருள் : அறிவுடையவர்களின் நட்பு வளர்பிறைபோல நாளும் வளரும்; அறிவிலார் நட்பு தேய்பிறைபோல நாளும் தேயும்.

சொற்பொருள் : நீரவர் – அறிவுடையார்; கேண்மை – நட்பு ; பேதையார் – அறிவிலார்.

3. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. *

பொருள் : நல்ல நூல்களின் பொருள் கற்கக்கற்க இன்பந்தரும். அதுபோல, பண்புடையாரின் நட்பானது பழகப்பழக இன்பம் தரும்.

சொற்பொருள் : நவில்தொறும் – கற்கக்கற்க; நயம் – இன்பம்.

4. நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.

பொருள் : நட்பு என்பது, சிரித்துப் பேசி மகிழ்வதற்கு மட்டுமன்று; நண்பரிடத்துத் தவறு காணும்போது, அவரைக் கடிந்துரைத்துத் திருத்தி நல்வழிப்படுத்துதலும் ஆகும்.

சொற்பொருள் : நகுதல் – சிரித்தல்; நட்டல் – நட்புக்கொள்ளுதல்; இடித்தல் – கடிந்துரைத்தல்.

5. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும். *

பொருள் : இருவர் சேர்ந்திருத்தலும் நெருங்கிப் பழகுதலும் நட்பாகாது. இருவர்தம் ஒத்த மனவுணர்வே நட்புரிமையைக் கொடுக்கும்.

சொற்பொருள்: கிழமை – உரிமை.

6. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு. *

பொருள் : முகம் மட்டும் மலரும்படி நட்புக்கொள்வது நட்பாகாது; உள்ளம் மகிழும்படி அன்பாக நட்புக்கொள்வதே நல்ல நட்பு.

சொற்பொருள் : முகநக – முகம் மலர; அகம் – உள்ளம்.

7. அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.

பொருள் : அழிவைத்தரும் துன்பங்களிலிருந்து நண்பனை விலக்கி, அவனை நல்வழியில் செலுத்துதல் வேண்டும். அவனுக்கு அழிவுநேரும்போது உடனிருந்து தானும் அதில் பங்கேற்று, அழிவிலிருந்து மீட்டல் வேண்டும்.

சொற்பொருள் : ஆறு – நல்வழி; உய்த்து – செலுத்தி; அல்லல் – துன்பம்.

8. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. *

பொருள் : உடுத்திய ஆடை நழுவும்போது தன்னையறியாமல் கையானது, தானே சென்று காக்கும்; அதுபோல, நண்பன் துன்புறும்போது விரைந்து சென்று அவனை அத்துன்பத்திலிருந்து காப்பதே நட்பு.

சொற்பொருள் : உடுக்கை – ஆடை; இடுக்கண் – துன்பம்; களைவது – நீக்குவது.

9. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

பொருள் : நட்புக்குச் சிறந்த நிலை எதுவென்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், இயலும்பொழுது எல்லாம் உதவி செய்து தாங்குதல்.

சொற்பொருள் : கொட்பின்றி – வேறுபாடு இல்லாமல்; ஊன்றும் – தாங்கும்.

10. இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு.

பொருள் : இவர் எமக்கு இத்தகைய அன்பினர்; யாம் இவர்க்கு இத்துணைச் சிறப்புடையவர் எனப் புகழ்ந்து கூறினும் அது கீழான நட்பாகும்.

சொற்பொருள் : புனைதல் – புகழ்தல்; புல் – கீழான





ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருவள்ளுவர். |
| வேறு பெயர்கள் | : | முதற்பாவலர், பொய்யில் புலவர்,பெருநாவலர், செந்நாப்போதார். |
| காலம் | : | கி.மு. 31 இல் பிறந்தவர் என உறுதி செய்து திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்பட்டுள்ளது. |
| சிறப்பு | : | வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு. – பாரதியார்<br>வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே. – பாரதிதாசன் |

நூல் குறிப்பு : திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. குறள் வெண்பாக்களால் ஆனதால், "குறள்" எனவும், மேன்மை கருதித் 'திரு' என்னும் அடைமொழியுடன் 'திருக்குறள்' எனவும் வழங்கப்பெறுகிறது. நாடு, மொழி, இனம், சமயம் எல்லாம் கடந்து எக்காலத்துக்கும் பொருந்துவதாக அமைந்தமையால், இஃது 'உலகப்பொதுமறை' எனப் போற்றப்படுகிறது.

மக்கள், வாழ்வில் அடையத்தக்க உறுதிப்பொருள்களாகிய அறம், பொருள், இன்பம் என்னும் முப்பெரும் பிரிவுகளையும் விரித்து உரைப்பது திருக்குறள். எனவே, இந்நூல் 'முப்பால்' எனவும் பெயர் பெற்றது. இது நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும் பெற்றுள்ளது.

வாயுறை வாழ்த்து, பொதுமறை, பொய்யா மொழி, தெய்வ நூல் முதலிய பெயர்களும் இதற்கு உண்டு. இதன் பெருமையை உணர்ந்த வீரமாமுனிவர் இலத்தீனிலும், ஜி.யு. போப் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தனர்.

இந்நூல், உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருவள்ளுவமாலை என்னும் நூல், இதன்பெருமைக்கும் சிறப்புக்கும் சான்றாகத் திகழ்கிறது.

- உருசிய நாட்டில் அணு துளைக்காத கிரெம்ளின் மாளிகையில் உள்ள சுரங்கப் பாதுகாப்புப் பெட்டகத்தில் திருக்குறளும் இடம்பெற்றுள்ளது.
- இங்கிலாந்து நாட்டிலுள்ள அருங்காட்சியகத்தில் திருக்குறள், விவிலியத்துடன் வைக்கப்பட்டுள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. பொருள் எழுதுக.

| | | |
|---|---|---|
| 1. கேண்மை ________ | 3. அல்லல் ________ | 5. நகுதல் ________ |
| 2. உடுக்கை ________ | 4. கிழமை ________ | 6. இடுக்கண் ________ |

2. பிரித்து எழுதுக.

| | |
|---|---|
| 1. செயற்கரிய ________ | 3. பொருட்டன்று ________ |
| 2. நட்பன்று ________ | 4. ஆறுய்த்து ________ |

3. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. திருக்குறள் ________ நூல்களுள் ஒன்று.
2. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ________ .
3. திருக்குறளின் பெருமையை விளக்கும் நூல் ________ .
4. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
   அகநக ________ நட்பு.
5. நிறைநீர நீரவர் கேண்மை
   இத்தொடரில் நட்பு என்னும் பொருள் தரும் சொல் ________ .

4. பொருளுணர்ந்து பொருத்துக.

1. பேதையார் நட்பு – உடுக்கை இழந்தவர் கை போன்றது.
2. பண்புடையாளர் தொடர்பு – வளர்பிறை போன்றது.
3. அறிவுடையார் நட்பு – நவில்தொறும் நூல்நயம் போன்றது.
4. இடுக்கண் களையும் நட்பு – தேய்பிறை போன்றது.

தமிழ்

### ஆ) குறுவினாக்கள்

1. உலகப்பொதுமறை எனத் திருக்குறள் அழைக்கப்படுவது ஏன்?
2. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை ?
3. அறிவுடையார் நட்பு எதனைப் போன்றது?
4. பண்புடையாளர் தொடர்பு எத்தன்மையது?
5. ‘உடுக்கை இழந்தவன் கைபோல’ இவ்வுவமையைப் பொருளோடு பொருத்துக.
6. நட்புக்குச் சிறந்த இடம் எது?
7. எது கீழான நட்பு?

### இ) சிறுவினாக்கள்

1. திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை ?
2. பாரதியும் பாரதிதாசனும் திருவள்ளுவரை எவ்வாறு சிறப்பித்துள்ளனர்?
3. நட்பைப்போன்ற சிறந்த பாதுகாப்பு வேறில்லை என வள்ளுவர் கூறக்காரணம் யாது?
4. ‘புணர்ச்சி பழகுதல் வேண்டா’ என வள்ளுவர் கூறுவது ஏன்?

### ஈ) நெடுவினா

நட்பு என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**அறிந்துகொள்வோம்**

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. – குறள், 350

இக்குறளைப் படிக்கும்போது உதடுகள் ஒட்டும்; இதன் பொருளோ இறைவனைப் பற்றி நிற்கும்.

அறம், பொருள், இன்பம் என முப்பாலும் தப்பாமல் வந்த குறள் :

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். – குறள், 754

தமிழ்

உரைநடை

# தமிழ் வளர்த்த சான்றோர்கள்

செந்தமிழ் ஒரு பூந்தோட்டம். அப்பூந்தோட்டத்தில் அன்றலர்ந்த மலர்கள் மணம் பரப்பி வருகின்றன. அம்மலர்கள் ஒரு செடியிலோ கொடியிலோ பூத்தவை அல்ல; வண்ணம், வடிவம், அளவு, மணம் ஆகியவற்றால் ஒன்றுபட்டவையும் அல்ல. அவ்வாறே காலந்தோறும் நந்தமிழ்நாட்டில் தமிழ்ச் சான்றோர் பலர் தோன்றித் தமிழ்மொழிக்குப் புத்துயிரூட்டிப் புதுமணம் பரப்பி வருகின்றனர். தம்முள் மதம், இனம், நாடு, மொழி ஆகிய வேறுபாடுகளின்றித் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்து வருகின்றனர்.

புதுக்கவிதைக்குப் பாரதியார், சமுதாயப் புரட்சிக்குப் பாரதிதாசனார், பொதுவுடைமைக்குத் திரு. வி. கலியாணசுந்தரனார், தனித்தமிழுக்கு மறைமலையடிகள், பேச்சுக்கலைக்கு அறிஞர் அண்ணாதுரை, சிறுகதைக்குப் புதுமைப்பித்தன் முதலியோர் தமிழுக்குத் தொண்டாற்றினர். எண்ணற்ற தமிழறிஞர்கள் கவிஞர்களாகவும் எழுத்தாளர்களாகவும் உரையாசிரியர்களாகவும் தமிழுக்குத் தொண்டாற்றிச் சிறப்புச் சேர்த்தவண்ணம் உள்ளார்கள். இவர்களுக்கு முன்பே தமிழில் அகரமுதலியைத் தோற்றுவித்தும் இசைப்பாடல்கள் பாடியும் தமிழுக்கு உரைவளம் சேர்த்தும் தொண்டாற்றிய தமிழறிஞர் பலர் உள்ளனர். அவருள் சிலரைப் பற்றி இப்பாடத்தில் அறிந்துகொள்வோம்.

## வீரமாமுனிவர் (1680–1747)



இத்தாலி நாட்டில் பிறந்த வீரமாமுனிவரின் இயற்பெயர் கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி. இவர், தமது முப்பதாம் அகவையில் சமயத் திருப்பணியாற்ற தமிழகத்துக்கு வந்தார்; ஆங்கிலம், எபிரேயம், கிரேக்கம் ஆகிய மொழிகளை அறிந்திருந்தாலும் தமிழ்மொழியின்பால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். தமிழ்மொழிப் பற்றினால் 'தைரியநாதர்' என முதலில் சூட்டிக்கொண்ட தம் பெயரைத் தனித்தமிழாக்கி 'வீரமாமுனிவர்' எனச் சூட்டிக் கொண்டார். தமிழ்மொழி பயின்றதோடு தெலுங்கு, வடமொழி முதலிய மொழிகளையும் அவர் கற்றுத் தேர்ந்தார்.

வீரமாமுனிவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் பல. இவர், தமிழில் முதன்முதலாகச் சதுரகராதி என்னும் அகரமுதலியை வெளியிட்டார்; தேம்பாவணி என்னும் கிறித்தவக் காப்பியத்தை இயற்றினார்; தமிழ் எழுத்து வரிவடிவத்தைத் திருத்தி, எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொண்டார்; தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலைப் படைத்தார்; கலம்பகம், அம்மானை முதலிய சிற்றிலக்கியங்களை இயற்றினார்; பரமார்த்தகுரு கதை என்னும் நகைச்சுவை நூலை எழுதினார்.

“தேம்பாவணி, காவலூர்க்கலம்பகம் கதம்ப மாலையாகக் காட்சியளிக்கின்றது; தொன்னூல் பொன் நூலாக இலங்குகின்றது; சதுரகராதி முத்தாரமாக மிளிர்கின்றது; வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகின்றார்” எனச் சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை வீரமாமுனிவருக்குப் புகழாரம் சூட்டினார்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராதவர் வீரமாமுனிவர். ஆனால், நந்தமிழைக் கற்றுத் தமிழில் இலக்கண இலக்கியங்கள் இயற்றித் தமிழுக்கு மாபெரும் தொண்டாற்றியுள்ளார். இவர் ஆற்றிய தமிழ்த்தொண்டும் மாறாத் தமிழ்ப்பற்றும் தமிழுள்ளவரை தமிழ் உள்ளங்களில் மணம் பரப்பிக் கொண்டிருக்கும்.



## குணங்குடி மஸ்தான் சாகிபு (1788–1835)

“மாதவஞ்சேர் மேலோர் வழுத்தும் குணங்குடியான்” என்று புலவர் பெருமக்களால் புகழப்பட்டவர் குணங்குடி மஸ்தான் சாகிபு. இவரின் இயற்பெயர் சுல்தான் அப்துல் காதிறு என்பதாகும். இவர், தம் இளவயதிலேயே முற்றும் துறந்தவராய் வாழ்ந்தார். சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைப்பகுதிகளுக்குச் சென்று, தனித்திருந்து ஞானம் பெற்றார். இவர், தாயுமானவரின் பாடல்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டார்; எனவே அவருடைய பராபரக்கண்ணியைப் போலவே ஓசைநயமிக்க இசுலாமியப் பாடல்களை இயற்றி அருளினார். பராபரக்கண்ணி, எக்காலக்கண்ணி, மனோன்மணிக் கண்ணி, நந்தீசுவரக் கண்ணி முதலியன இவர் பாடிய வேறு சில கண்ணிகள்.

இவர்தம் பாடல்கள், உலகின் உண்மை நிலையை உணர்த்துவன; என்றும் அழியாப் பேரின்பப் பெருவாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்வன. இவர் குருநிலை, தவநிலை, துறவுநிலை, நியமநிலை, காட்சிநிலை, தியானநிலை, சமாதிநிலை எனப் பொருள்தரும் வகையில் பாடல்கள் பல இயற்றித் தமிழுக்குத் தொண்டாற்றினார். திருத்தணிச் சரவணப் பெருமாள், இவர்மீது கொண்ட பற்றினால் நான்மணிமாலை ஒன்றனைப் பாடியுள்ளார். அந்நூலில், “மடல் சூழ்புவியில் உளத்திருளைக் கருணை ஒளியினாற் களைந்து, விடல் சூழ்பவரின் குணங்குடியான், மிக்கோன் எனற்குஓர் தடையுளதோ ?” எனக் கேட்கின்றார். ‘தடை உண்டு என உரைப்பார் தமிழுலகில் இல்லை’. குணங்குடி மஸ்தான் பாடிய இசைப்பாடல்கள் இன்றும் பல இடங்களில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

## ஆறுமுக நாவலர் (1822–1879)



யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர் ஆறுமுக நாவலர். இவருடைய இயற்பெயர் ஆறுமுகனார் என்பதாகும். இவர், இளமையிலேயே சைவ சித்தாந்த நூல்களையும் திருமுறைகளையும் தெளிவாகக் கற்றார்.

தமிழ்ப்புலமையும் ஆங்கிலப் புலமையும் ஒருசேரக் கைவரப்பெற்றார்; அதனால், இருமொழி கற்பிக்கும் ஆசிரியராகவும் திகழ்ந்தார். இவருடைய சொற்பொழிவின் வாயிலாக, இவர்தம் மொழித்திறமையையும் வாக்கு வன்மையையும் பொருள் விளக்கும் தன்மையையும் கண்டு திருவாவடுதுறை ஆதீனத்தார் மகிழ்ந்தனர். அதனால், ஆதீனத்தார் இவருக்கு 'நாவலர்' என்னும் பட்டத்தைச் சூட்டிச் சிறப்பித்தனர். இவர், சிறந்த பதிப்பாசிரியராகவும் தேர்ந்த உரைநடையாசிரியராகவும் விளங்கினார்.

ஆறுமுக நாவலரே முதன்முதலில் இலக்கண வழுவற்ற தூய்மையான எளிய தமிழ் உரைநடையைக் கையாண்டார். இவ்வாறு தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியவர் ஆறுமுக நாவலர். இவரை, 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் பரிதிமாற்கலைஞர்பாராட்டினார்.

ஆறுமுக நாவலர், சென்னையில் அச்சுக்கூடம் அமைத்தார். அந்த அச்சுக் கூடத்தில் சிறந்த தமிழ் நூல்களைப் பதிப்பித்தார். பாரதம், பெரியபுராணம், கந்தபுராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை முதலிய இலக்கிய நூல்களையும், இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம், நன்னூல் விருத்தியுரை, நன்னூல் காண்டிகையுரை, இலக்கணக்கொத்து, இலக்கணச் சூறாவளி முதலிய இலக்கண நூல்களையும் தம் அச்சுக்கூடத்தின் வாயிலாகப் பதிப்பித்தார்; முதல் வகுப்புமுதல் நான்காம் வகுப்புவரைக்கான பாலபாடங்களையும் எழுதி அச்சிட்டு வெளியிட்டார்.

தமிழின் தொன்மையும் தூய்மையும் வண்மையும் வனப்பும் தமிழர்களை மட்டுமன்றி, உலகளாவிய அளவில் வெளிநாட்டினரையும் ஈர்த்துள்ளதனைத் தமிழுலகு நன்கறியும். 'உலகம் யாவையும் தாமுளவாக்கித்' தம் கலைகளையும் சிந்தனைகளையும் வேர்விட்டுப் பயிர் வளர்த்த செந்தமிழ் மரபில் தோன்றியவர்கள், தரணியெங்கும் தமிழுக்குத் தொண்டாற்றி வருகிறார்கள்; 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனப் பாடியதோடல்லாமல், உலகம் உய்யவும், நலம்பெறவும் அடித்தளமிட்டு வருகிறார்கள். அவர்தம் வழித்தோன்றல்களாகிய இளைய தலைமுறையினர் தமிழின் சிறப்பை உணர்ந்து, தமிழின் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் நாளும் தொண்டாற்றுவாராக.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவய வினாக்கள்

**1. பிரித்து எழுதுக.**

அ) செந்தமிழ் ____________ ஆ) பேச்சுக்கலை ____________

இ) புத்துயிரூட்டி ____________ ஈ) சதுரகராதி ____________

**2. சேர்த்து எழுதுக.**

அ) புகழ் + ஆரம் ____________ ஆ) நம் + தமிழ் ____________

இ) பெருமை + இன்பம் ____________ ஈ) நன்மை + நூல் ____________

**3) கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ) புதுக்கவிதைக்கு வித்திட்டவர் ____________

ஆ) வீரமாமுனிவரின் இயற்பெயர் ____________

இ) ஆறுமுக நாவலரை, ‘வசனநடை கைவந்த வல்லாளர்’ எனப் பாராட்டியவர் ____________

### ஆ) குறு வினாக்கள்

1. தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர் நால்வரின் பெயர்களை எழுதுக.
2. வீரமாமுனிவர் அறிந்திருந்த மொழிகள் யாவை ?
3. குணங்குடி மஸ்தான் சாகிபு இயற்றிய நூல்களைக் குறிப்பிடுக.

### இ) சிறுவினாக்கள்

1. வீரமாமுனிவர் குறித்து ரா.பி. சேதுப்பிள்ளை கூறியது யாது ?
2. ஆறுமுக நாவலர் பதிப்பித்த நூல்கள் யாவை ?

### ஈ) நெடுவினா

வீரமாமுனிவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் யாவை ?

துணைப்பாடம்

# ஜி. யு. போப்

தமிழன்னைக்குத் தொண்டாற்றிய சான்றோரில் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத சான்றோர்களும் குறிக்கத்தக்க இடம்பெற்றுள்ளனர். ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து, தமிழகத்தில் குடிபெயர்ந்து சமயப்பணியோடு தமிழ்ப்பணியையும் தங்கள் தலைமைப் பணியாய்க்கொண்டு தொண்டாற்றிய பெருமக்கள் பலர். அவருள் தமிழ்மொழியால் ஈர்க்கப்பட்டுத் தமிழாய் மலர்ந்து, மணம் பரப்பி, என்றும் தமிழுலகில் அழியாப்புகழ் பெற்றுள்ள சான்றோர் தவத்திரு ஜி. யு. போப் ஆவார்.

## பிறப்பும் இளமையும்

ஜி. யு. போப் என்றழைக்கப்படும் ஜியார்ஜ் யுக்ளோ போப், கி.பி 1820ஆம் ஆண்டு ஏப்பிரல் 24ஆம் நாள், பிரான்சு நாட்டின் எட்வர்டு தீவில் ஜான் போப்புக்கும், கெதரின் யுளாபுக்கும் மகனாகப் பிறந்தார். போப்பின் பெற்றோர் சிறந்த கல்வியாளர்களாகவும் சமயப்பற்று மிக்கவர்களாகவும் விளங்கினர். தம் குழந்தைகளுக்குக் கல்வியையும் சமயத்தையும் கற்பித்ததுடன் நல்ல ஒழுக்கத்தையும் ஊட்டி வளர்த்தனர். ஜி.யு.போப்பும் இளமையிலேயே சுறுசுறுப்பு, விடாமுயற்சி, ஊக்கம், உழைப்பு முதலியவற்றில் எல்லாம் மேம்பட்டுத் திகழ்ந்தார்.



## தொண்டுள்ளம்

போப்பின் தமையனார் ஹென்றி என்பவர், தமிழகத்தில் கிறித்தவச் சமயத்தைப் பரப்பும் சமய குருவாகப் பணியாற்றிவந்தார். அவரைப்போன்று தாமும் சமயப்பணி ஆற்றவேண்டும் என்று போப் விரும்பினார்.

போப், தம்முடைய பத்தொன்பதாம் அகவையில் தமிழகத்தில் சமயப் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவர் பாய்மரக் கப்பலில் சென்னை வந்துசேர எட்டுத்திங்களாயின. அந்த எட்டுத்திங்களையும் வீணே கழிக்காமல், தமிழ் நூல்களையும் வடமொழி நூல்களையும் படித்தார். தமிழகம் வந்ததும் தமிழர் முன்னிலையில் சொற்பொழிவு ஆற்றும் அளவுக்குத் தம் திறமையை மேம்படுத்திக்கொண்டார்.

## தமிழகத்தில் சமயப்பணி

தமிழ்நாட்டில் சென்னைச் சாந்தோம் பகுதியில் சமயப்பணி ஆற்றிய போப், பின்னர்த் திருநெல்வேலி மாவட்டத்துக்குச் சென்று, சாயர்புரத்தில் தங்கிச் சமயப்பணி ஆற்றத் தொடங்கினார். அவர், அங்குப் பள்ளிகளை நிறுவினார்; கல்விப்பணியையும் சமயப் பணியையும் ஒருங்கே ஆற்றினார்; சமயக்கல்லூரியில் தமிழ் இலக்கியங்கள், ஆங்கில இலக்கியங்கள் முதலியவற்றையும் கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் முதலிய மொழிகளையும் கற்றுத்தர ஏற்பாடு செய்தார். கணிதம், அறிவாய்வு (தருக்கம்), மெய்யறிவு (தத்துவம்) ஆகியவற்றைக் கற்பிக்கும் கல்லூரி ஆசிரியராகவும் பணியாற்றினார்.

## திருமணம்

திருநெல்வேலி மாவட்டம் சாயர்புரத்தில் 1842முதல் 1849ஆம் ஆண்டுவரை கல்விப்பணியும் சமயப் பணியும் ஆற்றிய போப், இங்கிலாந்துக்குச் சென்றார்; 1850ஆம் ஆண்டில் திருமணம் செய்துகொண்டார். தம் மனைவியுடன் மீண்டும் தமிழகம் வந்து, தஞ்சாவூரில் சமயப்பணியாற்றத் தொடங்கினார்.

தமிழ்

## தமிழ் இலக்கிய ஆர்வம்

தஞ்சையில் பணியாற்றிய எட்டாண்டுக் காலத்தில், புறநானூறு முதலான சங்க நூல்களையும் நன்னூல் முதலான இலக்கணங்களையும் பயின்றார். திருக்குறள், திருவாசகம், நாலடியார் முதலிய நூல்களைப் பலமுறை படித்து, அவற்றின் நயங்களை உணர்ந்தார். அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டால், மேலை நாட்டவர் அறிந்து பயனுறுவர் என்னும் உயர்ந்த எண்ணத்தோடு அம்முயற்சியில் ஈடுபட்டார். இந்தியன் சஞ்சிகை, இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு முதலான ஏடுகளில், தமிழ்மொழிபற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதினார். அக்கட்டுரைகளில் புறநானூற்றுப் பாடல்களும், புறப்பொருள் வெண்பாமாலைத் திணை விளக்கங்களும், தமிழ்ப்புலவர் வரலாறும் இடம்பெற்றிருந்தன.

போப், உயர்ந்த பண்பாட்டுக்குரிய பொறுமை, சினமின்மை, நட்பு முதலானவற்றை விளக்கும் அறுநூறு செய்யுள்களை, அறநூல்களிலிருந்து ஆய்ந்தெடுத்துத் 'தமிழ்ச் செய்யுட்கலம்பகம்' என்னும் நூலாகத் தொகுத்ததோடு, அந்தப் பாக்களுக்கு விளக்கமும் தந்துள்ளார்.

## பாடநூலின் முன்னோடி

போப், தமிழைக் கற்கும் காலத்திலேயே நூலாசிரியராகவும் விளங்கினார். பள்ளியில் படிக்கும் குழந்தைகள் இலக்கணத்தை நன்கு அறிந்துகொள்ளும்வகையில் வினாவிடை முறையில் அமைந்த இரு இலக்கண நூல்களை அவர் எழுதினார்; பெரியவர்கள் கற்கும் வகையில் இலக்கண நூலொன்றனையும் படைத்தார்.

மேலைநாட்டார் தமிழை எளிதில் கற்றுக்கொள்ளும்வகையில் தமிழ் – ஆங்கில அகராதி ஒன்றனையும், ஆங்கிலம் – தமிழ் அகராதி ஒன்றனையும் போப் வெளியிட்டார்; தமிழில் வரலாற்று நூல்களையும் எழுதினார்; பழைய தமிழ் இலக்கியங்களிலிருந்து சில

செய்யுள்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டு, அதனைப் பாடநூலாக வைக்க ஏற்பாடு செய்தார். தமிழில் உரைநடை நூல் ஒன்றனையும் எழுதினார். 1858ஆம் ஆண்டில் உதகமண்டலம் சென்ற அவர், பள்ளி ஒன்றனைத் தொடங்கி, அதன் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

### தமிழ்த்தொண்டு

தாயகத்துக்குச் சென்ற போப், 1885முதல் 1908ஆம் ஆண்டுவரை இருபத்து மூன்றாண்டுகளாக இங்கிலாந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழ், தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராகப் பணிபுரிந்தார். திருக்குறளை நாற்பதாண்டுகள் படித்துச் சுவைத்த போப், அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1886ஆம் ஆண்டில் வெளியிட்டார். தமது எண்பதாம் அகவையில், 1900ஆம் ஆண்டு திருவாசகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பினை வெளியிட்டார். தம் இறுதிக்காலத்தில் புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு, திருவருட்பயன் முதலிய நூல்களையும் பதிப்பித்தார்.




ஜி.யு.போப் நினைவிடம்

தமிழின் பெருமையைத் தரணி முழுவதும் பரப்பிய போப், 1908ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பதினொன்றாம் நாள் தம் இன்னுயிரை நீத்தார். அவர், தம் கல்லறையில், 'இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்' என எழுதவேண்டுமென்று தமது இறுதிமுறியில் (உயில்) எழுதிவைத்தார். ஆங்கிலமொழியினை அன்னை மொழியாகக் கொண்ட போப், 'தமிழ் மாணவன்' என்று தம்மை அறிவித்துக்கொண்டமை, தமிழ் மாட்சியே! தமிழின் மாண்பைத் தமிழரும் உணரச்செய்த போப் அல்லரோ இறந்தும் இறவாது வாழும் தமிழ் மாணவர்! அவர், தமிழ் உள்ளங்களில் எல்லாம் இன்றும் வாழ்கின்றார்; என்றும் வாழ்வார்.

## மாதிரி வினா

**கட்டுரை வினா**

ஜி.யு.போப் அவர்களின் தமிழ்த்தொண்டினை விவரிக்க.

# குற்றியலுகரம், குற்றியலிகரம், முற்றியலுகரம்

## குற்றியலுகரம்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம், உட்காருங்கள். முன் வகுப்பில் சார்பெழுத்துகள் பற்றியும், அவற்றின் வகைகள் பற்றியும் கற்றிருக்கிறீர்கள். இப்பொழுது குற்றியலுகரம், குற்றியலிகரம், முற்றியலுகரம் ஆகியன குறித்துக் கற்றுக் கொள்ளவிருக்கிறீர்கள்.

மாணவர் : அம்மா, குற்றியலுகரம் என்றால் என்ன ?

ஆசிரியர் : குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம். குறுமை என்றால் குறுகிய என்பது பொருள். இயல் என்றால் ஓசை. உகரம் என்றால் உ என்னும் எழுத்து. எனவே, குறுகிய ஓசையுடைய உகரம் குற்றியலுகரம்.

மாணவர் : குறுகிய ஓசையா, அப்படியென்றால் என்ன அம்மா ?

ஆசிரியர் : ஒவ்வோர் எழுத்துக்கும் ஒலிக்கின்ற காலஅளவு உண்டு. குறிலுக்கு ஒரு மாத்திரை, நெடிலுக்கு இரண்டு மாத்திரை, மெய்க்கு அரை மாத்திரை என்னும் கால அளவில்தான் எழுத்துகளை ஒலித்தல் வேண்டும். உகரம் குறிலானதனால் ஒரு மாத்திரைக் கால அளவே ஒலித்தல் வேண்டும். ஆனால், அஃது ஒரு மாத்திரையளவு ஒலிக்காமல் சில சொற்களில் அரை மாத்திரைக் கால அளவே ஒலிக்கும். அவ்வாறு ஒலிப்பதனைத்தான் குற்றியலுகரம் என இலக்கண நூலார் குறிப்பிட்டுள்ளனர்.

மாணவர் : அஃது, எங்கு எப்படிக் குறையும் ? அம்மா.

ஆசிரியர் : நன்றாகக் கேட்டீர்கள். சில சொற்களுக்கு இறுதியில் ஆறு வல்லினமெய் எழுத்துகளுடன் உகரம் சேர்ந்து (க் + உ = கு; ச் + உ = சு; ட் + உ = டு; த் + உ = து; ப் + உ = பு; ற் + உ = று) வரும்போது, அந்த உகரம் அரை மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும். கு, சு, டு, து, பு, று ஆகிய இந்த ஆறு எழுத்துகள் சொல்லின் இறுதியில் வருமாறு சில சொற்களைச் சொல்லுங்கள்.

மாணவர் : பசு, காடு, பந்து.

ஆசிரியர் : நான் சொன்னதுபோல் சு, டு, து ஆகிய எழுத்துகள் சொல்லின் இறுதியில் வந்துள்ளன. ஆனால், பசு என்பதில் ஒலிக்கும் சு வையும், காசு என்பதில் ஒலிக்கும் சு வையும், அச்சொற்களோடு சேர்த்து ஒலித்துக்கேளுங்கள். ஏதேனும் ஒலிவேறுபாடு தெரிகிறதா ?

தமிழ்

மாணவர் : அவ்வளவாகத் தெரியவில்லையே, அம்மா.

ஆசிரியர் : பசு எனச் சொல்லும்பொழுது, அச்சொல்லிலுள்ள 'சு' ஒலியானது ஒரு மாத்திரை அளவு ஒலிக்கிறது. காசு என்னும் சொல்லை ஒலிக்கும்பொழுது, அச்சொல்லிலுள்ள 'சு' ஒலி அதற்குரிய ஒரு மாத்திரையளவு ஒலிக்காமல் குறைந்து ஒலிப்பதனை உற்றுக்கேட்டால், ஒலிவேறுபாட்டை அறிவீர்கள். இப்பொழுது இருசொற்களையும் ஒலித்துக்கேளுங்கள். ஒலிவேறுபாட்டை உங்களால் உணர முடிகிறதா?

மாணவர் : ஆமாம், அம்மா. குற்றியலுகரங்கள் இவ்வாறு எங்கெங்கே குறைந்து ஒலிக்கும் ?

ஆசிரியர் : கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு வல்லின எழுத்துகள் தனிநெடிலைச் சார்ந்து வரும்போதும், பல எழுத்துகளைச்சார்ந்து சொல்லின் இறுதியில் வரும்போதும் ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும். அவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம், குற்றியலுகரம் எனப்படும். சொல்லின் ஈற்று அயலெழுத்தை அடிப்படையாகக்கொண்டு அதனை அறுவகையாகப் பிரிப்பர்.

மாணவர் : எப்படியம்மா...?

ஆசிரியர் : நாகு, காசு, ஆடு, மாது, கோபு, ஆறு – இச்சொற்களை ஒலித்துப் பாருங்கள். வல்லின மெய்களின்மேல் ஊர்ந்த உகரம் (கு, சு, டு, து, பு, று) சொல்லின் இறுதியில் வந்துள்ளது. இவ்வெழுத்துகளுக்குமுன் என்னென்ன எழுத்துகள் உள்ளன ?

மாணவர் : உயிர்மெய் நெட்டெழுத்துகள் நான்கும், உயிர் நெட்டெழுத்துகள் இரண்டும் வந்துள்ளன, அம்மா.

ஆசிரியர் : நல்லது. இவ்வாறு உயிர்நெடில், உயிர்மெய் நெட்டெழுத்துகளை அடுத்து வரும் உகரமேறிய வல்லின எழுத்துகள் நெடில்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

மாணவர் : நெடில்தொடர்க் குற்றியலுகரம் என்பது தெளிவாக விளங்குகிறது, அம்மா.

ஆசிரியர் : எஃகு, கஃசு, அஃது. இந்தச் சொற்களை ஒலித்துப் பாருங்கள். கு, சு, து என்னும் வல்லின மெய்கள்மேல் ஊர்ந்த உகரமானது ஆய்த எழுத்தைத் (ஃ) தொடர்ந்து வந்துள்ளது. அதனால், இது ....

மாணவர் : ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்தானே அம்மா.

ஆசிரியர் : நன்று. கரும்பலகையில் எழுதப்பட்டுள்ள அழகு, அரசு, பண்பாடு, உனது, உருபு, பாலாறு – இச்சொற்களைப் படித்துப் பாருங்கள். வல்லின மெய்களை ஊர்ந்த உகர எழுத்துகள் (கு, சு, டு, து, பு, று) சொல்லின் இறுதியில் வந்துள்ளன. அவற்றுக்கு முன் என்னென்ன எழுத்துகள் வந்துள்ளன ?

மாணவர் : உயிர்மெய் எழுத்துகள் வந்துள்ளன, அம்மா.

ஆசிரியர் : இவ்விடத்தில் அவற்றை உயிர்மெய்யெழுத்துகள் எனச் சொல்லக் கூடாது. ழ = ழ் + அ; ர = ர் + அ; பா = ப் + ஆ எனப் பிரித்துப் பார்த்தல் வேண்டும். இப்போது சொல்லுங்கள்.

மாணவர் : உயிர்எழுத்துகள் வருகின்றன. அதனால், உயிர்த்தொடர்க் குற்றிய லுகரம்தானே அம்மா. ஆடு – என வந்தால் நெடில்தொடர்க் குற்றியலுகரம் என்றீர்கள். பாலாறு – இங்கும் 'று' என்னும் எழுத்துக்கு முன் லா வருகிறதே. இதனையும் நெடில்தொடர்க் குற்றியலுகரம் எனச் சொல்லாமல், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எனச் சொல்கிறீர்களே!

ஆசிரியர் : நன்றாகக் கேட்டாய்! நெடில்தொடர்க் குற்றியலுகரம் என்பது கு, சு, டு, து, பு, று ஆகிய எழுத்துகளை ஈற்றில்கொண்டு ஏடு, காசு என ஈரெழுத்துச் சொல்லாகவே வரும். உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் என்பது கு, சு, டு, து, பு, று ஆகிய எழுத்துகளுக்குமுன் இரண்டனுக்கு மேற்பட்ட எழுத்துகளைப்பெற்று வரும். ஈற்றயல் எழுத்து (அரசு, பாலாறு) உயிர்மெய்க் குறிலாகவோ நெடிலாகவோ இருக்கும். என்ன புரிகிறதா ?

மாணவர் : நன்கு விளங்கிற்று, அம்மா.

ஆசிரியர் : சுக்கு, கச்சு, பட்டு – இச்சொற்களைப் பாருங்கள். கு, சு, டு ஆகிய எழுத்துகளுக்குமுன், வல்லின மெய்யெழுத்துகள் வந்துள்ளன. அதனால்...

மாணவர் : வல்லினத்தொடர்க் குற்றியலுகரம்தானே, அம்மா.

ஆசிரியர் : அழகாகச் சொன்னாய்! இதனைச் சுருக்கமாக வன்றொடர்க் குற்றியலுகரம் எனக் குறிப்பிடுவர். சங்கு, மஞ்சு, நண்டு, சந்து – இச்சொற்களைப் படித்துப் பாருங்கள்.

மாணவர் : இவை மென்றொடர்க் குற்றியலுகரந்தானே, அம்மா.

ஆசிரியர் : ஆம். ஐயமே வேண்டாம். கொய்து, சார்பு, மூழ்கு... இச்சொற்கள் எவ்வகைக் குற்றியலுகரம் எனக் கூறுங்கள்.

மாணவர் : இடைத்தொடர்க் குற்றியலுகரம்தானே, அம்மா.

ஆசிரியர் : அருமையாகச் சொன்னீர்கள். இவ்வாறாக, வல்லின மெய்களின்மேல் ஊர்ந்த உகரம் சொல்லின் இறுதியில் நெடில் பக்கத்திலும், பல எழுத்துகளைச் சார்ந்தும் வரும்போது, அது தனக்குரிய மாத்திரை யிலிருந்து குறைந்து ஒலிக்கிறது. இவ்வாறு ஒலிப்பது குற்றியலுகரம் எனப்படும். இது, தன் அயலெழுத்தை நோக்க, 1. நெடில் தொடர்க் குற்றியலுகரம், 2. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம், 3. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், 4. வன்றொடர்க் குற்றியலுகரம், 5. மென்றொடர்க் குற்றியலுகரம், 6. இடைத்தொடர்க் குற்றியலுகரம் என அறுவகைப்படும்.

நினைவில் கொள்க.

1. கு, சு, டு, து, பு, று என்பன வல்லினமெய்களின்மேல் உகரம் ஊர்ந்து வரும் எழுத்துகள்.
2. குற்றியலுகரத்துக்கு அரை மாத்திரை.
3. ஈற்று அயலெழுத்தாகத் தனிநெடில், ஆய்தம், உயிர்மெய், வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றனைப் பெற்று வரும்.
4. நெடில்தொடர்க் குற்றியலுகரம் மட்டுமே இரண்டு எழுத்துகளைப்பெற்று வரும்.

   (எ.கா.) ஆடு, மாடு, காது.

   ஏனைய ஐவகைக் குற்றியலுகரச் சொற்கள் இரண்டனுக்கு மேற்பட்ட எழுத்துகளைப் பெற்று வரும்.

   (எ.கா.) சுக்கு, பாலாறு, காட்டாறு...

நெடிலோடு ஆய்தம் உயிர்வலி மெலிஇடைத்
தொடர்மொழி இறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே. – நன்னூல், 94

## குற்றியலிகரம்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம், உட்காருங்கள். முன்வகுப்பில் கற்றுக்கொண்ட இலக்கணப் பகுதியை வீட்டில் படித்துப் பார்த்தீர்களா ?

மாணவர் : குற்றியலுகரந்தானே அம்மா. படித்துப் பார்த்தோம்.

ஆசிரியர் : நல்லது. இன்று குற்றியலிகரம்பற்றிப் பார்ப்போம். இதனைக் குறுமை + இயல் + இகரம் எனப் பிரிக்கலாம். குறுமை என்றால் குறுகிய; இயல் என்றால் ஓசை; இகரம் என்றால் 'இ' என்னும் எழுத்து. எனவே, குறுகிய ஓசையுடைய இகரம், குற்றியலிகரம். குற்றியலுகரத்தின் உகரம் தன் ஒருமாத்திரையில் குறைந்து ஒலிப்பதுபோலவே குற்றியலிகரத்தில் வரும் இகரமும், தன் ஒருமாத்திரையிலிருந்து அரை மாத்திரை அளவு குறைந்து ஒலிக்கும்.

மாணவர் : அம்மா, எங்குக் குற்றியலிகரம் குறைந்து ஒலிக்கும் ?

ஆசிரியர் : நாகு + யாது = நாகியாது. வீடு + யாது = வீடியாது. இச்சொற்களை ஒலித்துப் பாருங்கள். நாகு, வீடு என்பன நெடில்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள். இவை நிலைமொழியாய் நிற்க, வருமொழியின் முதல் எழுத்து 'ய'கரமாக இருப்பின், உகரம் இகரமாகும். இந்த 'இகரம்'தான் குற்றியலிகரம் எனப்படும். அதாவது, நிலைமொழி குற்றியலுகரமாக இருந்து, வருமொழி யகரம் வரின், நிலைமொழி உகரம், இகரமாகத் திரிந்து தன்மாத்திரை அளவில் குறைந்து ஒலிப்பது குற்றியலிகரம் எனப்படும்.

(எ.கா.) வண்டு + யாது = வண்டியாது; வரகு + யாது = வரகியாது; என்பது + யாது = என்பதியாது.

மாணவர் : அம்மா, வேறு எங்காவது குற்றியலிகரம் வருமா ?

ஆசிரியர் : வரும். கேண்மியா, சென்மியா ஆகியவற்றில் வரும்.

மியா என்னும் அசைச்சொல்லில் உள்ள இகரமும் ( மி = ம் + இ ) தன்மாத்திரையில் குறைந்து ஒலிக்கும். இதுவும் குற்றியலிகரம் எனப்படும்.

யகரம் வரக் குறள் உத்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய – நன்னூல், 93

(குறள் – குறைந்த)

## முற்றியலுகரம்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம். உட்காருங்கள். குற்றியலுகரம், குற்றியலிகரம் ஆகியனபற்றி முன் வகுப்பில் கற்றிருக்கிறீர்கள்.

மாணவர் : ஆமாம், அம்மா.

ஆசிரியர் : நல்லது. குறைந்துவரும் 'உகரம், இகரம்' ஆகியவற்றின் மாத்திரை அளவு என்ன ?

மாணவர் : அரை மாத்திரை, அம்மா.

ஆசிரியர் : நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள், மகிழ்ச்சி. தன்மாத்திரை அளவில் குறையாமல் இருந்தால், அதற்குப் பெயரென்ன ?

மாணவர் : தெரியவில்லையே, அம்மா.

ஆசிரியர் : அதற்குப் பெயர் முற்றியலுகரம். அதாவது, தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாத உகரம் முற்றியலுகரம்.

மாணவர் : முற்றியலுகரம் எங்கு வருமெனக் கூறுங்கள், அம்மா.

ஆசிரியர் :

1. பகு, பசு, படு, அது, தபு, பெறு – இவை தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரம் (கு, சு, டு, து, பு, று) பெற்ற முற்றியலுகரங்கள்.
2. காணு, உண்ணு, உருமு – இவற்றின் ஈற்றிலுள்ள மெல்லின (ணு, மு) உகரங்கள் முற்றியலுகரங்கள்.
3. எழு, தள்ளு, கதவு – இவற்றின் ஈற்றிலுள்ள இடையின உகரங்கள் (ழு, ளு, வு) முற்றியலுகரங்கள்.

இவ்வாறு தனிக்குறிலை அடுத்துச் சொல்லின் இறுதியில் வரும் வல்லின மெய்யின்மேல் ஊர்ந்து வரும் உகரமும், பொதுவாகச் சொற்களின் இறுதியில் மெல்லின மெய்யின்மேல் ஊர்ந்து வரும் உகரமும், இடையின மெய்யின்மேல் ஊர்ந்துவரும் உகரமும் ஆகிய மூன்றும் முற்றியலுகரம் எனப்படும்.

மாணவர் : நன்றி, அம்மா.

## பயிற்சிகள்

1. கீழ்க்காணும் சொற்களில் பொருந்தாதவற்றை வட்டமிடுக.
   1. சுக்கு, மருந்து, சார்பு, மது, கஃசு.
   2. அஃது, நன்று, சீட்டு, கொசு, உயர்வு.
2. 1, 2, 3, 4, 5, 6, 8 ஆகிய எண்களை எழுத்தால் எழுதி, இவற்றுள் நெடில்தொடர்க் குற்றியலுகர எண்ணை வட்டமிட்டுக் காட்டுக.
3. நான்கு, ஆறு, எட்டு இவற்றின் அயலெழுத்தை நோக்க, எவ்வகைக் குற்றியலுகரச் சொற்கள் என எழுதுக.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கீழ்க்காணும் தொடரில் உள்ள குற்றியலுகரச் சொற்களை வகைப்படுத்துக.

   தம்பி, சுக்கு, மிளகு வாங்குவதற்கு நாட்டுமருந்துக் கடைக்குச் சென்றான்.

   கடைக்காரர் இரண்டனையும் எடைபோட்டு ஐந்து உருபா என்றார்.

2. கீழ்க்காணும் குற்றியலுகரச் சொற்களை வகைப்படுத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. கோங்கு | 4. பந்து | 7. குத்து | 10. இஃது |
| 2. நண்டு | 5. நாடு | 8. பாலாறு | 11. கஃசு |
| 3. கொய்பு | 6. மார்பு | 9. கொக்கு | 12. மஞ்சு |

3. கோடிட்ட இடத்தில் உரிய குற்றியலுகரச் சொற்களை எழுதி நிரப்புக.
   1. கிளைக்குக் கிளை ______________ தாவியது.
   2. சிறுவன் ______________ வைத்துக்கொண்டு விளையாடுகிறான்.
   3. பொற்கொடி பூக்களை______________ வந்தாள்.
   4. குயவர் பானையை ______________ கொண்டிருந்தார்.
   5. பாலின் நிறம் கொண்ட பறவை ______________ .
4. கீழ்க்காணும் சொற்களில் முற்றியலுகரச் சொற்களை வட்டமிடுக.

   மாடு, பசு, கடுகு, கதவு, வீடு, அன்பு, மடு, மார்பு, விடு, மூக்கு.

5. நிரப்புக.
   1. குற்றியலுகரத்துக்கு ______________ மாத்திரை.
   2. குற்றியலிகரத்துக்கு ______________ மாத்திரை.
   3. முற்றியலுகரத்துக்கு ______________ மாத்திரை.

### ஆ) குறுவினாக்கள்

1. குற்றியலுகரம் என்றால் என்ன ?
2. குற்றியலுகரத்தின் வகைகள் யாவை ? சான்றுகள் தருக.
3. குற்றியலிகரம் என்றால் என்ன ? சான்று தருக.
4. முற்றியலுகரம் என்றால் என்ன ? சான்று தருக.

# வகுப்பறைத்திறன்கள்

அடிப்படைத்திறன்களில் பயிற்சி பெறுவதற்காக வகுப்பறைத்திறன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் பேசுதல், படித்தல், எழுதுதல், படைப்பாற்றல், கலந்துரையாடல், சொற்போர் முதலியனவும் மொழித்திறன் பயிற்சிகளும் உள்ளன. தமிழெண்களை அறிவோம், வாழ்க்கைத்திறன், மதிப்புக்கல்வி, பண்பு, தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம் ஆகிய பகுதிகளும் இணைக்கப்பட்டுள்ளன .

## அ) பேசுதல் திறன்

தமிழுக்குத் தொண்டாற்றிய அயல்நாட்டறிஞர் வீரமாமுனிவர் குறித்து ஐந்து மணித்துளி பேசுக.

## ஆ) படித்தல் திறன்

கீழ்க்காணும் பாடலைப் படித்து அதன் நயம் உணர்க.

பாடலில் மெல்லின எழுத்துகள் மிகுதியாக இடம்பெற்றிருப்பதனைக் காண்க.

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிகர் சீறடி யளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.

– கம்பராமாயணம்

## இ) எழுதுதல் திறன்

1. பாடல் பொருளுணர்தல், மொழிப்பயன்பாட்டுத்திறன் பெறுதல்.

கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

நாடும் மொழியும் நமதிரு கண்கள்
நாம்தினம் போற்றி வணங்கிடு வோமே
கூடும் அன்பினில் வேற்றுமை மறந்தே
குலவிடு வோமே இந்தியர் என்றே
தேடிய சுதந்தரப் பயிரின் வேலி
தூயநல் ஒருமைப் பாடே ஆகும்
ஓடிடும் வேற்றுமை நோயே உரிய
ஒருமைப் பாடெனும் மாமருந் தாலே.

### வினாக்கள்

1. நமது இரு கண்களாகக் கருதப்படுவன யாவை ?
2. தினம் என்பதற்குரிய இணையான தமிழ்ச்சொல்லை எழுதுக.
3. வேற்றுமை என்பதன் எதிர்ச்சொல் யாது ?
4. பாடலில் இடம்பெற்றுள்ள உரிச்சொல்லை எடுத்து எழுதுக.
5. சுதந்தரம் – சுதந்திரம் இவ்விரண்டனுள் எது சரி ?

### விடைகள்

1. நாடும் மொழியும் நமது இருகண்களாகக் கருதப்படுகின்றன.
2. நாள் 3. ஒற்றுமை 4. மாமருந்து 5. சுதந்தரம்.

பயிற்சி : கீழுள்ள பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடையளிக்க.

நல்லொழுக்கம் ஒன்றே – பெண்ணே
நல்ல நிலை சேர்க்கும்
புல்லொழுக்கம் தீமை – பெண்ணே
பொய்யுரைத்தல் தீமை
இல்லறமே பெண்ணே– இங்கு
நல்லற மென்பார்கள்
கல்வியுடையோரே – பெண்ணே
கண்ணுடைய ராவார்.

வினாக்கள்

1. நல்ல நிலை சேர்ப்பது எது ?
2. பாடலில் உள்ள விளிச்சொல்லை எடுத்து எழுதுக.
3. துறவறம் என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக.
4. கண்ணுடையவர் என்பவர் யார் ?
5. தீமை என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக.

தமிழ்

## மொழித்திறன் பயிற்சி

### 1. சொற்றொடர் வகைகள்

**செய்வினை – செயப்பாட்டு வினை**

(எ.கா.) கயல்விழி திருக்குறளைப் படித்தாள் – செய்வினைத்தொடர்

(எழுவாய்) (செயப்படுபொருள்) (பயனிலை)

இத்தொடரைச் செயப்பாட்டுவினையாக்க,

அ. எழுவாயைச் செயப்படுபொருளாக்குதல் வேண்டும்.

ஆ. அதனுடன் மூன்றாம் வேற்றுமை உருபு சேர்த்தல் வேண்டும். ( கயல்விழி + ஆல் = கயல்விழியால்) செயப்படுபொருளில் உள்ள 'ஐ' என்ற வேற்றுமை உருபை நீக்கி, எழுவாயாக மாற்றுதல் வேண்டும்.

(திருக்குறளை = திருக்குறள் + ஐ = ஐ நீக்கினால், திருக்குறள்)

இ. பயனிலையுடன் படு, பட்டது என்னும் துணைவினை சேர்த்தல் வேண்டும்.

(படித்தாள் = படிக்கப்பட்டது)

திருக்குறள் கயல்விழியால் படிக்கப்பட்டது – செயப்பாட்டு வினைத்தொடர்.

**செயப்பாட்டு வினை – செய்வினை**

(எ.கா.) குறிஞ்சிக்கலி கபிலரால் இயற்றப்பட்டது – செயப்பாட்டுவினை
கபிலர் குறிஞ்சிக்கலியை இயற்றினார் – செய்வினை

இவ்வாறு செயப்பாட்டுவினைத் தொடரையும் செய்வினைத் தொடராக மாற்றலாம்.

பயிற்சி : 1. கீழ்க்காணும் தொடர்களைச் செயப்பாட்டு வினையாக்குக.

அ) கலையரசி துணியைத் தைத்தாள்.

ஆ) ஆசிரியர் பாடத்தை நடத்தினார்.

இ) பூங்குழலி உணவைச் சமைத்தாள்.

2. கீழ்க்காணும் தொடர்களைச் செய்வினையாக்குக.

அ) ஓவியம் மாறனால் வரையப்பட்டது.

ஆ) மாலை மல்லிகாவினால் தொடுக்கப்பட்டது.

இ) பாரி கபிலரால் போற்றப்பட்டார்.

## 2. செய்தி வெளிப்படும் திறன்

தொடர்களில் செய்தி வெளிப்படும் தன்மையினைப் பொருத்துச் செய்தித்தொடர், வினாத்தொடர், விழைவுத்தொடர், உணர்ச்சித்தொடர் எனப் பலவகைப்படுத்தலாம். விழைவுத்தொடர் வாழ்த்துதல், வேண்டுதல், கட்டளையிடுதல், வைதல் ஆகிய பொருள்களில் வரும்.

(எ.கா.) 'முயற்சி திருவினையாக்கும்' என்பது ஆன்றோர் மொழி – செய்தித்தொடர்

| | | |
|---|---|---|
| பாடம் படித்தாயா ? | – | வினாத்தொடர் |
| நீடுழி வாழ்க ! | – | விழைவுத்தொடர் |
| என்னே, அருவியின் அழகு ! | – | உணர்ச்சித்தொடர் |
| கண்ணன் பாடம் படித்தான். | – | உடன்பாட்டுத்தொடர் (செய்தி) |
| கண்ணன் பாடம் படித்திலன். | – | எதிர்மறைத்தொடர் (செய்தி) |

பயிற்சி : 1. கீழ்க்காணும் தொடர்கள் எவ்வகையைச் சேர்ந்தவை ?

அ) தென்னை மரத்துக்குக் கிளைகள் இல்லை.

ஆ) இந்தச் செயலைச் செய்தது யார் ?

இ) இளமையில் கல்.

ஈ) என்னே, தமிழின் இனிமை !

உ) சிறந்த நூல்களை அரங்கேற்றுதல் பண்டைக்கால வழக்கம்.

2. கீழ்க்காணும் தொடர்களை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

அ) உழைத்துப் பிழை (செய்தித் தொடராக்குக)

ஆ) மாமல்லபுரத்துச் சிற்பங்கள் மிகவும் அழகாக உள்ளன. (உணர்ச்சித்தொடராக்குக.)

இ) மணிமொழி நன்கு பாடினாள். (பொருள் மாறாமல் எதிர்மறையாக்குக.)

ஈ) கமலா பரிசு பெற்றாள். (வினாத்தொடராக்குக.)

உ) நினைவாற்றலை வளர்த்துக்கொள்க. (கட்டளைத்தொடராக்குக.)

### 3. தமிழெண்களை அறிவோம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | க | 6 | சு | 11 | கக | 16 | கசு |
| 2 | உ | 7 | எ | 12 | கஉ | 17 | கஎ |
| 3 | ௩ | 8 | அ | 13 | க௩ | 18 | கஅ |
| 4 | ச | 9 | சு | 14 | கச | 19 | கசு |
| 5 | ரு | 10 | கO | 15 | கரு | 20 | உO |

பயிற்சி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 6 | | 11 | | 16 | |
| 2 | | 7 | | 12 | | 17 | |
| 3 | | 8 | | 13 | | 18 | |
| 4 | | 9 | | 14 | | 19 | |
| 5 | | 10 | | 15 | | 20 | |

தமிழ்

மாதிரிக்கட்டுரை

## நான் விரும்பும் கவிஞர்

### முன்னுரை

''கன்னல் பொருள் தரும் தமிழே நீ ஓர் பூக்காடு: நானோர் தும்பி!'' என்று தமிழ்க்காதல்கொண்டு, ''உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு'' என்ற கொள்கையை உயிர்மூச்சாய்ப்பெற்றவர்; தமிழ்ச்சொல்லால் பாடல் இயற்றி, இருபதாம் நூற்றாண்டுக் கவிதைவானில் ஒளிநிலவாய்ப் பவனிவந்த பெருங்கவிஞராக விளங்கியவர் பாரதிதாசன். அவர். அறியாமை இருளில் முடங்கிக் கிடந்தவர்களைப் பகுத்தறிவு ஒளிபெற்று விழிப்புறச்செய்தார்; கொள்கையற்றவர்களைக் கொள்கை உரம்பெற்று நிமிர்ந்து நிற்கச் செய்தார்.

### பிறப்பும் சிறப்பும்

''தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்னும் பொய்யாமொழியாரின் பொன்மொழிக்கிணங்க, புரட்சிப் பூக்கள் பூத்துக் குலுங்கிய புதுவையில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் 29.04.1891ஆம் ஆண்டு பிறந்தார். கனகசபை என்பார் இவரின் தந்தையாவார். கவிஞரின் இயற்பெயர் சுப்புரத்தினம். இவர், துள்ளித்திரியும் தம் இளமைப்பருவத்தின் துடுக்கடக்கிப் பள்ளியில் சேர்ந்து, தித்திக்கும் முத்தமிழ்ப்புலமை பெற்றார்; தமிழாசிரியராய்ப் பணியாற்றினார். பாரதியாரால் 'சுப்புரத்தினம் ஓர் கவி' என்று தமிழ்கூறும் நல்லுலகத்துக்கு அறிமுகம்செய்து வைக்கப்பட்டார். இவர், பாரதியின்பால் தாம்கொண்ட பற்றால் தம்பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றி வைத்துக்கொண்டார். அவரின் எண்ணத்திலும் எழுத்திலும் பேச்சிலும் புரட்சியின் புதுத்துடிப்பைக் கண்ணுற்ற அறிஞர் உலகம் அவரைப் புரட்சிக் கவிஞர் என அழைத்து மகிழ்ந்தது.

### தமிழ்ப்பணி

பாவேந்தர் பாரதிதாசன் தம்வாழ்நாள் முழுவதனையும், தமிழின் மறுமலர்ச்சிக்காகவும் வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் புத்தெழுச்சி காண்பதற்காகவும் தமிழரின் முன்னேற்றத்துக்குத் தடைக்கற்களாய் நிற்கும் அறியாமையை, மூடப்பழக்க வழக்கங்களை உடைத்தெறிவதற்காகவும் பாடுபட்டார். வீடெல்லாம், நாடெல்லாம், மக்களின் இதயக்கூடெல்லாம், ஏடெல்லாம் இன்பத்தமிழ் மணக்கவேண்டும் என்று அல்லும் பகலும் அயராது தமிழ்ப்பணி ஆற்றினார்.

சூரிய ஒளி பெறாத செடியும், பகுத்தறிவு ஒளிபெறாத சமுதாயமும் வளர்ச்சி அடையாது என்பதனை உணர்ந்த பாவேந்தர் புதிய சமுதாயத்தை உருவாக்குவதிலேயே தமது சிந்தனையைச் செலவிட்டார். இவரது புகழை இசையமுது, குடும்ப விளக்கு, மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக் காப்பியம், படித்த பெண்கள், இளைஞர் இலக்கியம், குறிஞ்சித் திட்டு முதலிய நூல் மலர்கள் மலர்ந்து நறுமணம் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

**உவட்டாமல் இனிக்கும் பாடல் வரிகள்:**

* தமிழுக்கு அமுதென்று பேர் – அந்தத்
  தமிழ் இன்பத் தமிழ்
  எங்கள் உயிருக்கு நேர்!
* இருட்டறையில் உள்ளதடா உலகம்
* புதியதோர் உலகு செய்வோம் கெட்ட
  போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்

என்னும் பாரதிதாசனின் பாடல்களை, நாம் பாடும்போது உவட்டாமல் இனிக்கின்றன.

### முடிவுரை

பாரதிதாசன் தமிழ்க்கவி; தமிழரின் கவி; தமிழின் மறுமலர்ச்சிக்காகத் தோன்றிய கவி; தமிழரின் புகழ் மேதினியோங்க வேண்டுமெனப் பிறந்த கவி. அக்கவியின் கவிதைகளைக் கற்றுப் பயன் பெறுவோமாக! பாவேந்தர் பாடல்களைப் பாரெல்லாம் பரப்புவோமாக!

### 4. கட்டுரைப்பயிற்சி

**குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார் – பிறந்த ஊர் – எட்டயபுரம் – பிறந்த ஆண்டு 1882 – பாடல் எழுதுவதில் விருப்பம் – விடுதலை உணர்வைத் தூண்டும்வகையில் பாடல்கள் – விடுதலைப் போராட்டத் தலைவர்களுடன் நட்பு – விடுதலைக்கவி எனப் போற்றப்படுதல் – கவிதைகள் பல படைத்தல் – உடல்நலம் குன்றுதல் – இறப்பு 1921.

## வாழ்க்கைத் திறன்

### முடிவெடுத்தல் திறன்

ஆண்டு இறுதித்தேர்வுக்காக முனைப்புடன் படித்துக்கொண்டிருந்தான் குமரன். வாசலில் மணி ஒலித்தது. குமரன் படித்துக்கொண்டிருந்ததனால், அவனுடைய தாயார் வெளியில் சென்று கதவைத் திறந்தார். அங்கே குமரனுடைய நண்பர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள், 'குமரன் இல்லையா' என்று கேட்டார்கள்; 'குமரன் படித்துக்கொண்டிருக்கிறான்; இதோ அனுப்புகிறேன்' என்று சொல்லியவாறே அவர்களை உட்கார வைத்துவிட்டுத் தாயார் உள்ளே சென்றார்.

‘குமரா, உன்னுடைய நண்பர்கள் வந்திருக்கிறார்கள்; என்னவென்று கேட்டுவிட்டு வா’ என்றார் தாயார். குமரன் வெளியில் வந்தான். குமரனைப் பார்த்ததும் அவனுடைய நண்பர்கள் விளையாட வருமாறு அழைத்தார்கள்; ‘மட்டைப்பந்து விளையாட்டு இருப்பதனை மறந்துவிட்டாயா ? விரைந்து வா. நீ வந்தால்தானே வெற்றிபெற முடியும்’ என்று வற்புறுத்தினார்கள். குமரனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நாளை எழுதப்போகும் தேர்வில் மதிப்பெண் குறைந்தால் வகுப்பிலும் சரி, வீட்டிலும் சரி ஏளனத்துக்கு ஆளாவான். விளையாடவில்லையென்றால், அவனுடைய தலைமையின் கீழுள்ள குழு தோற்றுப்போகும். இந்த ஆண்டு கிடைக்கவேண்டிய சுழல்கோப்பை கிடைக்காது.

அ) குமரன் என்ன முடிவு எடுத்திருப்பான் ?

ஆ) நீங்கள் குமரனாக இருந்தால் என்ன முடிவெடுப்பீர்கள் ?

## மதிப்புக்கல்வி

### தொண்டுள்ளம்

கொல்கத்தாவின் கடைத்தெருவில் நடந்துகொண்டிருந்தார் அந்தப் பெண்மணி; ஆதரவற்ற, சமூகத்தால் தூக்கியெறியப்பட்ட, பாதுகாப்பற்ற ஏழைகளுக்காகக் கண்ணீர் சிந்தினார்; நோயாளிகள், முதியோர்கள் என அனைவருக்காகவும் பலரிடமும் கையேந்தினார்; அவர்களின் உணவுக்காகவும், உடைக்காகவும் பணம் பெறும்பொருட்டுக் கையேந்திய அவர் கைகளிலே கடும் எரிச்சல்கொண்ட ஒருவர் எச்சில் உமிழ்ந்தார்; இருப்பினும் மனம் தளர்ந்தாரில்லை.

கொடியவரின் உமிழ்நீரைத் துடைத்துவிட்டு, அப்பெண்மணி மீண்டும் அவரிடம் கையேந்தினார். “ஐயா, நீங்கள் எனக்குக் கொடுக்கவேண்டியதனைக் கொடுத்துவிட்டீர்கள்; ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டியதனை அருள்கூர்ந்து கொடுத்து உதவுங்கள்” என்று முகத்தில் கருணை பொங்கக் கேட்டார் அப்பெண்மணி.

அக்கொடியவரின் மனம் துணுக்குற்றது. அப்பெண்மணியின் தொண்டுள்ளம் கண்டு நாணித் தலைகுனிந்தார். அப்பெண்மணிதான் அன்னை தெரேசா.

மாணவர்களே ! அன்னை தெரேசாவின் கருணை உள்ளத்தை அறிந்துகொண்டீர்களா ? அந்த இடத்தில் நீங்கள் இருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள் ?

அ. கொடியவனைக் கடிந்துரைப்பேன்.

ஆ. உன்பணம் தேவையில்லை என்று கூறிவிட்டுச் செல்வேன்.

இ. பொறுத்துக்கொண்டு, மீண்டும் கேட்பேன்.

| வளரறி செயல்பாடுகள் | |
|---|---|
| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.

கவியரசு வேங்கடாசலனார், நகைச்சுவையுணர்வு மிக்கவர். கேட்பவர் விரும்புமாறு நயமாகவும் சிலேடையாகவும் பேசும் திறனுடையவர். ஒருமுறை, திருவையாறு அரசர் கல்லூரியில் நடைபெற்ற ஆண்டுவிழாவுக்குக் கவியரசர் சென்றார். அவ்விழாவில், சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்த பேச்சாளர், 'தமிழ்மொழியை இன்று செந்தமிழ் என்று சொல்கிறோம். செந்தமிழ் எனக் கூறுவதால், ஒருகாலத்தில் தமிழ்மொழி கொடுந்தமிழாக இருந்திருத்தல் வேண்டும்' என்றார்.

அவர் கூறுவதனைக் கேட்ட கவியரசு வேங்கடாசலனார், உடனே எழுந்து 'கதிரவனை இந்நாளில் செஞ்ஞாயிறு எனக் கூறுகிறோம். செஞ்ஞாயிறு என்பதனால், ஒருகாலத்தில் கருஞாயிறாகத்தான் இருந்திருத்தல் வேண்டும் என்பதனை இப்பேச்சாளரின் கூற்று வெளிப்படுத்துகிறது' எனக்கூறினார். அவர் கூறியதனைக் கேட்ட தமிழறிஞர்கள், கைகளைத் தட்டிக் குரலொலி எழுப்ப, சொற்பொழிவாற்றிய பேச்சாளர் தலைகுனிந்தார்.

மற்றொருமுறை, கவியரசுவின் திருமண விழாவுக்கு வர இயலாத நண்பர், அவரை நேரில் கண்டு வருத்தத்தைத் தெரிவித்தார். பின்னர், 'திருமணம் சிறப்பாக நடந்ததா ?' எனக் கவியரசுவிடம் வினவினார். நண்பருக்குப் பதிலளித்த கவியரசு, 'ஆம், மிகவும் நன்றாக நடந்தது. நான் ஒரு முகமதியப் பெண்ணை மணந்து கொண்டேன்' என்றார்.

அதனைக் கேட்ட நண்பர், வியப்புடன் கவியரசுவை நோக்கினார். அவரது முகக்குறிப்பினை உணர்ந்துகொண்ட கவியரசு, 'உண்மைதான். முகம் மதியம் போன்று விளங்கும் பெண்ணைத்தான் திருமணம் செய்து கொண்டேன்' எனச் சிலேடையாகக் கூற, நண்பர் கவியரசுவின் சொல்லாடலைக் கேட்டு இன்புற்றார்.

வினாக்கள்

1. கவியரசு வேங்கடாசலனார் எத்தன்மையுடையவர் ?
2. திருவையாறு அரசர் கல்லூரி ஆண்டுவிழாவில், சொற்பொழிவாளர் பேசிய உரை யாது ?
3. சொற்பொழிவாளர் கூறிய செய்தியைக் கவியரசு எங்ஙனம் மறுத்துரைத்தார் ?
4. நண்பரிடம், கவியரசு கூறிய சிலேடை நயத்தைக் கூறுக.
5. 'பலகை' – இச்சொல்லுக்குச் சிலேடை நயம் காண்க.

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|



கீழ்க்காணும் உரையாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் பேசுக.

பாரதியாருடன் கற்பனை உரையாடல்

மாணவன் : ஐயா, வணக்கம். உங்கள் உருவத்தைப் படங்களில் மட்டுமே பார்த்துள்ளேன். இன்று உங்களை நேரில் காணும் பேறுபெற்று மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுடன் உரையாட விரும்புகிறேன்.

பாரதியார் : அப்படியா, மிக்க மகிழ்ச்சி.

மாணவன் : ஐயா, தங்களுக்குத் தமிழின்மீது தணியா வேட்கை ஏற்பட்டது, எவ்வாறு ?

பாரதியார் : தமிழின்மீது மட்டுமா ? தமிழ்நாடு, தமிழர், தமிழ்த்தாய் அனைத்தும் என்னுள் இரண்டறக் கலந்தவை. நான் தமிழ்நாட்டில் பிறந்தேன்; தமிழ்த்தாயின் மடியில்வளர்ந்தேன்; தமிழ்மொழியை என் உயிர்மூச்சாய்க் கொண்டேன். தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தமிழின்மீது தணியாவேட்கை கொள்ளுதல் வேண்டுமப்பா!

மாணவன் : தங்கள், தமிழ்ப்பற்றைக் கண்டு மெத்த மகிழ்வு கொள்கிறேன். மாணவர்களாகிய நாங்கள், உங்களின் ஒவ்வொரு பாடலையும் அறிந்து வைத்துள்ளோம். இவ்வளவு உணர்ச்சிமிக்க பாடல்களைத் தாங்கள் படைக்கத் தூண்டுதலாக அமைந்தது, எது ?

பாரதியார் : நன்றாகக் கேட்டாய்! இன்று நீ விடும் விடுதலை மூச்சுக்காற்று, அன்று எங்களுக்கு வாய்க்கவில்லை. அந்தக் காலத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த நம் பாரதத்தாயின் அடிமைத் தளையைக் கட்டவிழ்த்து விடவேண்டுமென நான் துடித்தேன். அத்துடிப்பின் வெளிப்பாடே என் பாடல்கள் அனைத்தும்.

மாணவன் : ஐயா, உங்கள் பாடல்கள் நிலைபேறு பெற்றவை; எஞ்ஞான்றும் ஏற்புடையவை. எம்போன்ற மாணவர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்பும் அறிவுரை யாது ?

பாரதியார் : மாணவர்களே, உங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ளுங்கள்; கிடைக்கும் நல்வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்; மொழிப் பற்றும் நாட்டுப்பற்றும் விடாது பற்றிக்கொள்ளுங்கள். நம் அறிவுச் செல்வங்களாம் இலக்கியங்களை ஈடுபாட்டுடன் கற்றுத் தரமிக்க இலக்கியங்களை இயற்றுங்கள்.

மாணவன் : நன்றி, ஐயா. அவ்வாறே செய்கிறோம்.

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் பொருளுணர்ச்சிக்கேற்பக் குரலேற்ற இறக்கத்துடன் படித்துக் காட்டுக.

வீரவுணர்ச்சி

என்னருமைத் தமிழர்களே, உணர்ந்து பாருங்கள்; உங்கள் முன்னோர் வாழ்வையும், உங்கள் தாழ்வையும் உன்னிப் பாருங்கள்; தமிழன்னையின் நிலையைச் சற்று நினைவு கூருங்கள். நிமிர்ந்த நோக்கு இல்லாத நேயரே, நிதானியுங்கள். காவலன் வாயிற் கடைசென்று கணவனின் புகழைக் காத்தவள் எங்கள் கண்ணகியாம் அன்னை. பால்மணம் மாறாத பாலகனைப் படையோடு களத்துக்கனுப்பியவள் எங்கள் மற்றொரு தாய். தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயவேண்டுமே! அந்தத் தாய்மரபு எங்கே ? வாழையடி வாழையாக வந்த வீரத்துக்கு வழியடைக்குங்கல்லை யார் வைத்தார்கள் ? சிந்தியுங்கள். தாய்மொழி சந்தியில் நின்று தடுமாற, தனயர் தாளிட்டுக்கொண்டு வீட்டில் கிடப்பதா ? இது முறையா! இது தகுமா ? எழுங்கள்; உணர்ச்சியோடு எழுங்கள். கடைசி மூச்சு இருக்கும்வரை தமிழன்னையைக் காப்போம் என உறுதி செய்யுங்கள். அன்றுதான் தமிழ் தழைக்கும். தமிழினம் தலையெடுக்கும்.

| பாடுதல் திறன் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழ்க்காணும் பாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் இனிமையாகப் பாடுக.

செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே – எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே எங்கள் ( செந்தமிழ் )

காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி – என
மேவிய ஆறு பலவோடத் – திரு
மேனி செழித்த தமிழ்நாடு ( செந்தமிழ் )

கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு – நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் – மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு ( செந்தமிழ் )

தமிழ்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு – நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் – மணி
யாரம் படைத்த தமிழ்நாடு (செந்தமிழ்)

– பாரதியார்

| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கீழ்க்காணும் சொற்களை அகர வரிசையில் எழுதுக.

கெண்டை, ஏற்றம், கல்வி, ஔவியம், கொள்கை, அகவை, குழந்தை, ஈடுபாடு, காற்று, ஐவர், இலக்கியம், கூரை, உணவு, கையுறை, ஓசை, கேள்வி, ஆய்வேடு, கோடு, ஒற்றுமை, கிளை, ஊஞ்சல், கீற்று, எழுத்து, கௌதாரி.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| க | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 6 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.

செந்தமிழ் ஒரு பூந்தோட்டம். அப்பூந்தோட்டத்தில் அன்றலர்ந்த மலர்கள் மணம் பரப்பி வருகின்றன.

அம்மலர்கள் ஒரு செடியிலோ கொடியிலோ பூத்தவை அல்ல; வண்ணம், வடிவம், அளவு, மணம் ஆகியவற்றால் ஒன்றுபட்டவையும் அல்ல. அவ்வாறே காலந்தோறும் நந்தமிழ் நாட்டில் தமிழ்ச் சான்றோர் பலர் தோன்றித் தமிழ்மொழிக்குப் புத்துயிரூட்டிப் புதுமணம் பரப்பி வருகின்றனர்.

தம்முள் மதம், இனம், நாடு, மொழி ஆகிய வேறுபாடுகளின்றித் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்து வருகின்றனர்.

| குறிப்புகளை விரித்தெழுதுதல் | செயல்பாடு – 7 |
|---|---|

**கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தி, விரித்தெழுதுக.**




| பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் எழுதுதல் | செயல்பாடு – 8 |
|---|---|

**கீழ்க்காணும் உரைப்பத்தியில் வண்ணமிட்ட எழுத்துகளுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**

இண்டர்வியூவில் கேட்ட வினாக்களுக்கெல்லாம் சரளமாக விடையளித்தான், செழியன். நிச்சயமாகத் தனக்கு இந்த ஜாப் கிடைத்துவிடும் என்று நம்பினான். சிறிதுநேரம் காத்திருக்கச் சொன்ன மேனேஜரிடம் நன்றி கூறிவிட்டு வெளியில் வந்தான் செழியன்.

| பிறமொழிச் சொற்கள் | தமிழ்ச் சொற்கள் |
|---|---|
| இண்டர்வியூ | |
| சரளமாக | |
| நிச்சயமாக | |
| ஜாப் | |
| மேனேஜர் | |

| படம் பார்த்து எழுதுதல் | செயல்பாடு – 9 |
|---|---|

தமிழ் வளர்த்த சான்றோர் 'மனோன்மணியம்' பெ. சுந்தரனாரைப்பற்றி ஐந்து வரிகளுக்குக் குறிப்பு எழுதுக.



| சொல் விளையாட்டு | செயல்பாடு – 10 |
|---|---|

கீழ்க்காணும் பழமொழிகளில் விடுபட்ட இடங்களில் குற்றியலுகரச் சொற்களாக வரும்படி எழுதுக. அச்சொற்களைக் கட்டத்தில் நிரப்புக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | 2 |
| | | | | 3 | | | |
| 4 | | | | | | | |
| | | | | | | 6 | |
| | | 5 | | | | | |
| 7 | | | 8 | | | | |
| | | | | | | | |
| | | 9 | | | | | 10 |

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
| --- | --- |
| 1. போதுமென்ற மனமே பொன் செய்யும் ______ .<br>4. ஆத்திரக்காரனுக்குப் புத்தி ______ .<br>8. ஏற்றம் உண்டானால் இறக்கமும் ______ .<br>9. காலம் பொன் ______ . | 2. அகத்தின் ______ முகத்தில் தெரியும்.<br>3. ______ சிறுத்தாலும் காரம் குறையாது.<br>6. அடியாத ______ படியாது.<br>7. அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் ______ . |
| **வலமிருந்து இடம்**<br>5. கெடுவான் ______ நினைப்பான். | **கீழிருந்து மேல்**<br>10. ஆற்றில் போட்டாலும் ______ போடு. |

| விடுகதைகளுக்கு விடை காணல் | செயல்பாடு – 11 |
| --- | --- |

கீழ்க்காணும் விடுகதைகளைப் படித்து விடை காண்க.

1. நான் சிரித்தால் நீ சிரிப்பாய்; நான் அழுதால் நீ அழுவாய். நான் யார் ?
   ______
2. மனிதன் போடாத பந்தலில் மலர்ந்து கிடக்கும் பூக்கள். அவை யாவை ?
   ______
3. கடல் நீரில் வளர்வேன்; மழை நீரில் மடிவேன். நான் யார் ?
   ______
4. வாராதிருந்து வந்தேன்; வந்துவிட்டுப் போனேன்;
   போனபிறகு வந்தேன்; இனிப் போனால் வரமாட்டேன். நான் யார் ?
   ______
5. ஒளியில் தொடர்வான்; இருளில் மறைவான். அவன் யார் ?
   ______

விடைகள்

1. கண்ணாடி 2. விண்மீன்கள் 3. உப்பு 4. பல் 5. நிழல்

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

**1. ஓரிரு சொற்களில் விடையளிக்க.** 4 X 1 = 4

அ) முத்தே பவளமே ______________ அடுத்து வரும் சொற்றொடரைக் கூறுக.

ஆ) கேட்டதனை வழங்கும் மரம் எது ?

இ) பேச்சுக்கலையில் சிறந்து விளங்கிய தமிழறிஞர் யார் ?

ஈ) சிறுகதைக்கு உரமூட்டியவர் யார் ?

**2. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 2 X 1 = 2

அ) வாழ்த்துச் செய்யுள் ______________ நூலில் இடம் பெற்றுள்ளது.

ஆ) பராபரம் ______________ பொருளை உணர்த்துகிறது.

**3. கீழ்க்காணும் கூற்றுச் சரியா தவறா எனக் கூறுக.** 2 X 1 = 2

அ) குணங்குடி மஸ்தான் சாகிபைத் தைரியநாதர் என்றழைப்பர்.

ஆ) யாதும் ஊரே யாவரும் கேளிர் எனப் பாடியவர் கணியன் பூங்குன்றனார்.

**4. தொடரில் அமைத்து எழுதுக.** 2 X 1 = 2

அ) மணம்

ஆ) மனம்

# இனியவை நாற்பது

– பூதஞ்சேந்தனார்

1. குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே
கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே
மயரிக எல்லராய் மாண்புடையார்ச் சேரும்
திருவுந்தீர் வின்றேல் இனிது.



**பொருள்:** குழந்தை நோயின்றி வாழ்தல் இனியது. அவைக்கு அஞ்சாது பேசுபவனின் கல்வி இனியது. மயக்கமற்ற பெருமைமிக்கவரிடம் சேரும் செல்வம் அவரைவிட்டு நீங்காது நிலைத்திருப்பின் இனியது.

**சொற்பொருள் :** குழவி – குழந்தை; பிணி – நோய்; கழறும் – பேசும்.; மயரி – மயக்கம்.

2. சலவரைச் சாரா விடுதல் இனிதே
புலவர்தம் வாய்மொழி போற்றல் இனிதே
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியால் வாழ்தல் இனிது. *

**பொருள் :** வஞ்சகரைச் சேராமல் விலகியிருத்தல் இனியது. அறிவுடையாரின் வாய்ச் சொற்களைப் பின்பற்றி ஒழுகுதல் இனிது. நிலையான உலகில் வாழும் உயிர்களெல்லாம் உரிமைப்பட வாழ்தல் இனியது.

**சொற்பொருள் :** சலவர் – வஞ்சகர்; மன்னுயிர் – நிலைபெற்ற உயிர்.

## ஆசிரியர் குறிப்பு

பெயர் : மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார்

ஊர் : மதுரை

காலம் : கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.

**நூல் குறிப்பு :** இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. நன்மைதரும் இனிய கருத்துகளை நாற்பது பாடல்களில் தொகுத்துரைப்பதால் இனியவை நாற்பது எனப் பெயர்பெற்றது. இந்நூலின் ஒவ்வொரு பாடலும் மூன்று அல்லது நான்கு நற்கருத்துகளை இனிமையாகக் கூறும். இந்நூலின் 12, 20ஆம் பாடல்கள் நம் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளன.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக.**

1. குழவி ________________
2. பிணி ________________
3. சலவர் ________________
4. கழறும் ________________

**2. பிரித்து எழுதுக.**

1. பிணியின்றி ________________
2. அவையஞ்சான் ________________
3. மாண்புடையார் ________________

**3. சேர்த்து எழுதுக.**

1. மயரிகள் + அல்லராய் = ________________
2. மன் + உயிர் = ________________
3. மலர் + தலை = ________________

**4. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. இனியவை நாற்பது ________________ நூல்களுள் ஒன்று.
2. இனியவை நாற்பது நூலின் ஆசிரியர் ____________ .

### ஆ) குறுவினாக்கள்

1. பூதஞ்சேந்தனார் – குறிப்பு எழுதுக.
2. குழவிக்கு இனிதாவது யாது ?
3. உயிர்களுக்கு இனிமை பயப்பது எது ?
4. மாண்புடையாரின் இயல்பு எத்தகைத்து ?

### இ) சிறுவினாக்கள்

1. இனியவை நாற்பது – குறிப்பு எழுதுக.
2. எவையெல்லாம் இனிமை பயக்குமெனப் பூதஞ்சேந்தனார் கூறுகிறார் ?

## தமிழ்ப்பசி

பொன்னின் குவையெனக்கு வேண்டிய தில்லை – என்னைப்
போற்றும் புகழெனக்கு வேண்டிய தில்லை

மன்னன் முடியெனக்கு வேண்டிய தில்லை – அந்த
மாரன் அழகெனக்கு வேண்டிய தில்லை.

கன்னித் தமிழெனக்கு வேணுமேயடா – உயிர்க்
கம்பன் கவியெனக்கு வேணுமேயடா

நூல்கள் கனித்தமிழில் அள்ளிட வேண்டும் – அதை
நோக்கித் தமிழ்ப்பசியும் ஆறிடவேண்டும்.

– க. சச்சிதானந்தன்

**பொருள் :** எனக்குப் பாராட்டி அளிக்கப்படும் பொற்குவியல்களும் வியந்து போற்றும் புகழுரைகளும் வேண்டா; அரசனின் மணிமுடியும் கண்டாரைக் கவர்ந்திழுக்கும் மாரனின் அழகும் வேண்டா.

எனக்கு, என்றும் இளமை குறையாத தமிழும், தமிழுக்கு உயிராக விளங்கும் கம்பன் கவிதைகளும் வேண்டும்.

கனிச்சுவைமிக்க நூல்களை அள்ளிக் கற்றல் வேண்டும். அவற்றைப் படித்துத் தமிழ்ப்பசி ஆறிடல் வேண்டும்.

**சொற்பொருள் :** குவை – குவியல் ; மாரன் – மன்மதன்.

## ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | க. சச்சிதானந்தன் |
| ஊர் | : | இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பருத்தித்துறை |
| பணி | : | ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். |
| புலமை | : | தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம் ஆகிய மும்மொழிகளில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார். |
| படைப்புகள் | : | ஆனந்தத்தேன் (கவிதைத்தொகுதி – 1954); அன்னபூரணி (புதினம்); யாழ்ப்பாணக் காவியம். |
| சிறப்பு | : | மகாவித்துவான் நவநீதகிருட்டின பாரதியாரின் மாணவர். இவர்தம் பாடல்களில் கம்பனின் மிடுக்கையும் பாரதியின் சினப்போக்கையும் ஒருமித்துக் காணலாம். |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக.**

1. குவை ________________　　2. மாரன் ________________

**2. பிரித்து எழுதுக.**

1. வேண்டியதில்லை ________________　　2. புகழெனக்கு ________________

3. குவையெனக்கு ________________　　4. தமிழ்ப்பசி ________________

**3. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. ‘தமிழ்ப்பசி ’ எனும் பாடலின் ஆசிரியர் ____________________.

2. சச்சிதானந்தன் ____________________ நாட்டைச் சார்ந்தவர்.

### ஆ) குறுவினாக்கள்

1. எவையெல்லாம் வேண்டா எனக் கவிஞர் சச்சிதானந்தன் குறிப்பிடுகிறார்?
2. எவையெல்லாம் வேண்டும் எனக் கவிஞர் சச்சிதானந்தன் குறிப்பிடுகிறார்?
3. தமிழ்ப்பசி எப்போது ஆறும்?

### இ) சிறுவினா

கவிஞர் சச்சிதானந்தனின் தமிழ்ப்பற்றினை விளக்குக.

# செய்தி உருவாகும் வரலாறு

நாம் நாள்தோறும் பார்க்கின்ற, படிக்கின்ற செய்தித்தாள்கள் அன்றலர்ந்த மலர்களாக, புத்தம் புதிய செய்திகளோடு கண்ணையும் கருத்தையும் கவரும்வண்ணம் வெளி வருகின்றன. உலகில் எங்கோ ஓரிடத்தில் நடைபெறும் சிறிய நிகழ்வும் செய்தியாகிறது. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய முன்னேற்றத்தின் விளைவாக உடனுக்குடன் செய்திகள் வெளியிடப்படுகின்றன. இவ்வாறு வெளியாகும் செய்திகள், பல்வேறு படிநிலைகளைக் கடந்து செய்தித்தாள்களாகின்றன.

உலகில் நாள்தோறும் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தும் செய்திகளாவது இல்லை. ஆர்வத்தைத் தூண்டுவதும், எதிர்பாராத நிகழ்வுகளும் செய்திகளாகின்றன. எந்த ஒரு செய்தியும் அப்படியே வெளிவருவது இல்லை. அறிஞர் கிப்ளிங் என்பார் செய்தியைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

ஏன் ? என்ன ? எப்போது ? எப்படி ? எங்கே ? யார் ? எனும் அன்புத் தொண்டர் ஆறுபேர்கள் அறியச் செய்வார் செய்தியினை என்று குறிப்பிடுகிறார். இந்த ஆறுவினாக் களுக்கும் விடைபெறுகின்றபொழுது முழுமையான ஒரு செய்தித்தாளுக்குரிய எல்லா விவரங்களும் கிடைத்துவிடக் காணலாம். எடுத்துக்காட்டாகப் புத்தகக்கண்காட்சி ஓரிடத்தில் நடைபெறுவதாக வைத்துக்கொள்வோம். ஒரு நாளிதழின் செய்தியாளர் புத்தகக்கண்காட்சி நடைபெறும் இடம், காலம், நோக்கம், நடத்துபவர் முதலியவற்றிற்கு விடையளிக்கும்விதமாகச் செய்திகளைத் திரட்டுகிறார். படிப்பவர்களுக்குப் பொழுதுபோக்காகவும் மனிதவாழ்க்கையை ஒட்டியதாகவும் சமுதாய அக்கறை கொண்டதாகவும் செய்திகள் அமைதல் வேண்டும்.

செய்தியின் இயல்பையொட்டி, ஆறு வினாக்களுள் எது முன்னுரிமை பெறுகின்றது என்பதனை அறிதல் வேண்டும். சான்றாக, ஒருவர் துணைவேந்தராக நியமிக்கப்பெற்றால், ‘யார்’ என்னும் வினா முதலில் எழுகிறது. விபத்து ஏதேனும் நடைபெறும்போது எங்கே ? எப்படி ? என்னும் வினாக்கள் எழுகின்றன. பொதுவாக, இந்த ஆறு வினாக்களுக்கும் உரிய விடைகளும் செய்தியின் முகப்புப் பக்கத்தில் இடம் பெறுதல் வேண்டும்.

## செய்தி திரட்டுதல்

செய்தியை இனங்கண்ட பின்னர், செய்தியாளர் செய்தியைத் திரட்டும் பணியில் ஈடுபடுகிறார். செய்தியைப் பெறுதல் என்பது, துப்பறிதல் போன்றது. ஏனெனில், ஆறு வினாக்களுக்கும் உரிய விடையைக் காண்பதென்பது கடலில் மூழ்கி முத்தெடுப்பது போன்ற அரிய பணி. செய்திகளைத் திரட்டுவதற்கு என்று சில இடங்களைக் குறிப்பிடுவர்.

ஒவ்வொரு செய்தியாளரும் தமக்கு என ஒதுக்கப்பட்ட இடங்களுக்கோ அலுவலகங் களுக்கோ நாள்தோறும் சென்று செய்திகளைத் திரட்டுவர். இதனைச் செய்திக்களம் எனக் குறிப்பிடுவர். செய்திகளின் மூலங்களாக இருக்கும் அமைச்சகங்கள், காவல் நிலையங்கள், மருத்துவமனைகள், நீதிமன்றங்கள் முதலிய செய்திக்களங்களுக்குச் செய்தியாளர்கள் நாள்தோறும் சென்று, உரியவரிடம் தொடர்புகொண்டு செய்திகளைப்பெற்று வருவர்.

செய்திக்களங்களில் செய்திகளைத் திரட்டுவது மட்டுமன்றி, வெவ்வேறு இடங்களில் எதிர்பாராமல் நிகழும் நிகழ்வுகளையும் தமக்கு ஒதுக்கப்பட்ட பணியாகக் கொண்டு செய்தியாளர் செய்தி திரட்டுகின்றார். இப்பணியில் ஈடுபடுபவர்கள் தனித்திறன் மிக்கவர்களாக இருத்தல் வேண்டும். புதிய இடங்களில், சூழ்நிலைக்கேற்ப விரைந்து செயல்பட்டுச் செய்திகளைத் திரட்டுதல் வேண்டும்.

## செய்தி திரட்டும் முறைகள்

செய்திகளைத் திரட்டப் பொதுவான சில முறைகள் உள்ளன. இவற்றைப் பின்பற்றிச் செய்தியாளர்கள் செய்திகளைத் திரட்டுகிறார்கள்.

### நிகழ்ச்சியில் பங்கேற்றல்

செய்தியாளர் நிகழ்வு நடைபெறும் இடத்துக்கு நேரடியாகச் சென்று அந்நிகழ்வில் தாமும் பங்கேற்றுச் செய்திகளைத் திரட்டுகிறார். சான்றாக, 'லண்டன் டைம்ஸ்' இதழின் செய்தியாளர், இந்திய சீனப்போரின்போது நேரடியாகப் போர் நடைபெறும் இடத்திற்குச் சென்று, செய்திகளைத் திரட்டியதனைக் கூறலாம். 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' செய்தியாளர், தில்லியிலுள்ள சிறைச்சாலையின் நிலைபற்றி அறிய, தானே சிறைப்பட்டுச் செய்திகளைத் திரட்டித்தந்து புகழ்பெற்றார்.

### நிகழ்ச்சியின் பார்வையாளராகுதல்

செய்தியாளர், பார்வையாளராக இருந்து செய்தியைத் திரட்டுதல் பொதுவான முறை. விளையாட்டுப் போட்டிகள், புகழ்பெற்ற விசாரணைகள், சட்டமன்ற நடவடிக்கைகள், மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றைக் காண, செய்தியாளருக்குத் தனி இடம் ஒதுக்கியிருப்பர். ஓரிடத்துக்குப் பார்வையாளராகச் செல்லும் செய்தியாளர், அங்கு நடைபெறும் நிகழ்ச்சியின் பின்புலத்தை நன்கு அறிந்திருத்தல் வேண்டும். சான்றாகச் சட்டமன்ற நிகழ்வுகளைப் பார்வையிடச் செல்லும் செய்தியாளர் சட்டமன்றத்தின் விதிமுறைகளையும் நடைமுறைகளையும் தெரிந்து வைத்திருத்தல் இன்றியமையாதது.

### வினாக்கள் கேட்டல்

ஒரு நிகழ்ச்சியில் பங்குபெற்றவர்களைக் கண்டு, அவர்களிடம் வினாக்கள்மூலம் செய்திகளைத் திரட்டுவது ஒருமுறை. இதனைச் சிறப்பாகத் திட்டமிட்டு, நேர்காணலுக்கு வழிவகை செய்தல் வேண்டும். நிகழ்ச்சியின் தன்மையைப் பொருத்து வினாக்களை முதலிலேயே வகைதொகைப்படுத்தியும் முறைப்படுத்தியும் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு திட்டமிட்டுக் காணும் நேர்காணலால் உரியவரிடமிருந்து முழுமையான செய்திகளைப் பெறலாம்.

### படித்தறிதல்

செய்திகளைத் திரட்டுவதற்காகச் செல்லும் செய்தியாளர்கள் ஆழ்ந்த அகன்ற அறிவு பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். அரசின் அறிக்கை, வாணிகக் குழுக்களின் வெளியீடுகள், நிதியமைச்சரின் வரவுசெலவுத் திட்டங்கள் முதலியவற்றைப் படித்துத்தான் செய்தியாளர் செய்தியைத் திரட்டுகின்றார்.

### அறிவியல் ஆய்வுமுறைகளைப் பயன்படுத்துதல்

செய்தியாளர் அறிவியல் ஆய்வுமுறைகளையும் அவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்பதனையும் அறிந்திருத்தல் வேண்டும். புள்ளியியல் இதற்கு உதவுகிறது. சான்றாகப் பொதுமக்களின் கருத்துகளைக் கூறெடுப்பு ஆய்வு வாயிலாக நடத்தலாம்.

### செய்திகளைப் பெறும் வாயில்கள்

உள்ளூர்ச் செய்தியாளர், வெளியூர்ச் செய்தியாளர், சிறப்புச் செய்தியாளர், ஆர்வலர்கள் மூலமாகவும் அரசு அறிக்கைகள், செய்தி நிறுவனங்கள் மூலமாகவும் செய்திகள் பெறலாம். இவை மட்டுமன்றிக் கம்பியில்லாத் தந்தி, தொலைபேசி, செல்பேசி, தொலை அச்சு, தொலை நகலி, வானொலி, தொலைக் காட்சி, கணினி வாயிலாக உலகெங்கும் நடக்கும் செய்திகளை உடனுக்குடன் பெறலாம்.



### செய்தியின் பகுதிகள்

தலைப்புச் செய்தி, முகப்புச்செய்தி, உடல்பகுதிச் செய்தி என மூன்று பகுதிகள் உள்ளன. ஒவ்வொரு பகுதியும் செம்மையாக அமைந்தால்தான் செய்தி முழுமை பெற்றதாகச் செய்தித்தாளில் அமையும். ஒரு செய்தி முழுமையும் உள்ளடக்கியதாகத் தலைப்பு அமைதல் வேண்டும். செய்திக்குத் தலைப்பும், அது நடைபெற்ற இடம், நாள் போன்றவையும் செய்தியில் இடம்பெறும். செய்தியின் முதல் பக்கத்தில் முகப்புச் செய்தி முழுக்கருத்தையும் சில சொற்களில் தெரிவிக்கும்வகையில் இடம்பெற்றிருக்கும். நிகழ்வின் விவரத்தை எடுத்துக் கூறும் செய்தியின் உடல்பகுதி துணைத்தலைப்புகளுடன் அமைந்திருக்கும்.






### செய்தி உருவாகும் முறை

செய்தியாளரால் திரட்டப்பட்ட விவரங்களுடன் கூடிய செய்தியானது, நாளிதழ் அலுவலகத்திலுள்ள உதவியாசிரியர் குழுவுக்கு அனுப்பப்படுகிறது. செய்தியின் இன்றியமையாமையை உணர்ந்த, உதவியாசிரியர் குழு அதனை உள்வாங்கிக் கொண்டு, அந்தச் செய்தியின் நிகழ்வுக்கு ஏற்றவகையில் தலைப்பு உள்ளதா, அதில் கூறப்பட்டுள்ள செய்திகளின் பொருள் சரியானதுதானா என்பனவற்றைச் சரிபார்த்துத் தேவையேற்படின் தலைப்பிலோ உள்பகுதிகளிலோ திருத்தங்கள் மேற்கொள்வர்.

உதவியாசிரியர் குழு செய்த திருத்தங்களுடன் செய்தியானது, மெய்ப்புத் திருத்துநர் பிரிவுக்கு அனுப்பப்படுகிறது. செய்தியில் உள்ள எழுத்துப்பிழை, சந்திப்பிழை, சொற்பிழை, கருத்துப்பிழை முதலியவற்றைச் சரிசெய்து அதன் புதிய படி மீண்டும் உதவியாசிரியர் குழுவுக்கு அனுப்பப்படுகிறது. அக்குழு, அதனைச் சரிபார்த்தபின், அந்தச் செய்தியானது, செய்தி ஆசிரியருக்கு அனுப்பப்படுகிறது. செய்தியாசிரியர் செய்தியின் தன்மையை அதன் இன்றியமையாமையைக் கருத்தில்கொண்டு அதனை எந்தப் பக்கத்தில் தருவது என்பதனை முடிவு செய்கிறார்.

நாடுதழுவிய அல்லது மாநில அளவிலான செய்தியாக இருப்பின், அதனைத் தலைமைப் பொறுப்பிலுள்ள ஆசிரியருக்கு அனுப்புவர். எளிய நிகழ்வுகளாக இருப்பின், அந்தப் பதிப்பில், ஏதேனும் ஓரிடத்தில் அச்செய்தி வெளியிடப்படுகிறது. இன்றியமையாத செய்தியாக இருப்பின், செய்தித்தாளின் முதல்பக்கத்திலோ உள்பகுதியிலோ கட்டமிட்டு வெளியிடப்படுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட செய்திகள் பக்க வடிவமைப்பாளரிடம் அளிக்கப்பட்டு, செய்தியாசிரியர் கூறும் இடங்களில் அவை வடிவமைக்கப்படுகின்றன. முழுமை பெற்ற ஒரு செய்திப்பக்கம் அமைத்தபின், அந்தப் பக்கமானது, அச்சுப்பக்கமாக மாறுகிறது. பின்னர், அந்தச் செய்திப்பக்கம் வடிவமைப்புப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு அச்சுத் தகடாக மாற்றம் செய்யப்படுகிறது; அதனைத் தொடர்ந்து, அச்சு இயந்திரப்பிரிவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அச்சு இயந்திரத்தில் பொருத்தப்படுகிறது. பின்னர்த் தாளில் அச்சிடப்பட்டுச் செய்தித்தாளாக வெளி வருகிறது. அவை கட்டாகக் கட்டப்பட்டு வண்டிகள்மூலம் பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

காலம் கருதி விரைவாகச் செய்தித்தாளை வெளிக்கொணரவேண்டும் என்பதால், பல்வேறு பதிப்புகளாகச் செய்திகள் வெளிவருகின்றன. முதல் பதிப்பு, இரண்டாம் பதிப்பு எனப் பதிப்புகள் பிரிக்கப்பட்டு விடியற்காலையில் அனைவருக்கும் கிடைக்கும்வகையில் செய்தித்தாள்கள் அச்சடிக்கப்படுகின்றன. நூறு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளவருக்கும் செய்தித்தாள் அலுவலகம் அமைந்துள்ள இடத்திலிருப்பவருக்கும் ஒரே நேரத்தில் கிடைக்கும்வகையில் செய்தித்தாள்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. பொதுவாக, ஒரு பதிப்பானது காலைப்பதிப்பாக இருந்தால், இரவு இரண்டு மணிவரையிலும், மாலைப் பதிப்பாக இருந்தால் பிற்பகல் இரண்டு மணிவரையிலும் செய்திகள் அச்சிடப்படுகின்றன. நாள்தோறும் நிகழும் செய்திகள் இப்படித்தான் வாசகர்களுக்குச் சுடச்சுடக் கிடைக்கின்றன.

### இதழியல் கலைச்சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Bulletin | - | சிறப்புச்செய்தி இதழ் | Flash News | - | சிறப்புச் செய்தி |
| Deadline | - | குறித்த காலம் | Folio No. | - | இதழ் எண் |
| Editorial | - | தலையங்கம் | Green Proof | - | திருத்தப்படாத அச்சுப்படி |
| Fake News | - | பொய்ச்செய்தி | Layout | - | செய்தித்தாள் வடிவமைப்பு |

அறிந்து கொள்வோம்!
அச்சுப்பிழை திருத்தக்குறியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| ⊙ | முற்றுப்புள்ளி இடுக.. | ~ | பத்திகளை இணைக்க. |
| : | இரு புள்ளிகளைச் சேர்க்க. | # | இடைவெளி விடுக. |
| ?/ | வினா அடையாளம் இடுக. | ௫ | எழுத்தையோ சொல்லையோ சேர்க்கவும். |
| 90 | எண்ணை எழுத்தாக எழுதுக. | D | எழுத்தையோ, சொல்லையோ நீக்குக. |
| இருபது | எழுத்தை எண்ணாக எழுதுக. | S.c | பெரிய எழுத்தைச் சிறிய எழுத்தாக்குக. |
| = | வரியை நேர் செய்க. | Bold | தடித்த எழுத்தில் மாற்றுக. |
| ⁀‿ | இடைவெளியின்றிச் சேர்க்க. | stet | உள்ளது உள்ளவாறே இருத்தல். |

"காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற் பாய்ந்திடும் எழுச்சி நீதான்
ஊரினை நாட்டை இந்த உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சில் பிறந்தபத்திரிகைப் பெண்ணே"

– பாரதிதாசன்

தமிழ்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. பிரித்து எழுதுக

1. செய்தித்தாள் ____________________ 2. ஓரிடம் ____________________

2. சேர்த்து எழுதுக

1. வான் + ஒலி ____________________ 2. சொல் + பிழை ____________________

3. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. செய்தியைப் பெறுதல் என்பது ____________________ போன்றதாகும்.
2. பொதுமக்களின் கருத்துகளை ____________________ வாயிலாக அறியலாம்.

### ஆ) குறுவினாக்கள்

1. செய்தி திரட்டலுக்கு உதவும் இன்றியமையாத ஆறு வினாக்கள் யாவை?
2. செய்திக்களம் என்பது யாது? சான்று தருக.
3. செய்தி திரட்டுவதில் உள்ள பொதுவான முறைகள் யாவை?

### இ) சிறுவினாக்கள்

1. ஒரு நிகழ்ச்சியில் பார்வையாளராகப் பங்கேற்கும் செய்தியாளரின் பணி யாது?
2. செய்திகளைப் பெறும் வாயில்கள் யாவை?
3. செய்தியின் பகுதிகளைக் குறிப்பிடுக.

### ஈ) நெடுவினா

செய்தி உருவாகும் முறையை விவரிக்க.

**உ) செயல்திட்டம் :** இலக்கியமன்ற நிகழ்வு குறித்த கையேடு தயாரிக்க.

துணைப்பாடம்

# மகிழ்ச்சிக்கான வழி

முல்லா நசுருதின் பெரும்புலமையும் அறிவாற்றலும் மிக்கவர். அவருடைய ஒவ்வொரு கதையிலும் ஏதேனும் ஓர் ஆழ்ந்த தத்துவமோ குறிக்கோளோ இடம்பெற்றிருக்கும். பிறர் மனம் புண்படாதவகையில் நகைச்சுவையுணர்வும் சிந்தனையைத் தூண்டும் வகையில் கதையும் அமைந்திருக்கும்.

முல்லா நசுருதின் ஒருமுறை வெளியூருக்குச் சென்று கொண்டிருந்தார். செல்லும் வழியில் மரத்தடியில் ஒருவர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார். அவரைப் பார்ப்பதற்குப் பணக்காரர்போலக் காணப்பட்டாலும், அவருடைய முகம் ஏனோ வாடியிருந்தது. இதனைக் குறிப்பால் உணர்ந்த முல்லா, மரத்தடிக்குச் சென்று அவரருகில் உட்கார்ந்தார்.

“ஐயா, தங்களைப் பார்த்தால் செல்வக்குடும்பத்தைச் சேர்ந்தவர்போல் தோன்றுகிறது. உங்கள் முகத்தைப் பார்க்கும்போது ஏதோ கவலையில் இருப்பதுபோல் தெரிகிறது. தங்கள் கவலைக்கு என்ன காரணம் என நான் தெரிந்துகொள்ளலாமா ?” என்று முல்லா கேட்டார்.

முல்லாவை அந்த மனிதர் ஏறிட்டுப் பார்த்தார். “ஐயா, நீங்கள் கூறுவது சரியே. நான் வசதியான குடும்பத்தில் பிறந்தவன்தான். எனக்கு ஏராளமான சொத்துகள் உள்ளன. இருப்பினும், ஒரு நிமிடம்கூட என்னால் மகிழ்ச்சியாக இருக்கமுடியவில்லை. என்னுடைய செல்வங்களையெல்லாம் யாராவது என்னிடத்திலிருந்து கவர்ந்துகொண்டு போய் விடுவார்களோ என்று அச்சமாக இருக்கிறது. இப்போதுகூட, என் கையிலிருக்கும் ஆயிரம் பொற்காசுகள் அடங்கிய பையை யாராவது பறித்துக்கொள்வார்களோ என்று பெருங்கவலையாக இருக்கிறது” என்று கூறினார்.

இதனைக் கேட்டுக்கொண்டேயிருந்த முல்லா, திடீரென்று, அந்தப் பணக்காரரின் பணப்பையைப் பிடுங்கிக்கொண்டு ஓடத் தொடங்கினார்.

அதனைக் கண்டு பதறிய பணக்காரர், “என் பணம், என் பணம், யாராவது ஓடி வாருங்களேன், என் பணம் பறிபோகிறதே!” என்று அலறியவாறே முல்லாவின் பின்னால் ஓடினார். அவரிடம் பிடிபடாமல் முல்லா, அங்கும் இங்கும் ஓடி அவருக்குப் போக்குக்காட்டி விட்டு, மீண்டும் அந்த மரத்தடிக்கே வந்துசேர்ந்தார். அப்பணக்காரரின் பணப்பையை மரத்தடியில் வைத்துவிட்டு, மரத்திற்குப் பின்னால் சென்று ஒளிந்துகொண்டார்.

முல்லாவைப் பின்தொடர்ந்து ஓடியும் அவரைப் பிடிக்க இயலாமல், மூச்சு வாங்க அந்த மரத்தடிக்கு மீண்டும் வந்துசேர்ந்தார் அப்பணக்காரர். அங்கே அவருடைய

பணப்பை இருந்தது. அதனைக் கண்டவுடன் மிகவும் மகிழ்ச்சியடைந்த அவர், " கடவுளே, இப்போதுதான் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். காணாமல்போன பணம் மீண்டும் கிடைத்ததில் என்னுடைய கவலையெல்லாம் பறந்துவிட்டது" என்று கூறினார்.

மரத்திற்குப் பின்னால் மறைந்திருந்த முல்லா, இப்போது மெதுவாக வெளியில் வந்தார். "ஐயா ! வாழ்க்கையில் ஒரு நிமிடம்கூட மகிழ்ச்சியாக இருக்கமுடியவில்லை என்று வருத்தப்பட்டீரே! உங்கள் வருத்தத்தை நீக்குவதற்காகத்தான் நான் பணப்பையைப் பறித்துக்கொண்டு ஓடினேன். பறிபோய்விட்டதாக நீங்கள் நினைத்துக் கொண்டிருந்த செல்வம், திரும்பக் கிடைத்ததும் உங்கள் மனநிலை எப்படி இருந்தது ? நீங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு ஈடு இணையே இல்லை அல்லவா ?" என்றார் முல்லா.

பணக்காரரும் மகிழ்ச்சியுடன், "ஆம் ஐயா! நீங்கள் சொன்னது உண்மைதான். பணப்பை மீண்டும் கிடைத்ததும் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை" என்றார். பின்னர் முல்லாவைப் பார்த்து, "ஐயா, உங்களைப் பார்த்தால் வசதியானவர் இல்லை போன்று தோன்றுகிறது. நீங்கள் மிகவும் முகமலர்ச்சியுடனும் மகிழ்ச்சியுடனும் இருப்பதன் காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமா ?" என்று பணக்காரர் கேட்டார்.

"அது வேறொன்றுமில்லை. தன்னுடைய தேவைக்கு அதிகமாகச் சொத்துகளையோ செல்வத்தையோ சேர்த்து வைத்திருக்கும் மனிதன் பேராசை கொண்டவனாகிறான். பொருளை மேன்மேலும் சேர்க்கவேண்டும் என்ற எண்ணமே அவனைப் பேராசைக்காரனாக ஆக்குகிறது. அந்தச் செல்வத்தையெல்லாம் பாதுகாக்க வேண்டுமே என்று அவன் நினைக்கும்போது, மகிழ்ச்சியும் அவனைவிட்டு நீங்கிவிடுகிறது. ஆனால், நான் இன்றியமையாத தேவைக்கு மட்டுமே பணத்தைச் சேர்த்துவைக்கிறேன்; அதனால் தான், மகிழ்ச்சியுடன் இருக்கிறேன்" என்றார் முல்லா.

முல்லா கூறிய சீரிய உண்மையைப் புரிந்துகொண்ட பணக்காரர், தம்மைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார். அளவுக்கு அதிகமாகத் தாம் சேர்த்துவைத்த செல்வத்தை யெல்லாம் எவ்வாறு நல்லவழிகளில் செலவிடலாம் என்று மனத்திற்குள்ளே திட்டமிடத் தொடங்கினார்.

ஒரு நிமிடம் என்ன , இனி எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வழிசொன்ன முல்லா, "வருகிறேன் ஐயா" என்று கூறியவாறே நடையைக் கட்டினார்.

## மாதிரி வினா

### கட்டுரைவினா

"மகிழ்ச்சிக்கான வழி" கதையைச் சுருக்கி எழுதுக.

இலக்கணம்

# இலக்கியவகைச் சொற்கள்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம். எல்லாரும் காலையில் உண்டீர்களா ?

மாணவர் : உண்டோம், அம்மா.

ஆசிரியர் : மகிழ்ச்சி. முன்வகுப்பில் சொற்களைப்பற்றிப் படித்திருப்பீர்கள், அது நினைவில் இருக்கிறதா ?

மாணவர் : நன்றாகவே நினைவில் இருக்கிறது, அம்மா. பெயர், வினை, இடை, உரிச்சொற்கள்தாமே அம்மா.

ஆசிரியர் : சரியாகச் சொன்னீர்கள். அவற்றை எந்த வகைக்குள் அடக்குவார்கள், தெரியுமா ?

மாணவர் : இலக்கண வகைக்குள்தானே அம்மா.

ஆசிரியர் : ஆமாம். இலக்கணவகைபோல, இலக்கிய வகையாலும் சொற்கள் நால்வகைப்படும். அவை: இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்பன.

மாணவர் : அப்படியா அம்மா. இயற்சொல் என்றால் என்ன ?

ஆசிரியர் : தீ, காடு, மரம் – இச்சொற்களை ஒலித்துப் பாருங்கள். இவற்றின் பொருள் விளங்குகிறதா ?

மாணவர் : நீங்கள் கூறிய எல்லாச்சொற்களும் எளிதில் புரிந்துகொள்ளும் சொற்களே.

ஆசிரியர் : படிக்காதவர்களிடத்தில், இந்தச் சொற்களைப்பேசினால், அவர்களுக்கும் புரியுமா ?

மாணவர் : இவற்றைப் படிக்காதவர்களும் எளிதாகப் புரிந்துகொள்வார்கள், அம்மா.

ஆசிரியர் : இவ்வாறு எல்லாருக்கும் பொருள் விளங்கும்வகையில் இயல்பாய் அமைந்த தமிழ்ச்சொல் இயற்சொல் எனப்படும். இது பெயர் இயற்சொல், வினை இயற்சொல் என இருவகைப்படும்.

மாணவர் : அப்படியா அம்மா! எடுத்துக்காட்டுகள் தாருங்களேன்.

ஆசிரியர் : காற்று, நிலவு, ஞாயிறு, பலகை – இவை எளிதில் பொருள் விளங்கும் பெயர்ச்சொற்கள். இவற்றைப் பெயர் இயற்சொற்கள் என்பர். படித்தான், தூங்கினான், வந்தான் – இவை எளிதில் பொருள்தரும் வினைச்சொற்கள். இவற்றை வினை இயற்சொற்கள் என்பர்.

மாணவர் : நன்றாகப் புரிந்தது, திரிசொல் என்றால் என்ன ? அம்மா.

ஆசிரியர் : பீலி, உகிர், ஆழி – இச்சொற்களை ஒலித்துப் பாருங்கள். இவற்றின் பொருள் என்ன ?

மாணவர் : பொருள் தெரியவில்லை அம்மா.

ஆசிரியர் : இவை கற்றவர்களுக்கு மட்டுமே விளங்கக் கூடியனவாய் இருக்கின்றன. இவற்றைத் திரிசொல் என்பர்.

பீலி – மயில்தோகை; உகிர் – நகம்; ஆழி – கடல், சக்கரம்.

மாணவர் : திரிசொல்லும் பெயர், வினை ஆகிய இரண்டிலும் வருமா ? அம்மா...

ஆசிரியர் : ஆம். திரிசொல்லும் பெயர்த் திரிசொல், வினைத் திரிசொல் என இருவகையாக வரும். எயிறு, வேய், மடி, நல்குரவு – என்பன பெயர்த் திரிசொல். (எயிறு – பல்; வேய் – மூங்கில்; மடி – சோம்பல்; நல்குரவு – வறுமை.) வினவினான், விளித்தான், நோக்கினார் – இவை வினைத் திரிசொல். வினவினான் – கேட்டான்; விளித்தான் – அழைத்தான்; நோக்கினார் – பார்த்தார்.

மாணவர் : அம்மா, திசைச்சொல் என்றால் என்ன ?

ஆசிரியர் : கேணி, பெற்றம் – இச்சொற்களை ஒலித்துப் பாருங்கள். இவை, தமிழ்நாட்டைச் சுற்றியுள்ள பிறபகுதிகளிலிருந்து தமிழில் வழங்கும் சொற்கள் திசைச்சொற்கள். (கேணி – கிணறு; பெற்றம் –பசு.)

மாணவர் : அம்மா, வடசொல் என்றால் என்ன ?

ஆசிரியர் : கமலம், விஷம், புஷ்பம் – இவற்றைப் படியுங்கள்.

இவை தமிழில் வந்து வழங்கினாலும் தமிழ்ச்சொற்கள் அல்ல, வடமொழிச் (சமற்கிருதம்) சொற்கள்,

கமலம் – தாமரை

விஷம் (விடம்) – நஞ்சு

புஷ்பம் (புட்பம் ) – மலர்

இங்ஙனம், வடமொழிச் சொற்கள் திரிந்தும் திரியாமலும் தமிழ்மொழியில் வந்து வழங்குமானால் அவை வடசொல் எனப்படும்.

பயிற்சி

அன்பரசி கேணியிலிருந்து தண்ணீர் கொணர்ந்தாள்; தோட்டத்தில் ரோஜாவைப் பறித்து மாலையாக்கினாள்; கோவிலுக்குச் சென்று இறைவனுக்குப் பூஜை செய்தாள். அங்கு அந்தணர் மறைமொழி கேட்டு மெய்ம்மறந்து நின்றாள்.

மேற்கண்ட பத்தியிலுள்ள சொற்களைக் கீழ்க்குறித்தவாறு வகைப்படுத்துக.

1. இயற்சொல் ____________________
2. திரிசொல் ____________________
3. திசைச்சொல் ____________________
4. வடசொல் ____________________

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கீழ்க்காணும் திசைச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களைப் பொருத்துக.

| திசைச்சொல் | | தமிழ்ச்சொல் | திசைச்சொல் | | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|---|---|
| 1. பண்டிகை | – | மூலம் | 5. அச்சன் | – | காட்சி |
| 2. வெள்ளம் | – | வணிகம் | 6. ஜமக்காளம் | – | நீர்ப் பெருக்கு |
| 3. வியாபாரம் | – | விரிப்பு | 7. வேடிக்கை | – | தந்தை |
| 4. அசல் | – | திருவிழா | | | |

2. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. நிலம், நாய் | – | வினைத்திரிசொல் |
| 2. வந்தது, படித்தான் | – | பெயர் இயற்சொல் |
| 3. களிறு, புரவி | – | வினை இயற்சொல் |
| 4. வினவினான், நோக்கினான் | – | பெயர்த்திரிசொல் |

### ஆ) குறுவினாக்கள்

1. இலக்கிய வகையால் சொற்கள் எத்தனை வகைப்படும் ? அவையாவை ?
2. திரிசொல் என்றால் என்ன ? சான்று தருக.
3. திரிசொல் வகைகள் யாவை ? சான்று தருக.
4. வடசொல் என்றால் என்ன ? சான்று தருக

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

உனக்குப் பிடித்த கவிதையைப்பற்றி ஐந்து மணித்துளி பேசுக.

### ஆ) படித்தல் திறன்

கீழுள்ள பத்தியைப் படித்து நயம் உணர்க

நீலாம்பிகை அம்மையார் மறைமலையடிகளாரின் மகள் ஆவார். மறைமலையடிகள், தனித்தமிழ்மீது ஈடுபாடுகொண்டிருந்ததைப் போன்று நீலாம்பிகை அம்மையாரும் தனித்தமிழ்ப்பற்றுடன் திகழ்ந்தார்.

ஒருமுறை அவருடைய வீட்டில் விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்விருந்தில் கலந்து கொண்ட பண்டிதமணி மு. கதிரேசனார், "நீலாம்பிகை, இரசம் கொண்டு வா'' என்றார். உடனே அம்மையார், "ஐயா, இரசம் என்பது வடசொல்; சாறு என்று கூறலாமே" என்றார்.

அவரும் உடனே, "கருப்பாயி சாறு கொண்டு வா'' என்றார்; அம்மையார் விழித்தார்.

அவரோ, "என்னம்மா, நீலம் என்றால் கருப்பு; அம்பிகை என்றால் தாய் (ஆய்), உம்முடைய பெயரையும் தமிழ்ப்பெயராக்கிக் கருப்பாயி என்றழைத்தேன். சரிதானே'' என்றார். அம்மையார் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார்.

### இ) எழுதுதல் திறன்

#### 1. உரைநடைப் பகுதியைப் படித்துப் பார்த்துப் பொருளறியும் திறன்பெறுதல்

(எ.கா.) : கீழுள்ள உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

ஆயிரம் யானைகளைப் போரில் வென்ற அரசனுக்காகப் பாடப்படும் இலக்கியவகை பரணி. 'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி' என்பது பரணியின் இலக்கணம். இவ்விலக்கியம் தொண்ணூற்றாறு சிற்றிலக்கியவகைகளுள் ஒன்று. அரசர்கள் இருவருக்கிடையேயான போரில், தோற்ற அரசனது நாட்டின் பெயரால் பரணி பாடப்படும். போருக்குரிய தெய்வமாகக் காளியைக் கருதுவர். பரணி இலக்கியங்களுள் மிகச்சிறந்தது கலிங்கத்துப்பரணி. போரில் குலோத்துங்க மன்னனிடம் கலிங்க நாட்டு மன்னன் தோற்றுப்போனான். அதனால், கலிங்கத்துப்பரணி எனப் பெயர் சூட்டப்பட்டது. இந்நூல் சயங்கொண்டாரால் பாடப்பட்டது.

**வினாக்கள்**

1. இப்பகுதியில் இடம்பெற்றுள்ள எண்ணுப்பெயர்களை எடுத்து எழுதுக.
2. இப்பகுதியில் இடம்பெற்றுள்ள இணைப்புச்சொல் எது ?
3. 'அமர்' என்பதன் பொருள் ____________

   அ) யானை ஆ) போர் இ) வெற்றி
4. தொண்ணூற்றாறு – பிரிக்கும் முறை ____________

   அ) தொண் + ஆறு ஆ) தொண்ணூறு + ஆறு இ) தொள்ளாயிரம் + ஆறு

விடைகள் : 1. ஆயிரம், தொண்ணூற்றாறு 2. அதனால் 3. போர் 4. தொண்ணூறு + ஆறு

**பயிற்சி**

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்கள் நான்கனையும் உணர்த்தி, மக்களை நல்வழிப்படுத்தும் இலக்கியங்கள் பேரிலக்கியங்கள் எனப்படும்.

மேற்கண்ட நான்கு பொருள்களுள் ஒன்றோ சிலவோ குறைந்து வந்து தெய்வம், அரசன், வள்ளல், குரு முதலியோரின் சிறப்பினைக் கற்பனை செய்து பாடுவது சிற்றிலக்கியம். இவற்றை வடநூலார் பிரபந்தம் என்பர்.

பிரபந்தம் என்பதற்கு நன்கு கட்டப்பட்டது என்பது பொருள்.

தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும்.

**வினாக்கள்**

1. பேரிலக்கியங்கள் என்றால் என்ன ?
2. பிரபந்தம் என்பதன் பொருள் யாது ?
3. உரைநடைப்பகுதியில் இடம்பெற்றுள்ள எதிர்ச்சொற்களை எழுதுக.

4. இலக்கியம் – பிரிக்கும் முறை

அ) இல + கியம்  ஆ) இலக்கிய + இம்  இ) இலக்கு + இயம்

ஈ) படைப்புத்திறன்

'தமிழின் இனிமை' என்னும் தலைப்பில் எட்டு வரியில் பாடல் எழுதுக.

## மொழித்திறன் பயிற்சி

### 1. நேர்கூற்று அயற்கூற்றுத் தொடர்கள்

நேர்கூற்று : "வேல்விழி, நன்றாகப் படித்துத்தேர்வில் முதன்மை பெறு'' என்று ஆசிரியர் அறிவுரை கூறினார். இது நேர்கூற்றுத்தொடர். ஒருவர் நேரே கூறுவதுபோல் அமைவது நேர்கூற்று எனப்படும். நேர்கூற்று, தன்மை, முன்னிலை ஆகிய இரு இடங்களிலும் வரும்.

அயற்கூற்று : நன்றாகப் படித்துத் தேர்வில் முதன்மை பெறுமாறு ஆசிரியர் வேல்விழிக்குக் கூறினார்.

நேர்கூற்றை அயற்கூற்றாக மாற்ற நினைவில் கொள்ள வேண்டியவை:

- நேர்கூற்றில் உள்ள மேற்கோள், காற்புள்ளி இவற்றை எடுத்துவிட வேண்டும்.
- 'என்று', 'என' என்ற செய்தியை முடிக்கும் சொல்லை நீக்கவேண்டும்.
- முன்னிலையிடத்தைத் தன்மையாகவோ படர்க்கையாகவோ மாற்றவேண்டும்.
- தன்மையிடத்தைப் படர்க்கையாக மாற்றவேண்டும்.
- கட்டளைச் சொல்லோடு ஆறு, ஆக எனும் சொல்லைச் சேர்க்கவேண்டும்.

நேர்கூற்றை அயற்கூற்றாக மாற்றும்போது மாறும் சொற்கள்

| நேர்கூற்று | அயற்கூற்று | நேர்கூற்று | அயற்கூற்று |
|---|---|---|---|
| இன்று | அன்று | நாளை | மறுநாள் |
| நேற்று | முன்னாள் | இப்பொழுது | அப்பொழுது |
| இது | அது | இவை | அவை |
| இதனால் | அதனால் | நான் | தான் |
| நாம், நாங்கள் | தாம், தாங்கள் | நீ | அவன், அவள் |
| நீங்கள் | அவர்கள் | | |

அயற்கூற்றுத் தொடரையும் நேர்கூற்றாக மாற்றலாம்

(எ.கா.) கவிஞர் சங்கத்தமிழ் நூலைப் படிக்குமாறு தம்பிக்குக் கூறினார். (அயற்கூற்று) இச்சொற்றொடரில் செய்தி அடுத்தவர் கூறுவதுபோல அமைந்துள்ளது.

"தம்பி, சங்கத்தமிழ் நூலைப்படி'' என்று கவிஞர் கூறினார். (நேர்கூற்று)

பயிற்சி

கீழ்க்காணும் சொற்றொடர்களை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

1. பாரதிதாசன், "தமிழ் என் உயிர் என்பேன்'' என்றார். (அயற்கூற்றாக்குக)
2. தான் நாளை வருவதாகப் பூவிழி கூறினாள். (நேர்கூற்றாக்குக)

3. ‘‘நீ வைகறையில் துயிலெழ வேண்டும்’’ என்று ஆசிரியர் சிந்தனைச்செல்வனிடம் கூறினார். (அயற்கூற்றாக்குக)

4. தந்தை தம்மகனை நோக்கி, ‘‘நீ நாள்தோறும், ஒழுங்காகப் பாடத்தைப் படித்துக்கொண்டு வா’’ என்று கூறினார். (அயற்கூற்றாக்குக)

5. பழத்தைத் தனக்குக் கொடுக்குமாறு கபிலனை வேலன் கேட்டான். (நேர்கூற்றாக்குக)

## 2. உரையாடலைச் செய்தியாக்குதல்.

(எ.கா.) கண்ணகி : ‘‘பாண்டிய மன்னா, என் கணவன் கள்வன் அல்லன்’’ (உரையாடல்)

கண்ணகி, பாண்டிய மன்னனிடம் தன் கணவன் கள்வன் அல்லன் என்று கூறினாள்.

கீழ்க்காணும் உரையாடலைச் செய்தியாக்குக.

அ) அமைச்சர் : ‘‘முல்லைக்கொடியின் துயர்தீர்த்து வாழ்வளித்த பாரி வள்ளலே! இன்று உங்கள் முகம் வாட்டமுடன் இருக்கக் காரணம் என்ன?’’

ஆ) குழலி : ‘‘எழில், நாளை உன்வீட்டுக்கு வரலாம் என்று எண்ணுகின்றேன்; இருவரும் சேர்ந்து கணக்குகளைப் போடலாமா?

## 3. விடுபட்ட இடங்களில் தமிழெண்களை எழுதி நிரப்புக.

1. க,______,_______,______, ரு,______,______, அ,______,_______.

2. கக,கஉ,______,______,______, கரு,______,______,______, உ0

## 4. கடிதம் எழுதும் பயிற்சி (அலுவலகக் கடிதம்)

அலுவலகக் கடிதம் எழுதும்போது சில விதிமுறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். அலுவலகக் கடிதத்தை ஒருவரே தனியாகவும், பலர் சேர்ந்து கூட்டு விண்ணப்பமாகவும் எழுதலாம்.

### அலுவலகக் கடிதம் எழுதுதலின் படிநிலைகள்

1. அனுப்புநர் முகவரி
2. பெறுநர் முகவரி
3. விளி
4. பொருள்
5. கடிதச் செய்தி
6. வணங்கல் பகுதி
7. ஒப்பப் பகுதி
8. நாள்
9. இடம்
10. உறைமேல் முகவரி

தமிழ்

மாதிரிக் கடிதம்

அனுப்புநர் திருவள்ளூர்,
15.10.2010.

அ. பூங்குழலி,
எட்டாம் வகுப்பு,
அரசு மகளிர் மேனிலைப் பள்ளி,
திருவள்ளூர் – 602 001.
திருவள்ளூர் மாவட்டம்.

பெறுநர்

மேலாளர்,
திருவள்ளுவர் புத்தகப்பண்ணை,
சென்னை – 600 001.

மதிப்புக்குரிய ஐயா,

பொருள் : திருக்குறள் தெளிவுரை நூல் – பதிவு அஞ்சல்மூலம் அனுப்ப வேண்டுதல்– சார்பாக.

-----

வணக்கம், தங்கள் பதிப்பகம் வெளியிட்டுள்ள திருக்குறள் தெளிவுரை, நாற்பது நூல்கள் தேவைப்படுகின்றன. நூல்களைப் பதிவு அஞ்சலில் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறேன். நூல் ஒன்றுக்கு உருபா இருபது வீதம் நாற்பது நூலுக்குரிய தொகை உருபா எண்ணூற்றுக்கான வரைவோலையை இத்துடன் இணைத்துள்ளேன்.

தங்கள்,
(அ. பூங்குழலி)

இணைப்பு :

வரைவோலை எண் : 562710. இந்தியன் வங்கி, நாள் : 14.10.2010 இடம் : திருவள்ளூர்.

உறைமேல் முகவரி:

பெறுநர்

மேலாளர்,
திருவள்ளுவர் புத்தகப்பண்ணை,
சென்னை – 600 001.

பயிற்சி: காணாமல்போன மிதிவண்டியைக் கண்டுபிடித்துத் தருமாறு காவல்துறை ஆய்வாளருக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்று எழுதுக.

## பண்பு

முரளி, நாள்தோறும் பள்ளிக்குப் பேருந்தில் செல்வான். அவனோடு பேருந்தில் செல்வதற்கு நண்பர்கள் யாரும் விரும்பமாட்டார்கள். ஏன் தெரியுமா ? பேருந்து, நிறுத்தத்துக்கு வந்தவுடன், முரளி எல்லாரையும் தள்ளிவிட்டு ஓடிப்போய் ஏறிக்கொள்வான்; யாரைப்பற்றியும் அவனுக்குக் கவலையில்லை. அடித்துப்பிடித்து ஏறுவதால் அவனைப் பேருந்தில் உள்ள அனைவரும் திட்டுவர். அவனோடு சேர்ந்து சென்றால் நண்பர்களுக்கும் திட்டுவிழும். அதனால், நண்பர்களும் ஒதுங்கிவிடுவர்.

### கூடிப்பேசுவோம்

1. முரளி நடந்து கொள்வது சரியா ?
2. பேருந்தில் நாம் எவ்வாறு ஏற வேண்டும் ?
3. உங்களுக்கு முரளியைப் போன்று நண்பர்கள் எவரேனும் உள்ளனரா ? இருந்தால், அவர்களை எவ்வாறு திருத்துவீர்கள் ?

## வாழ்க்கைத்திறன்

### பிறர்நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்

வளவனும், இனியனும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் ஒரே வகுப்பில் படிக்கிறார்கள். இனியன் ஒருநாள் வருத்தத்துடன் இருந்ததைக் கண்ட வளவன் அதற்கான காரணத்தை வினவினான். இனியன், தன்னுடைய தாயாருக்கு உடல்நலம் சரியில்லை என்றும், மருத்துவமனையில் அனுமதித்திருப்பதாகவும் கூறினான். அதனைக் கேட்ட வளவன், அவனுக்கு ஆறுதல் கூறினான்.

சில நாளுக்குப் பிறகு இனியன் பள்ளிக்கு வருவதனை நிறுத்திவிட்டான். இனியனைக் காணாமல் வளவன் மிகவும் மனம் வருந்தினான். அவனைத் தேடி, அவனது இல்லத்துக்குச் சென்றான். வீட்டில் இனியனின் தாயார் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டிருந்தது. அதனைக் கண்ட வளவன் மனம் கலங்கினான். நண்பனுக்கு ஏற்பட்ட இழப்பை அவனால் தாங்கிக்கொள்ள இயலவில்லை. இனியனின் குடும்பம் ஏழைமை நிலையில் இருந்ததனால், அவனால் படிப்பைத் தொடரமுடியவில்லை.

இனியனுக்கு உங்களால் எவ்வாறெல்லாம் உதவமுடியும் ?

இனியனின் மன உணர்வுகளை உங்களால் உணரமுடியுமா ?

## மதிப்புக்கல்வி

### எளியவரை மதித்தல்

விவேகானந்தர் ஒருமுறை பசியால் வாடியிருந்தார். அவர் வாடியிருப்பதனை ஒருவர் பார்த்தார். அவரது பசியைப் போக்கவிரும்பினார். 'ஐயா, நீங்கள் மிகவும் களைப்பாக இருக்கிறீர்களே, உங்களைப் பார்த்தால் உணவு உண்ணாததுபோலத் தெரிகிறது, சப்பாத்தி சுடுவதற்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்களே சப்பாத்தி சுட்டுக்கொள்ளுங்கள்' என்று கூறினார். விவேகானந்தர் 'ஏன் நீயே எனக்குச் சுட்டுக்கொடுக்கமாட்டாயா ?' என்று வினவினார். 'ஐயா நானோ ஓர் ஏழை. என் கைகளால் உங்களுக்கு உணவு கொடுக்கக்கூடாது' என்றார். 'மற்றவர்கள் சொல்வதைப்பற்றி யெல்லாம் எனக்குக் கவலையில்லை, நீயே சப்பாத்தி சுட்டுக்கொடு' என்று கூறி, அவர் சுட்டுக்கொடுத்த சப்பாத்தியை உண்டார்.

விவேகானந்தரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் ? நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?

உங்கள் கருத்துகளை நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள்.

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
|---|---|

பண்டைத்தமிழர் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கினர். செல்வத்தை மிகுதியாகப் பெற்றிருந்தோர், இல்லாதவருக்குக் கொடுத்து உதவினர். இன்றிருந்து நாளை மடியும் பொருட்செல்வத்தினும், நின்று நிலவும் அறச்செல்வமே உயர்ந்தது என்பதனை நன்கு உணர்ந்திருந்தனர்.

நால்வகைப் படையுடைய அரசனேயானாலும், அறநெறியே அவனுக்குச் சிறப்பைத் தரும் என்னும் கருத்தில் அசையா நம்பிக்கை வைத்திருந்தனர். அமிழ்தமே கிடைப்பினும், அதனைத் தனித்து உண்ணாமல், பிறருக்கு உவந்தளிப்பவரைப் பசிப்பிணி மருத்துவர் என அழைத்து மகிழ்ந்தனர்.

மனித இனம் முழுவதனையும் ஒன்றாகக் காணும் மனம் படைத்திருந்தனர். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் பொதுவுடைமைக் கொள்கையைப் பின்பற்றி வாழ்ந்தனர். தன்னிலையில் தாழாமையும் தாழ்வு ஏற்படின் உயிர் வாழாமையும் மானமெனக் கருதினர்.

### வினாக்கள்

1. பண்டைத்தமிழர் , அறச்செல்வமே உயர்ந்தது எனக் கருதக் காரணம் என்ன ?
2. அரசனுக்கு நால்வகைப் படையைக்காட்டிலும் சிறப்பைத் தருவது எது ?
3. பிறருக்கு உவப்புடன் உணவளித்தோரை எவ்வாறு அழைத்தனர் ?
4. தமிழரின் மானம் எத்தகையது ?
5. உரைப்பத்திக்கு ஏற்புடைய தலைப்பைத் தருக.

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

### பட்டிமன்ற முறையில் குழு அமைத்துப் பேசுக.

**மகிழ்ச்சிக்கு வழி பணமே! மனமே!**

**நடுவர்**

அனைவருக்கும் வணக்கம். நாம் வாழ்கின்ற வாழ்க்கையில் மகிழ்ச்சியென்ற ஒன்று இல்லையென்றால், இந்த மனித இனம் காணாமல் போய்விடும். அந்த மகிழ்ச்சிக்கான வழி, பணத்தைத் தேடும் முயற்சியில் உள்ளதா ? அன்றி, மனத்தைப் பண்படுத்தும் முறையில் உள்ளதா ? என்பதனை அறியவே இந்தப் பட்டிமன்றம்.

முதலில், மகிழ்ச்சிக்கு வழி பணமே என்னும் தலைப்பில், தன் கருத்தைக் கூற வருகிறார் அந்த அணியின் தலைவர்.

(பணமே) அணித்தலைவர் – 1

நடுவர், மாற்றுக்கருத்து அணித்தலைவர் மற்றும் அவையோர் அனைவருக்கும் என் வணக்கம். நடுவர் அவர்களே! பணமில்லாத வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது வெறும் கானல்நீர்தான். ஒன்றுக்கும் உதவாத மனத்தை வைத்துக்கொண்டு, ஞானிகளும் துறவிகளும் வேண்டுமானால் மகிழ்ச்சியைத் தேடிக்கொள்ளலாம்.

ஆனால், நம் போன்றவர்களுக்கு மனத்தை மட்டும் வைத்து மகிழ்ச்சியடைய வாய்ப்பே இல்லை. பொருளில்லாதவனுக்கு இந்த உலகம் இல்லையென்று வள்ளுவர் தெரியாமலா சொல்லிச் சென்றார். எனவே, மகிழ்ச்சிக்கு வழி பணமே எனத் தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

(மனமே) அணித்தலைவர் –2

நடுவருக்கும் மாற்றுக்கருத்து அன்பர்க்கும் மற்றும் அவையோர்க்கும் என் பணிவார்ந்த வணக்கம். நடுவர் அவர்களே! மனிதர்கள் பணம், பணம் என அலைந்து வாழ்க்கையை முழுமையாக வாழத் தெரியாதவர்களாக உள்ளார்கள்.

நம் முன்னோர்கள் எல்லாம் பணம் வைத்தா வாழ்ந்தார்கள்? பணம், மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட ஒன்று. ஆனால், மகிழ்ச்சி அப்படியில்லை. அது நம் மனம் அல்லவா?

போதும் என்னும் மன நிறைவில் பத்து ரூபாயை வைத்துக்கொண்டு வாழ்பவர்களின் மகிழ்ச்சியில் ஒரு துளியைக்கூடக் கோடி ரூபாயை வைத்துக்கொண்டு போதாது என்னும் மனம் படைத்தவர்கள் வாழ்வதில்லை. பணத்தால் ஆடம்பரமாக வேண்டுமானால் வாழலாம். ஆனால், அமைதியாக வாழ முடியாது.

நடுவர்

அருமை! அருமை! நன்றாகவே தன் கருத்தை அழுத்தமாக எடுத்துரைத்தார் அணித்தலைவர். இருந்தும் 'பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்' என்பார்கள். பணம் இருந்தால் அல்லவோ பசியாற முடியும். வெறும் மனத்தால் முடியுமா? ஆனாலும், பசிக்கு உணவுதான் தேவையே அன்றிப் பணம் இல்லை. வெறும் பணத்தைத் தின்றா பசியாறிட முடியும்?

வாழ்வதற்குப் பணம் தேவைதான். ஆனால், பணமே வாழ்க்கை ஆகுமா? பணம் உள்ளவர் இல்லாதவர் என்னும் இருவர்தம் வாழ்க்கையிலும் இன்பமும் துன்பமும் மாறிமாறித்தானே வருகின்றன.

எதுவாக இருந்தாலும் மகிழ்ச்சியை நமக்குத் தருவது மனந்தான் எனத் தீர்ப்பளித்து இப்பட்டிமன்றத்தை நிறைவுசெய்கிறேன். நன்றி, வணக்கம்.

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் பாடலை வாய்விட்டுப் படிக்க.

நூலைப்படி – சங்கத்தமிழ்
நூலைப்படி – முறைப்படி
நூலைப்படி

காலையில்படி கடும்பகல் படி
மாலை இரவு பொருள்படும்படி

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வ தெப்படி

அறம்படி பொருளைப் படி
அப்படியே இன்பம் படி
இறந்த தமிழ்நான் மறை
பிறந்த தென்று சொல்லும்படி

சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி
சேதி அப்படித் தெரிந்துபடி
தீமை வந்திடுமே மறுபடி

– பாரதிதாசன்

## எழுதுதல் திறன்

| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழ்க்காணும் சொற்களை அகர வரிசையில் எழுதுக.

நேர்காணல், துப்பறிதல், நோன்பு, தோகை, நொச்சி, தையல், நிகழ்ச்சி, தேர்வு, நீச்சல், திரட்டு, நடைமுறை, தூக்கம், நெய்வேலி, தொலைபேசி, தலைப்பு, நூலாய்வு, தெற்கு, நாடு, தாமரை, தீஞ்சுவை, நைதல், நுங்கு.

| | | | | |
|---|---|---|---|---|
| த | | | | |
| | | | | |
| | | | | |
| ந | | | | |
| | | | | |
| | | | | |

தமிழ்

| வகைப்படுத்துதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கொடுக்கப்பட்டுள்ள பத்தியில் அமைந்துள்ள இலக்கியவகைச் சொற்களைக் கண்டறிந்து வகைப்படுத்துக.

ஞாயிற்றின் உதயத்தில் புதிய நாள் தொடங்கியது. துயில் எழுந்த கண்ணன், கேணிப் பக்கம் சென்றான். எயிறு துலக்கி, உணவுண்டு, பள்ளி செல்வதற்குத் தன் தாயை விளித்தான். இறைவனுக்குப் புஷ்பம் சூட்டிய தாய், தன் மகனை நோக்கினாள். பள்ளிக்குச் சென்று வா என்றாள்.

பண்டிகை வருவதனால், துணி வியாபாரம் செய்யும் தன் தந்தை, புதுத்துணி எடுத்துத் தருவார் என்றெண்ணியவாறு சந்தோஷமாகச் சென்றான். பள்ளிக்குச் செல்லும் வழியில், வித்தை செய்பவன் ஸர்ப்பத்தை வைத்துக்கொண்டு வேடிக்கை காட்டுவதனைப் பார்த்தான்.

| இயற்சொல் | திரிசொல் | திசைச்சொல் | வடசொல் |
|---|---|---|---|
| ஞாயிறு | | | |
| | | | |
| | | | |
| | | | |

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 6 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.

நாம் நாள்தோறும் பார்க்கின்ற, படிக்கின்ற செய்தித்தாள்கள் அன்றலர்ந்த மலர்களாகப் புத்தம்புதிய செய்திகளோடு கண்ணையும் கருத்தையும் கவரும்வண்ணம் வெளிவருகின்றன. உலகில் எங்கோ ஒருமூலையில் நடைபெறும் சிறிய நிகழ்வும் செய்தியாகிறது. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய முன்னேற்றத்தின் விளைவாக உடனுக்குடன் செய்திகள் வெளியிடப்படுகின்றன. இவ்வாறு வெளியாகும் செய்திகள், பல்வேறு படிநிலைகளைக் கடந்து செய்தித்தாள்களாகின்றன.

| தொகுத்தல் | செயல்பாடு – 7 |
| --- | --- |

கொடுக்கப்பட்டுள்ள கருத்துகளைப் புரிந்துகொண்டு அவற்றைத் தொடர்புபடுத்தித் தொகுத்து எழுதுக.

செய்தி உருவாகும் வரலாறு




| நிறுத்தக்குறிப் பயன்பாடு | செயல்பாடு – 8 |
| --- | --- |

கீழ்க்காணும் பத்தியில், நிறுத்தக்குறிகளைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்துக.

மரத்துக்குப் பின்னால் மறைந்திருந்த முல்லா இப்போது மெதுவாக வெளியில் வந்தார் ஐயா வாழ்க்கையில் ஒரு நிமிடம்கூட மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை என்று வருத்தப்பட்டீரே உங்கள் வருத்தத்தை நீக்குவதற்காகத்தான் நான் பணப்பையைப் பறித்துக் கொண்டு ஓடினேன் பறிபோய் விட்டதாக நீங்கள் நினைத்துக் கொண்டிருந்த செல்வம் திரும்பக் கிடைத்ததும் உங்கள் மனநிலை எப்படி இருந்தது நீங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு ஈடுஇணையே இல்லை அல்லவா என்று முல்லா கேட்டார்

| சொற்களஞ்சியப்பெருக்கம் | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் தொடர்களில் வண்ணமிட்ட சொற்களுடன் இல் அல்லது உள் என்னும் சொற்களை இணைத்து எழுதுக.

(எ.கா.) சிலப்பதிகாரம் ஐம்பெருங்காப்பியம் ஒன்று.
சிலப்பதிகாரம் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.

1. ஏறு தழுவுதல் வீரவிளையாட்டு ஒன்று.
2. பறவை மரம் கூடு கட்டியிருந்தது.
3. பேரறிஞர் அண்ணா சிறந்த மேடைப் பேச்சாளர் ஒருவர்.
4. தமிழ் நூல்கள் எளிய நடை எழுதுதல் வேண்டும்.
5. திருக்குறள் அற நூல்கள் ஒன்று.
6. பள்ளியில் நடைபெற்ற ஓவியப்போட்டி கலந்து கொண்டேன்.

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் :10

1. கோடிட்ட இடத்தில் உரிய பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 X 1 = 5

1. குழவி என்பதன் பொருள் ______________ .
அ) ஒருவகைத் தேனீ ஆ) ஒருவகைக் குருவி இ) குழந்தை
2. பிணி என்பதன் பொருள் ______________ .
அ) நோய் ஆ) வறுமை இ) ஏழை
3. சலவர் இச்சொல்லின் எதிர்ச்சொல் ______________ .
அ) நண்பர் ஆ) நல்லவர் இ) வஞ்சகர்
4. கழறும் என்பதன் பொருள் ______________ .
அ) பேசும் ஆ) குழறும் இ) எழுதும்
5. குவை என்பதன் பொருள் ______________ .
அ) குவளை ஆ) குவியல் இ) மலை

2. ஓரிரு சொற்களில் விடையளிக்கவும் 5 X 1 = 5

அ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் பெயர்களுள் நான்கனை எழுதுக.
ஆ) யாருடன் சேராமல் இருந்தால் இனிமை தரும் ?
இ) குழந்தை எப்படி வாழ்தல் வேண்டும் ?
ஈ) யாருடைய அழகு வேண்டா எனக் கவிஞர் சச்சிதானந்தன் கூறுகிறார் ?
உ) கவிஞர் சச்சிதானந்தன் பிறந்த நாடு எது ?

தமிழ்

செய்யுள்

# திருவள்ளுவ மாலை

தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால் – மனையளகு
வள்ளைக்(கு) உறங்கும் வளநாட! வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி.

– கபிலர்

பொருள் : உலக்கைப் பாட்டின் இன்னிசை கேட்டுக் கண்ணுறங்கும் கோழிகளை உடைய வளநாட்டு மன்னனே! சிறுபுல்லின் தலையில் உள்ள தினையளவினும் சிறுபனிநீர், நெடிதுயர்ந்த பனைமரத்தின் உருவத்தைத் தன்னுள் தெளிவாகக் காட்டும். அதுபோல, வள்ளுவரின் குறள்வெண்பாக்கள் அரிய பொருள்களைத் தம்மகத்தே அடக்கி மிகத் தெளிவாகக் காட்டுகின்றன.

சொற்பொருள் : வள்ளை – நெல் குத்தும்போது பெண்களால் பாடப்படும் உலக்கைப் பாட்டு; அளகு – கோழி.

ஆசிரியர் குறிப்பு

பெயர் : கபிலர்.

காலம் : கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவரென்றும், சங்க காலத்துக்குப்பின் வாழ்ந்தவரென்றும் குறிப்பிடுவர்.

நூல் குறிப்பு : திருக்குறளின் சிறப்பினை உணர்த்த திருவள்ளுவமாலை என்னும் தனிநூல் ஒன்று இயற்றப்பட்டது. இந்நூலில் ஐம்பத்தைந்து பாடல்கள் உள்ளன. இதனை ஐம்பத்து மூன்று புலவர்கள் பாடியுள்ளார்கள். நம் பாடப்பகுதி திருவள்ளுவமாலையில் உள்ள மூன்றாவது பாடலாகும். இப்பாடல் அறிவியல் அணுகுமுறையைச் சார்ந்தது.

உவமை : சிறுபுல்லின் தலையில் தினையளவினும் சிறுபனிநீர் நெடிதுயர்ந்த பனைமரத்தின் உருவத்தைத் தன்னுள் தெளிவாகக் காட்டும்.

உவமிக்கப்படும் பொருள் : வள்ளுவரின் குறள்வெண்பாக்கள், அரும்பெரும் கருத்துகளைத் தம்மகத்தே அடக்கிக் காட்டும்.

அறிவியல் கருத்து : ஒளியைக் கோட்டம் அடையச் செய்வதனால் தொலைவிலுள்ள பொருளின் உருவத்தை அண்மையில் தோன்றும்படி செய்யலாம் என்று கண்டவர் கலீலியோ கலிலி.

"நெடுந்தொலைவிலுள்ள பெரிய பனைமரத்தின் உருவத்தைப் புல் நுனியில் தேங்கிய சிறுபனித்துளி மிகத்தெளிவாகக் காட்டும்" என்ற கபிலரின் சிந்தனை, அன்றைய தமிழரின் அறிவியல் கருத்தை வெளிப்படுத்துகிறது.

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. பொருள் எழுதுக.

1. வள்ளை ____________ 2. அளகு ____________

2. பிரித்து எழுதுக.

1. தினையளவு ____________ 2. பனையளவு ____________

3. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. திருக்குறளின் பெருமையை விளக்கும் நூல் ____________ .

2. 'தினையளவு' என்னும் பாடலில் ____________ அணுகுமுறை அமைந்துள்ளது.

ஆ) குறுவினாக்கள்

1. தினையளவு எனத் தொடங்கும் பாடலில் பயின்று வரும் உவமையை விளக்குக.

2. கோழி உறங்கும் காரணம் யாது ?

இ) சிறுவினா

திருக்குறளின் பெருமையைக் கபிலர் எவ்வாறு விளக்குகிறார் ?

தமிழ்

# நளவெண்பா

– புகழேந்திப்புலவர்

சுயம்வர காண்டம்

முன்கதைச் சுருக்கம்

நிடதநாட்டு மன்னன் நளன், விதர்ப்பநாட்டு மன்னன் மகள் தமயந்தி ஆகிய இருவரும் அன்னப் பறவையின் உதவியால் ஒருவரைப்பற்றி ஒருவர் அறிந்து அன்பு கொள்கின்றனர்.

தந்தை வீமன், தமயந்தியின் நிலையறிந்து சுயம்வரத்துக்கு முறையாக ஏற்பாடு செய்தான். தமயந்தியை மணக்க விரும்பிய தேவர்களும், நளன்முதலான அரசர்களும் சுயம்வரத்துக்கு வருகை தந்திருந்தார்கள். தமயந்தி, நளன் வடிவில் வந்திருந்த தேவர்களை விடுத்துத் தன் அறிவுக் கூர்மையால் நிடத நாட்டு மன்னன் நளனையே கணவனாகத் தேர்ந்தெடுத்தாள்.

சுயம்வரம் : தனக்கேற்ற மணமகனை உற்றார் உறவினர் முன்னிலையில் தானே தேர்ந்தெடுத்தல்.

சுயம்வரத்துக்கு வந்த இளவரசர்களைத் தோழி, தமயந்திக்கு அறிமுகம் செய்தல்

1. ஆழிவடி அம்புஅலம்ப நின்றானும் அன்றொருகால்
ஏழிசைநூல் சங்கத்(து) இருந்தானும் – நீள்விசும்பின்
நல்தேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றானும் கண்டாய்இச் சேய்.

பொருள் : தோழி, தமயந்தியிடம் 'எண்ணற்ற அரக்கர்களைக் கொன்று கறை படிந்த அம்புகளைக் கடல்நீரில் கழுவியவன்; முன்னொரு காலத்தில் ஏழிசைச்சங்கத்துக்குத் தலைவனாக இருந்தவன்; தெய்வ இயல்பு பொருந்திய பாண்டவர்களுக்காகத் தூது சென்றவன்; பாரதப்போரின் வெற்றிக்குக் காரணமானவன் இந்த யதுகுலத் தோன்றலே!' எனக்கூறினாள்.

சொற்பொருள் : ஆழி – கடல்; வடிஅம்பு – வடிக்கப்பட்ட அம்பு; விசும்பு – வானம்; செற்றான் – வென்றான்.

2. தெரியல் இவன்கண்டாய் செங்கழுநீர் மொட்டை
அரவின் பசுந்தலைஎன் றஞ்சி – இரவெல்லாம்
பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புள் தாலாட்டும்
வள்ளைக் குருநாடர் மன்.

பொருள் : செங்கழுநீர் மலரினது மொட்டினைப் பாம்பின் தலை என எண்ணி, அச்சமுற்று இரவெல்லாம் நாரைக்குஞ்சு வாய்விட்டு அலறுகிறது. அதனைத் தாய்ப்பறவை தாலாட்டிக் கொண்டிருக்கும் வள்ளைக்கொடிகள் மலிந்த குருநாட்டு மன்னன் இவன்.

சொற்பொருள்: அரவு – பாம்பு; பிள்ளைக்குருகு – நாரைக்குஞ்சு; வள்ளை – ஒருவகை நீர்க்கொடி.

3. வண்ணக் குவளை மலர்வெளவி வண்டெடுத்த
பண்ணில் செவிவைத்துப் பைங்குவளை – உண்ணாது
அருங்கடா நிற்கும் அவந்திநாடு ஆளும்
இருங்கடா யானை இவன்.

பொருள் : அழகிய குவளை மலர்களை எருமைக்கடாக்கள் உண்ண முனைகின்றன. அப்பொழுது, அம்மலரில் இருந்த வண்டுகள் எழுப்பிய இன்னிசை கேட்டு, அவை உண்ணாமல் மயங்கி நிற்கின்றன. அத்தகைய வளமுடைய அவந்தி நாட்டை ஆளும் ஆண்யானை போன்றவன் இவன்.

சொற்பொருள் : கடா – எருமை; வெளவி – கவ்வி.

4. கூன்சங்கின் பிள்ளை கொடிப்பவளக் கோடிடறித்
தேன்கழியில் வீழத் திரைக்கரத்தால் – வான்கடல்வந்(து)
அந்தோ எனஎடுக்கும் அங்கநாடு ஆளுடையான்
செந்தேன் மொழியாய்இச் சேய்.

பொருள்: தேன்போலும் இனியமொழி பேசும் தமயந்தியே! வளைந்த சங்கின் குஞ்சுகள், பவளக்கொடியின் கொம்புகள் தடுப்பதால் தடுமாறித் தேன் வழிந்தோடும் உப்பங்கழிகளில் வீழ்கின்றன. அதனைக் கண்டு மனமிரங்கிய கடலானது தன் அலைக்கைகளால் சங்குகளை அள்ளிவந்து கரை சேர்க்கின்றன. அத்தகைய அங்கநாட்டை ஆளும் அரசன் இவன். (உப்பங்கழியில் நெய்தல் பூக்கள் மலர்ந்திருகின்றன. அவற்றிலிருந்து தேன்வழிவதால் தேன்கழி என்க.)

சொற்பொருள் : சங்கின் பிள்ளை – சங்குக் குஞ்சுகள்; கொடி – பவளக்கொடி; கோடு – கொம்பு; கழி – உப்பங்கழி; திரை – அலை.

5. வெள்வாளைக் காளைமீன் மேதிக் குலமெழுப்பக்
கள்வார்ந்த தாமரையின் காடுழக்கிப் – புள்ளோடு
வண்டுஇரியச் செல்லும் மணிநீர்க் கலிங்கர்கோன்
தண்தெரியல் தேர்வேந்தன் தான்.

பொருள் : தேன் சொரியும் தாமரைத்தடாகத்தை எருமைகள் கலக்குகின்றன; அதனால், வெள்ளை நிறமுடைய இளம் வாளைமீன்கள் செந்தாமரைப் பூக்கள்மேல் பாய்கின்றன. அந்தத் தாமரைமலர்களில் இருந்த வண்டுகளும் அன்னப்பறவைகளும் அஞ்சிப் பறக்கின்றன. அத்தகு தெளிந்த நீர் வளமுடைய கலிங்கநாட்டின் மன்னன் இவன்.

சொற்பொருள் : மேதி – எருமை; கள் – தேன்; புள் – அன்னம்.

6. காவலரைத் தன்சேடி காட்டக்கண்டு ஈரிருவர்
தேவர்நளன் உருவாச் சென்றிருந்தார் – பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்
றூசலா டுற்றாள் உளம்.

பொருள் : சுயம்வர மண்டபத்தில், குழுமிய அரசர்களின் குலம், புகழ், பெருமைகளைத் தோழி விளக்கிக் கூறுகிறாள். அதனைக் கேட்ட, மலர் சூடிய அழகிய கூந்தலையுடைய தமயந்தி, நளன் உருவத்தில் வீற்றிருந்த தேவர்கள் நால்வரைக் கண்டாள். இவர்களில் யார் உண்மையான நளன் எனத் தடுமாறித் தவித்தபடி நின்றாள்.

சொற்பொருள் : சேடி – தோழி; ஈரிருவர் – நால்வர்; ஊசலாடுற்றாள் – மனம் தடுமாறினாள்.

7. மின்னும்தார் வீமன்தன் மெய்ம்மரபில் செம்மைசேர்
கன்னியான் ஆகில் கடிமாலை – அன்னம்தான்
சொன்னவனைச் சூட்ட அருளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து.

பொருள்: 'ஒளிசிந்தும் அழகிய மாலையணிந்த வீமராசன் குடியில் தோன்றிய, உத்தமக் கன்னிப்பெண் நான் என்பது உண்மையானால், அன்னப்பறவை தூதாக வந்து முன்சொன்ன அந்த நளனுக்கே, மணமிக்க இம்மாலையை நான் அணிவிக்க என் நல்வினைப்பயனே எனக்குத் துணை செய்வதாகுக' என்று நளனை மனத்தில் நினைத்தபடி தமயந்தி வேண்டினாள்.

சொற்பொருள் : தார் – மாலை; செம்மைசேர் – புகழ்மிகு; கடிமாலை – மணமாலை; சூழ்விதி – நல்வினை.

தமிழ்

8. கண்இமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால் – எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு. *

பொருள் : மணமிக்க தாமரை மலரில் விரும்பி உறைகின்றாள் திருமகள். அவளைப் போன்ற அழகிய நெற்றியை உடையவள் தமயந்தி. அவள், நளனின் கண் இமைத்தலாலும் கால்நிலம் தோய்தலாலும் அழகுமாலை வாடுதலாலும் ஆராய்ந்து, அவ்விடத்திருந்த உண்மையான நளனைக் கண்டறிந்தாள்.

சொற்பொருள் : காசினி – நிலம்; நன்னுதல் – அழகிய நெற்றி.

9. விண்அரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்அகல் ஞாலம் களிகூர – மண்அரசர்
வன்மாலை தன்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

பொருள்: விண்ணக வேந்தர்கள் நாணத்தினால் உள்ளம் வெறுப்படையவும், அகன்ற இவ்வுலகமெல்லாம் மகிழ்வடையவும், மண்ணரசர் அனைவரும் பகையுணர்வு கொள்ளவும், வெற்றிவேந்தனாகிய நளனுக்குத் தமயந்தி பொன்மாலையைச் சூட்டினாள்.

சொற்பொருள் : வெள்கி – நாணி; களிகூர – மகிழ்ச்சி பொங்க; வயவேந்து – வெற்றிவேந்தன் (நளன்).

10. திண்தோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்தா மரையாய் வெளுத்தவே – ஒண்தாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது.

பொருள் : ஒளிவீசும் முத்துமாலையை அணிந்த வெற்றிவேலனாகிய நளனுக்கு, வேல்போலும் கண்களையுடைய தமயந்தி மணமாலை சூட்டினாள். அப்போது, சுயம்வரத்துக்கு வந்திருந்த வலியதோள்களையுடைய வேந்தர்களின் செந்தாமரை மலர்போலும் முகங்கள் வெண்தாமரை மலர்போல ஏமாற்றத்தால் வெளுத்தன.

சொற்பொருள் : ஒண்தாரை – ஒளிமிக்க மலர்மாலை.

11. மல்லல் மறுகில் மடநா(கு) உடனாகச்
செல்லும் மழவிடைபோல் செம்மாந்து – மெல்லியலாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலான் நளன்.

**பொருள்:** வளமை பொங்கும் அரசவீதியில் இளம்பசு உடன்வர, செல்கின்ற இளங்காளையைப்போல, மெல்லிய கொடிபோன்ற தமயந்தியின் மணமாலையைப் பெற்ற நளன் பெருமிதத்தோடு தன்னகர் புறப்பட்டான்.

**சொற்பொருள் :** மல்லல் – வளம்; மறுகு – அரசவீதி; மடநாகு – இளைய பசு; மழவிடை – இளங்காளை; செம்மாந்து – பெருமிதத்துடன்.

### ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | புகழேந்திப் புலவர். |
| பிறந்த ஊர் | : | தொண்டைநாட்டின் பொன்விளைந்த களத்தூர். |
| சிறப்பு | : | வரகுண பாண்டியனின் அவைப் புலவர். |
| ஆதரித்த வள்ளல் | : | சந்திரன் சுவர்க்கி. |
| காலம் | : | கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு. கம்பரும் ஒட்டக்கூத்தரும் இவர் காலத்தில் வாழ்ந்தனர். |

வெண்பா யாப்பில் காப்பியப் பொருளைத் தொடர்நிலைச் செய்யுள்களாய்ப் பாடிய சிறப்பினால், இவர் வெண்பாவிற் புகழேந்தி எனப் போற்றப்படுகிறார்.

**நூல் குறிப்பு :** நளவெண்பா என்பது, நளனது வரலாற்றை வெண்பாக்களால் கூறும் நூலென விரிந்து பொருள் தரும். இந்நூல் சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என முப்பெருங் காண்டங்களைக் கொண்டது. இதில் நானூற்று முப்பத்தொரு வெண்பாக்கள் உள்ளன.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. பொருள் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. ஆழி | ______ | 6. புள் | ______ |
| 2. தார் | ______ | 7. மேதி | ______ |
| 3. விசும்பு | ______ | 8. ஞாலம் | ______ |
| 4. காசினி | ______ | 9. களிகூர | ______ |
| 5. அரவு | ______ | 10. மழவிடை | ______ |

2. பிரித்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. பசுந்தலை | ______ | 4. பைங்குவளை | |
| 2. மாசிலா | ______ | 5. செந்தாமரை | |
| 3. ஈரிருவர் | ______ | | |

தமிழ்

3. சேர்த்து எழுதுக.

1. சுயம் + வரம் = ______________ 4. கோடு + இடறி = ______________

2. மாசு + இலா = ______________ 5. அருள் + என்றாள் = ______________

3. செம்மை + தாமரை = ______________

4. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. நளவெண்பாவை இயற்றியவர் ______________ .
2. புகழேந்திப்புலவர்______________என்று போற்றப்படுகிறார்.
3. நளவெண்பாவில் அமைந்துள்ள வெண்பாக்களின் எண்ணிக்கை ______________ .
4. புகழேந்திப் புலவரை ஆதரித்த வள்ளல் ______________ .

ஆ) குறுவினாக்கள்

1. நளவெண்பா – குறிப்பு எழுதுக.
2. சுயம்வரம் என்பது யாது ?
3. தமயந்தியிடம் குருநாட்டு மன்னனைத் தோழி எவ்வாறு அறிமுகப்படுத்தினாள் ?
4. அவந்தி நாட்டு வளம் எத்தகையது ?
5. கலிங்க நாட்டின் வளம் குறித்து எழுதுக.
6. தமயந்தி மனம் தடுமாறக் காரணம் என்ன ?

இ) சிறுவினாக்கள்

1. புகழேந்திப் புலவர் – குறிப்பு எழுதுக.
2. தமயந்தி, நளனை எவ்வாறு கண்டறிந்தாள் ?

ஈ) நெடுவினாக்கள்

1. தமயந்தியின் சுயம்வர நிகழ்வை விளக்குக.
2. தோழி, தமயந்திக்கு மன்னர்களை எவ்வாறு அறிமுகப்படுத்தினாள் ?

# உலகம் உள்ளங்கையில்

'என்னப்பா குமரா, நன்றாக இருக்கிறாயா? உன் மகன் அமெரிக்காவில் வேலை செய்வதாகக் கேள்விப்பட்டேனே, பார்த்து ஆறு மாதத்துக்கும்மேல் இருக்குமா?'

'ஆமாங்க. ஆனால், மகன் அமெரிக்காவில் இருந்தாலும் அடிக்கடி பார்த்துக் கொண்டும் பேசிக்கொண்டும்தான் இருக்கிறேன்.'

'என்னப்பா சொல்கிறாய்? உன் மகன் இருப்பது அமெரிக்காவில்; நீ இருப்பதோ இந்தச் சிற்றூரில். ஏதாவது கனவு கண்டாயா?

'கனவெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும். என் வீட்டில் கணினியும் அதனுடன் இணைய வசதி, வலைய நிழற்படக் கருவி, மின்னஞ்சல் வசதிகளும் இணைக்கப்பட்டுள்ளதால், மகனுடன் பேசவும் பார்க்கவும் தொடர்புகொள்ளவும் முடிகிறது'.

"வியப்பாக இருக்கிறதே! உலகம் சுருங்கிவிட்டதா....... ?



சார்லஸ் பாப்பேஜ் வடிவமைத்த முதல் கணினி



சார்லஸ் பாப்பேஜ்



ஜான் பாஸ்டல்



பிம்பெர்னர் லீ

தமிழ்

ஆம். மேலே கண்ட உரையாடல், 'அறிவியல் தகவல் வளர்ச்சி உலகத்தை ஒரு சிற்றூராக மாற்றிவிட்டது' என்னும் கூற்றை உறுதி செய்வதாய் உள்ளது. தகவல் தொழில் நுட்பத்துறையில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய முன்னேற்றம், நம்வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. தகவல் தொடர்புச் சாதனங்களால் ஓரிடத்தில் நடைபெறும் நிகழ்வுகளைக்கூட உடனுக்குடன் மற்றோரிடத்தில் அறியமுடிகிறது. இவற்றில் கணினியின் பங்கு அளப்பரியது. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பான கணினி, சில நொடிகளில் மில்லியன் கணக்குகளைச் செய்துகாட்டும். இதனை முறையாக இயக்கினால் மனித மூளையைப்போன்று நுண்ணறிவுத் திறனோடு வேலை செய்யும். கணினி இன்று எல்லாத் துறைகளிலும் பயன்படுகிறது.

### கணினியின் தோற்றமும் வளர்ச்சியும்

கணக்கிடுவதற்காக முதலில் எளிதான மணிச்சட்டம் உருவாக்கப்பட்டது. கணினி உருவாக இதுவே முதல் படிவமாக அமைந்தது. பாரிசு நகரைச் சார்ந்த பிளேஸ் பாஸ்கல் என்னும் அறிஞர் கணக்கிடும் கருவியைக் கண்டறிந்தார். கி.பி. 1833 இல் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த சார்லஸ் பாப்பேஜ் கணினியை முதலில் வடிவமைத்தார். இவரே 'கணினியின் தந்தை' என அழைக்கப்படுகிறார். ஆங்கிலக் கவிஞர் பைரனின் மகள் ' லேடி லவ்லேஸ்' என்பவர், கணிதச் செயல்பாட்டுக்குத் தேவையான கட்டளைகளை வகுத்தமையால், 'முதல் செயல் திட்ட வரைவாளர்' எனப் போற்றப்படுகிறார்.

மின்னியல் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி, ஹார்வார்டு பல்கலைக்கழகக் கணிதப் பேராசிரியர் ஹோவார்டு ஐக்கன் என்பாரை ஐ.பி.எம். பொறியாளர் துணையுடன் எண்ணிலக்கக் கணினியைக் கண்டறியத் தூண்டியது. இதற்கு ஹார்வார்டு மார்க்–1 எனப் பெயரிட்டனர். தற்போது அமெரிக்காவும் ஜப்பானும் மீத்திறன் கணினியை உருவாக்கப் போட்டி யிடுகின்றன.

### கணினியின் வகைகள்

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாகக் கணினியிலும் புதுமையான அமைப்புகள் தோன்றியவண்ணம் உள்ளன. இன்றைய நிலையில், பல்லூடக வசதிகொண்ட கணினி, மடிக்கணினி, கையடக்கக் கணினி முதலிய கணினிகள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டன. கணினியைப் பயன்படுத்துவோரின் தேவை அதிகரிக்க அதிகரிக்க கணினியின் வளர்ச்சியிலும் புதுமைகள் புகுத்தப்பட்டு வருகின்றன. இதனுடன் இணையத்தளமும் இணைக்கப்பட்டுள்ளதனால் தேவைப்படும் தகவல்களை உடனுக்குடன் பெற முடிகிறது.

### இணையம்

இணையம் என்னும் வடிவத்துக்கு வித்திட்டவர் ஜான் பாஸ்டல் என்னும் அமெரிக்கராவார். உலகெங்கும் உள்ள கணினிச் செய்திகளை இணைக்க, 'இணையம்' பயன்படுகிறது. இலக்கியம், அறிவியல், வானியல், வரலாறு, புவியியல், கணிதம், திரைப்படம் என எண்ணற்ற துறைகள்பற்றி இணையத்தின் வாயிலாகச் செய்திகளை அறிய முடிகிறது.

கணினியுடன் இணையத்தள இணைப்பானது படிப்படியாக வளர்ச்சி அடைந்தது. 1960ஆம் ஆண்டில், ஒரு கணினியிலிருந்து மற்றொரு கணினிக்குச் செய்தியை மாற்ற மின்காந்த நாடாவைப் பயன்படுத்தினர். இது மிகுந்த காலச் செலவை ஏற்படுத்தியது. இதற்கு மாற்றாக, ஒரு கட்டடத்துக்குள் இருக்கும் கணினிகளை எல்லாம் கம்பிச்சுருளுடன் இணைக்க ஈதர்நெட் அட்டை என்னும் சிறுபலகையைப் பொருத்திப் பயன்படுத்தினர். இந்த இணைப்பு 'குறும்பரப்பு வலைப்பின்னல்' எனப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஒரு வட்டாரத்துக்குள் உள்ள கணினிகளை இணைத்தனர். இஃது அகன்ற பரப்பு வலைப்பின்னல் கொண்டது. இந்த வலைப்பின்னல் வழியாக உலகம் முழுதும் உள்ள கணினிகளை ஓரளவுதான் இணைக்க முடிந்தது. முழுமையான இணைப்பைப்பெறச் செயற்கைக்கோள்வழி இணைப்பினைப் பயன்படுத்திப் புவியைச் சுற்றி, நாடுகளின்மீது வலம்வரும் விண்வெளிக்கலன்களுக்கு இடையே இணைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்த உலகம் முழுமைக்கான வலையமைப்பு இணையம் எனப் பெயர் பெற்றது.

சுவிச்சர்லாந்து நாட்டைச் சார்ந்த பிம்பெர்னர் லீ என்னும் இயற்பியல் வல்லுநர், 1989ஆம் ஆண்டு இணையத்தளத்திற்கு உலகளாவிய வலைப்பின்னல் எனப் பெயரிட்டார். இதனை வையக விரிவு வலை எனவும் அழைக்கலாம். இவ்வலையமைப்பு, பல செய்திகளை அழியாமல் பாதுகாக்க உதவுகிறது.

### இணையத்துக்குத் தேவையானவை

பேரூர்முதல் சிற்றூர்வரை இணையத்தள வசதிகள் கிடைக்கின்றன. இணையத்தளச் சேவையைப் பயன்படுத்தத் தேவையான பொருள்களாவன:

1. கணினி
2. தொலைபேசி
3. இணையச் சேவை வழங்குநர்
4. மாற்றி
5. தொடர்பு மென்பொருள்

இவற்றைக்கொண்டு இணையத் தொடர்பைப் பெறலாம். இணையத்தைப் பயன்படுத்த, இணையச் சேவைக்கு உரியவரிடம் தனிக்கணக்குத் தொடங்குதல் வேண்டும். பின்பு, கணினியை இணையத்தளத் தடத்தில் இணைத்தல் வேண்டும்.

### இணைய இணைப்பு வகைகள்

தொலைபேசி வழியாகக் கணினியையும் மாற்றியையும் இணைத்துப் பயன்படுத்தும் முறை, தொலைபேசி இணைப்புச் சேவையாகும். இம்முறையில் விரைவும் வசதியும் குறைவாக இருந்தமையால், புதிய அணுகுமுறை தேவைப்பட்டது. வையக விரிவு வலை செயல்படுவதனைக் கொண்டு, இணைய இணைப்பு நான்கு வகைகளில் கிடைக்கின்றது. உறுப்பினர் எண்ணிலக்க இணைப்பு, கம்பி வடமாற்றி, செயற்கைக்கோள் சேவை, கண்ணறைச் சேவை என்பன அவை.

### கணினிவழிக் கல்வி

கணினியைப் பயன்படுத்திக் கற்கும் கல்வியே கணினிவழிக் கல்வி. வீட்டில் இருந்தபடியே தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், வானியல், வரலாறு, புவியியல், பொது அறிவு, நடனம், கைவேலைப்பாடு என எந்த ஒன்றனையும் கற்றுக்கொள்ள இயலும். தொலைதூரக் கல்வியை இணையத்தின் உதவியால் கணினிவழியாகப் பலரும் கற்று வருகின்றனர்.

இணையத்தின் வாயிலாக ஒருவருக்கு ஏற்படும் ஐயங்கள், சிக்கல்கள், தேவைகள், வழிகாட்டுதல்கள் முதலியவற்றுக்கான தீர்வுகளைப் பெறவியலும். தீர்வுகளைப்பெற மின்னஞ்சல் முகவரி உதவுகிறது. வீட்டிலிருந்தபடியே நேருக்குநேர் தொடர்புகொண்டு கற்கும் வாய்ப்பும் இன்று கிடைக்கின்றது.

கணினிவழியாக மொழிக்கல்வியும் பெறவியலும். மொழியின் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் எனத் தொடங்கி உயர்நிலைத் திறன்களான கதை, கட்டுரை, செய்யுள், பாடல், கடிதம், சுருக்கி வரைதல், விரித்தெழுதுதல், குறிப்பெடுத்தல், அகராதி தேடல் என அனைத்தையும் இணையம் வாயிலாகக் கற்க இயலும்.

உலகெங்கும் வாழும் தமிழர்க்கும் தமிழறிய விழைவோர்க்கும் இவ்வாய்ப்பினைத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் வழங்குகிறது. 'தமிழும்' என்னும் இணையத்தளம் தமிழ் எழுத்துகளை எழுதவும், ஒலிக்கவும் கற்றுத் தருகிறது.

தற்போதைய கற்றல், கற்பித்தல் சூழலில், தொடக்க வகுப்புகளிலிருந்தே கணினிப் பாடம் நடத்தப்பெறுகிறது.

### கணினியின் பயன்கள்

கணினி, நம் அன்றாட வாழ்வில் பயன்படும் இன்றியமையாத கருவியாகிவிட்டது. வணிகம், அறிவியல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு, கல்வி, மருத்துவம், விண்வெளி, பாதுகாப்பு முதலிய பல்துறைகளில் கணினியின் பயன்பாடு பெருகிவருகிறது. சொல் விளையாட்டு, பொறியியல் வரைபடம் வரைதல், பொழுதுபோக்கு விளையாட்டுகள், கணிதத் தேற்றங்களின் தீர்வுகள் போன்ற அரிய பணிகளையும் கணினி எளிமையாகச் செய்கிறது.

பேருந்து நிலையங்கள், வங்கிகள், கல்வி நிலையங்கள், உணவகங்கள் என எவ்விடத்தும் கணினியின் ஆட்சியே நிலவுகிறது. அது வேலைவாய்ப்புகளை விரிவுபடுத்தி, மக்களின் வாழ்க்கைத்தரம் உயரத் துணை செய்கிறது.

### உள்ளங்கையில் உலகம்

தொலைத்தொடர்புத் துறையில் ஈராயிரம் ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தை விடக் கடந்த இருபதாண்டுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பல நூறு மடங்காகும். இன்று, ஒருவரை நேரடியாகப் பார்க்காமலேயே மின்னணுத்தகவல் வாயிலாகத் தொடர்பு கொள்ளமுடிகிறது. வீட்டிலிருந்தபடியே உலகத்தைப் பார்க்க, பழக, மகிழ வாய்ப்பைப் பெறவும் இணையம் உதவுகிறது. "கடந்த இருபதாண்டுக் கணினிப் பயணத்தில் இணையத்தின் பங்கு மிகச் சிறந்தது என்றே சொல்வேன்" எனும் கணினி வல்லுநர் பில்கேட்ஸின் கூற்று, இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது.

கணினியின் பயன்பாடுமிக்குள்ள இந்தக் காலத்தில், தொழில்நுட்ப உத்திகள் அனைத்தையும் பயன்படுத்திக் கணினிவழியாகத் தேவைப்படும் அனைத்துத் தகவல்களையும் பெறமுடிகிறது. இந்நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பான கணினி, அறிவை விரிவு செய்வதற்கும் உலகத் தொடர்பிற்கும் சிறந்த வாயிலாகத் திகழ்கிறது. அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியின் புதுமைகளான கணினியும் இணையத்தளமும் தொலைத்தொடர்புக் கருவிகளும் உலகத்தையே நம் உள்ளங்கையில் கொண்டு வந்துள்ளன.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. பிரித்து எழுதுக.

   1. இருபதாண்டு
   2. மின்னணுவியல்
   3. உள்ளங்கை
   4. மேம்பாடடைய
   5. மின்னஞ்சல்

2. சேர்த்து எழுதுக.

   1. நுண் + அறிவு
   2. இணையம் + தளம்
   3. சிறுமை + ஊர்
   4. பல்கலை + கழகம்
   5. தொலை + தொடர்பு
   6. கம்பி + சுருள்

3. கோடிட்ட இடத்தை நிரப்புக.

   1. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு ______________ .
   2. 'கணினியின் தந்தை' என்றழைக்கப்படுபவர் ______________ .
   3. இணையம் என்ற வடிவத்திற்கு வித்திட்டவர் ______________ .
   4. தமிழ் எழுத்துகளை எழுதவும் ஒலிக்கவும் கற்றுத்தரும் இணையத்தளம் ______________

.

### ஆ) குறுவினாக்கள்

1. கணினி யாரால் எப்போது கண்டறியப்பட்டது ?
2. கணினியின் வகைகள் யாவை ?
3. இணையத்தள வசதியைப் பெறத் தேவையான பொருள்கள் யாவை ?
4. 'முதல் செயல்திட்ட வரைவாளர்' எனப் போற்றப்படுபவர் யார் ? ஏன் ?
5. 'வையக விரிவு வலை' குறிப்பு எழுதுக.

### இ) சிறுவினாக்கள்

1. இணையம் – குறிப்பு எழுதுக.
2. கணினி வாயிலாக மொழிக்கல்வி எவ்வாறு பெற இயலும் ?
3. கணினியின் பயன்களைக் குறிப்பிடுக.

### ஈ) நெடுவினாக்கள்

1. கணினியின் தோற்றமும், வளர்ச்சியும்பற்றி எழுதுக.
2. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில், கணினியின் பங்கை விளக்குக.

# ஆவணம்

ஓர் ஊரில் நிலக்கிழார் ஒருவர் இருந்தார். கண்ணுக்கு எட்டியவரை அவருக்கு நிலம் இருந்தது. மேலும், ஏழை உழவர்களிடம் ஆவணம் எழுதி வாங்கிக்கொண்டு கடன் கொடுத்து வாங்குதல் தொழில் நடத்தி வந்தார்.

நிலக்கிழார் ஒருநாள், ஓர் உழவன்மீது வழக்கு ஒன்றைத் தொடுத்தார். அந்த வழக்கு நீதிபதி மரியாதைராமன் முன் விசாரணைக்கு வந்தது. நிலக்கிழார் நீதிபதியைப் பார்த்து, "ஐயா நீதிபதி அவர்களே! இந்த உழவன் என்னிடம், 'என்னுடைய வயலைச் சீர்படுத்தவேண்டும்; அதன்பொருட்டுப் பணம் தேவையிருக்கிறது' என்று கூறி, ஆவணத்தை எழுதிக்கொடுத்து, ஐயாயிரம் கடனாகப் பெற்றுச் சென்றான்.

சில நாள் கழிந்தன.

உழவன் குறித்துச் சென்ற நாளும் தவணையும் முடிந்துவிட்டது; ஆயினும், வாங்கிய கடனைத் திருப்பித் தரவில்லை. நான், நேரில் சென்று கேட்டேன். 'நாளை விடியற்காலையில் ஊருக்குப் புறத்தே உள்ள என் வயலின் களத்துமேட்டுக்கு வாருங்கள். வரும்போது மறவாமல் நான் எழுதிக்கொடுத்த கடன் ஆவணத்தையும் எடுத்து வாருங்கள். வட்டியும் முதலுமாகக் கொடுத்துக் கடனைத் தீர்த்து ஆவணத்தைப் பெற்றுக் கொள்கிறேன்' என்றான்.

அதன்படி, மறுநாள் நான் அவ்விடத்திற்குச் சென்றேன். கடன் ஆவணத்தைக் கேட்டான், கொடுத்தேன். அதை வாங்கிப் பார்ப்பதுபோல் பார்த்தான்; சட்டென்று அதனைக் கிழித்துவிட்டான்; அருகில் மூட்டம்போடப்பட்டிருந்த நெருப்பிலே கிழித்த துண்டுகளைப் போட்டு எரித்துவிட்டான்.

'ஏனப்பா இப்படிச் செய்தாய்?' என்று கேட்டேன். 'கடனே வாங்கவில்லை' என்று கூறி மோசடி செய்துவிட்டான். தாங்கள்தாம், எனக்கு அவனிடமிருந்து அந்தக் கடனை வட்டியும் முதலுமாகச் சேர்த்து வாங்கித் தரவேண்டும்" என்று முறையிட்டார்.

நீதிபதி அந்த உழவனைப் பார்த்து, "நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு அந்த உழவன், "ஐயா, நீதிபதி அவர்களே! நான் இந்த நிலக்கிழாரிடம் கடன் வாங்கவும் இல்லை; ஆவணம் எழுதிக்கொடுக்கவும் இல்லை, 'திருப்பித் தருகிறேன், ஆவணத்தை எடுத்து வாருங்கள்' என்று கூறவும் இல்லை; அவர் ஆவணத்தை எடுத்து வரவும் இல்லை; நான் நெருப்பில் கிழித்துப்போடவும் இல்லை; மேலும், ஆவணத்தை இதுவரை நான் கண்ணால்கூடக் கண்டதும் இல்லை. அத்தனையும் பொய்! வேண்டுமென்றே என்மீது வீண்பழி சுமத்துகிறார்" என்று கூறினான்.

நீதிபதி மரியாதைராமன் வழக்கை மறுநாளுக்குத் தள்ளி வைத்தார்.

உழவன் சென்றுவிட்டான். நிலக்கிழார் மட்டும் இருந்தார்.

அவரை நீதிபதி மரியாதைராமன் அழைத்து, "கடன் ஆவணம் எவ்வளவு நீளம் இருக்கும்?" என்று காதோடு காதாகக் கேட்டார்.

"அரையடி நீளம் இருக்கும்!" என்றார் நிலக்கிழார்.

"நாளை நான் நீதிமன்றத்தில், 'ஆவணம் எவ்வளவு நீளம் இருக்கும்?' என்று கேட்பேன். 'ஓர் அடி நீளம் இருக்கும்' என்று சொல்லவேண்டும்" என்று கூறி நிலக்கிழாரை அனுப்பி வைத்தார்.

மறுநாள் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருந்தது.

நீதிபதி மரியாதைராமன் நிலக்கிழாரைப் பார்த்து, "ஆவணம் எவ்வளவு நீளம் இருந்தது?" என்று கேட்டார்.

"ஓர் அடி நீளம் இருந்தது" என்றார் நிலக்கிழார். நிலக்கிழார் இவ்வாறு கூறியதனைக் கேட்டதும் உழவன் சினங்கொண்டான்; தன்னையும் மறந்தான். "ஐயா! அரையடி நீளமே இருக்கும் அந்தச் சீட்டு. ஓர் அடி நீளம் இருக்கும் என்று துணிந்து பொய் சொல்கிறார் நிலக்கிழார். இப்படிப் பொய் சொல்லச் சுட்டுப்போட்டாலும் எனக்கு வராது" என்று கூச்சலிட்டான்.

நீதிபதி உண்மையை அறிந்தார். "நீ இந்த நிலக்கிழாருக்கு 'ஆவணம் எழுதிக் கொடுக்கவில்லை; ஆவணம் எப்படி இருக்கும் என்றே இதுவரை தெரியாது' என்றெல்லாம் கூறினாயே? அஃது உண்மையானால், அந்த ஆவணம் அரையடி நீளம் உள்ளது என்பது மட்டும் உனக்கு எப்படித் தெரியும்? நீ பொய் சொல்கிறாய். அஃது உன் வாய்மூலமாகவே வெளிப்பட்டுவிட்டது. ஆகவே, நீ இவருக்கு உடனடியாக வட்டியும் முதலும் செலவுத்தொகையுடன் சேர்த்துக் கொடுத்தல் வேண்டும். அத்தோடு, கடன் ஆவணத்தைக் கிழித்த குற்றம், நீதிமன்றத்தில் பொய் கூறிய குற்றம் ஆகிய இரண்டுக்கும் சேர்த்து ஆறுமாதக் காலம் கடுங்காவல் தண்டனை உனக்கு விதிக்கின்றேன்" என்று தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கிலிருந்து, 'ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு' என்னும் பழமொழி உண்மையாயிற்று.

நன்றி : ந. பழநியப்பன், மரியாதைராமன் கதைகள்

## மாதிரி வினா

### கட்டுரை வினா

மரியாதைராமன் நீதி வழங்கிய திறத்தை 'ஆவணம்' கதை வாயிலாக விளக்குக.

# வழக்கு

## இயல்பு வழக்கு, தகுதி வழக்கு

| | | |
|---|---|---|
| மாணவன் | : | வணக்கம், ஐயா. |
| ஆசிரியர் | : | வணக்கம். உட்காருங்கள். இன்றைய இலக்கண வகுப்பில் வழக்கு பற்றிப் பார்ப்போம். |
| அருள்மொழி | : | ஐயா. வழக்கு என்பது நீதி மன்றத்தில் தொடுக்கும் வழக்குதானே ? |
| ஆசிரியர் | : | நீதிமன்றத்தில் தொடுக்கும் வழக்கு வேறு; இலக்கண வழக்கு என்பது வேறு. நம் முன்னோர் எந்தப்பொருளை எந்தச்சொல்லால் வழங்கி வந்தனரோ, அதனை அப்படியே நாமும் வழங்கி வருவதற்கு வழக்கு என்று பெயர். இஃது இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என இருவகைப்படும். |
| நன்னன் | : | இயல்பு வழக்கு என்றால் என்ன ? ஐயா . |
| ஆசிரியர் | : | ஒரு பொருளைச் சுட்டுவதற்கு, எந்தச் சொல் இயல்பாக வருகிறதோ, அந்தச் சொல்லாலேயே வழங்குவதை இயல்பு வழக்கு என்பர். இதனை இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என மூவகையாகக் கூறுவர். |
| யாழினி | : | இலக்கணமுடையது என்றால் என்ன ? ஐயா. |
| ஆசிரியர் | : | இலக்கணப்பிழை இல்லாமல் வழங்கி வருவதனை இலக்கணமுடையது என்பர். சான்றாக, யாழினி பாடம் படித்தாள் – இத்தொடர் இலக்கணப் பிழையின்றி அமைந்தது அல்லவா ! |
| தீரன் | : | இலக்கணப்போலி என்றால் என்ன ? ஐயா. |
| ஆசிரியர் | : | நகர்ப்புறம், கால்வாய், கொம்பு நுனி போன்ற இலக்கணமுடைய சொற்களைப் புறநகர், வாய்க்கால், நுனிக்கொம்பு என மாற்றி, நம் முன்னோர் இலக்கணமுடையதுபோல வழங்கி வருவதனை 'இலக்கணப்போலி' என்கிறோம். |
| வண்டார்குழலி | : | மரூஉ என்றால் என்ன ? ஐயா. |
| ஆசிரியர் | : | தஞ்சாவூர், கோயமுத்தூர் இவ்வூர்களை எவ்வாறு சுருக்கி அழைக்கிறோம் ? |
| வண்டார்குழலி | : | தஞ்சை, கோவை ஐயா. |
| ஆசிரியர் | : | நன்றாகச் சொன்னாய். தஞ்சாவூர், கோயமுத்தூர் இவை தஞ்சை, கோவை எனச் சிதைந்து வந்துள்ளதால், இவற்றை மரூஉ என அழைக்கிறோம். |
| முத்தரசு | : | தகுதி வழக்கு என்றால் என்ன ? ஐயா. |

ஆசிரியர் : தகுதியான சொற்களைப் பேசுவது தகுதி வழக்கு என்பர். இஃது இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூவகைப்படும்.

பொன்மணி : இடக்கரடக்கல் என்றால் என்ன ? ஐயா.

ஆசிரியர் : பலர் முன்னே கூறுவதற்கு இடர்ப்பாடாகத் தோன்றும் சொற்களை நீக்கித் தகுந்த சொற்களால், அப்பொருளைத் தெரிவிப்பது இடக்கரடக்கல் என்பர். சான்றாக, 'வாய் கழுவி வந்தேன்' என்னும் இத்தொடரை நீக்கி, 'வாய்பூசி வந்தேன்' எனக் கூறுவர்.

கண்மணி : 'மங்கலம்' என்றால் என்ன ? ஐயா.

ஆசிரியர் : அமங்கலமான சொல்லை நீக்கி மங்கலமான சொல்லால் அப்பொருளை வழங்குவது 'மங்கலம்' என்பர். சான்றாக, இறந்தாரை இறைவனடி சேர்ந்தார் எனக் கூறுவர்.

மலர்விழி : 'குழூஉக்குறி' என்றால் என்ன ? ஐயா.

ஆசிரியர் : ஒரு குழுவினர் தமக்கு மட்டும் புரியும்வகையில், ஒரு பொருளுக்குக் குறிப்பாக வழங்கும் பெயரைக் குழூஉக்குறி என்பர்.

சான்றாகப் பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' என்பர்.

தமிழ்

பயிற்சி

1. தஞ்சைப் பகுதியெங்கும் காவிரியாறு கால்வாய் வழியாக ஓடிப் பயிர்களைச் செழிக்கச் செய்கிறது.

   இத்தொடரில் காணும் இயல்பு வழக்குச் சொற்களைக் கீழுள்ளவாறு வகைப்படுத்துக.

   அ) இலக்கணமுடையது

   ஆ) இலக்கணப்போலி

   இ) மரூஉ

2. வெள்ளாடு பிடித்துவரும் மாமாவைப் பார்த்து, யானை வருகிறது எனச் சிறுவர்கள் ஓடினர்.

   இத்தொடரில் தகுதி வழக்குக்கு உரியவற்றை வட்டமிடுக.

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக.

   1. 'சிவிறி' என்பதை 'விசிறி' எனக் கூறுவது ______ வழக்கு.
   2. இறந்தாரை 'இறைவனடி சேர்ந்தார்' என்பது ______ வழக்கு.
   3. 'விளக்கைக் குளிர வை' என்பது ______ வழக்கு.

2. பொருத்துக.

1. இலக்கணமுடையது – கோவை
2. இலக்கணப்போலி – நிலம்
3. மரூஉ – புறநகர்

3. பொருத்துக.

1. இடக்கரடக்கல் – பறி
2. மங்கலம் – கால் கழுவி வந்தான்.
3. குழூஉக் குறி – இறைவனடி சேர்ந்தார்.

ஆ) குறுவினாக்கள்

1. வழக்கு என்றால் என்ன ?
2. வழக்கு எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
3. இலக்கணப்போலியைச் சான்றுடன் விளக்குக.
4. மரூஉ என்பது யாது ? சான்று தருக.
5. மங்கலம் என்றால் என்ன ? விளக்குக.

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

கீழ்க்காணும் தலைப்புகள் குறித்து ஐந்து மணித்துளி பேசுக.

1. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி
2. இணையத்தின் இணையற்ற சாதனை

ஆ) படித்தல் திறன்

கீழுள்ள பகுதியைப் படித்து நயம் உணர்க.

வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. ஏரி நிரம்பிக் கடைக்கால்வழி வழிந்து ஓடிக்கொண்டிருந்தது. ஏரிக்கரை அருகே நிலக்கிழார் ஒருவரும் புலவர் இருவரும் சென்றுகொண்டிருந்தனர். அந்த ஏரிப் பாய்ச்சல் பகுதியில் நிலக்கிழாரின் நிலம் இருந்தது. ‘ஏரி கடைபோகிறது’ என்றார் முதற்புலவர். அவர் கூறி முடிக்கும் முன்னே, ஏரியின் கரை நடுவே உடைந்துவிட்டது. ‘ஏரி இடைபோகிறது’ என்றார் மற்றொரு புலவர்.

ஏரி உடைந்துபோனதால், தம் வயல்கள் பாழாவதனைக் கண்ட நிலக்கிழார், ‘கடைபோவதனையும் இடைபோவதனையும் தானே பார்த்தீர்கள்; முதல் போவதனைப் பார்க்கவில்லையா ?’ என்றார். நிலக்கிழார் கூறியதன் பொருள் விளங்காமல் அவ்விருவரும், நிலக்கிழாரின் முகத்தைப் பார்த்தனர். ஆம், ஏரி உடைந்தமையால் என் ‘முதல் (செல்வம்) போகிறது’ என்று தம் வயல்களைக் காட்டினார் நிலக்கிழார்.

இ) எழுதுதல் திறன்

குறிப்புகளை விரித்து எழுதும் திறன்

கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக்கொண்டு கதைப்பகுதியை விரித்து எழுதுதல்; கதைக்கேற்ற தலைப்புக் கொடுத்தல்.

(எ.கா.) வயதான தந்தை – நான்கு மகன்கள் – ஒற்றுமை இல்லை – தந்தை கவலைப்படுதல் – அனைவரையும் அழைத்தல் – குச்சிகளை ஒருங்கே கட்டச் செய்தல் – உடைக்கச் சொல்லுதல் – உடைக்க இயலாமற் போதல் – கட்டிலிருந்து தனித்தனியாகப் பிரித்தெடுக்கச் செய்து உடைக்கச் சொல்லுதல் – எளிதாக உடைத்தல் – ஒற்றுமையின் இன்றியமையாமையை வலியுறுத்துதல்.

## ஒற்றுமையே வலிமை

வயதான தந்தைக்கு மகன்கள் நால்வர் இருந்தனர். அவர்கள் எப்போதும் ஒற்றுமையின்றிச் சண்டையிட்டுக்கொண்டே இருந்தனர். அதனால், மனம் வருந்திய தந்தை, அவர்களை எப்படியாவது திருத்தவேண்டும் என எண்ணினார்.

ஒருநாள், அவர்கள் அனைவரையும் அழைத்தார். ஓரடி நீளமுள்ள குச்சிகள் பலவற்றைச் சேர்த்து அவர்களைக் கட்டச்செய்தார். பின்னர், ஒவ்வொருவரிடமும் அவற்றைக் கொடுத்து உடைக்கச் சொன்னார். ஆனால், குச்சிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால் அவர்களால் உடைக்க இயலவில்லை. அக்கட்டிலிருந்து ஒரு குச்சியை மட்டும் வெளியே எடுக்கச்செய்து அவற்றை ஒவ்வொருவருக்கும் கொடுத்து உடைக்கச் சொன்னார். அவர்கள் எளிதாக அக்குச்சிகளை உடைத்துவிட்டனர். 'இச்செயலிலிருந்து உங்களுக்கு என்ன தெரிகிறது ?' என்று கேட்டார். 'குச்சிகள் தனித்தனியாக இருந்தால் எளிதில் உடைத்துவிடலாம்' என்று ஒருவன் கூறினான்.

'நீங்களும் ஒற்றுமையின்றி இவ்வாறு தனித்தனியாகச் சண்டையிட்டுக்கொண்டு இருந்தால், எதிரிகள் உங்களை விரைவாக அழித்துவிடுவர். எனவே, நீங்கள் நால்வரும் ஒற்றுமையுடன் செயல்பட்டால் எளிதில் வெற்றிபெறலாம்' என்று கூறினார். ஒற்றுமையின் பெருமையை அவர்களும் உணர்ந்துகொண்டு 'இனிச் சண்டையின்றிக் கூடி வாழ்வோம்' என்று கூறினர்.

தமிழ்

பயிற்சி

### குறிப்புகளைக்கொண்டு கதைப்பகுதியினை விரித்து எழுதுக. பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

மக்கள் சோம்பலாக இருத்தல் – மன்னன் கவலைப்படுதல் –அவர்களை மாற்ற நினைத்தல்– மக்கள் நாள்தோறும் செல்லும் வழியில் பெரிய பாறாங்கல்லைப் போட்டு வைத்தல் – பார்த்தவர் யாரும் அப்புறப்படுத்தவில்லை – மன்னன் வருந்துதல் – காவலரைக்கொண்டு அப்புறப்படுத்துதல் – கல்லுக்கு அடியில் பெரும்புதையல் இருத்தல் – அந்தக் கல்லை நகர்த்துபவருக்கே அஃது உரிமை என அறிய வைத்தல் – தங்களில் யாராவது ஒருவர் அக்கல்லை நகர்த்தியிருந்தால், புதையல் கிடைத்திருக்கும் என மக்கள் நினைத்தல் – முயற்சியின்மையையும் சோம்பல்தன்மையையும் நினைத்து வருந்துதல் – திருத்திக் கொள்ளுதல் – மன்னன் மகிழ்தல்.

### ஈ) சொற்போர் – பட்டிமன்றம் நடத்துக.

அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆக்கத்துக்கா ? அழிவுக்கா ?

### உ) கலந்துரையாடும் திறன்

கணினிப் பயன்பாடு – உன் நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## மொழித்திறன் பயிற்சி

### மரபுச்சொற்கள்

யானைக்குட்டி, யானைக்கன்று

மேற்காணும் இருசொற்களில் மரபு பிறழ்ந்த சொல்லை உங்களால் கண்டறிய முடிகிறதா ? யானைக்குட்டி என்பது மரபு பிறழ்ந்த சொல். யானைக்கன்று என்பதே மொழிமரபுக்கு ஏற்ற சொல். முன்னோர் எச்சொல்லை எப்படி வழங்கினரோ அச்சொல்லை அப்படியே ஏற்று நாமும் வழங்குதல் மரபு. நாம் நாள்தோறும் பயன்படுத்தும் மரபுச்சொற்கள் சிலவற்றை அறிவோம்.

## விலங்குகளின் இளமைப்பெயர்கள்

| | | | |
|---|---|---|---|
| அணிற்பிள்ளை | யானைக்கன்று | நாய்க்குட்டி | கழுதைக்குட்டி |
| கீரிப்பிள்ளை | மான்கன்று | பூனைக்குட்டி | பன்றிக்குட்டி |
| சிங்கக்குருளை | எருமைக்கன்று | ஆட்டுக்குட்டி | எலிக்குட்டி |
| புலிப்பறழ் | குதிரைக்குட்டி | குரங்குக்குட்டி | |

## விலங்குகளின் வாழிடங்கள்

| | | |
|---|---|---|
| ஆட்டுப்பட்டி | கோழிப்பண்ணை | யானைக்கூடம் |
| குதிரைக்கொட்டில் | மாட்டுத்தொழுவம் | வாத்துப்பண்ணை |

## விலங்கு பறவை இனங்களின் ஒலிமரபு

| | | |
|---|---|---|
| ஆந்தை அலறும் | குதிரை கனைக்கும் | நரி ஊளையிடும் |
| கழுதை கத்தும் | குயில் கூவும் | புலி உறுமும் |
| காக்கை கரையும் | கோழி கொக்கரிக்கும் | மயில் அகவும் |
| கிளி கொஞ்சும்/பேசும் | சிங்கம் முழங்கும் | யானை பிளிறும் |

## தாவர உறுப்புப் பெயர்கள்

| | | |
|---|---|---|
| ஈச்ச ஓலை | தாழை மடல் | பனையோலை |
| சோளத்தட்டை | தென்னையோலை | பலாஇலை |
| மாவிலை | மூங்கில் இலை | வாழைஇலை |
| வேப்பந்தழை | கமுகங்கூந்தல் | நெற்றாள் |

## காய்களின் இளநிலை

| | | |
|---|---|---|
| அவரைப்பிஞ்சு | மாவடு | முருங்கைப்பிஞ்சு |
| தென்னங்குரும்பை | வாழைக்கச்சல் | வெள்ளரிப்பிஞ்சு |

## செடி கொடி மரங்களின் தொகுப்பிடம்

| | | |
|---|---|---|
| ஆலங்காடு | சவுக்குத்தோப்பு | தென்னந்தோப்பு |
| கம்பங்கொல்லை | சோளக்கொல்லை | தேயிலைத்தோட்டம் |
| பனந்தோப்பு | பலாத்தோப்பு | பூந்தோட்டம் |

## பொருள்களின் தொகுப்பு

| | | |
|---|---|---|
| ஆட்டுமந்தை | கற்குவியல் | சாவிக்கொத்து |
| திராட்சைக்குலை | வேலங்காடு | பசுநிரை |
| மாட்டுமந்தை | யானைக்கூட்டம் | வைக்கோற்போர் |

## பொருளுக்கேற்ற வினைமரபு

| | | |
|---|---|---|
| சோறு உண் | நீர் குடி | பால் பருகு |
| பழம் தின் | பாட்டுப் பாடு | கவிதை இயற்று |
| கோலம் இடு | தயிர் கடை | விளக்கை ஏற்று |
| தீ மூட்டு | படம் வரை | கூரை வேய் |

பயிற்சி :

1. பொருத்தமான மரபுச்சொல்லைத் தேர்ந்தெழுதுக.

அ) குமரன் பழம் ________________ (உண்டான், தின்றான்)

ஆ) காலையில் சேவல் ________________ (கூவியது, கத்தியது)

இ) ஆட்டு ________________ (கூட்டம், மந்தை) வருகிறது.

ஈ) எங்கள் ஊரில் வாழைத் ________________ (தோட்டம், தோப்பு) உள்ளது.

உ) குயில் ________________ (கூவியது, அகவியது)

2. கீழுள்ள பெயர்களுக்கு உரிய இளமைப் பெயர்களை எழுதுக.

அ) கீரி ____________

ஆ) மான் ____________

இ) சிங்கம் ____________

ஈ) பூனை ____________

உ) எருமை ____________

3. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) மக்கள் | – | போர் |
| ஆ) வீரர் | – | கற்றை |
| இ) விறகு | – | கூட்டம் |
| ஈ) சுள்ளி | – | கட்டு |
| உ) வைக்கோல் | – | படை |

4. எண்ணுப்பெயர்களைத் தமிழெண்களுடன் பொருத்துக.

| எண்ணுப் பெயர் | | எண் |
|---|---|---|
| 1. பன்னிரண்டு | – | ரு |
| 2. ஒன்பது | – | கரு |
| 3. ஐந்து | – | கூ |
| 4. பதினைந்து | – | கஉ |
| 5. பதின்மூன்று | – | கரு |

5. கட்டுரைப்பயிற்சி :

நுகர்வோர் பாதுகாப்பு

## வாழ்க்கைத்திறன்

### சிறப்பாக நட்புக்கொள்ளும் திறன்

கதிரவனும் தமிழழகனும் எட்டாம் வகுப்பில் படிக்கின்றனர். அவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்கள். அவர்கள் இருவரது நட்பைப் பார்த்தவர்கள் எல்லாம் பாராட்டினார்கள்.

கதிரவனுக்குக் கணக்குப் புரியவில்லையென்றால், தமிழழகன் பொறுமையாகச் சொல்லித் தருவான். தமிழழகனுக்கு இலக்கணம் புரியவில்லையென்றால், கதிரவன் விளக்குவான்.

பாடம் சொல்லித் தருவதில் மட்டுமின்றி, ஒருவர் உணவைக் கொண்டுவரவில்லையென்றால், மற்றொருவருடன் பகுத்து உண்பது, எழுதுகோல் கொடுத்து உதவுவது என எல்லாவற்றிலும் ஒருவருக்கொருவர் சிறப்பாக நட்புக் கொண்டிருந்தனர்.

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருவரிடமும் இயல்பாகவே அமைந்திருந்தது. அதே வகுப்பில் படிக்கும் மதிவாணனோ யாருடனும் நட்புடன் பழகியதில்லை. அவனுடைய பொருள்களை யாருக்கும் கொடுக்கமாட்டான். தானே எல்லாவற்றிலும் முதன்மையாக இருக்கவேண்டும் என்று எண்ணுவான்.

பிறர் சொல்வதனைக் கேட்க அவனுக்குப் பிடிக்காது. தான் சொல்வது சரியோ தவறோ மற்றவர் தலையாட்ட வேண்டும் என்று நினைப்பான். மற்றவர்களுக்கு மதிப்பளிக்கமாட்டான்.

நீங்களே சொல்லுங்கள்.

மதிவாணன் இவ்வாறு நடந்துகொண்டால், அவனுக்கு எப்படி நண்பர்கள் கிடைப்பார்கள் ?

ஒருவரோடு ஒருவர் சிறப்பாக நட்புக்கொள்வது எப்படி ?

நீங்கள் கதிரவனைப் போன்றவரா ? மதிவாணனைப் போன்றவரா ?

கீழுள்ள வினாக்களுக்கு விடையளித்து, உங்களை நீங்களே மதிப்பீடு செய்துகொள்ளுங்கள்.

1. உங்கள் நண்பருக்குக் கடுமையான காய்ச்சல், ஒருவாரமாக அவர் பள்ளிக்குச் செல்லவில்லை. இந்த நிலையில், அந்த வாரத்தில் நடைபெற்ற பாடங்கள் பற்றி வீட்டிற்கு வந்து சொல்லிவிட்டுச் செல்லுமாறு நண்பர் உங்களை அழைக்கிறார். நீங்கள் என்ன சொல்வீர்கள் ?
   - அ) எனக்கு வேறு வேலை இருக்கிறது; வர இயலாது.
   - ஆ) வேறு யாரையாவது கேட்டுக்கொள்.
   - இ) அதனால் என்ன, இப்போதே வந்து சொல்கிறேன்.
2. நீங்கள் முழுமூச்சாக வரைபடம் வரைந்துகொண்டு இருக்கிறீர்கள். அங்கு வந்த உங்கள் நண்பர், உங்களிடம் அளவுகோல் வேண்டும் என்று கேட்கிறார். நீங்கள் என்ன சொல்வீர்கள் ?
   - அ) எனக்கு வேண்டும்; தர முடியாது.
   - ஆ) கொஞ்சம் பொறு; கோடு போட்டுவிட்டுத் தருகிறேன்.
   - இ) அளவுகோல்கூட இல்லாமல் ஏன் பள்ளிக்கு வருகிறாய் ?



## மதிப்புக்கல்வி

### தன்மதிப்பைப் பேணுதல்

நம் நாட்டின் புகழ்பெற்ற நாட்டுப்பாடல் வந்தே மாதரம். இப்பாடல் தோன்றியது எப்படி என்று தெரியுமா ? பக்கிம் சந்திரர் என்பவர் வங்காளத்தில் மாவட்டத் துணை ஆட்சியாளராக இருந்தார். ஒருமுறை இராமகிருட்டினரிடம் வாழ்த்துப்பெறச் சென்றார். இராமகிருட்டினர் அவரிடம், "உன்பெயர் என்ன ?'' என்று வினவினார். "என்பெயர் பக்கிம் சந்திரர்'' என்றார் அவர். அப்படியென்றால், "நீ வளைந்த சந்திரனா ? அதாவது தேய்பிறையா ? ஒருவேளை ஆங்கிலேயரிடம் வேலை செய்தே இப்படி வளைந்து போய்விட்டாயா ?'' என்று கேலியாகக் கேட்டார்.

"வங்காளமொழியில் பக்கிம் என்றால் வளைந்த என்பது பொருள்."

அப்போதுதான், தன்மதிப்பை இழந்து அடிமையாக வேலை செய்கின்றோம் என்ற உணர்வு பக்கிம் சந்திரருக்கு ஏற்பட்டது. உடனே, அந்த வேலையை விட்டுவிட்டார். நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டார். அப்போது எழுதிய நூல்தான் ஆனந்தமடம். அந்த நூலில் இடம் பெற்ற புகழ்பெற்ற பாடல்தான் வந்தே மாதரம்.

எப்போதும் நாம், நம் மதிப்பைக் காத்துக்கொள்ளுதல் வேண்டும்; ஒருபோதும் விட்டுத்தரக்கூடாது. பலவற்றை விட்டுத் தரலாம்; சிலவற்றை விட்டுத்தரவே கூடாது.

1. நீ எவற்றை விட்டுத் தருவாய் ?
2. நீ எவற்றை விட்டுத் தரமாட்டாய் ?
3. விட்டுக்கொடுத்தவர்கள் கெட்டுப்போனதில்லை; கெட்டுப்போனவர்கள் விட்டுக்கொடுத்தது இல்லை. இக்கருத்தைக் குறித்துக் கருத்தாடல் செய்க.

| வளரறி செயல்பாடுகள் | |
|---|---|
| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.

'தென்றல் அசைந்துவரும் தென்தமிழ்நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும். குரவமும் முல்லையும் நறுமணங் கமழும். கோலமாமயில் தோகை விரித்தாடும். தேனுண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும். அத்தகைய மலையினின்று விரைந்து வழிந்து இறங்கும் வெள்ளருவி வட்டச் சுனையிலே வீழ்ந்து பொங்கும்பொழுது சிதறும் நீர்த்திவலைகள் பாலாவிபோற் பரந்து எழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாவும். வேனிற்காலத்தில் திருக்குற்றால மலையில் வீசும் மெல்லிய பூங்காற்று மருந்துச் செடிகொடிகளின் நலங்களைக் கவர்ந்து வருதலால், நலிந்த உடலைத் தேற்றும் நன்மருந்தாகும்'.

வினாக்கள்

1. தென்தமிழ்நாட்டில் மலைவளம் படைத்த பழம்பதி எது ?
2. உரைப்பத்தியில் இடம்பெற்றுள்ள மரங்களின் பெயர்களைக் கூறுக.
3. தமிழ்ப் பாட்டிசைக்கும் உயிரினம் எது ?
4. அருவியினின்று சிதறும் நீர்த்திவலைகளுக்குக் கூறப்பட்ட உவமை யாது ?
5. திருக்குற்றால மலையில் வீசும் மெல்லிய பூங்காற்றின் பயன் யாது ?

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

கீழ்க்காணும் படம் உணர்த்தும் கருத்தைக் குழுவில் கலந்துரையாடி, ஐந்து மணித்துளி பேசுக.



தண்ணீரைச் சேமிப்போம்;
தாவரங்களை வளர்ப்போம்.

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியில் மயங்கொலிச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றை உரிய ஒலிப்புடன் படித்துக் காட்டுக.

குளிர்ந்த சோலையில் மயில்கள் விறலியர்போல் ஆடுகின்றன. தாமரை மலர்கள் வண்ண விளக்குகளாகவும் மேகங்களின் முழக்கம் முழவோசையாகவும் தண்ணிய நீரலை அரங்கை அலங்கரிக்கும் வண்ணத்திரைகளாகவும் வண்டுகளின் இன்னொலி மகரயாழின் இசையாகவும் அமைகின்றன. மாமன்னன் குவளைக்கண் விழித்துநோக்கி, மகிழ்வுடன் வீற்றிருந்தான் என மருதநிலைக் காட்சி, காண்போர்தம் இதய அரங்கில் காணுமாறு சிறந்த சொல்லோவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

| எழுதுதல் திறன் | |
|---|---|
| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 4 |

கீழ்க்காணும் சொற்களை அகர வரிசைப்படுத்தி எழுதுக.

பாடம், மன்றம், பட்டம், மாந்தளிர், மௌனம், பிரிவு, மிதவை, பீலி, மீளாய்வு, புதுமை, முல்லை, பூவிழி, மூதுரை, பெருமை, மென்மை, பேழை,மேம்படு, பைந்தழை, மைவிழி, பொறுமை, மொட்டு, மோனை, போட்டி, பௌவம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| ப | | | | |
| | | | | |
| | | | | |
| ம | | | | |
| | | | | |

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.

கணினியைப் பயன்படுத்திக் கற்கும் கல்வியே கணினிக் கல்வி. வீட்டிலிருந்தபடியே தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், வானியல், வரலாறு, புவியியல், பொது அறிவு, நடனம், கைவேலைப்பாடு என எந்த ஒன்றையும் கற்றுக் கொள்ள இயலும். தொலைதூரக் கல்வியை இணையத்தின் உதவியால் கணினிவழியாகப் பலரும் கற்று வருகின்றனர்.

வருங்காலக் கல்வி கணினிக்கல்வியாக அமையும். தட்டுங்கள் இணையத்தின் கதவை, உலகத்தின் சாளரம் திறக்கும்; தேடுங்கள் இணையத்தளத்தில், உலக அறிவெல்லாம் கிடைக்கும். இணையத்துக்கு இணையானது இணையமொன்றே. இணையத்தில் எல்லாம் இருக்கிறது.

| விழிப்புணர்வு பெறுதல் | செயல்பாடு – 6 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

நாம் அறிவியல் தொழில்நுட்பத்தை மிகுதியாகப் பயன்படுத்தி வருகின்றோம். உடனுக்குடன் செய்திகளைப் பெறவும், பிறருக்கு அனுப்பவும் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்துகிறோம். சான்றாகத் தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, கைப்பேசி, கணினி, இணையத்தளம் போன்றவற்றைக் கூறலாம். நமக்கு நன்மையைத் தரக்கூடிய ஊடகங்களைத் தவறாகப் பயன்படுத்துவது சைபர் குற்றம் என அழைக்கப்படுகிறது. கைப்பேசி வாயிலாக, ஒருவரைப்பற்றித் தரக்குறைவாகச் சித்திரித்தல், அவருக்குத் தெரியாமல், அவரைப் புகைப்படம் எடுத்தல், அவருடைய ஒப்புதலின்றி புகைப்படத்தையும், முகவரியையும், கைப்பேசி எண்ணையும் இணையத்தளத்தில் வெளியிடுதல், அவரைப்பற்றித் தவறான செய்திகளை மற்றவர்களுக்குக் குறுஞ்செய்தியாக அனுப்புதல், சமுதாயத்தில் குழப்பத்தை விளைவிக்கும் எண்ணத்தில், இணையத்தளத்தில் மின்னஞ்சல் வாயிலாகவோ கைப்பேசியில் குறுஞ்செய்தி வாயிலாகவோ அனைவருக்கும் தவறான செய்திகளை அனுப்புதல் போன்ற செயல்களைச் சைபர் குற்றம் என அழைக்கின்றனர்.

ஒருமுறை, சிலருடைய கைப்பேசியில் ஒரு குறுஞ்செய்தி பரவியது. ‘‘கைகளில் மருதாணி வைத்துக் கொள்பவர்களுக்கு ஒவ்வாமை ஏற்படுகிறது’’, எனத் தவறான செய்தி பரவியது. அச்செய்தியில், எள்ளளவும் உண்மையில்லை. சமுதாயத்தில் சீர்குலைவு ஏற்படுத்துதலே, இச்செய்தியைப் பரப்பியவரின் நோக்கமாக இருந்துள்ளது. விளையாட்டாகச் செய்தியைப் பரப்புவதும் சைபர் குற்றமே. நாம் விழிப்புணர்வுடன் இருந்து இத்தகைய செய்திகளைப் புறக்கணித்தல் வேண்டும். குற்றம் செய்பவர்களிடமிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ளுதல் வேண்டும்.

வினாக்கள்

1. நாம் பயன்படுத்தும் ஊடகங்களின் பெயர்களைக் கூறுக.
2. ஊடகங்களின் பயன்களுள் இரண்டனைக் கூறுக.
3. சைபர் குற்றம் என்பது யாது ?
4. சைபர் குற்றங்களுள் இரண்டனைக் கூறுக.
5. ஊடகத்தின் வாயிலாகத் தவறான செய்தி பரவும்போது, நாம் செய்யவேண்டியது என்ன ?

| பொருத்துக. | செயல்பாடு – 7 |
|---|---|

பலபொருள் தரும் ஒருசொல்லைப் பொருத்துக.

| பலபொருள் | ஒருசொல் |
|---|---|
| உள்ளம், வீடு, இடம் | திங்கள் |
| மாதம், கிழமை, சந்திரன் | திரு |
| அழகு, நகை, வரிசை | அகம் |
| கதிரவன், வெளிச்சம், விளக்கு | அணி |
| மேன்மை, இலக்குமி, செல்வம், மரியாதை அடை | ஒளி |

| பாடல் பொருளுணர்தல் | செயல்பாடு – 8 |
|---|---|

கீழ்க்காணும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து, வினாக்களுக்கு விடையளிக்க.

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி யெண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.

– பாரதிதாசன், அழகின் சிரிப்பு

வினாக்கள்

1. பாடலில் குறிப்பிடப்படும் மரம் எது ?
2. குரங்கு விழுதென்று எதனைத் தொட்டது ?
3. பாடலில் இடம்பெற்றுள்ள உவமை எது ?
4. குரங்கு தன் வாலை என்னவென்று நினைத்தது ?
5. பிள்ளை என்னும் பொருள் தரும் சொற்கள் இரண்டனைக் கூறுக.

| தொகைச்சொற்கள் அறிதல் | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் தொடர்களில் வண்ண எழுத்துகளில் தொகைச்சொல் விரித்து எழுதப்பட்டுள்ளது. அச்சொல்லுக்குரிய தொகைச்சொல்லை எழுதுக.

(எ.கா.) சேர, சோழ, பாண்டியர் அரசவையில் ஒன்றாக வீற்றிருந்தனர்.

1. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியவற்றைக் கற்றால், சிறந்த தமிழறிஞர் ஆகலாம்.
2. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய திசைகளிலிருந்து நாம் செய்திகளைப் பெறுகிறோம்.
3. நாம் உண்ணும் உணவில், இனிப்பு, கசப்பு, புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு ஆகியன இருத்தல் வேண்டும்.
4. சிலப்பதிகாரம், மணிமேகலை ஒன்றற்கொன்று தொடர்புடையவை.
5. மா, பலா, வாழை ஆகிய கனிகளை அனைவரும் விரும்பி உண்பர்.

| தொகைச்சொல்லின் விரி | தொகைச்சொல் |
|---|---|
| சேர, சோழ, பாண்டியர் | மூவேந்தர் |
| | |
| | |
| | |
| | |

தமிழ்

| மொழியாக்கம் அறிதல் | செயல்பாடு – 10 |
|---|---|

அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள கணினிப்பயன்பாட்டுச் சொற்களை உரிய சொற்களுடன் இணைத்தெழுதுக.

(கணினித் திரை, வன்பொருள், விசைப்பலகை, மென்பொருள், இணையத்தளம், இருநிலை எண் மொழி, பல்லூடக விளையாட்டுகள், தேடுபொறிகள், மின்னஞ்சல், கருத்துப் பரிமாற்றம், எழுத்துரு, பதிவிறக்கம், மாற்றுவிசைக் குமிழி, உலகளாவிய வலைப்பின்னல், குறுந்தட்டு, செய்தித்தொகுப்பு)

| | | | |
|---|---|---|---|
| பாண்ட் | எழுத்துரு | ஈ மெயில் | |
| கீ போர்டு | | டேட்டா பேஸ் | |
| மல்டி மீடியா கேம்ஸ் | | பைனாரி லேங்குவேஜ் | |
| இண்டர்நெட் | | மானிட்டர் | |
| வேர்ல்ட் வொய்ட் வெப் | | சாப்ட்வேர் | |
| ஷிப்ட் கீ | | வெப் சர்ச் என்ஜின் | |
| ஹார்டுவேர் | | டவுன்லோட் | |
| பிளாப்பி டிஸ்க் | | சாட்டிங் | |

| படைப்பாற்றல் திறன் | செயல்பாடு – 11 |
|---|---|

'அழகு' என முடியும்படி எட்டுவரிப் பாடல் எழுதுக.

நாட்டுக்கு வளமை அழகு

வீட்டுக்குத் தூய்மை அழகு

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

| சொற்களஞ்சியப்பெருக்கம் | செயல்பாடு – 12 |
|---|---|

‘ஆனாலும்’ என்னும் இணைப்புச் சொல்லைப் பயன்படுத்திப் பழமொழிகளை எழுதுக.

( எ.கா. ) கந்தையானாலும் கசக்கிக் கட்டு; கூழானாலும் குளித்துக் குடி.

1. எலி வளை ______________ தனி வளை வேண்டும்.
2. ஒட்டைச்சட்டி ______________ கொழுக்கட்டை வெந்தால் சரி.
3. ஒடிந்தகோல் ______________ ஊன்றுகோல் ஆகும்.
4. கடுகளவு நெருப்பு ______________ போரைக் கொளுத்திவிடும்.
5. சுடர்விளக்கு ______________ தூண்டுகோல் வேண்டும்.

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண்: 10

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 X 1 = 5

அ) திருவள்ளுவமாலையை இயற்றியவர் ______________ .

ஆ) திருவள்ளுவமாலையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை ______________ .

இ) திருவள்ளுவமாலையில் ‘தினையளவு’ என்னும் பாடலை இயற்றியவர் ______________ .

ஈ) நளவெண்பாவை இயற்றியவர்______________ .

உ) புகழேந்திப் புலவரை ஆதரித்த வள்ளல் ______________ .

**2. ஓரிரு சொற்களில் விடையளிக்க.** 5 X 1 = 5

அ) சுயம்வரம் என்பது யாது ?

ஆ) புகழேந்திப் புலவர் வாழ்ந்த காலத்தைக் குறிப்பிடுக.

இ) தமயந்தி, யாருக்கு மாலையிட விரும்பினாள் ?

ஈ) நளவெண்பாவில் குறிப்பிடப்படும் அங்கநாட்டின் வளம் யாது ?

உ) ‘வெண்பாவிற் புகழேந்தி’ எனப் புகழேந்திப் புலவர் போற்றப்படக் காரணம் யாது ?

“என்னால் முடியும், நானே செய்தேன்”

**( I can, I did )**

மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

| வ.எண் | நாள் | பாட எண் | பாடத்தலைப்பு | செயல்பாடு | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

தமிழ்நாடு அரசு

# எட்டாம் வகுப்பு

## இரண்டாம் பருவம்

### தொகுதி 1

## தமிழ்

## ENGLISH

விற்பனைக்கு அன்று

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு இலவசப்பாடநூல்
வழங்கும் திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

© தமிழ்நாடு அரசு

முதற் பதிப்பு – 2012

திருத்திய பதிப்பு – 2013

(பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

நூல் அச்சாக்கம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

இந்நூல் 80 ஜி. எஸ். எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

**விலை : ரூ.**

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

பாடநூல் வலைதளம்

www.textbooksonline.tn.nic.in

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

# THE NATIONAL ANTHEM

Jana–gana-mana-adhinayaka jaya he
    Bharata-bhagya-vidhata.
Punjaba-Sindhu-Gujarata-Maratha-
    Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
    Uchchhala-jaladhi-taranga
Tava subha name jage,
    Tava Subha asisa mage,
    Gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
    Bharata-bhagya-vidhata
Jaya he, jaya he, jaya he,
Jaya jaya, jaya, jaya he.

- Rabindranath Tagore.

## AUTHENTIC ENGLISH TRANSLATION OF THE NATIONAL ANTHEM

Thou art the ruler of the minds of all people,
    Thou dispenser of India's destiny.
Thy name rouses the hearts of the Punjab, Sind,
    Gujarat and Maratha, of Dravid, Orissa and Bengal.
It echoes in the hills of the Vindhyas and Himalayas,
    mingles in the music of the Yamuna and Ganges
    and is chanted by the waves of the Indian Sea.
They pray for Thy blessings and sing Thy praise
The saving of all people waits in Thy hand,
Thou dispenser of India's destiny.
Victory, Victory, Victory to Thee.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

## INVOCATION TO GODDESS TAMIL

Bharat is like the face beauteous of Earth clad in wavy seas;

Deccan is her brow crescent-like on which the fragrant 'Tilak' is the blessed Dravidian land.

Like the fragrance of that 'Tilak' plunging the world in joy supreme reigns Goddess Tamil with renown spread far and wide.

Praise unto 'You, Goddess Tamil, whose majestic youthfulness, inspires awe and ecstasy.'

## THE NATIONAL INTEGRATION PLEDGE

"I solemnly pledge to work with dedication to preserve and strengthen the freedom and integrity of the nation."

"I further affirm that I shall never resort to violence and that all differences and disputes relating to religion, language, region or other political or economic grievances should be settled by peaceful and constitutional means."

## A STUDENT'S VOW BEFORE MOTHER INDIA

Name :

Class : School :

I shall overcome the obstacles raised by caste and communal prejudices and work for the greatness of my Motherland putting to the fullest use the benefits that I derive through education.

Vande mataram!

Signature

# பொருளடக்கம்


| தமிழ் | | | (1 – 68) |
|---|---|---|---|
| இயல் | | தலைப்பு | பக்கம் |
| 1. | செய்யுள் | விவேகசிந்தாமணி | 2 |
| | | பாரதத்தாய் | 3 |
| | உரைநடை | இந்திய விடுதலைப்போரில் தமிழகப் பெண்களின் பங்கு | 5 |
| | துணைப்பாடம் | மரத்தின் வேண்டுகோள் | 9 |
| | இலக்கணம் | தொகைநிலைத் தொடர்கள் | 12 |
| | | தொகாநிலைத் தொடர்கள் | 16 |
| 2. | செய்யுள் | திருமந்திரம் | 25 |
| | | தேம்பாவணி | 26 |
| | உரைநடை | நாடகக்கலை | 28 |
| | துணைப்பாடம் | கண் திறந்தது! | 33 |
| | இலக்கணம் | ஆகுபெயர் | 36 |
| 3. | செய்யுள் | கம்பராமாயணம் | 44 |
| | | விழுதும் வேரும் | 45 |
| | உரைநடை | காட்டுயிரிகள் | 47 |
| | துணைப்பாடம் | சென்னை அருங்காட்சியகம் | 52 |
| | இலக்கணம் | வேற்றுமை | 56 |


## மனப்பாடப் பகுதி

| இயல் | செய்யுள் | அடிகள் |
|---|---|---|
| 1. | விவேகசிந்தாமணி | 4 |
| 2. | திருமந்திரம் | 4 |
| | தேம்பாவணி | 4 |
| 3. | கம்பராமாயணம் | 4 |
| | விழுதும் வேரும் | 4 |
| | மனப்பாட அடிகள் மொத்தம் | 20 |

(பாடநூலுள் * இவ்வுடுக் குறியிட்ட பாடல்கள் மனப்பாடப் பகுதி)

# எட்டாம் வகுப்பு

# தமிழ்

# இரண்டாம் பருவம்

தமிழ்

## விவேகசிந்தாமணி

தேன்நுகர் வண்டு மதுதனை உண்டு
    தியங்கியே கிடந்ததைக் கண்டு
தான்அதைச் சம்பு வின்கனி என்று
    தடங்கையில் எடுத்துமுன் பார்த்தாள்
வான்உறு மதியம் வந்தென்(று) எண்ணி
    மலர்க்கரம் குவியுமென்(று) அஞ்சிப்
போனது வண்டோ பறந்ததோ பழந்தான்
    புதுமையோ இதுஎனப் புகன்றாள். *



பொருள் : தேன் உண்ணும் வண்டு மலர்த்தேனை உண்டு மயங்கிக் கிடந்தது. அக்கருநிற வண்டினை நாவற்பழமெனக் கருதி மங்கை ஒருத்தி, தன் கையில் எடுத்துப் பார்த்தாள். அந்த வண்டானது, அவள் முகத்தை வான்நிலவு என நினைத்தது. அவள் கையைத் தாமரையெனக் கருதி, நிலவு வந்துவிட்டால் மலர்குவிந்து தன்னை மூடிவிடும் என அஞ்சியது. அதனால், அவ்வண்டு அவள் கையை விட்டுப் பறந்தது. அம்மங்கை, பறந்தது வண்டா, பழமா ? இஃது என்ன விந்தையாக இருக்கிறதே ! என மயங்கிக் கூறினாள்.

சொற்பொருள் : மது – தேன்; தியங்கி – மயங்கி; சம்பு – நாவல்; மதியம் – நிலவு.

நூல் குறிப்பு : விவேகசிந்தாமணி என்னும் இந்நூல், புலவர் பலரால் இயற்றப்பட்ட பாக்களின் தொகுப்பு. இந்நூலைத் தொகுத்தவர் யாரெனத் தெரியவில்லை.

### மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. பொருள் எழுதுக.

1. தியங்கி ____________ 3. சம்பு ____________
2. மதியம் ____________ 4. புகன்றாள் ____________

2. பிரித்து எழுதுக.

1. மலர்க்கரம் ____________ 2. குவியுமென்று ____________

3. சேர்த்து எழுதுக.

1. வான் + உறு ____________ 2. பழம் + தான் ____________

4. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. சம்புவின் கனி எனக் குறிக்கப்படுவது ____________ .
2. பெண்ணின் முகத்திற்கு ____________ ஒப்புமையாகக் காட்டப்பட்டுள்ளது.

5. பொருத்துக.

1. வண்டு – தாமரை
2. மங்கையின் முகம் – நாவற்பழம்
3. மலர்க்கரம் – வான்நிலவு

ஆ) குறுவினாக்கள்

1. விவேகசிந்தாமணி – குறிப்பு எழுதுக.
2. தேனையுண்ட வண்டு எவ்வாறு தோற்றமளித்தது ?

இ) சிறுவினா

விவேகசிந்தாமணிப் பாடலில் அமைந்துள்ள கற்பனை நயத்தை விளக்குக.

## பாரதத்தாய்

வாய்மையும் அறமும் பிறர்துயர் களையும்
வண்மையும் தியாகமும் இணைதீர்
தூய்மையும் ஒழுங்கின் கலியினில் வளர்ந்து
துலங்கிடத் தீமையும் துயரும்
சேய்மையுற் றகலத் தோன்றிய கருணைச்
செங்கதி ரவனெனத் தகைய
தாய்மையன் பிறனை யீன்றபா ரதத்தாய்
தாள்மலர் பணிவதே தவமாம்.

– அசலாம்பிகை அம்மையார்

பொருள் : உண்மை, அறம், பிறர் துன்பம் நீக்கும் திறன், தியாகம், இணையற்ற ஒழுக்கம் ஆகியவற்றை இக்கலிகாலத்தில் வளர்ந்து விளங்கச் செய்பவன்; தீமை, துன்பம் இவற்றை அகன்றோடச் செய்யும் கருணைக் கதிரவன் போன்றவன்; தாய்மையுள்ளம் கொண்டவன்; இத்தகைய தன்மைகள் கொண்ட மகாத்மா காந்தியை ஈன்றெடுத்த பாரதத்தாயின் மலரடிகளைப் போற்றி வணங்குவதே பெரும்பேறாகும்.

சொற்பொருள் : வாய்மை – உண்மை; களையும் – நீக்கும்; வண்மை – வள்ளல் தன்மை; துலங்குதல் – விளங்குதல்; சேய்மை – தொலைவு; தவம் – பெரும்பேறு.

பிரித்தறிதல் : தாய்மையன் பிறனை = தாய்மை + அன்பின் + தனை.

## ஆசிரியர் குறிப்பு

பெயர் : அசலாம்பிகை அம்மையார்

பிறந்த ஊர் : திண்டிவனத்திற்கு அருகில் உள்ள இரட்டணை.

இயற்றிய நூல்கள் : ஆத்திசூடி வெண்பா, திலகர் புராணம், குழந்தை சுவாமிகள் பதிகம்.

சிறப்பு : அசலாம்பிகை அம்மையார் சிறந்த பேச்சாளர். இவரை இக்கால ஔவையார் என்று திரு.வி.க. பாராட்டுவார். இவர் பலகாலம் திருப்பாதிரிப்புலியூரில் (கடலூர்) வாழ்ந்தார். இறுதிக்காலத்தில் சில ஆண்டு வடலூரில் வாழ்ந்தார். அப்போது, நானூற்று ஒன்பது பாடல்களைக்கொண்ட இராமலிங்கசுவாமிகள் சரிதம் என்னும் செய்யுள் நூலை இயற்றினார்.

நூல் குறிப்பு : காந்திபுராணம், ஈராயிரத்து முப்பத்து நான்கு பாடல்களைக் கொண்டது. இந்நூல் காந்தியடிகளைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு பாடப்பெற்றது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. பொருள் எழுதுக.

| | | |
|---|---|---|
| 1. வாய்மை ________ | 3. களையும் ________ | 5. வண்மை ________ |
| 2. துலங்குதல் ________ | 4. சேய்மை ________ | 6. தவம் ________ |

2. பிரித்து எழுதுக.

1. செங்கதிரவன் = ________   2. தாய்மையன்பு = ________

3. சேர்த்து எழுதுக.

1. பாரதம் + தாய் = ________   2. சேய்மை + உற்ற = ________

4. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. காந்திபுராணம் இயற்றியவர் ________________ .
2. காந்திபுராணத்தின் பாட்டுடைத்தலைவர் ________________ .

### ஆ) குறுவினாக்கள்

1. காந்திபுராணம் – குறிப்பு எழுதுக.
2. அசலாம்பிகை அம்மையார் – குறிப்பு எழுதுக.

### இ) சிறுவினா

காந்தியடிகளின் பண்புநலன்களைப் பாரதத்தாய் பாடல்வழிக் குறிப்பிடுக.

உரைநடை

# இந்திய விடுதலைப் போரில் தமிழகப்பெண்களின் பங்கு

(தோழிக்குக் கடிதம்)

27, சிந்தாமணி வீதி,
மதுரை– 2.
05.07.2010

அன்புள்ள காந்திமதி,

நலம். உன் நலத்தையும் உன் பெற்றோர் நலத்தையும் அறிய ஆவலாக உள்ளேன். கடந்த ஆண்டுவரை நாம் இருவரும் ஒரே பள்ளியில் படித்தோம். இன்றோ நீ சென்னையில்; நான் மதுரையில். ஆயினும், உன்னுடன் நான் பயின்ற காலத்தில் பெற்ற மகிழ்ச்சியான நிகழ்வுகள் என்றும் என் நினைவை விட்டு அகலா.

உன்னுடைய கடிதத்தில் இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழகப் பெண்களைப்பற்றிக் கேட்டிருந்தாய். அவர்களுள் மூவரைப்பற்றி இங்கு எழுத விழைகின்றேன்.

நான் முதலாவதாகக் குறிப்பிடும் தமிழகப்பெண் வேலு நாச்சியார். வேலு நாச்சியார், வீரமும் நுண்ணறிவும் ஒருங்கே அமையப்பெற்றவர். அவரே ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி.



இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் செல்லமுத்து சேதுபதி – சக்கந்தி முத்தாத்தாள் இணையருக்குக் கி.பி.1730ஆம் ஆண்டு ஒரே பெண் மகவாகத் தோன்றியவர் வேலு நாச்சியார். இவர், பெற்றோரால் ஆண் வாரிசைப்போன்றே வளர்க்கப்பட்டு, ஆயுதப்பயிற்சிமுதல் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார். சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதர் வேலு நாச்சியாரை மணந்துகொண்டார்.

ஆங்கிலேயர் 1772ஆம் ஆண்டு சிவகங்கைச் சீமையின்மீது படையெடுத்தனர். ஆங்கிலேயருக்கும் முத்துவடுகநாதருக்கும் இடையே போர் நடைபெற்றது. அப்போரில், மன்னர் முத்துவடுகநாதர் வீரமரணமடைந்தார். வேலு நாச்சியார், மைசூர் மன்னர் ஐதர் அலியைச் சந்தித்து, ஆங்கிலேயரை எதிர்ப்பது குறித்துக் கலந்து பேசினார். அவருக்கு உதவ விரும்பிய ஐதர்அலி ஐயாயிரம் படைவீரர்களை அவருடன் அனுப்பினார்.

மருது சகோதரர்களுடன் வீரர்படைக்குத் தலைமையேற்றுச் சென்ற வேலு நாச்சியார் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார். அப்போரில், கணவரைக் கொன்றவர்களை வென்று 1780ஆம் ஆண்டில் சிவகங்கையை மீட்டார்.

அடுத்து, நான் குறிப்பிடும் பெருமைக்குரியவர் கடலூர் அஞ்சலையம்மாள் ஆவார். இவர் 1890ஆம் ஆண்டு கடலூரில் உள்ள முதுநகரில் எளிமையான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தார். 1921ஆம் ஆண்டு காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கிய போதே, அஞ்சலையம்மாளும் தமது பொதுவாழ்க்கையைத் தொடங்கினார்.



அஞ்சலையம்மாள்

அஞ்சலையம்மாள், நீலன் சிலையை அகற்றும் போராட்டம், உப்புக் காய்ச்சும் போராட்டம், மறியல் போராட்டம், தனியாள் அறப்போராட்டம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகிய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு பல ஆண்டு சிறையில் வாடினார். மேலும் அவர் கடலூர், திருச்சி, வேலூர், பெல்லாரி ஆகிய சிறைகளில் இருந்துள்ளார். வேலூர்ச் சிறையில் இருந்தபோது, கருவுற்றநிலையில் இருந்த அவரை ஆங்கிலேய அரசு வெளியில் அனுப்பிவிட்டு, மகப்பேற்றிற்குப் பின் மீண்டும் சிறையில் அடைத்தது.

அஞ்சலையம்மாள் மிகச்சிறந்த பேச்சாளராக விளங்கினார். இவரது பேச்சைக் கேட்பதற்காகவே பலர் திரண்டு வந்தனர். நாடெங்கும் வெள்ளையனே வெளியேறு இயக்கம் நடைபெற்றபொழுது, சென்னை உட்படப் பல நகரங்களுக்கும் சென்று, தனது அனல் பறக்கும் பேச்சால் இயக்கத்தின் வளர்ச்சிக்கு உதவினார். குடும்பச் சொத்துகளையும், குடியிருந்த வீட்டையும் விற்று, விடுதலைப் போராட்டத்திற்காகச் செலவு செய்தார்.

நீலன் சிலையை அகற்றும் போராட்டத்தில் தம்முடைய ஒன்பது வயது மகளையும் ஈடுபடுத்தினார். இவருடன் இவர் மகளும் சிறைத்தண்டனை பெற்றார். காந்தியடிகள் சிறையில் இருப்பவர்களைப் பார்க்க வந்தபோது, ஒன்பது வயதேயான அம்மாக்கண்ணு, அஞ்சலையம்மாளின் மகள் என்பதனை அறிந்து, மிகவும் மகிழ்வுற்று, அச்சிறுமியைத் தன்னுடன் வார்தாவில் உள்ள ஆசிரமத்துக்கு அழைத்துச்சென்று லீலாவதி எனப் பெயரிட்டுப் படிக்கவும் வைத்தார்.

காந்தியடிகள் கடலூருக்கு வந்தபோது, அவரைச் சந்திப்பதற்கு அஞ்சலையம்மாளுக்கு ஆங்கில அரசு தடை விதித்தது. ஆனால், அஞ்சலையம்மாள் பர்தா வேடமணிந்து, குதிரைவண்டியில் காந்தியடிகளை ஏற்றிச்சென்றார். அதனால், காந்தியடிகள் அஞ்சலையம்மாளைத் தென்னாட்டின் ஜான்சிராணி என்றழைத்தார்.

மூன்றாவதாகநான்குறிப்பிடவிரும்புபவர், அம்புஜத்தம்மாள். வசதியான குடும்பத்தில் 1899ஆம் ஆண்டு சனவரித் திங்கள் எட்டாம் நாள் பிறந்தார். வீட்டிலேயே தமிழ், ஆங்கிலம், இந்தி, சமற்கிருதம் எனப் பலமொழிகளையும் திறம்படப் பயின்றார். அன்னை கஸ்தூரிபாயின் எளிமையான தோற்றத்தினால் ஈர்க்கப்பட்டு, எளிமையாக வாழ்ந்தார். பட்டு, பகட்டு, ஆங்கிலமோகம் அனைத்தையும் துறந்தார். பல்வேறு கட்டுப்பாடுகள்

மிகுந்த குடும்பத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டார் .

வை.மு.கோதைநாயகி அம்மாள், ருக்குமணி லட்சுமிபதி முதலியவர்களோடு நட்புக்கொண்டு பெண்ணடிமைக்கு எதிராகக் குரல் கொடுத்தார். மகாகவி பாரதியாரின் பாடல்களைப் பாடி விடுதலையுணர்வை ஊட்டினார். ஆங்கிலேய அரசுக்கு எதிராகச் செயல்பட்டார். அந்நியத் துணிகள் விற்கும் கடைக்கு முன்பாக மறியல் போராட்டம் நிகழ்த்தியதனால் வேலூர்ச்சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்தபோதும், மனம் தளராது தான் கற்றுக்கொண்ட மொழிகளைப் பிறருக்குக் கற்றுக்கொடுத்தார்.

காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள் என்று செல்லமாக அம்புஜத்தம்மாள் அழைக்கப்பட்டார். தன் செல்வாக்கையோ தந்தையின் செல்வாக்கையோ பயன்படுத்த விரும்பாமல் நேர்மையான பெண்மணியாக வாழ்ந்துகாட்டினார். தந்தையின் பெயரோடு, காந்தியடிகளின் பெயரையும் இணைத்துச் சீனிவாச காந்தி நிலையம் என்னும் தொண்டு நிறுவனத்தை அமைத்தார்.

காந்திமதி, நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட தமிழகப் பெண்மணிகளின் வரலாற்றைத் தெரிந்துகொண்டாயா ? தமிழ்நாட்டில் மட்டுமன்றி, வெளிநாடுகளில் இருந்துகூட இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட பெண்மணிகளும் உள்ளனர். அவர்களைப்பற்றி அடுத்த கடிதத்தில் தெரிவிக்கிறேன். இக்கடிதம் கண்டு மகிழ்வாய் என நம்புகிறேன். உடன், உன் மறுமடலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.



அம்புஜத்தம்மாள்

அம்புஜத்தம்மாள் தம் எழுபதாண்டு நினைவாக, நான் கண்ட பாரதம் என்னும் அரிய நூலை எழுதியுள்ளார். 1964ஆம் ஆண்டு தாமரைத்திரு (பத்மஸ்ரீ) விருது பெற்றுள்ளார்.

அன்புடன்,

மணிமொழி

உறைமேல் முகவரி :

த. காந்திமதி,
54, கண்ணகி வீதி,
மயிலாப்பூர், சென்னை – 600 004.

> பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
> நற்றவ வானினும் நனிசிறந் தனவே.
>
> – பாரதியார்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. பிரித்து எழுதுக.

1. ஐயாயிரம் = ________
2. வேடமணிந்து = ________
3. சிறையிலடைத்த = ________
4. தென்னாடு = ________

2. சேர்த்து எழுதுக.

1. விடுதலை + உணர்வு = ________
2. அறம் + போராட்டம் = ________
3. தொழில் + பயிற்சி = ________

3. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி ________.
2. வேலு நாச்சியார் பிறந்த ஆண்டு ________.
3. சிவகங்கையை ஆண்ட மன்னர் ________.
4. அஞ்சலையம்மாள் மகளுக்குக் காந்தியடிகள் இட்ட பெயர்________.
5. சீனிவாச காந்தி நிலையம் அமைத்தவர் ________.

### ஆ) குறுவினாக்கள்

1. வேலு நாச்சியார் – குறிப்பு எழுதுக.
2. 'தென்னாட்டின் ஜான்சிராணி' என அழைக்கப்படுபவர் யார் ? ஏன் ?

### இ) சிறுவினாக்கள்

1. அஞ்சலையம்மாள் நடத்திய போராட்டங்கள் யாவை ?
2. அம்புஜத்தம்மாளின் குணநலன்களை விவரிக்க.

### ஈ) நெடுவினா

வேலு நாச்சியார் சிவகங்கைச் சீமையை மீட்டெடுத்த நிகழ்வினைத் தொகுத்து எழுதுக.

### உ) செயல்திட்டம்

இந்திய விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்ட தமிழகப் பெண்களுள் வை.மு. கோதைநாயகி அம்மாளைப் பற்றிய செய்திகளைத் திரட்டுக.

# மரத்தின் வேண்டுகோள்

கண்ணனுக்கு நினைக்கும்போதே மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. உறக்கம் வராமல் மெத்தையில் புரண்டு கொண்டிருந்தான். அருகில் படுத்திருந்த அவனுடைய தந்தை, ‘‘கண்ணா, இன்னும் நீ தூங்கவில்லையா ? சிறிது நேரமாவது தூங்கினால்தானே விடியற்காலையில் எழுந்து புறப்பட முடியும்.’’ என்றார்.

‘‘சரிப்பா, தூங்கறேன், காலையில என்னைச் சீக்கிரமா எழுப்புங்கப்பா’’ என்று கண்ணன் கூறினாலும், அவன் மனம் முழுவதும் இன்பச்சுற்றுலா செல்வதனை எண்ணியே விழித்திருந்தது.

திடீரென, ‘‘என்னை யாராவது காப்பாற்றுங்களேன்; என்னால் மூச்சுவிட முடிய வில்லையே, யாருமே இங்கு இல்லையா’’ என்னும் அழுகுரல் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்த கண்ணன், குரல் வந்த திசையை நோக்கி ஓடினான்.



அவன் நின்ற இடத்தில் கண்ணுக்கெட்டிய தொலைவுவரை யாரையும் பார்க்க இயலவில்லை. "குரல் கொடுத்தது யார் ? இங்கே யாராவது இருக்கிறீர்களா ? உங்களுக்கு உதவ வந்திருக்கிறேன் " என்றான், கண்ணன்.

"தம்பி, குரல் கொடுத்தது வேறு யாருமில்லை; உன் முன்னால் நிற்கின்ற நானேதான் " என்றது வாடிப்போன மரம்.

வியப்பாக இருக்கிறதே ! மரம் பேசுமா ?

"இங்கு ஏதோ துன்பத்தில் இருப்பதாகக் கூறினாயே, என்ன துன்பம் ? யாரால் துன்பம் ? விளக்கமாகத்தான் கூறேன்" என்றான் .

"தம்பி, என்னை நன்றாக உற்றுப் பார். என் வேதனை உனக்குப் புரியும் " என்றது மரம். கண்ணன் மரத்தை ஏறிட்டுப் பார்த்தான். இலைகளெல்லாம் உதிர்ந்தும் கிளைகளெல்லாம் வெட்டப்பட்டும் வாடிப்போயிருந்தது. " உன்னைப் பார்த்தால் வருத்தமாக இருக்கிறது, ஏன் இப்படி இருக்கிறாய் ? உன்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கியவர் யார் ? " என்றான்.

"தம்பி, நீ நின்று கொண்டிருக்கிறாயே, இந்த இடம் சில ஆண்டுக்கு முன்னால் பூத்துக் குலுங்கும் சோலையாக இருந்தது என்றால் நம்புவாயா ! எங்கும் பசுமை நிறைந்த மரம் செடி கொடிகள்; 'கீச், கீச்' என ஒலி எழுப்பும் பறவைகள்; மரங்களின் நிழலில் ஓய்வெடுக்கும் கால்நடைகள்; கிளைகளில் ஊஞ்சல்கட்டி ஆடும் சிறுவர் சிறுமியர்; எவ்வளவு இனிமையாக இருந்தது தெரியுமா ? ஆனால், இன்றோ அவை இருந்த இடமே தெரியாமல் அழிந்துவிட்டன. நான் மட்டும்தான் இங்குத் தனித்து நிற்கிறேன்" என்றது மரம்.

" நீ சொல்வது உண்மையா ? என்னால் நம்பவே முடியவில்லை; இதற்கு யார் காரணம் ?" என்றான், கண்ணன். "தம்பி, மனிதர்களாகிய நீங்கள்தான் காரணம்" என்றது மரம். "நீ என்ன சொல்கிறாய் ? நாங்கள்தான் காரணமா ? சிறிது விளக்கமாகக் கூறு" என்றான், கண்ணன். "ஆம். தம்பி, இயற்கைச் சமநிலை என்பதனை நீங்கள் மறந்து விட்டதன் விளைவுதான் இது. மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல், விளைநிலங்களை எல்லாம் வீடுகளாக்கிக்கொள்ள முற்பட்டீர்கள். இது போதாது என்று இப்போது காடுகளையும் அழிக்கத் தொடங்கிவிட்டீர்கள், நாங்கள் எப்படித்தான் வாழ்வோம், நீயே சொல் " என்றது மரம். "உன்னால் மூச்சுவிட முடியாததற்குக் காரணம் என்ன ? அதனையும் கூறி விடு" என்றான், கண்ணன்.

"மண்ணுக்குள் புதைந்திருக்கும் என்னுடைய வேர்கள் எல்லாம் உன்னுடைய கண்களுக்குத் தெரியா. அவை ஊடுருவிச் செல்ல முடியாதவாறு நீங்கள் பயன்படுத்தித் தூக்கி எறிந்த நெகிழிகள் எல்லாம் எங்கள் பாதையை அடைத்துள்ளன. அவை மண்ணோடு மண்ணாக மக்கிப்போவதற்கு நெடுங்காலம் ஆகும். இதனால், எங்களுக்குக் கிடைக்க வேண்டிய காற்றும், நீரும் போதுமானதாக இல்லை.

அதனால்தான், நான் மூச்சு விடமுடியாமல் திணறுகிறேன்'' என்றது, மரம். ''நீ சொல்வது இப்போது புரிகிறது. எந்தவிதத்தில் நான் உனக்கு உதவமுடியும், அதனையும் நீயே சொல்லிவிடு'' என்றான், கண்ணன்.

''தம்பி, என்னை இனிமேல் காப்பாற்ற முடியாது; இன்று எனக்கு மூச்சுமுட்டுகிறது, நாளை உங்களுக்கும் இதே நிலைதான். எங்கள் அழிவு உங்களின் பேரழிவு. எனவே, இயற்கையைப் போற்றுங்கள்; மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துங்கள்; காட்டுவளம் பெருக்குங்கள்; சுற்றுப்புறம் மாசடையாமல் பார்த்துக்கொள்ளுங்கள்; எங்கள் வழித்தோன்றல்களையாவது வாழ வழி செய்யுங்கள்; இதுவே நீங்கள் எங்களுக்குச் செய்யும் மகத்தான உதவியாகும்'' என்று கண்ணீர் மல்கக் கூறியது, மரம்.

''கண்ணா! எழுந்திரு, வண்டி வந்துவிடும்.'' என்று கண்ணனை அவன் அம்மா எழுப்பிக்கொண்டிருந்தார். கண்விழித்த கண்ணன், தான் வீட்டில் இருப்பதனை உணர்ந்தான். ''அம்மா, மரம்...... மரம்...... என்னுடன் பேசிக்கொண்டிருந்த மரம் எங்கேம்மா ? என்னிடத்தில் வேண்டுகோள்கூட விடுத்ததே!'' ''மரம் எங்காவது பேசுமா ? நீ ஏதோ கனவு கண்டிருக்கிறாய். சரி சரி, புறப்படு.'' என்றார், அம்மா.

> **உங்களுக்குத் தெரியுமா ?**
>
> ஓர் ஏக்கர் பரப்பளவில் வளர்ந்துள்ள மரங்கள், பதினெட்டுப் பேர்களுக்கு ஓர் ஆண்டிற்குத் தேவையான உயிர்க்காற்றைக் கிடைக்கச் செய்கின்றன.

மரம் என்னுடன் பேசியவையெல்லாம் கனவா ? இருப்பினும் அருமையான ஒரு செய்தியை அல்லவா கூறிவிட்டுச் சென்றது. விடுமுறை முடிந்து பள்ளிக்குச் செல்லும்போது, இதனைப்பற்றி ஆசிரியரிடம் கூறுதல் வேண்டும். மரம்விடுத்த வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும் என்று முடிவெடுத்த கண்ணன் இன்பச் சுற்றுலாவிற்குப் புறப்பட ஆயத்தமானான்.

மன்னுயிருக்கெல்லாம் வரம் மரம்தான்
என்பதனை மனிதன் மறந்தான்

## மாதிரி வினா

**கட்டுரைவினா**

மரம், கண்ணனிடம் விடுத்த வேண்டுகோளைக் கட்டுரையாக விவரிக்க.

# தொகைநிலைத் தொடர்கள்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம், குழந்தைகளே! நேற்றைய பாடங்களையெல்லாம் படித்தீர்களா ?

மாணவர் : படித்திருக்கிறோம், அம்மா.

ஆசிரியர் : மகிழ்ச்சி. நீங்கள் இன்று தொகைநிலைத் தொடர்கள் குறித்துக் கற்றுக்கொள்ளப் போகிறீர்கள். கயல்விழி! தொடர் என்றால் என்னவென்று சொல்.

கயல்விழி : சொற்கள் இரண்டுமுதலாகத் தொடர்ந்து வந்து பொருள் தருவது – தொடர் எனப்படும், அம்மா.

ஆசிரியர் : தெளிவாகச் சொன்னாய்! கயல்விழியை நாம் அனைவரும் கைதட்டிப் பாராட்டுவோம். செங்குட்டுவா! நீ எடுத்துக்காட்டு ஒன்று சொல்.

செங்குட்டுவன் : கார்குழலி பாடம் படித்தாள்.

ஆசிரியர் : நன்று நன்று. கார்குழலி பாடம் படித்தாள். இத்தொடரில் உள்ள மூன்று சொற்களும் தொடர்ந்து வந்து பொருளைத் தருகின்றன. சொற்கள் தொடராகும்போது இரு சொற்களுக்கிடையே வேற்றுமை, வினை, உவமை முதலியவற்றுள் ஏதேனும் ஒன்று மறைந்து வரும். இங்ஙனம் உருபுகள் மறைந்து வரும் தொடர்களைத் 'தொகைநிலைத் தொடர்கள்' என்பர்.

செல்வி : அம்மா, இன்னும் விளக்கமாகச் சொல்லுங்கள்.

ஆசிரியர் : 'கயல்விழி'. இச்சொல்லில் கயல், விழி என இரண்டு சொற்கள் உள்ளன. இவ்விரு சொற்களுக்கு இடையே போன்ற என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது. இதனை உவமைத்தொகை எனக்கூறுவர். தொகை நிலைத்தொடர் அறுவகைப்படும்.

செல்வி : அவை என்னென்னவென்று கூறுங்கள், அம்மா.

ஆசிரியர் : அவை: 1. வேற்றுமைத்தொகை, 2. வினைத்தொகை, 3. பண்புத்தொகை, 4. உவமைத்தொகை, 5. உம்மைத்தொகை, 6. அன்மொழித்தொகை என்பன.

பாரதி : அம்மா, வேற்றுமை என்றால் என்ன ?

ஆசிரியர் : கண்ணன் இராமன் பார்த்தான். இத்தொடரில் யார் யாரைப் பார்த்தான் ?

பாரதி : பார்த்தது யார் என்று புரியவில்லை, அம்மா.

ஆசிரியர் : கண்ணனை இராமன் பார்த்தான். இப்போது புரிகிறதா ?

பாரதி : நன்றாகப் புரிகிறது, அம்மா .

ஆசிரியர் : கண்ணனை இராமன் பார்த்தான் – என்னும் இத்தொடரில் ஐ என்னும் உருபு யார், யாரைப் பார்த்தான் எனப் பெயரை வேறுபடுத்திக் காட்டுவதனால், வேற்றுமை என்கிறோம். பெயரின் பொருளை வேறுபடுத்திக் காட்டும் உருபுக்கு வேற்றுமை உருபு என்பது பெயர். இவ்வேற்றுமைகள் எண்வகைப்படும். இவற்றுள் முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபு இல்லை. மற்ற வேற்றுமைகளுக்கு உருபுகள் உண்டு. அவை ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன. இரண்டாம் வேற்றுமை உருபுமுதல் ஏழாம் வேற்றுமை உருபுவரை உள்ளனவற்றுள் ஏதேனும் ஒன்று வேற்றுமை உருபாய் வரும். இருசொற்களுக்கிடையே இவ்வேற்றுமை உருபு மறைந்து வருவதனை வேற்றுமைத்தொகை என்கிறோம்.

1. பால் பருகினான் – இரண்டாம் வேற்றுமைத்தொகை
   (பால் + ஐ + பருகினான்– இங்கு ஐ என்னும் உருபு மறைந்துள்ளது.)
2. தலை வணங்கினான் – மூன்றாம் வேற்றுமைத்தொகை
   (தலை + ஆல் + வணங்கினான்)
3. வேலன் மகன் – நான்காம் வேற்றுமைத்தொகை
   (வேலன்+ கு + மகன்)
4. ஊர் நீங்கினான் – ஐந்தாம் வேற்றுமைத்தொகை
   (ஊர் + இன் + நீங்கினான்)
5. செங்குட்டுவன் சட்டை – ஆறாம் வேற்றுமைத்தொகை
   (செங்குட்டுவன் + அது + சட்டை)
6. குகைப்புலி – ஏழாம் வேற்றுமைத்தொகை
   (குகை + கண் + புலி)

மலர்க்கொடி : அம்மா, வினைத்தொகை என்றால் என்ன?

ஆசிரியர் : உண்கலம் இத்தொடரைப் படித்துப் பாருங்கள். இதனை உண்டகலம், உண்கின்ற கலம், உண்ணும் கலம் என முக்காலத்திற்கும் ஏற்பப் பொருள் கொள்ளலாம். ஆடுகொடி, பாய்புலி, அலைகடல் ஆகிய தொடர்கள் வினைத்தொகை பயின்று வந்த தொடர்கள். இவ்வாறு

காலங்காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சம், வினைத்தொகை எனப்படும்.

காலங்கரந்த பெயரெச்சம் வினைத்தொகை - நன்னூல், 364

முத்து : அம்மா, பண்புத்தொகை பற்றிக் கூறுங்கள்.

ஆசிரியர் : வெண்ணிலவு, சதுரக்கல், இன்சுவை இச்சொற்றொடர்களைப் படித்துப் பாருங்கள். வெண்மை, சதுரம், இனிமை ஆகிய பண்புப் பெயர்கள் நிலவு, கல், சுவை ஆகிய பெயர்ச்சொற்களோடு சேர்ந்து வரும்போது இரண்டிற்கும் இடையில் 'ஆகிய, ஆன' என்னும் பண்பு உருபுகளும் 'மை' விகுதியும் தொக்கி (மறைந்து) வந்துள்ளன. எனவே, இவை பண்புத்தொகை பயின்று வந்த தொடர்கள். (எ.கா) வெண்மை + நிலவு = வெண்ணிலவு.

இருபெயரொட்டுப் பண்புத்தொகைபற்றிக் காண்போம். எடுத்துக் காட்டாக, மல்லிகைப்பூ என்னும் சொல்லைப் பார்ப்போம். மல்லிகை என்பது சிறப்புப்பெயர். பூ என்பது பொதுப்பெயர். இரண்டுக்கும் இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு மறைந்து வந்துள்ளது. எனவே, இஃது இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும்.

மேகலை : உம்மைத்தொகை குறித்துக் கூறுங்கள், அம்மா.

ஆசிரியர் : கூறுகிறேன். கபிலபரணர், உற்றார் உறவினர். இத்தொடர்கள் கபிலரும் பரணரும், உற்றாரும் உறவினரும் என விரிந்து பொருளை உணர்த்துகின்றன. இடையிலும் இறுதியிலும் உம் என்னும் இடைச்சொல் மறைந்து வந்து பொருள்தருவதனால், உம்மைத் தொகை எனப்பட்டது.

நந்திவர்மன் : அம்மா, அன்மொழித்தொகை பற்றிக் கூறுங்கள்.

ஆசிரியர் : கூறுகிறேன். 'கயல்விழி வந்தாள்'. இத்தொடரில் முதலில் உள்ள 'கயல்விழி' என்பது, 'கயல் போன்ற விழி' என்னும் பொருளைத் தரும் உவமைத்தொகை ஆகும். இதனை முன்னரே கற்றோம். 'வந்தாள்' என்னும் வினைச்சொல்லைத் தழுவி நின்றதனால், 'கயல்போன்ற விழியை உடைய பெண் வந்தாள்' எனப் பொருள் தருகிறது.

இதில் 'உடைய', 'பெண்' என்னும் சொற்கள் தொடரில் இல்லாதவை. இவ்வாறு உவமைத்தொகையை அடுத்து அல்லாதமொழி தொக்கி வருவதனால் இத்தொடரை உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை என்கிறோம். இதனைப்போன்று வேற்றுமை, வினை, பண்பு, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களுக்குப் புறத்தே அல்லாத சில மொழிகள் தொக்கி நின்று பொருள் தருவது அன்மொழித்தொகை ஆகும்.

பயிற்சி

மலர்விழி, தன்தோழி வெண்மதியைக் காணச் சென்றாள். அங்குத் தோழியின் அப்பா வெட்டுக்கத்தி காணவில்லையெனத் தேடிக் கொண்டிருந்தார். மோர் குடித்துக் கொண்டிருந்த பாரி இட்டலி வடை சாப்பிடத் தயாரானான்.

1. இப்பத்தியிலுள்ள தொகைநிலைத் தொடர்களை வட்டமிடுக.
2. வட்டமிட்ட தொகைநிலைத் தொடர்களை வகைப்படுத்தி எழுதுக.

## மாதிரி வினா

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

1. வளர்பிறை என்பது
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) வேற்றுமைத்தொகை
2. செம்மொழி என்பது
   அ) பண்புத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை இ) வினைத்தொகை
3. கயல்விழி என்பது
   அ) வேற்றுமைத்தொகை ஆ) உவமைத்தொகை இ) பண்புத்தொகை
4. மா பலா வாழை என்பது
   அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை இ) உவமைத்தொகை

**2. பொருத்துக.**

1. வினைத்தொகை – நாலிரண்டு
2. உவமைத்தொகை – செய்தொழில்
3. உம்மைத்தொகை – பவளவாய் பேசினாள்
4. அன்மொழித்தொகை – மதிமுகம்

**3. பின்வரும் சொற்கள் எவ்வகைத் தொகைநிலைத்தொடர்கள் ?**

1. கருங்கண்
2. வெற்றிலை பாக்கு
3. புத்தகம் படித்தான்
4. வளர்புகழ்
5. முகமலர்
6. பொற்றொடி வந்தாள்

### ஆ) குறுவினாக்கள்

1. தொகைநிலைத்தொடர் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
2. வினைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.
3. பண்புத்தொகையைச் சான்றுடன் விளக்குக.
4. உம்மைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.
5. உவமைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.
6. அன்மொழித்தொகையைச் சான்றுடன் விளக்குக.

# தொகாநிலைத் தொடர்கள்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். உட்காருங்கள். நேற்றைய பாடப்பகுதிகளைப் படித்தீர்களா ? அவற்றுள் ஏதேனும் ஐயம் உண்டா ?

ஒவியா : படித்தோம் ஐயா. ஐயமேதும் இல்லை.

ஆசிரியர் : மகிழ்ச்சி. தொகைநிலைத் தொடர்களைத் தெளிவாகக் கற்று இருக்கிறீர்கள் என்பது உங்கள் பேச்சிலிருந்து தெரிகிறது. இன்று தொகாநிலைத் தொடர்கள் குறித்துப் பார்ப்போம்.

கவியரசன் : தொகாநிலைத்தொடர் என்றால் என்ன ? ஐயா.

ஆசிரியர் : 'இளமுருகன் படிக்கிறான்' – இத்தொடரைப் படித்துப் பாருங்கள். 'இளமுருகன்' என்னும் எழுவாயும், 'படிக்கிறான்' என்னும் பயனிலையும் தொடர்ந்து நின்று பொருளைத் தருகின்றன. இவ்வாறு ஒரு தொடரில் இருசொற்கள் அமைந்து, இரண்டிற்கும் இடையில் சொல்லோ உருபோ மறையாது பொருளை உணர்த்துவது தொகாநிலைத் தொடர் எனப்படும்.

காவியா : எவையெவை எல்லாம் தொகாநிலைத் தொடர்கள் ? ஐயா.

ஆசிரியர் :

1. கபிலன் வந்தான் – இச்சொற்றொடரில் 'கபிலன்' என்னும் எழுவாயைத் தொடர்ந்து 'வந்தான்' என்னும் பயனிலை வந்துள்ளதனால், இஃது எழுவாய்த்தொடர்.
2. கதிரவா வா ! – இது விளித்தொடர்.
3. கண்டேன் சீதையை – வினைமுற்று முதலில்வந்து பெயரைத் தொடர்கிறது. அதனால், இது வினைமுற்றுத்தொடர்.
4. விழுந்த மரம் – 'விழுந்த' என்னும் எச்சவினை 'மரம்' என்னும் பெயர்ச்சொல்லோடு முடிவதனால், இது பெயரெச்சத்தொடர்.
5. வந்துபோனான் – 'வந்து' என்னும் எச்சவினை 'போனான்' என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்துள்ளதனால், இது வினையெச்சத்தொடர்.
6. வீட்டைக் கட்டினான் – இத்தொடரில் 'ஐ' என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்துள்ளதனால், இது வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.
7. மற்றொன்று – மற்று + ஒன்று. 'மற்று' என்னும் இடைச்சொல்லை

தமிழ்

அடுத்து ‘ஒன்று’ என்னும் சொல் தொடர்ந்து வந்ததனால் இஃது இடைச்சொற்றொடர்.

8. மாமுனிவர் – இத்தொடரில் ‘மா’ என்பது உரிச்சொல். இதனைத் தொடர்ந்து, ‘முனிவர்’ என்னும் சொல் வந்துள்ளதனால், இஃது உரிச்சொற்றொடர்.

9. வாழ்க வாழ்க வாழ்க – ஒரே சொல் இங்குப் பலமுறை அடுக்கி வந்துள்ளதனால், இஃது அடுக்குத்தொடர்.

இவையெல்லாம் தொகாநிலைத் தொடர்கள், புரிகிறதா ?

தொகாநிலைத்தொடர்களைப் பட்டியலிடுக.

அருள்முருகன் :
1. எழுவாய்த்தொடர்
2. விளித்தொடர்
3. வினைமுற்றுத்தொடர்
4. பெயரெச்சத்தொடர்
5. வினையெச்சத்தொடர்
6. வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்
7. இடைச்சொற்றொடர்
8. உரிச்சொற்றொடர்
9. அடுக்குத்தொடர்

ஆசிரியர் : அருமை அருமை.

“முற்று ஈரெச்சம் எழுவாய் விளிப்பொருள்
ஆறுருபு இடையுரி அடுக்கிவை தொகாநிலை” – நன்னூல், 374

## இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். ஆண்டாளும் மங்கையும் பாதையில் நடந்து செல்கிறார்கள்; திடீரெனப் பாம்பைப் பார்த்துவிடுகிறார்கள். அவர்கள் எவ்வாறு அலறுவார்கள் ?

வளனரசு : ஐயோ. ‘பாம்பு பாம்பு’ என அலறுவார்கள்.

ஆசிரியர் : அங்கே சென்று பார்க்கிறார்கள். அங்கே இருந்தது பாம்பு இல்லை; வெறுங்கயிறுதான். அங்கே மறைந்திருந்த மற்ற மாணவிகள் கலகல வெனச் சிரிக்கிறார்கள்.

சேரன் : ஆண்டாளும் மங்கையும் கயிற்றைப் பார்த்துப் பயந்தது எங்களுக்கும் சிரிப்பை வரவழைத்தது.

ஆசிரியர் : சரி சரி. ஆண்டாளும் மங்கையும் எவ்வாறு அலறினார்கள்; தோழிகள் எவ்வாறு சிரித்தார்கள் ?

நற்சோனை : ‘பாம்பு பாம்பு’ என அலறினர். ‘கலகல’ வெனச் சிரித்தனர்.

ஆசிரியர் : முதல் தொடர் பாம்பு பாம்பு என்பது அடுக்குத்தொடர். இரண்டாம் தொடர் கலகல என்பது இரட்டைக்கிளவி.

செழியன் : இரண்டும் இருமுறைதானே வருகின்றன, ஐயா. இரண்டுக்கும் வேறுபாடு என்ன ?

ஆசிரியர் : நன்றாகக்கேட்டாய். ‘பாம்புபாம்பு’ என்பது அடுக்குத்தொடர். இதனைப் பிரித்தால் பொருள்தரும். இஃது இரண்டு, மூன்று, நான்கு முறையும்கூட அடுக்கிவரும். ‘கலகல’ என்பது இரட்டைக்கிளவி. இஃது இரட்டைச்சொல்லாகவே வரும்; பிரித்தால் பொருள் தராது. அடுக்குத்தொடர் விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் ஆகிய பொருள் காரணமாக வரும். இரட்டைக்கிளவி அடைமொழியாய்க் குறிப்புப்பொருளில் வரும்.

மாணவர் : நன்றி, ஐயா.

பயிற்சி :

கண்ணன் வந்தான் என்பது எழுவாய்த் தொடர்.

இதுபோலப் பிற தொகாநிலைத் தொடர்கள் வரும்படி கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. விளித்தொடர் ________ வா.
2. பெயரெச்சத்தொடர் ________ கண்ணன்.
3. வினைமுற்றுத்தொடர் ________ வந்தான்.
4. வினையெச்சத்தொடர் கண்ணன் ________ வந்தான்.
5. வேற்றுமைத்தொடர் கண்ணன் ________ கட்டினான்.

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. பொருத்துக.

1. வினைமுற்றுத்தொடர் – உடைந்த நாற்காலி
2. விளித்தொடர் – வந்து நின்றான்.
3. பெயரெச்சத்தொடர் – கண்ணா வா !
4. வினையெச்சத்தொடர் – வந்தான் இராமன்.

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மரக்கிளை ________ என முறிந்தது.
2. தங்கம் ________ என மின்னுகிறது.
3. வா வா வா என்பது ________ ஆகும்.

3. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. மற்றுப்பிற என்னும் தொடரில் 'மற்று' என்பது ______________ .

அ) உரிச்சொல் ஆ) இடைச்சொல் இ) பெயர்ச்சொல்

2. சாலப் பசித்தது என்பது ______________ தொடர்.

அ) இடைச்சொல் ஆ) உரிச்சொல் இ) வினைச்சொல்

3. கூடிப் பேசினர் என்னும் தொடர் ______________ ஆகும்.

அ) வினைமுற்றுத்தொடர் ஆ) பெயரெச்சத்தொடர் இ) வினையெச்சத்தொடர்

ஆ) குறுவினாக்கள்

1. தொகாநிலைத் தொடர் என்றால் என்ன ?
2. அடுக்குத்தொடர் என்றால் என்ன ? சான்று தருக.
3. அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி இரண்டிற்குமுள்ள வேறுபாடுகளை எழுதுக.

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன் : உங்களுக்குத் தெரியுமா ?

குழுக்களாகப் பிரிந்து ஒருகுழு, நூலாசிரியர் பெயரைக் கூறுக; மற்றொரு குழு, அந்நூலாசிரியரின் நூற்பெயரைக் கூறுக.

(எ.கா.)

| குழு –1 | | குழு–2 |
|---|---|---|
| 1. இளங்கோவடிகள் | – | சிலப்பதிகாரம் |
| 2. திருத்தக்கதேவர் | – | சீவகசிந்தாமணி |
| 3. கம்பர் | – | கம்பராமாயணம் |
| 4. திருவள்ளுவர் | – | திருக்குறள் |

ஆ) படித்தல் திறன்

கீழுள்ள பகுதியைப் படித்து நயம் உணர்க.

தமிழறிஞர் ஒருவர் உணவு உண்ண வந்தார். அவருடைய மனைவி, வாழையிலையிட்டுப் பற்பல உணவுப்பொருள்களை வைத்தாள். ஒவ்வொரு பொருளும் சுவைமிக்கதாக இருந்தது. எதனை உண்பது ? எதனை விடுவது ? எல்லாவற்றையும் எடுத்து உண்பதற்குப் பலகை இல்லையே! என்றார் அவர். உட்காருவதற்குப் பலகை இல்லையென்று கூறுகிறார் என்று எண்ணிய அவள் உடனே, ஒரு பலகையைக் கொண்டுவந்து இதில் உட்கார்ந்து உண்ணுங்கள் என்றாள். நான் உட்கார்ந்து உண்ணவா பலகை இல்லையென்றேன்; இவ்வளவு சுவையுள்ள பல்வகைப் பொருள்களையும் எடுத்துண்ண இருகைகள்தாமே உள்ளன. பல – கை இல்லையே என்றல்லவா சொன்னேன் என்றார். நல்விருந்தூட்டிய நங்கை, தன் கணவனின் சொல்விருந்தில் சொக்கிப்போனாள்.

இ) எழுதுதல் திறன்

தொடங்கிய சிறுகதையை முடிக்கச் செய்தல்.

பயிற்சி : சிறுகதையைப்பற்றிய குறிப்புகளோ சிறுகதையின் தொடக்கமோ கொடுத்துச் சிறுகதையை முழுமையாக எழுதி முடித்தல். அதனை வகுப்பறையில் படித்துக்காட்டல்.

'கண்ணன் எட்டாம் வகுப்பில் படிக்கிறான். காலையில் ஐந்து மணிக்கே எழுந்துவிடுவான். அவனுடைய அம்மாவுக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வான். பின்னர், எட்டு மணியளவில் வீட்டிலிருந்து நடந்தே பள்ளிக்குச் செல்வான்.

ஒருநாள், அவன் பள்ளிக்குச் செல்ல நேரமாகிவிட்டது, அதனால் ஓட்டமும், நடையுமாய்ப் பள்ளிக்கு விரைந்து சென்றுகொண்டிருந்தான். அப்போது சாலையில் திடீரென்று... ... ...

(மாணவர்களே கதையின் தொடக்கத்தைப் படித்தீர்களா? இப்போது கதையை நீங்களே நிறைவு செய்யுங்கள்; முடிவு எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். உங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டிவிடுங்கள். கதைக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று கொடுங்கள்; குழுவிலோ வகுப்பறையிலோ படித்துக் காட்டுங்கள்.)

## மொழித்திறன் பயிற்சி

### 1. உரிய எழுத்துவழக்குச்சொற்களை அறிவோம்.

| பேச்சுவழக்கு | – | எழுத்து வழக்கு |
|---|---|---|
| 1. கோர்த்து | – | கோத்து |
| 2. சுவற்றில் | – | சுவரில் |
| 3. நாட்கள் | – | நாள்கள் |
| 4. மனதில் | – | மனத்தில் |
| 5. பதட்டம் | – | பதற்றம் |
| 6. சிலவு | – | செலவு |
| 7. அருகாமையில் | – | அருகில் |

### 2. பிழை நீக்கி எழுதும் திறன்

கீழுள்ள பகுதியைப் படித்துப் பிழைகளைப் பட்டியலிடுக.

(எ.கா.) ஓர் மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவரது மகனோடு சுற்றுலா மேற்க்கொண்டார். அந்த சுற்றுலாவில் அவர் தான் கண்டதை கூறவே, ஒரு கூட்டத்தைக் கூட்டினார்.

மேலே உள்ள பத்தியைப் படித்தீர்களா?

அவற்றுள் எத்தனை பிழைகள் உள்ளனவெனப் பட்டியலிடுவோமா?

| பிழை | சரி | பிழை | சரி |
|---|---|---|---|
| ஓர் மாவட்டம் | ஒரு மாவட்டம் | அந்த சுற்றுலா | அந்தச்சுற்றுலா |
| ஒரு அமைச்சர் | ஓர் அமைச்சர் | கண்டதை கூறவே | கண்டதனைக் கூறவே |
| அவரது மகனோடு | அவருடைய மகனோடு | அவர்தான் | அவர்தாம் |
| மேற்க்கொண்டார் | மேற்கொண்டார் | | |

#### பயிற்சி

இன்றைய தினம் புதன்கிழமை, கண்ணன் நேற்று என்னிடம் வாங்கிச் சென்ற ஐநூறு ரூபாயைத் திருப்பித் தருவதாகச் சொன்னான். ஆனால், நாட்கள் கடந்தது. அவன் வரவில்லை. நான் ஏமாந்து போனேன்.

3. அரபு எண்களுக்கு ஏற்ற தமிழெண்களை எழுதுக.

1. 10 – ____________ 3. 19 – ____________

2. 20 – ____________ 4. 15 – ____________

4. கட்டுரைப்பயிற்சி : காகிதம் தன்வரலாறு கூறுதல்.

## பண்பு

பூங்குழலி எல்லாரிடமும் அன்பாகப் பழகுவாள். அவள் வீட்டிற்கு யார் வந்தாலும் அவர்களிடம் தன்மையாகப் பேசுவாள். அதனால், அவளை எல்லாருக்கும் பிடிக்கும். அவள் எப்போதும் புன்முறுவலோடு வளைய வருவாள். வீட்டிற்கு வருபவர்களை, 'வாங்க வாங்க, உட்காருங்க; அம்மா வந்திடுவாங்க' என்று வரவேற்பாள். அவளைப் புன்னகைப் பூங்குழலி என்றுதான் எல்லாரும் அழைப்பார்கள். அவர்கள் அழைப்பது சரிதானே, நீங்களே சொல்லுங்கள்.

### கூடிப்பேசுவோம்

1. பூங்குழலியின் பண்பை நீ ஏற்றுக் கொள்கிறாயா ?
2. உங்கள் வீட்டிற்கு யாராவது வந்தால் எவ்வாறு வரவேற்பாய் ?
3. பூங்குழலியைப்போல நீ யாரையாவது பார்த்ததுண்டா ?
4. பூங்குழலியைப்போல நீயும் எல்லாரிடமும் பழகுகிறாயா ?

## வாழ்க்கைத்திறன்

### மன அழுத்தத்தை எதிர்கொள்ளும் திறன்

நண்பர் சிலர் சாலையில் நடந்துகொண்டு இருக்கின்றனர். அவர்களுள் ஒருவர் திடீரென்று கால் இடறிப் பள்ளத்தில் விழுகின்றார். மற்றவர்கள் அவரைப் பார்த்துச் சிரிக்கின்றனர். கீழே விழுந்த அவர் அடிபட்டதனால் ஏற்பட்ட வலியைவிட, நண்பர்களின் ஏளனத்திற்கு ஆட்பட்டதனை எண்ணியே மனம் நொந்தார். நண்பர்கள் செயல் சரியானதா ? யாரேனும் தடுக்கிவிழுந்தால் அவர்களுக்கு நீ எவ்வாறு உதவுவாய் ?

## மதிப்புக்கல்வி

### உழைப்பின் மேன்மை

அமெரிக்காவில் பெரும்பணக்கார முதியவர் ஒருவர், அலுவலகப்பணியின் காரணமாக வானூர்தியில் பயணம் மேற்கொண்டார். அவர் அருகில், இளைஞர் ஒருவரும் பயணம் செய்தார். அவ்விளைஞர் முதியவரை நன்கு அறிவார். எனவே, அவரை நோக்கி, "ஐயா, உங்களுக்கோ வயதாகிவிட்டதே. இன்னும் ஏன் கடினமாக உழைத்துக்கொண்டிருக்கிறீர்கள், ஓய்வு எடுத்துக் கொள்ளலாமே'' என்று கேட்டார். அதனைக் கேட்ட அம்முதியவர், புன்னகைத்தவாறே கூறினார். "தம்பி, வானின் உச்சிக்கே நாம் வந்துவிட்டோமே, இனி இயங்க வேண்டுமா என்று, இந்த விமானம் நினைத்தால் என்ன ஆகும் ? என்று கூற, அந்த இளைஞர் தன்னை எண்ணி வெட்கப்பட்டார்.

உழைப்பிற்கு வயது ஒரு தடை இல்லை. உழைக்காமல், பிறரிடம் கையேந்தி நிற்பது மனிதத் தன்மைக்கு இழுக்கு. வாழ்வது ஒருமுறைதான், அதனையும் தன்மானத்தோடு வாழ்வதே சிறந்தது.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா(து) உஞற்று பவர். குறள், 620

தமிழ்

# வளரறி செயல்பாடுகள்

## பேசுதல்

| செயல்பாடு : 1 | பங்கேற்று நடித்தல் |
|---|---|

விடுதலைப் போராட்ட வீரராக நினைத்துக்கொண்டு நடித்துக்காட்டுக.


காந்தியடிகள்


புலித்தேவன்


தில்லையாடி வள்ளியம்மை


பாரதியார்


வேலு நாச்சியார்

| செயல்பாடு : 2 | புரிந்து விடையளித்தல் |
|---|---|

விளம்பரங்கள்/அறிவிப்புகளைப் புரிந்துகொண்டு விடையளிக்க.

**சென்னைச் சர்வோதய சங்கம் காதி கிராமோத்யாக் பவன்**
33, அரங்கநாதன் தெரு, தி. நகர்,
சென்னை–600 017. தொலைபேசி : 2434 7426



**நவராத்திரிக்கொலு பொம்மை விற்பனைக் கண்காட்சி**

* பட்டிமன்ற அரங்க அமைப்பு
* கொல்கத்தாப் பொம்மைகள்
* கோலாப்பூர்ப் பொம்மைகள்
* கொலுப் படிகள் விற்பனை

காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை
அனைவரும் வருக!
கைவினைப் பொருள்களை வாங்கி மகிழ்க!
அனுமதி இலவசம்

வினாக்கள்

1. இவ்விளம்பரம் எதனைப் பற்றியது ?
2. இவ்விளம்பரத்தில் விற்பனை செய்யப்படும் பொருள்கள் யாவை ?
3. விற்பனை எங்கு நடைபெறுகிறது ?
4. விற்பனை செய்யப்படும் கால அளவைக் குறிப்பிடுக.
5. இவ்விளம்பரத்தை வெளியிடுவோர் யார் ?

## எழுதுதல்

| செயல்பாடு : 3 | வினாக்களுக்கு விடை எழுதுதல் |
|---|---|

பாடலைப்படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிலை கண்டீர்.

வினாக்கள்

1. வீடுதோறும் என்ன தேவை ?
2. வீதிதோறும் எத்தனை பள்ளிகள் அமைத்தல் வேண்டும் ?
3. நாடுமுற்றிலும் உள்ளன எவை ?
4. கேடு தீர்ப்பவள் யார் ?
5. இப்பாடலுக்குத் தலைப்பு ஒன்றனைத் தருக.

| செயல்பாடு : 4 | சொல்வதனை எழுதுதல் |
|---|---|

சொல்வதனை எழுதுக.

ஓர் இனத்திற்கும் அதன் பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் நாட்டிற்கும் அடிப்படையாக இருப்பது மொழியாகும். மொழிப்பற்று இல்லாதவருக்கு நாட்டுப்பற்று இராது. மொழியில் பற்றுக் கொள்ளாத இனம், தன் மொழியையும் இழந்து, நாட்டையும் இழந்து, பண்பாட்டையும் இழந்து, இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

## படைப்பாற்றல்

| செயல்பாடு : 5 | படம் வரைதல் |
|---|---|

கீழ்க்காணும் கற்பனைநயம்மிக்க விவேகசிந்தாமணிப் பாடலுக்கு ஓவியம் தீட்டுக.

தேன்நுகர் வண்டு மதுதனை உண்டு
தியங்கியே கிடந்ததைக் கண்டு
தான்அதைச் சம்பு வின்கனி என்று
தடங்கையில் எடுத்துமுன் பார்த்தாள்
வான்உறு மதியம் வந்தென்(று) எண்ணி
மலர்க்கரம் குவியுமென்(று) அஞ்சிப்
போனது வண்டோ பறந்ததோ பழந்தான்
புதுமையோ இதுஎனப் புகன்றாள்.

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

அ. பொருள் தருக. 5 x 1 = 5

1. நுகர் = ____________
2. கனி = ____________
3. கரம் = ____________
4. தாள்மலர் = ____________
5. கருணை = ____________

ஆ. நிரப்புக. 5 x 1 = 5

1. விவேகசிந்தாமணிப் பாடலில் நாவற்பழத்திற்கு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ள உயிரி ____________.
2. அசலாம்பிகை அம்மையார் திண்டிவனத்திற்கு அருகிலுள்ள____________ என்னுமிடத்தில் பிறந்தார்.
3. பாரதத்தாய் பாடலில் குறிப்பிடப்படும் தாய்மையுள்ளம் கொண்டவர் ____________.
4. இரண்டாம் வேற்றுமைக்குரிய உருபு ____________.
5. பாம்பு பாம்பு என்பது ____________தொடர்.

## திருமந்திரம்

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.*

– திருமூலர்

பொருள் : நோய் முதலான காரணங்களால் உடம்பு அழியுமாயின் உயிரும் அழியும்; அவ்வாறு அழிந்தால், உறுதிதரும் மெய்யறிவை அடைய இயலாது. ஆகவே, உடம்பை வளர்க்கும் வழிமுறைகளை அறிந்து உடம்பை வளர்த்தேன்; அதனால், உயிரை அழிவிலிருந்து காத்தேன்.

சொற்பொருள் : திடம் – உறுதி; மெய்ஞ்ஞானம் – மெய்யறிவு; உபாயம் – வழிவகை.

ஆசிரியர் குறிப்பு

பெயர் : மூலன் என்னும் பெயர், திரு என்னும் பெயரடை பெற்று, அதனுடன் அர் என்னும் மரியாதைப் பன்மையும் பெற்றுத் திருமூலர் என ஆயிற்று.

காலம் : ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதி.

நூல் குறிப்பு : சைவத் திருமுறைகளில் பத்தாவது திருமுறை திருமந்திரம். இதற்குத் தமிழ் மூவாயிரம் என்னும் வேறுபெயரும் உண்டு. இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. நம் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல், மூன்றாம் தந்திரத்தில் எழுநூற்று இருபத்து நான்காவது பாடலாகும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது இந்நூலின் புகழ்மிக்க தொடராகும்.

### மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. பொருள் எழுதுக.

1. திடம் ______________ 2. உபாயம் ______________

2. பிரித்து எழுதுக.

1. மெய்ஞ்ஞானம் ______________ 2. உடம்பார் ______________

3. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. திருமந்திரம் இயற்றியவர் ______________________.

2. திருமந்திரத்தில் புகழ்மிக்க தொடர் ______________________.

ஆ) குறுவினாக்கள்

1. திருமந்திரம் குறிப்பு எழுதுக.

2. உயிர் அழியக் காரணம் என்ன ?

இ) சிறுவினாக்கள்

1. திருமூலர் – குறிப்பு எழுதுக.

2. அறிவு வளர திருமூலர் கூறும் வழிவகை யாது ?

## தேம்பாவணி

நகைசெய் தன்மையி னம்பெழீ இத் தாய்துகள்
பகைசெய் நெஞ்சமும் பற்றலு மொன்றுற
முகைசெய் மேனி தழுவிமுத் திட்டலுங்
குகைசெய் யின்பெழக் கோலமிட் டொத்ததே. *

– வீரமாமுனிவர்

பொருள் : குழந்தை இயேசு புன்னகை பூத்தார். அதனைக்கண்ட தாய் மரியாளின் மனத்தில் மகிழ்ச்சி பொங்கி எழுந்தது. தீவினையைப் பகைத்த தன்நெஞ்சத்தில் ஆர்வமும் மகிழ்ச்சியும் கலந்து, பூப்போன்ற மேனியுடைய திருமகனை அணைத்து முத்தமிட்டாள். இக்காட்சி அன்பு மேலிடக் குகையொன்று குனிந்து கோலமிட்டது போலிருந்தது.

சொற்பொருள் : நகை– புன்னகை; முகை – மொட்டு; மேனி – உடல்.



ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | வீரமாமுனிவர் |
| இயற்பெயர் | : | கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி |
| பெற்றோர் | : | கொண்டல் போபெஸ்கி – எலிசபெத் |
| பிறந்தநாடு | : | இத்தாலி |
| அறிந்தமொழிகள் | : | இத்தாலியம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமற்கிருதம் |
| சிறப்பு | : | முப்பதாம் வயதில் தமிழகம் வந்து தமிழ் பயின்று காப்பியம் படைத்தமை |

| | | |
|---|---|---|
| இயற்றிய நூல்கள் | : | ஞானோபதேசம், பரமார்த்த குரு கதை, திருக்காவலூர்க் கலம்பகம், தொன்னூல் விளக்கம், கித்தேரியம்மாள் அம்மானை. |
| காலம் | : | 08. 11. 1680முதல் 04. 02. 1747வரை. |
| நூல் குறிப்பு | : | தேம்பாவணி = தேம்பா + அணி = வாடாதமாலை; தேம்பாவணி = தேன் + பா + அணி = தேன்போன்ற இனிய பாடல்களாலான மாலை. இந்நூல், இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரைத் தலைவராகக்கொண்டு பாடப்பட்டது. இந்நூல், கிறித்தவச் சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மூன்று காண்டங்களும், முப்பத்தாறு படலங்களும் உள்ளன; பாடல்களின் எண்ணிக்கை மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள இப்பாடல் மகவருள் படலத்தில் உள்ளது. |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக.**

1. நகை = ______________
2. முகை = ______________
3. மேனி = ______________

**2. பிரித்து எழுதுக.**

1. ஒன்றுற = ______________
2. கோலமிட்டு = ______________

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. தேம்பாவணி நூலின் ஆசிரியர் ______________.
2. வீரமாமுனிவரின் இயற்பெயர் ______________.
3. வீரமாமுனிவர் ______________ நாட்டைச் சார்ந்தவர்.

### ஆ) குறுவினாக்கள்

1. தேம்பாவணி – குறிப்பு எழுதுக.
2. வீரமாமுனிவர் அறிந்த மொழிகள் யாவை ?
3. வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள் யாவை ?

### இ) சிறுவினாக்கள்

1. வீரமாமுனிவர் – குறிப்பு எழுதுக.
2. தாய் மரியாள், குழந்தை இயேசுவிடம் காட்டிய அன்பு, எதனைப் போன்று இருந்தது ?

# நாடகக்கலை

உலகில் வேறு எம்மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பு தமிழ்மொழிக்கு உண்டு; முத்தமிழ் எனச் சிறப்பிக்கப்படும் பெருமையுடையது. இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என முப்பெரும் பாகுபாடுகொண்டது. உலகமொழி எதனிலும் காணாத இப்பகுப்பின் மூன்றாவதாகிய நாடகத்தமிழ் தொன்றுதொட்டுப் படிப்படியே வளர்ச்சி அடைந்து வந்துள்ளது.

## நாடகம் – பொருள் விளக்கம்

நாடகம் என்னும் சொல் நாடு + அகம் எனப் பிரியும். நாட்டை அகத்தில் கொண்டது நாடகம். நாட்டின் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதனால், நாடகம் எனப் பெயர் பெற்றது என்பர். அகம் – நாடு; உன்னுள் நோக்கு; உன்னை உணர்; அகத்தை நாடு என்றெல்லாம் பலவாறு அறிஞர் பொருள் கூறுகின்றனர். எனினும், நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி என்பது முற்றிலும் பொருந்தும். கதையை, நிகழ்ச்சியை, உணர்வை நடித்துக் காட்டுவதும், கூத்தாக ஆடிக்காட்டுவதும் நாடகம் என்பர். இதற்குக் கூத்துக்கலை என்னும் பெயரும் உண்டு.



## நாடகக்கலையின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழின் தொன்மையான கலை வடிவம் நாடகம் ஆகும். நாடகம் தோற்றம் பெற்றதன் வரலாற்றை அறியப் புகும்போது, போலச் செய்தல் என்னும் பண்பு அடிப்படையாக அமைதலைக் காணலாம். பிறர் செய்வதனைப்போலத் தாமும் செய்து பார்க்கவேண்டும் என்னும் மனித உணர்ச்சிதான் நாடகம் தோன்றக் காரணமானது.

பண்டைய மரப்பாவைக்கூத்து, பொம்மலாட்டமாக வளர்ச்சியடைந்த பின்னர், தோல்பாவைக் கூத்து, நிழற்பாவைக் கூத்து ஆகியன முறையே பாவைக்கூத்தின் வளர்ச்சி நிலைகளாக மக்களிடையே வழக்கிலிருந்தன.

உயிரற்ற பொருள்களை வைத்து விளையாடிய விளையாட்டு, படிப்படியாக வளர்ச்சி அடைந்து, உயிருள்ள மனிதர்களையே வேடம் புனையச்செய்து ஆடிப்பாடி, நடிக்க வைத்தது. பாவைக்கூத்துமுதல் பல்வேறு நிலைகளில் வளர்ச்சி அடைந்த நாடகம், நாட்டியமாகி, நாட்டிய நாடகமாகி இன்று நாம் காணும் புதிய நாடக உலகில் அடியெடுத்து வைத்துள்ளது.







## இலக்கியங்களில் நாடகம் பற்றிய குறிப்புகள்

தொல்காப்பிய மெய்ப்பாட்டியல், நாடகப் பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்து இருக்கிறது. 'கூத்தாட்டவைக்குழாத் தற்றே' என்னும் குறள்வழியாக நாடக அரங்கம் இருந்த செய்தி தெரிய வருகிறது. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், நாடகமேத்தும் நாடகக் கணிகை என்று நாட்டியமாடும் மாதவியைக் குறிப்பிடுகிறார். தனிப்பாடல்களுக்கு மெய்ப்பாடு தோன்ற ஆடுவதனை நாட்டியம் என்றும், ஏதேனும் ஒரு கதையைத் தழுவி வேடம்புனைந்து ஆடுவதனை நாடகம் என்றும் குறிப்பிட்டு வந்துள்ளனர். 'நாட்டியம்', 'நாடகம்' இரண்டிற்கும் பொதுவாகக் கூத்து என்னும் சொல்லே வழக்கில் இருந்தது. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் கூத்துவகைகளைப் பற்றியும், நாடகநூல்கள் பற்றியும் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

## இலக்கணம் வகுத்த நாடக நூல்கள்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் கருதப்படும் தமிழ் நூல்களில், முறுவல், சயந்தம், செயிற்றியம், மதிவாணர் நாடகத்தமிழ் நூல், விளக்கத்தார் கூத்து, குணநூல், கூத்து நூல் முதலிய பல நாடக நூல்கள் நாட்டியத்திற்கும் நாடகத்திற்கும் இலக்கணம் வகுத்துள்ளன. சிலப்பதிகாரம், நாடகக் கலையைப் பற்றியும் காட்சித் திரைகளைப் பற்றியும் நாடக அரங்கின் அமைப்புப் பற்றியும் விரிவாகக் கூறியுள்ளது.

பரிதிமாற்கலைஞர், செய்யுள் வடிவில் இயற்றிய தம் நாடகவியல் என்னும் நூலில், நாடகம் அதன் விளக்கம், வகைகள், எழுதப்பட வேண்டிய முறைகள், நடிப்புக்குரிய இலக்கணம், நடிப்பவர்களுக்குரிய இலக்கணம் போன்றவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.



சுவாமி விபுலானந்தர் எழுதிய மதங்க சூளாமணியும் மறைமலையடிகள் எழுதிய சாகுந்தலமும் நாடகத்தைப் பற்றிய ஆராய்ச்சி நூல்களாகும். நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தனார், நாடகத்தமிழ் என்னும் தம்நூலில் தொழில்முறை நாடக அரங்குகளைப்பற்றிய செய்திகளை நன்கு ஆராய்ந்து எழுதியுள்ளார்.



சங்கரதாசு சுவாமிகள்

### காலம்தோறும் நாடகக்கலை

ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன் மத்தவிலாசம் என்னும் நாடக நூலை எழுதியுள்ளான். பதினோராம் நூற்றாண்டில் இராசராசசோழன் ஆட்சிக் காலத்தில் இராசராசேச்சுவர நாடகம் நடைபெற்றதாகக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. தஞ்சாவூரை ஆண்டபோது கோவிலில் நாடகங்கள் மராத்திய மன்னர்களால் நடத்தப்பெற்றன. நாயக்க மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் குறவஞ்சி நாடகங்கள் தோன்றின. பள்ளு நாடகவகை, உழவர்களின் வாழ்க்கையைச் சித்திரித்துள்ளன.



பரிதிமாற்கலைஞர்

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், நொண்டி நாடகங்கள் தோன்றின. செல்வக்குடியில் பிறந்த ஒருவன், ஒழுக்கங்கெட்டு, நோயும் வறுமையும் உற்று இறுதியில் திருந்தி வாழ்வதாக இவ்வகை நாடகங்கள் அமைந்தன.

பதினெட்டாம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயரின் இராம நாடகம், கோபால கிருட்டின பாரதியாரின் நந்தனார் சரித்திரம் ஆகியன கட்டியங்காரன் உரையாடல்களோடு முழுவதும் பாடல்களாக அமைந்தன. இக்காலத்தில் தோன்றிய பெரும்பாலான நாடகங்கள், மகாபாரதம், இராமாயணம் முதலிய காவியங்களின் கதைக்கூறுகளிலிருந்து படைக்கப்பட்டன.



பம்மல் சம்பந்தனார்

ஊர்களில், தெருக்கூத்து என்னும் நாடகவகை, புராணக்கதைகளையே மையமாகக் கொண்டு நடத்தப் பெற்றது. பின்னர், நாடகங்களில் உரையாடல் சிறப்பிடம் பெற்றது; விடிய விடிய நடைபெற்று வந்த நிலைமாறி நாடகம் மூன்று மணி நேரத்திற்குள் முடிக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமுதாயச் சீர்திருத்தம் தொடர்பான நாடகங்கள் சிறப்பிடம் பெற்றன.

காசி விசுவநாதரின் டம்பாச்சாரி விலாசம் குறிப்பிடத் தக்கது. பேராசிரியர் சுந்தரனார் மனோன்மணியம் என்னும்

கவிதை நாடகக் காப்பியத்தைக் கி.பி.1891ஆம் ஆண்டில் வெளியிட்டார். இந்நூல் லார்ட் லிட்டன் எழுதிய மறைவழி என்னும் ஆங்கிலக் கதையைத் தழுவியதாக இருந்தாலும் வடிவத்தாலும், பாத்திர அமைப்பாலும், சூழலாலும் தமிழ்ப்பண்பு ஓங்கியிருந்தது.

நாட்டு விடுதலைப் போராட்டக் காலக்கட்டத்தில், பல்வேறு காலத்திய தேசிய நாடகங்கள் அரங்கேறின. கதரின் வெற்றி நாடகம்தான் தமிழ்நாட்டில் முதன்முதலாக நடத்தப்பட்ட தேசிய சமுதாய நாடகமாகும். இதனைத் தொடர்ந்து தேசியக்கொடி, தேசபக்தி முதலிய நாடகங்கள் நடத்தப்பட்டன. நாடக மேடைகளில் தேசியப்பாடல்கள் முழங்கின.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்துறைக்குப் பெருந்தொண்டு புரிந்தவர் சங்கரதாசு சுவாமிகள். நாடக உலகின் இமயமலை என்றும், தமிழ்நாடகத் தலைமையாசிரியர் என்றும் சுவாமிகள் அழைக்கப்பட்டார். பிரகலாதன், சிறுத்தொண்டர், இலவகுசா, பவளக்கொடி, அபிமன்யு, சுந்தரி முதலான நாற்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார்.

தமிழ் நாடகத் தந்தை என்று போற்றப்பட்ட பம்மல் சம்பந்தனார், தொண்ணூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார்; சேக்சுபியரின் ஆங்கில நாடகங்களை மொழிபெயர்த்துள்ளார். இவரது மனோகரன் நாடகம் எழுபது ஆண்டுகளாகத் தமிழ் நாடகமேடையில் புகழ்பெற்று விளங்கியது. தமது நாடக அனுபவங்களையெல்லாம், நாடகமேடை நினைவுகள் என்னும் தலைப்பிலும் நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி ? என்னும் தலைப்பிலும் எழுதியுள்ளார். இவை, நாடகம் பயில்வோர்க்குப் பெரிதும் பயன்தரக்கூடியன.

மதுரையில் 1942ஆம் ஆண்டில் புலமைக்கடலான தமிழ் மூதாட்டி ஔவையார் நாடகம் அரங்கேறியது. நாடகம் முழுவதும் ஔவையாராக நடிக்கும் வாய்ப்பைப் பெற்றுச் சிறந்தமுறையில் நடித்தார் தி.க.சண்முகனார். இவரை ஔவை சண்முகனார் என்றே அழைத்தனர்.

### நாடகம் வாயிலாகப் புலப்படுத்தப்பட வேண்டியவை

கலை என்பது ஆக்கவழியில் செல்லுதல் வேண்டும். கலைஞன் ஆக்கத்திற்காகவே வாழ்கிறான். மக்களின் நலன்கருதியே கலைநிகழ்ச்சிகள் நடத்துதல் வேண்டும். நாடகக் கலையைப் பொருத்தவரை, புதுமைக்கருத்து அல்லது மறுமலர்ச்சிக்கருத்து, பார்ப்பவர் உள்ளத்திலே பாய்ந்து பண்புக்கு ஏற்றமுறையில் செயலாக வெளிப்படுதல் வேண்டும். உயிர்களிடத்தில் அன்பு, உறுதியான நெஞ்சு, தெய்வபத்தி, உயர்ந்த எண்ணங்கள் இவற்றையெல்லாம் நாடகத்தின் வழியாகக் கற்பித்தல் வேண்டும்.

நாடகச் சாலையொத்த நற்கலாசாலையொன்று நீடுலகில் உண்டோ நிகழ்த்து என்ற கவிமணியின் கூற்றிற்கேற்ப மக்களின் கண்ணை, செவியை, கருத்தைக் கவரும் வகையிலும் நாடகங்கள் கதையழகோடு கவிதையழகும்கொண்டு வாழ்வைத் தூய்மைப்படுத்தும் வகையிலும் அமைதல் வேண்டும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. பிரித்து எழுதுக.**

1. கதையழகு = ____________
2. ஏட்டிலக்கியம் = ____________
3. நாடகக்கலை = ____________
4. நூற்றாண்டு = ____________
5. தேசியப்பாடல் = ____________
6. நாடகம் = ____________

**2. சேர்த்து எழுதுக.**

1. தமிழ் + பண்பு = ____________
2. பெருமை + ஆசிரியர் = ____________
3. எட்டு + தொகை = ____________
4. சிறப்பு + இடம் = ____________
5. நிழல் + பாவை = ____________
6. நடிப்பு + கலை = ____________

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. 'தமிழ்நாடகத் தந்தை' எனப் போற்றப்படுபவர் ________________.
2. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர் ________________ .
3. மறைமலையடிகள் எழுதிய நாடகம் ________________.

### ஆ) குறுவினாக்கள்

1. தமிழின் முப்பெரும் பாகுபாடுகள் யாவை ?
2. நாடகம் – குறிப்பு எழுதுக.
3. நாடகம் தோன்ற அடிப்படையாக அமைந்தது எது ?
4. நாடகத்திற்கு இலக்கணம் வகுத்த நூல்கள் யாவை ?
5. நொண்டி நாடகம் – குறிப்பு எழுதுக.

### இ) சிறுவினாக்கள்

1. சிலப்பதிகாரத்தில் நாடகம் பற்றிய குறிப்புகளைப் புலப்படுத்துக.
2. 'நாடகவியல்' குறிப்பு எழுதுக.
3. 'மனோன்மணியம்' குறிப்பு எழுதுக.
4. விடுதலைப் போராட்டக் காலத்தில் தோன்றிய நாடகங்கள் யாவை ?
5. நாடகத்தின் வாயிலாக நாம் அறிந்து கொள்வன யாவை ?

### ஈ) நெடுவினாக்கள்

1. பம்மல் சம்பந்தனார் நாடகக்கலைக்கு ஆற்றிய தொண்டினை விவரித்து எழுதுக.
2. நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

**உ) செயல் திட்டம் :** நீ அறிந்த கதை ஒன்றனை நாடகமாகத் தருக.

# கண் திறந்தது!

(வீதி நாடகம்)



கவிதா ஒன்பதாவது படித்த மாணவி. ஒருநாள் மாலையில் அவளைக் காண்பதற்குப் பள்ளித் தோழிகள் பேகம், மேரி ஆகிய இருவரும் வருகிறார்கள். கவிதா, தன் வீட்டின் முன்னின்று அவர்களை வரவேற்கிறாள்.

கவிதா : வா பேகம், வா மேரி, நலமாக இருக்கிறீர்களா ?

மேரி : என்னடி கவிதா ! பள்ளிக்கூடம் திறந்து பத்து நாளுக்கு மேலாகி விட்டதே ! பாடங்கள் நிறைய நடத்திவிட்டார்கள், தெரியுமா ?

கவிதா : தெரியும், மேரி. ஆனால், நான் இனிமேல் பள்ளிக்கு வர வாய்ப்பே இல்லை. உங்களோடு நானும் பத்தாம் வகுப்புப் படிக்க வேண்டியவள். என் நிலைமை இப்படி ஆகிவிட்டதே ! இன்னும் ஒரு வாரத்திற்குள் நாங்கள் எல்லாரும் ஊருக்குப் போகப் போகிறோம்.

பேகம் : கவிதா, உன்னைப் பார்க்காமல் இனி நாங்கள் எப்படி இருப்போம் ? ஒவ்வொரு தீபாவளியிலும் நானும் மேரியும் உங்கள் வீட்டிற்கு விருந்து சாப்பிட வருவோமே ! அஃது இனிமேல் நடக்காதா ?

மேரி : ஒவ்வொரு இரம்சானுக்கும் நாம் எல்லாரும் பேகம் வீட்டில் பிரியாணி சாப்பிட்டுக் கொண்டாடுவோமே. ! அஃது இனிமேல் கிடையாதா ?

கவிதா : மேரி ! நானும் பேகமும் ஒவ்வொரு கிறித்தவ விழாவுக்கும் உங்கள் வீட்டுக்கு வந்து கொண்டாடுவோம் ! இனிமேல் அது முயல்கொம்புதானா ?

மேரி : நாம் எல்லாரும் ஒன்றாக இங்கேயே படிக்க முடியாதா கவிதா ?

கவிதா : எனக்கும் ஆசைதான் ! ஆனால், எங்கள் அப்பாவும் அம்மாவும்...

(அழுகிறாள். வீட்டின் உள்ளேயிருந்து கவிதாவின் அம்மா வருகிறாள்.)

அம்மா : பொண்ணுங்க படித்து என்ன செய்ய ? பெட்டைக்கோழி கூவிப் பொழுது விடியுமா ? ஒரு காலத்தில் இந்த ஊருக்குப் பிழைக்க வந்தோம். இப்போது முன்னே மாதிரி வருமானம் இல்லை. பிறந்த ஊருக்குப்போனால் களை எடுப்பது, கட்டுச் சுமப்பது என்று நாலு காசு பார்க்கலாம். ஊரிலேயே நல்ல பையனாகப் பார்த்துக் கவிதாவை அவன் கையில ஒப்படைத்துவிடலாம் !

பேகம் : படிக்கிற வயதில் திருமணம் வேண்டா, அம்மா !

தமிழ்

| | | |
|---|---|---|
| மேரி | : | அதிலும், கவிதா நல்லா படிக்கிற பொண்ணு, படிக்க வையுங்க அம்மா! |
| பேகம் | : | நீங்கள் வேண்டுமானால் ஊருக்குப் போங்கள். கவிதா எங்கள் வீட்டில் தங்கிப் படிக்கட்டும். நாங்கள் கவனமாகப் பார்த்துக்கொள்வோம். |
| அம்மா | : | அது நடக்கிற காரியமா! நீங்கள் சின்னப் பிள்ளைங்க, உங்களுக்கு விவரம் பத்தாதும்மா! |
| பேகம் | : | கவிதா! அங்கே பார். நம்ம தமிழ் ஐயா வருகிறார். |
| மேரி | : | இங்கேதான் வருகிறார் என்று நினைக்கிறேன்! |
| | | (அங்கே தமிழ் ஐயா வருகிறார். மூவரும் பணிவாக வணங்குகிறார்கள்.) |
| மூவரும் | : | வணக்கம், ஐயா! |
| ஐயா | : | வணக்கம். ஓ! பேகமும் மேரியும் இங்கேதான் இருக்கிறீர்களா? |
| பேகம் | : | ஆமாம், ஐயா. |
| மேரி | : | கவிதாவைப் பள்ளிக்கு அழைக்க வந்தோம். |
| ஐயா | : | ஆகா! நல்ல பிள்ளைகள்! நான் வந்ததும் அதற்குத்தான்! என்ன கவிதா? உடல்நலம் இல்லையா? இப்போது எப்படி இருக்கிறாய்? நாளைக்கு வந்துவிடுவாய் அல்லவா? |
| கவிதா | : | அது.... அது... வந்து... |
| | | (அம்மாவைப் பார்க்கிறாள். அம்மா விளக்க முற்படுகிறாள்.) |
| அம்மா | : | உடுப்பதோ கந்தலாடை; உண்பதோ ஒருவேளைச் சோறு, ஏழையான எங்களுக்கு எதற்கு ஐயா படிப்பு? கவிதாவை மேற்கொண்டு படிக்கவைக்க எங்களிடம் வசதி இல்லை. பெண்கள் என்ன படித்து என்ன செய்ய? பெண்புத்தி பின்புத்திதானேங்க ஐயா? |
| ஐயா | : | அம்மா, அப்படிச் சொல்லாதீர்கள். பெண்ணோ ஆணோ கல்வியால் மட்டுமே உயரமுடியும். அந்தக் கால ஔவையாரிலிருந்து இந்தக்கால இந்திரா காந்தி, கல்பனா சாவ்லா முதலிய மாதரசிகள் கல்வியால் உயர்ந்த மேதைகள், அம்மா! படித்தால், கவிதாவும் அந்த வரிசையில் வரமுடியும்! |
| | | (அப்போது வெளியிலிருந்து கவிதாவின் அப்பா வருகிறார்.) |
| அம்மா | : | (கணவரைப் பார்த்து) இவர் தமிழ் ஐயா! இவங்கதான் கவிதாவின் அப்பா! |
| ஐயா | : | வணக்கம், ஐயா. |
| அப்பா | : | வணக்கங்க. |
| ஐயா | : | ஐயா, உங்கள் மகள் கவிதா ஒன்பதாம் வகுப்பு இறுதித்தேர்வில் எங்கள் பள்ளியில் முதல் மாணவியாகத் தேர்வு பெற்றிருக்கிறார். பத்தாம் |

வகுப்பில் மாநிலத்திலேயே முதல் மாணவியாக அவர் உறுதியாக வருவார்!

அப்பா : வரட்டும். ஆனால், எங்களுக்குப் படிக்க வைக்க வசதி இல்லையே!

ஐயா : வசதிபடைத்தவர்கள்தான் படிக்கவைக்கமுடியும் என்பது அந்தக்காலம்! உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள். இலவசச் சீருடை, பாடநூல்கள், நோட்டுப் புத்தகங்கள், மதிய உணவு, இலவசப் பேருந்து வசதி, மிதிவண்டி எனப் பல சலுகைகள் உள்ளன.

அப்பா : அப்படியா!

ஐயா : ஆமாம். உங்கள் பெண் கவிதா திறமையானவர். அவருக்கு ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது. நீங்கள்தான் அவருக்கு உறுதுணையாக இருத்தல் வேண்டும்.

அப்பா : ஐயா! என் கண்ணைத் திறந்துவிட்டீர்கள்! வறுமையில் வாடும் எங்களைப்போன்ற ஏழைகளுக்கு இவ்வளவு வாய்ப்புகள் இருப்பதனைத் தாங்கள் கூறிய பிறகுதான் தெரிந்துகொண்டேன். என் மகள் கவிதா நாளைமுதல் பள்ளிக்கு வருவாள்.

கவிதா : (அப்பாவின் அருகே சென்று) அப்பா! என்னை வாழ்த்துங்கள்.

பேகம் : (வழியும் கண்ணீரைத் துடைத்து) எனக்கு இப்போதுதான் மகிழ்ச்சி.

மேரி : (குரல் தழுதழுக்க) ஆமாம். எனக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

அம்மா : உங்கள் விருப்பத்தின்படியே, என் மகள் படித்துப் பெரிய ஆளாக வரட்டும்.

ஐயா : அஃது உறுதியாக நடக்கும், அம்மா! ஆண் ஒருவன் கல்வி கற்றால் அஃது ஒருவன் மட்டும் கற்கும் கல்வி. பெண் ஒருத்தி கல்வி கற்றால், அவளைச் சார்ந்த குடும்பம் முழுவதுக்குமே அவள் ஒளிவிளக்காகத் திகழ்வாள்.

கவிதா : ஐயா! நீங்கள், என் பெற்றோர், என் உயிர்த்தோழியர் தரும் ஊக்கம் என்னை மிகவும் உயர்த்தும். பத்தாம் வகுப்பிலும் அதன்பின் வரும் பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத்தேர்விலும் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்று, உங்கள் அனைவரின் எதிர்பார்ப்பையும் நிறைவேற்றுவேன் என்று உறுதி ஏற்கிறேன்! பணிவோடு உங்களை வணங்கும் என்னை வாழ்த்துங்கள்.

(கவிதா வணங்க, தமிழ் ஐயா வாழ்த்துகிறார். அங்கு நிற்கும் அனைவரின் கண்களும் கலங்குகின்றன.)

நாடகம் நிறைவுபெறுகிறது.

## மாதிரி வினா

### கட்டுரை வினா

'கண் திறந்தது' நாடகத்தின் கதையைச் சுருக்கி எழுதுக.

# ஆகுபெயர்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். இன்று அனைவரும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களே, ஏதேனும் சிறப்பு உண்டா ?

மாணவர் : உண்டு, ஐயா. மட்டைப்பந்து (கிரிக்கெட்) விளையாட்டில் இந்தியா வெற்றி பெற்றதுதான் மகிழ்ச்சிக்குக் காரணம்.

ஆசிரியர் : எனக்கும் மகிழ்ச்சிதான். சரி, நம் இந்தியா எந்தக் கண்டத்தில் உள்ளது ?

மாணவர் : ஆசியாக் கண்டத்தில் உள்ளது, ஐயா.

ஆசிரியர் : மகிழ்ச்சி. இந்தியா மட்டைப்பந்து விளையாட்டில் வெற்றிபெற்றது. இந்தியா ஆசியாக் கண்டத்தில் உள்ளது. இந்த இரு தொடர்களையும் படித்துப் பாருங்கள். இரண்டிலும் வந்துள்ள சொல் எது ?

மாணவர் : இந்தியா என்னும் சொல், ஐயா.

ஆசிரியர் : முதல் தொடரில் வந்துள்ள இந்தியா என்னும் சொல்லும், இரண்டாம் தொடரில் வந்துள்ள இந்தியா என்னும் சொல்லும் ஒரே பொருளைத் தருகிறதா எனச் சிந்தியுங்கள்.

மாணவர் : வெவ்வேறு பொருளைத் தருகிறது, ஐயா. முதல் தொடர் 'இந்தியா', மட்டைப்பந்து வீரர்களைக் குறிக்கிறது. இரண்டாம் தொடர் 'இந்தியா', இடத்தைக் குறிக்கிறது.

ஆசிரியர் : மிகச்சரியாகச் சொன்னீர்கள், மகிழ்ச்சி. நீங்கள் கூறியதுபோல், முதல் தொடரில் உள்ள 'இந்தியா' தன்னைக் குறிக்காமல், தன்னோடு தொடர்புடைய வீரர்களைக் குறிக்கிறது. ஒன்றன் இயற்பெயர் தன்னைக் குறிக்காமல், தன்னோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்கு ஆகி வந்துள்ளது. இவ்வாறு வருவதற்கு ஆகுபெயர் என்பது பெயர். ஆகுபெயர் பலவகைப்படும். முதலில், முதல் ஆறுவகை ஆகுபெயர்கள் குறித்துப் பார்ப்போம்.

மாணவி : முதல் ஆறு ஆகுபெயர்கள் எவை, ஐயா ?

ஆசிரியர் : கூறுகிறேன், கண்மணி. உன் தலையில் உள்ள பூ, என்ன பூ ?

மாணவி : 'மல்லிகை' ஐயா.

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | ‘மல்லிகை’ என்பது ‘பூ’ இல்லை; அது கொடி. ‘மல்லிகை சூடினாள்’ எனச் சொன்னால், அங்கு மல்லிகை என்பது கொடியாகிய முதற்பொருளைக் குறிக்காமல் பூ என்னும் சினையைக் குறிக்கிறது. இவ்வாறு முதற்பொருள் சினைக்கு (உறுப்புக்கு) ஆகி வருவது, முதலாகு பெயர் எனப்படும். இதனைப் பொருளாகுபெயர் எனவும் கூறுவர். நேற்றுப் பேச்சுப்போட்டியில் முதல் பரிசு பெற்ற பள்ளி, எது ? |
| மாணவர் | : | பூண்டிப் பள்ளி, ஐயா. |
| ஆசிரியர் | : | பூண்டிப் பள்ளியா வந்து பேசியது ? பள்ளி எப்படிப் பேசும் ? |
| மாணவர் | : | பள்ளி பேசாது, ஐயா. பூண்டியிலுள்ள பள்ளியில் பயின்ற மாணவி பேசினாள், ஐயா. |
| ஆசிரியர் | : | பார்த்தீர்களா ? ‘பள்ளி’ என்னும் இடப்பெயர், அப்பள்ளியில் பயிலும் மாணவிக்கு ஆகி வந்தது. அதனால், இஃது இடவாகு பெயர். |
| மாணவி | : | ஐயா, மலர்க்கொடி என்னை அடிக்க வருகிறாள். |
| ஆசிரியர் | : | மலர்க்கொடி ! அவளை ஏன் அடிக்கிறாய் ? |
| மாணவி | : | அவள், என் தலையிலுள்ள பூவை எடுக்கிறாள், ஐயா. |
| ஆசிரியர் | : | உன் தலையில் வைத்திருக்கும் பூவின் பெயரென்ன ? |
| மாணவி | : | திசம்பர் பூ, ஐயா. |
| ஆசிரியர் | : | திசம்பர் என்பது என்ன ? |
| மாணவி | : | மாதத்தின் பெயர், ஐயா. |
| ஆசிரியர் | : | இந்த மாதத்திற்காகவா இவ்வளவு சிக்கல் செய்கிறீர்கள் ? |
| மாணவி | : | இல்லை , ஐயா. திசம்பர் பூவிற்காக. |
| ஆசிரியர் | : | நன்றாகச் சொன்னாய். திசம்பர் என்னும் மாதப்பெயர், அம்மாதத்தில் பூக்கும் பூவிற்கு ஆகி வந்தது. அதனால், இது காலவாகுபெயர். அடுத்துச் சினையாகு பெயர் பற்றிப் பார்ப்போம். |
| மாணவர் | : | சினையாகு பெயர் என்றால் என்ன ? ஐயா. |
| ஆசிரியர் | : | சினை என்றால் உறுப்பு. வெற்றிலை நட்டான். இத்தொடரில் உள்ள வெற்றிலை என்பது சினையாகிய இலையைக் குறிக்காமல், அதன் முதல் பொருளாகிய கொடிக்கு ஆகி வந்தது. அதனால், இது சினையாகு பெயர் ஆயிற்று. |
| மாணவர் | : | அடுத்து என்ன ஆகுபெயர், ஐயா. |
| ஆசிரியர் | : | பொங்கலுக்கு முன் வீட்டுச் சுவர்களுக்கு என்ன அடிப்போம் ? |
| மாணவர் | : | ‘வெள்ளை’ அடிப்போம், ஐயா. |

தமிழ்

ஆசிரியர் : அழகாகச் சொன்னீர். வெள்ளை என்பது நிறப்பண்பு. ஆனால், அது நிறத்தைக் குறிக்காமல், சுண்ணாம்பைக் குறித்து வந்தது. அதனால், இது பண்பாகு பெயர். இதனைக் குணவாகுபெயர் எனவும் கூறுவர். தைப்பொங்கலுக்கு என்ன சாப்பிடுவீர் ?

மாணவர் : 'பொங்கல்' உண்போம், ஐயா.

ஆசிரியர் : இங்குப் பொங்கல் என்பது பொங்குதலாகிய தொழிற்பெயர். இத்தொழிற் பெயர் தொழிலைக் குறிக்காமல், அத்தொழிலால் ஆகும் உணவைக் குறித்தது. அதனால், இது தொழிலாகு பெயர். என்னென்ன ஆகுபெயர்களைப் படித்தோம்.

மாணவர் : 1. முதலாகு பெயர், 2. இடவாகு பெயர், 3. காலவாகு பெயர், 4. சினையாகு பெயர், 5. குணவாகு பெயர், 6. தொழிலாகு பெயர்.

ஆசிரியர் : நன்றி.

பயிற்சி : கீழுள்ள தொடர்களில் உரிய ஆகுபெயர்ச் சொற்களை நிரப்புக.

1. உடைந்த ஏரியைப் பார்க்க ______________ திரண்டு வந்தது. (மக்கள், ஊரே)
2. இவ்வாடைகளை ______________ ஒன்றாகக் கொடு. (மாணவர்களுக்கு, தலைக்கு)
3. தைப் பொங்கலுக்கு ______________ அடிப்பர். (சுண்ணாம்பு, வெள்ளை)
4. தேன்மொழி ______________ சூடி வந்தாள். (மல்லிகைப்பூ, திசம்பர்)

தமிழ்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.
   1. ஊர் உறங்கியது என்பது ______________ ஆகுபெயர்.
   2. நீலம் சூடினாள் ______________ ஆகுபெயர்.
2. உரிய சொல்லைத் தேர்ந்தெழுதுக.
   1. வறுவல் தின்றான் என்பது

      அ) முதலாகு பெயர் ஆ) இடவாகு பெயர் இ) தொழிலாகு பெயர்
   2. சித்திரை வந்தாள்

      அ) சினையாகு பெயர் ஆ) காலவாகு பெயர் இ) தொழிலாகு பெயர்

### ஆ) குறுவினாக்கள்

1. ஆகுபெயர் என்றால் என்ன ? சான்று தருக.
2. ஆகுபெயர்கள் எத்தனை வகைப்படும் ?
3. சினையாகு பெயரைச் சான்றுடன் விளக்குக.
4. தொழிலாகு பெயர் என்றால் என்ன ? சான்று தருக.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

நாடகக்கலை வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய நாடக நடிகர் ஒருவரைப் பற்றி ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

புலவர் ஒருவர் பாடலொன்றனைப் பாடியிருந்தார். அப்பாடலுக்குப் பாசவலை என்று பெயரிட்டிருந்தார். அதனைப் பெரும்புலவர் ஒருவரிடம் காண்பித்து மதிப்புரை வழங்குமாறு வேண்டினார். அப்பாடலோ முழுவதும் பாடல் இலக்கணத்துக்குப் பொருந்தாமல், வழுக்களோடு சுவையின்றி இருந்தது. அதனால், அப்பெரும்புலவர் பாசவலை, பாசவலைதான் என்றார். தம் பாடலைப் பெரும்புலவர் பாராட்டிவிட்டார் எனக் கருதிய புலவர், மனநிறைவோடு விடைபெற்றுச் சென்றார். அப்பெரும்புலவரின் நண்பர்கள் அவரை நோக்கி, 'ஐயா, பாடல்கள் முழுவதும் தப்பும் தவறுமாக உள்ளனவே! அதனைப் பாராட்டினீர்களே! இது தகுமா ?' என்று கேட்டனர். நான் எங்கே பாராட்டினேன் ? பாசவலை, பா–சவலை என்றுதானே கூறினேன் என்றார் பெரும்புலவர். (பா–சவலை – சவலைப் பாடல்கள், முழுமை பெறாதவை)

### இ) எழுதுதல் திறன்

#### கவிதை இயற்றும் திறன் பெறுதல்

கவிதை இயற்றுவது ஓர் உயர்நிலைத் திறன். அதனைப் பயிற்சியின் வாயிலாகப் பெறுதல் எளிது. கவிதைகளை நன்கு படித்து அதில் அமைந்துள்ள நயம், கருத்து, சொல்திறம் முதலியவற்றை அறிதல் வேண்டும். தற்காலக் கவிஞர்களின் புதுக்கவிதைகளைத் தேர்ந்தெடுத்துப் படித்தல் வேண்டும்.

கவிதை எழுதும் திறனை வளர்த்துக்கொள்ள தொடக்கத்தில், இரண்டு அடி, நான்கடி அளவில் கவிதை எழுதிப் பழகுதல் வேண்டும்.

(எ.கா.) 1. அன்பே நல்லோர் விருந்தாகும்
அடக்கம் ஆருயிர் மருந்தாகும்
பண்பே வாழ்வில் நம்உடைமை
பாடம் படிப்பது நம்கடமை.

2. வயிற்றுச் சுருக்கம் போக்க
சட்டைச் சுருக்கம் போக்கினான்
சலவைத் தொழிலாளி.

#### நானே செய்வேன்

கீழ்க்காணும் கவிதை படிக்க, கவிதை வடிக்க.

விடிந்தது பொழுது நலமாக
விழித்தெழு மனிதா புதிதாக.

## மொழித்திறன் பயிற்சி

**1. சொற்றொடர்களில் அமைந்துள்ள வழுக்களை அறிவோம்.**

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | அரசன் வந்தது (திணைவழு) | – | அரசன் வந்தான் |
| | கபிலன் பேசினாள் (பால்வழு) | – | கபிலன் பேசினான் |
| | குயில்கள் கூவியது (எண்வழு) | – | குயில்கள் கூவின |
| | கமலா சிரித்தாய் (இடவழு) | – | கமலா சிரித்தாள் |
| | வளவன் நேற்று வந்திருக்கிறான் (காலவழு) | – | வளவன் நேற்று வந்தான் |
| | ஆந்தை கத்தியது (மரபுவழு) | – | ஆந்தை அலறியது |

பயிற்சி : கீழ்க்காணும் தொடர்களில் அமைந்துள்ள வழுக்களை நீக்கி எழுதுக.

1. புலவர் வந்தார்கள்.
2. மயில் கூவ குயில் அகவியது.
3. தாமரை படம் வரைந்தான்.
4. யானைகள் வந்தது .
5. பெருமழை பெய்தமையால் மரங்கள் வீழ்ந்தது.
6. வயலில் ஆட்டுக்கன்று மேய்கிறது.
7. பசு குட்டி போட்டது.
8. மாட்டை இலாயத்தில் கட்டு.
9. வெற்றிலைத்தோப்புக்குச் சென்று வெற்றிலை பறித்து வா.
10. யானை முழங்கும்.

**2. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | சிங்கம் கனைத்தது | – | எண் வழு |
| 2. | கண்ணன் படித்தாள் | – | காலவழு |
| 3. | இன்று வருவான் | – | திணைவழு |
| 4. | கபிலன் பேசியது | – | மரபுவழு |
| 5. | பறவைகள் பறந்தது | – | பால்வழு |

**3. தமிழெண்களைக் கூட்டுக**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | கO+க | = | ________ | 4. | க+க | = | ________ |
| 2. | உ+கக | = | ________ | 5. | ௫+எ | = | ________ |
| 3. | கO+கO | = | ________ | 6. | ச+அ | = | ________ |

**4. கட்டுரைப்பயிற்சி**

நான் மருத்துவரானால்...

## பண்பு

“எட்டாம் வகுப்பில் படிக்கிறானே, அந்த முருகனைத் தெரியுமா ?” என்று யாரையாவது கேட்டால் தெரியாது என்றே சொல்வார்கள். ‘இல்லை முருகனை’த் தெரியுமா ? என்று கேட்டால், உடனே தெரியும் என்பார்கள். அஃதென்ன ‘இல்லை முருகன்’ ? முருகனிடம் எழுதுகோல் கொடு என்று கேட்டாலும் சரி, விளையாட்டுப் பொருளைக் கொடு என்று கேட்டாலும் சரி, வேறு எதனைக் கேட்டாலும், அவன் வாயிலிருந்து வரும் முதல் சொல் ‘இல்லை’ என்பதுதான். யாருக்கும் எந்தப் பொருளைக் கொடுப்பதற்கும்

தமிழ்

அவனுக்கு மனம் வராது. எது கேட்டாலும் 'இல்லை' என்று சொல்வதனால், அவனுக்கு இல்லை முருகன் எனப் பெயர் வைத்தோம். நீங்கள் வேண்டுமானால் ஏதேனும் கேட்டுப் பாருங்களேன். என்ன சொல்கிறான் பாருங்கள்!

### கூடிப்பேசுவோம்.

1. முருகனைப்போல யாரையாவது பார்த்திருக்கிறீர்களா ?
2. உங்களிடம் யாராவது எதனையாவது கேட்டால் என்ன சொல்வீர்கள் ?

## வாழ்க்கைத்திறன்

### தன்னையறிதல்

பொற்கொடி நன்றாக ஓவியம் வரைவாள். ஆனால், அவள் யாரிடமும் அதனை வெளிப்படுத்தியது இல்லை. அவளிடம் இருக்கும் கூச்ச உணர்வுதான் அதற்குக்காரணம். ஆண்டுவிழாவை முன்னிட்டுப் பள்ளியில் போட்டிகள் அறிவிக்கப்பட்டன. ஓவியப்போட்டியும் அவற்றில் ஒன்று. போட்டியில் கலந்துகொள்ள பலரும் ஆர்வத்துடன் பெயர் கொடுத்தனர். பொற்கொடி கலந்துகொள்ள விரும்பினாலும் சிறப்பாக வரைய முடியுமா எனத் தயங்கினாள். பொற்கொடியின் தயக்கத்திற்குக் காரணம், அவள் தன் திறமைகளைப்பற்றி அறியாததே. இந்நிலையில் பொற்கொடிக்கு நீங்கள் எவ்வாறு அறிவுரை கூறுவீர்கள் ?

உங்களிடமுள்ள திறமைகளை வாய்ப்புக்கிடைக்கும்போது, வெளிப்படுத்துதல் வேண்டும். நல்ல வாய்ப்புகளை என்றுமே நழுவவிடுதல் கூடாது. அதேபோல, அல்லல்தரும் வாய்ப்புகளை என்றும் அண்டவிடுதல் கூடாது.

## மதிப்புக்கல்வி

### நேர்மை

### காந்தியடிகளின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சி

உயர்தரப்பள்ளியில் காந்தியடிகள் எழுதிய முதலாம் ஆண்டுத் தேர்வின்போது, நடந்த நிகழ்ச்சி ஒன்று உண்டு. அஃது இங்கே குறிப்பிடத்தக்கது.

"கல்வித்துறை ஆய்வாளர் ஸ்ரீகைல்சு அப்பள்ளி ஆய்வுக்காக வந்திருந்தார். எழுத்துக்கூட்டி எழுதும் பயிற்சிக்காக, அவர் எங்களுக்கு ஐந்துசொற்களைக்கூறி அவற்றை எழுதச்சொன்னார். அவற்றுள் ஒரு சொல் 'கெட்டில்' என்பது. அதனை நான் தவறாக எழுதிவிட்டேன். நான் தவறாக எழுதியதனை ஆசிரியர், எனக்குக் குறிப்பால் உணர்த்தினார். அதனை என்னால் புரிந்துகொள்ள இயலவில்லை. என்னைத் தவிர மற்ற எல்லாப்பிள்ளைகளும் அச்சொல்லைச் சரியாக எழுதியிருந்தனர். நான் ஒருவனே முட்டாளாக இருந்துவிட்டேன். இந்த முட்டாள்தனத்தை நான் உணரும்படி செய்வதற்கு ஆசிரியர் பலமுறை முயற்சி செய்தார். ஆனால் , அதனாலும் பயனில்லை. 'பார்த்து எழுதும்' பழக்கத்தை நான் என்றுமே கற்றுக்கொள்ளவில்லை."

காந்தியடிகள் தம்குழந்தைப் பருவத்திலேயே பிறரைப் பார்த்து எழுதக்கூடாது என்னும் கொள்கையில் உறுதியாக இருந்தார் என்பதனை இந்நிகழ்வு நமக்கு உணர்த்துகிறது. நேர்மையைக் கடைப்பிடித்து நாமும் செம்மையாக வாழ்வோம்.

புகழெனின் உயிரும் கொடுக்குவர்
பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர். – புறநானூறு

# வளரறி செயல்பாடுகள்

## பேசுதல்

| செயல்பாடு : 1 | நடித்தல் |
|---|---|

'வான்மழை சேமிப்போம்' என்னும் தலைப்பில் விழிப்புணர்வு நாடகம் ஒன்றனை எழுதி நடித்துக் காட்டுக.

| செயல்பாடு : 2 | கலந்துரையாடல் |
|---|---|

தெருக்கூத்து, மேடை நாடகம், திரைப்படம் மூன்றனுக்கும் உள்ள ஒற்றுமைகளைக் குழுவில் கலந்துரையாடுக.

## எழுதுதல்

| செயல்பாடு : 3 | தொகுத்தல் |
|---|---|

பள்ளி நூலகம் சென்று பன்னிருதிருமுறைகளின் பெயர்களையும் அவற்றை எழுதியவர்களின் பெயர்களையும் எழுதுக.

| செயல்பாடு : 4 | படைப்பாற்றல் |
|---|---|

'அன்பு' என்னும் சொல்லில் முடியும் பாடல் ஒன்றனை எழுதுக.

| செயல்பாடு : 6 | கண்டறிந்து எழுதுதல் |
|---|---|

கீழ்க்காணும் உரையாடலைப் படித்து வண்ணமிட்ட ஆகுபெயர்ச்சொற்களின் வகைகளைக் கண்டறிந்து எழுதுக.

முகிலன் : தம்பி... கபிலா... நேற்று உன்னை விளையாட்டுத்திடலில் பார்க்க முடியவில்லையே... ஏன் ?

கபிலன் : ஆமாம் அண்ணா... நேற்று எங்கள் வீட்டைச் சுற்றித் தோட்டம் அமைத்தோம். அதனால், விளையாட வர இயலவில்லை.

முகிலன் : உங்கள் ஊரில் உள்ள அனைத்து வீடுகளிலும் தோட்டம் உண்டா ?

கபிலன் : எங்கள் ஊரில் தோட்டம் இல்லாத வீடுகளே இல்லை. இப்பொழுது எங்கள் ஊரே மாறிவிட்டது.

முகிலன் : சரி... உங்கள் தோட்டத்தில் என்ன விதைத்துள்ளீர்கள் ?

கபிலன் : கீரை விதைத்திருக்கிறோம்.

முகிலன் : நீ என்ன நட்டுள்ளாய் ?

கபிலன் : நான் ரோசா நட்டுள்ளேன்.

முகிலன் : நானும் உங்களைப் போன்று எங்கள் வீட்டில் தோட்டம் அமைக்கப்போகிறேன்.

கபிலன் : மகிழ்ச்சி, அண்ணா. இன்று நீங்கள் பட்டு அணிந்திருக்கிறீர்களே காரணம் என்ன ?

முகிலன் : இன்று எனக்குப் பிறந்த நாள் கபிலா.

கபிலன் : வாழ்த்துகள், அண்ணா.

## படித்தல்

| செயல்பாடு : 7 | விடையளித்தல் |
| --- | --- |

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.



பெண்கட்குக் கல்வி வேண்டும்
உலகினைப் பேணு தற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும்
கல்வியைப் பேணுதற்கே

கல்வியில்லாத பெண்கள்
களர்நிலம் அந்நிலத்தில்
புல்விளைந்திடலாம்; நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை

வினாக்கள்

1. யாருக்குக் கல்வி வேண்டும் ?
2. பெண்களுக்குக் கல்வி ஏன் வேண்டும் ?
3. கல்வியில்லாத பெண்கள் எதற்கு ஒப்பாவர் ?
4. களர்நிலத்தில் எது விளையும் ?
5. பாடலுக்கேற்ற தலைப்பு இடுக.

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

I. கீழ்க்காணும் வினாத்தொடரினைப் படித்து ஆம் / இல்லை என விடை எழுதுக. 5 x 1 = 5

1. திருமந்திரம் சைவத் திருமுறைகளில் பத்தாவது திருமுறையா ? (ஆம் / இல்லை)
2. சூசையப்பர் இயற்றிய நூல் தேம்பாவணியா ? (ஆம் / இல்லை)
3. சங்கரதாசு சுவாமிகள் தமிழ்நாடகத் தலைமையாசிரியரா ? (ஆம் / இல்லை)
4. மதங்கசூளாமணி நூலினை சுவாமி விபுலானந்தர் எழுதினரா ? (ஆம் / இல்லை)
5. வெற்றிலை நட்டான் என்பது சினையாகு பெயரா ? (ஆம் / இல்லை)

II. பொருந்தாதனவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 x 1 = 5

1. ஞானோபதேசம், திருமந்திரம், பரமார்த்த குரு கதை, தொன்னூல் விளக்கம்
2. பம்மல் சம்பந்தனார், ஔவை சண்முகனார், சங்கரதாசு சுவாமிகள், பரிதிமாற்கலைஞர்
3. செயிற்றியம், முறுவல், நன்னூல், சயந்தம்
4. பவளக்கொடி, இலவகுசா, மனோகரன், பிரகலாதன்
5. பொரியல், அவியல், சித்திரை, சுண்டல்

# கம்பராமாயணம்

தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே. *

– கம்பர்



**பொருள் :** சரயு ஆறு மகரந்தப்பொடிகளைச் சிந்தும் சோலைகளை வளப்படுத்தியும், சண்பக வனங்களைக் கடந்தும், அரும்புகள் விரிந்திருக்கின்ற குளங்களை நிரப்பியும், புதுமணல்மிக்க நீர்நிலைகள் வழியாகவும், குருக்கத்தி வேலியிட்ட கமுகத்தோட்டங்களில் பாய்ந்தும், வயல்களைச் செழிக்கச் செய்தும் பாய்ந்து செல்வது, உடலினுள் உயிர்புகுந்து பரவுவதனைப் போன்று விளங்குகிறது.

**சொற்பொருள் :** தாது – மகரந்தம்; போது – மலர்; பொய்கை – குளம்; பூகம் – கமுகம் (பாக்கு மரம்).

**ஆசிரியர் குறிப்பு**

| | | |
|---|---|---|
| பெயர் | : | கம்பர் |
| ஊர் | : | நாகை மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தேரழுந்தூர். |
| போற்றியவர் | : | சடையப்ப வள்ளல் |
| இயற்றிய நூல்கள் | : | சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம். |
| காலம் | : | கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு எனக் கூறுவர். |

கம்பர், வடமொழியில் வால்மீகி எழுதிய இராமாயணத்தைத் தழுவித் தமிழில் காப்பியம் இயற்றினார்; இயற்றிய அந்நூலுக்கு, இராமாவதாரம் எனப் பெயரிட்டார். அதுவே கம்பராமாயணம் என வழங்கலாயிற்று. எனவே, இது வழிநூல் எனப்படுகிறது. கதை மாந்தரின் வடசொற் பெயர்களைத் தொல்காப்பிய நெறிப்படி தமிழ்ப்படுத்திய பெருமைக்குரியவர் கம்பர்.

**நூல் குறிப்பு :** கம்பராமாயணம் ஆறு காண்டங்களையுடையது. அவை: பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்பன. (காண்டம் – பெரும் பிரிவு; படலம் – உட்பிரிவு) இப்பாடல் பால காண்டத்து ஆற்றுப்படலத்தில் உள்ளது. தற்போதைய உத்தரப்பிரதேச மாநிலத்தில் பாயும் சரயு நதியின் வளம், இதில் கூறப்பட்டுள்ளது.

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. பொருள் எழுதுக.

1. தாது ________ 2. சோலை ________ 3. போது ________

2. பிரித்து எழுதுக.

1. சண்பகக்காடு ________ 3. போதவிழ் ________

2. வனந்தொறும் ________ 4. உயிரென ________

3. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கம்பர் பிறந்த ஊர் ________ .

2. கம்பரை ஆதரித்த வள்ளல் ________ .

3. கம்பராமாயணத்தில் அமைந்துள்ள காண்டங்களின் எண்ணிக்கை ________ .

ஆ) குறுவினாக்கள்

1. கம்பர் – குறிப்பு எழுதுக.

2. கம்பராமாயணம் – குறிப்பு எழுதுக.

இ) சிறுவினா

சரயு நதி எவ்வாறு உலவியது எனக் கம்பர் குறிப்பிடுகிறார் ?

தமிழ்

### விழுதும் வேரும்

தூலம்போல் வளர்கி ளைக்கு
 விழுதுகள் தூண்கள்! தூண்கள்
ஆலினைச் சுற்றி நிற்கும்
 அருந்திறல் மறவர்! வேரோ
வாலினைத் தரையில் வீழ்த்தி
 மண்டிய பாம்பின் கூட்டம்!
நீலவான் மறைக்கும் ஆல்தான்
 ஒற்றைக்கால் நெடிய பந்தல்! *

– பாரதிதாசன்

பொருள்: தூலம்போல் வளர்ந்துள்ள ஆலங்கிளைக்கு விழுதுகள் தூண்களாகத் திகழ்கின்றன. தூண்களெல்லாம் ஆலமரத்தைச் சுற்றி நிற்கும் வீரர்களாகக் காட்சி அளிக்கின்றன. வேர்கள் எல்லாம் தரையில் வாலை ஊன்றித் தோன்றும் பாம்புக் கூட்டம்போல் காணப்படுகின்றன. வானை மறைக்கும் ஆலமரம் ஒற்றைக்காலுடன் விரிந்து பரந்த பந்தலாகத் தோன்றுகின்றது.

சொற்பொருள் : திறல் – வலிமை; மறவர் – வீரர்.



### ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாரதிதாசன் |
| இயற்பெயர் | : | சுப்புரத்தினம் |
| பெற்றோர் | : | கனகசபை – இலக்குமி |
| ஊர் | : | புதுச்சேரி |
| காலம் | : | 29. 04. 1891முதல் 21. 04. 1964வரை |
| சிறப்புப்பெயர்கள் | : | பாவேந்தர், புரட்சிக்கவிஞர் |

சிறப்பு : பாரதியாருடன்கொண்ட நெருங்கிய தொடர்பினால் பாரதிதாசன் எனத் தன்பெயரை அமைத்துக்கொண்டார். தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கவிதை வடிவில் தந்தவர்.

இயற்றிய நூல்கள் : பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, கண்ணகி புரட்சிக் காப்பியம், குறிஞ்சித்திட்டு, தமிழியக்கம் முதலியன. இங்கு இடம்பெற்றுள்ள பாடல் அழகின் சிரிப்பு என்னும் நூலில் 'விழுதும் வேரும்' என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ளது.



## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. பொருள் எழுதுக.

   1. திறல் ________________  2. மறவர் ________________

2. பிரித்து எழுதுக.

   1. அருந்திறல் ________________  2. ஒற்றைக்கால் ________________

3. கோடிட்ட இடத்தை நிரப்புக.

   1. 'அழகின் சிரிப்பு' நூலை எழுதியவர் ________________ .
   2. பாரதிதாசனின் இயற்பெயர் ________________ .
   3. பாரதிதாசன் பிறந்த ஊர் ________________ .

### ஆ) குறுவினா

பாரதிதாசன் இயற்றிய நூல்கள் யாவை ?

### இ) சிறுவினாக்கள்

1. 'பாரதிதாசன்' – குறிப்பு எழுதுக.
2. ஆலமரத்தின் விழுதும் வேரும் எவ்வெவற்றைப் போன்று காட்சியளித்தன எனப் பாரதிதாசன் பாடுகின்றார் ?

# காட்டுயிரிகள்

எழில் : “அப்பா....”

அப்பா : “என்ன எழில்...”

எழில் : “அப்பா, அடுத்த வாரம் எங்கள் பள்ளியில் கட்டுரைப்போட்டி நடைபெற உள்ளது.

அப்பா : “அப்படியா, மிக்க மகிழ்ச்சி. போட்டிகளில் கலந்துகொள்வது என்றால், உனக்குக் கரும்பு தின்பது போன்றதாயிற்றே.”

எழில் : “ஆனால், அப்பா...”

அப்பா : “என்னம்மா ?”

எழில் : “அப்பா, எனக்குக் கொடுத்துள்ள தலைப்பைப்பற்றிச் செய்திகள் வேண்டுமே.”

அப்பா : “அவ்வளவுதானே! தலைப்பு என்னவென்று சொல்லம்மா.”

எழில் : “காட்டுயிரிகள்” என்பதுதான் அந்தத் தலைப்பு.

அப்பா : நல்ல தலைப்பு. சரி, இவ்வுலகில் நம்மைச்சுற்றி என்னவெல்லாம் இருக்கின்றன தெரியுமா ? ஐம்பூதங்களும் உயிருள்ள, உயிரற்ற பொருள்களும் இருக்கின்றன. ஓரறிவுமுதல் ஆறறிவுவரை உள்ள உயிர்கள் அவற்றுள் அடக்கம்.

எழில் : அப்பா, ஐம்பூதங்கள் என்பன நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்தும்தானே. ஆனால், நாம் ஆறறிவு உயிர்கள் அல்லவா! ஓரறிவு, ஈரறிவு பற்றிச் சொல்லுங்கள் அப்பா.

அப்பா : பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பிய மரபியலில் ஓரறிவுமுதல் ஆறறிவுவரை உள்ள உயிரிகளைப்பற்றித் தெளிவாகத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

மெய்யினால் அறியும் உயிர் ஓரறிவு உடையது; இதற்குச் சான்றாக, புல், மரம் முதலிய தாவரங்களைக் கூறலாம். மெய், வாய் – ஈரறிவு; நத்தை, சங்கு முதலியன. மெய், வாய், மூக்கு – மூவறிவு; எறும்பு, கரையான், அட்டை முதலியன. மெய், வாய், மூக்கு, கண் – நாலறிவு; நண்டு, தும்பி, வண்டு முதலியன. மெய், வாய், மூக்கு, கண், செவி – ஐயறிவு; விலங்கு, பறவை முதலியன. மெய், வாய், மூக்கு, கண், செவி, மனம் –ஆறறிவு; மனிதர்.

எழில் : உலகில் விலங்குகளே எண்ணிக்கையில் மிகுதியாகக் காணப்படுகின்றன. விலங்குகளை ஒப்பிடும்போது மனிதர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. விலங்குகள் மிகுதியானால் அவை மனிதர்களைக் கொன்று விடாதா ?

அப்பா : உலகில் உயிர்கள் அனைத்தும் இயற்கையிலேயே சமநிலையில் உள்ளன.

எழில் : இயற்கைச் சமநிலையா ? அப்படியென்றால் என்ன ?

அப்பா : சொல்கிறேன், கேள். எடுத்துக்காட்டாக, பாம்புகள் முழுவதும் அழிக்கப் படுவதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது என்ன நிகழும் ? கற்பனை செய்துபார்.

எழில் : பாம்பே உலகில் இருக்காது. அதனால், நமக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது.

அப்பா : அப்படியில்லை, எழில். பாம்புகள் நமக்குப் பல நன்மைகளைச் செய்கின்றன. பாம்புகள் இல்லையென்றால், அவற்றின் உணவான எலிகள் பெருகிவிடும். எலிகளின் எண்ணிக்கை பெருகிவிட்டால், அவை உணவுத் தானியங்களை அழித்துவிடும்.

எழில் : அப்படியா ?

அப்பா : ஆமாம், எழில். இதுபோலவே இயற்கை வாழிடச் சூழலில் குறிப்பிட்ட ஒரு விலங்கினம் அழியும்போது, இயற்கைச் சமநிலையில் மாற்றம் ஏற்படும்



உணவுச்சங்கிலி

இதனால், பல பின் விளைவுகள் ஏற்படும். எனவே, தாவரங்களும் விலங்குகளும் உலகில் சமநிலையில் இருப்பதே நல்லது, புரிந்ததா ?

எழில் : நன்றாகப் புரிந்ததப்பா. உணவுச் சங்கிலி, உணவு வலை என்பனவும் இதனோடு தொடர்புடையனவே!

( எழிலின் அம்மாவும், அவர்களின் உரையாடலில் இணைந்து கொள்ளுதல்)

அம்மா : சரியாகச் சொன்னாய், எழில். உயிரினங்கள் வாழ்வதற்காக உணவை உட்கொள்கின்றன. உணவில் ஆற்றல் உள்ளது. ஓர் உயிரியிலிருந்து மற்றோர் உயிரிக்கு உணவுமூலம் ஆற்றல் சங்கிலித் தொடர்போலக் கிடைக்கின்றது. உணவுச்சங்கிலி தாவரங்களிலிருந்தே தொடங்குகின்றது. எனவே, உயிரிகளின் ஆற்றலுக்கு அடிப்படையாக விளங்குவன தாவரங்களே. உனக்குத் தெரிந்த உணவுச் சங்கிலி ஒன்றனைச் சொல்.

எழில் : மான், புல்லை உணவாகக்கொள்கிறது. சிங்கம் மானை உணவாகக் கொள்கிறது. ஆனால், இது கொடுமையாக இல்லையா, அம்மா ?

அம்மா : நீ சொல்வது சரிதான். தீதறியா மானைச் சிங்கம் கொல்வதும், தவளை பூச்சியைக் கொல்வதும், பாம்பு தவளையைக் கொல்வதும் அந்தந்த உயிரிகளின் இயல்பு. இயற்கையிலேயே உயிரிகள் உணவுக்காக ஒன்றனையொன்று சார்ந்து வாழ்கின்றன.இவ்வாறு உலகில் பிறப்பும் இறப்பும், அழிவும் ஆக்கமும் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. காடுகளை அழிக்காமல் விலங்குகளைப் பாதுகாப்பதும் நம் கடமை.

எழில் : இவற்றை நம்மால் எப்படிப் பாதுகாக்க இயலும் ?

அப்பா : உலகில் நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட தாவரங்களும், எழுபத்தைந் தாயிரத்திற்கும் மேற்பட்ட விலங்குகளும் வாழ்கின்றன. தாவரங்களை வளர்த்தல், காடுகளைப் பாதுகாத்தல், காட்டுவிலங்குகளைப் பாதுகாத்தல் போன்றவை சூழலியலில் அடங்கும்.





அருவிகளைக் காணச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் பலர் அருவியில் நீராடி மகிழ்கின்றனர். மூலிகைகள் கலந்து வீழும் அருவியில் இயற்கையாகக் குளிக்காமல், செயற்கை வேதிப்பொருள்களைக் (சோப்பு, சாம்பு) குளிக்கப் பயன்படுத்துகின்றனர். அங்கு வாழும் காட்டு விலங்குகள் இயற்கை நீரைக் குடிக்க இயலாத நிலைக்குத் தள்ளப்படுகின்றன. நீர் மாசடைய நாமே காரணமாக இருக்கிறோம்.

வானில் பறக்கும் பறவையோ நீரில் நீந்தும் மீனோ நீர்நிலைகளை மாசுபடுத்துவதில்லை. மரம் வளர்ப்போம்; மழை பெறுவோம் என்பதனை நீ அறிந்துள்ளாய் அல்லவா ? அசாமில் மரங்கள் அடர்ந்துள்ள சிரபுஞ்சிதான் உலகிலேயே அதிக அளவு மழைபெறும் இடம். இந்தியாவில் எட்டில் ஒரு பங்கு அளவே காடுகள் உள்ளன. இவை மழைவரக் காரணமாக இருப்பதனோடு மட்டுமல்லாமல், வனவிலங்குகளுக்கும் புகலிடமாக உள்ளன.

மண் அரிப்பைத் தடுத்தல், சிற்றாறுகள் தோன்றக் காரணமாக இருத்தல், தொழில் வளர்ச்சிக்கு உதவுதல், மருந்துப் பொருள்கள், மூலிகைகள் தருதல் என எண்ணற்ற நன்மைகள் நமக்குக் காடுகளால் விளைகின்றன. காட்டு விலங்குகளிடமிருந்து தந்தம், தோல், நறுமணப்பொருள், தேன் முதலிய பல்வகைப் பொருள்கள் கிடைக்கின்றன.

எழில் : இவ்வளவு நன்மைகளா ? அப்படியென்றால், இவற்றை நாம் பாதுகாப்பது இன்றியமையாதது. இதனைத் தனியொரு மனிதனால் எவ்வாறு செய்ய இயலும் ?

அம்மா : செய்ய முடியாதுதான். அதனால்தான், இந்தியக் காட்டுவாழ் உயிரிகள் வாரியம் அமைக்கப்பட்டது. அக்டோபர் முதல் வாரத்தை அரசு வனவிலங்கு வாரமாகக் கொண்டாடி வருகிறது. வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்டம், வனவிலங்குகளை வேட்டையாடுவதனைத் தடுக்கிறது. அழிந்துவரும் விலங்குகளை முற்றழிவிலிருந்து பாதுகாக்க வழிசெய்கிறது. நமது நாட்டில் பதினேழு வனவிலங்குப் பாதுகாப்பு இடங்களும், அறுபத்தாறு தேசிய வனவிலங்குப்

பூங்காக்களும், முந்நூற்று அறுபத்தெட்டுப் புகலிடங்களும் அமைந்துள்ளன.

எழில் : எங்கள் ஆசிரியர் ஒவ்வோராண்டும் அக்டோபர்த் திங்கள் நான்காம் நாள் உலக வனவிலங்கு நாள் கொண்டாடப்படுவதாகக் கூறியுள்ளார்.

அப்பா : ஆமாம், எழில். அந்நாளில் வனவிலங்குகளையும் காடுகளையும் அழிக்காமல் பாதுகாக்க நாம் உறுதிமொழி ஏற்போம்.

எழில் : உறுதியாகச் செய்வோம் , அப்பா. அத்துடன் நான் கட்டுரை எழுதுவதற்குத் தேவையான செய்திகளையும் உங்கள் வாயிலாகத் தெரிந்து கொண்டேன். மிக்க மகிழ்ச்சி.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. பிரித்து எழுதுக.**

1. காட்டுயிரிகள் = ____________
2. சிற்றாறு = ____________
3. புகலிடம் = ____________
4. விலங்கினம் = ____________
5. ஐம்பூதங்கள் = ____________
6. வாழிடம் = ____________

**2. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மரம் ____________ உயிர்.
2. உலகிலேயே அதிக மழைபெறும் இடம் ____________ .
3. வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் ____________ ஆண்டில் இயற்றப்பட்டது.

### ஆ) குறுவினாக்கள்

1. எழிலுக்குக் கொடுக்கப்பட்ட கட்டுரைப்போட்டியின் தலைப்பு என்ன ?
2. நீர் மாசடைவதற்கான காரணம் என்ன ?
3. நம்மைச் சுற்றியுள்ள பொருள்கள் யாவை ?
4. இயற்கைச் சமநிலை என்றால் என்ன ?
5. உணவுச்சங்கிலி என்றால் என்ன ? சான்று தருக.
6. வனவிலங்கு வாரம் எப்போதுமுதல் கொண்டாடப்பட்டு வருகிறது ?

### இ) சிறுவினாக்கள்

1. ஓரறிவுமுதல் ஆறறிவுவரை உள்ள உயிர்களாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவன யாவை ?
2. காடுகளால் விளையும் நன்மைகள் யாவை ?
3. வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் எப்போது இயற்றப்பட்டது ? அச்சட்டக் கருத்துகளை எழுதுக.

### ஈ) நெடுவினாக்கள்

1. உணவுச்சங்கிலி, உணவுவலை குறித்து எழுதுக.
2. விலங்குகளைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் யாவை ?
3. இயற்கை வளங்களைப் பாதுகாக்க நாம் என்ன செய்தல் வேண்டும் ?

துணைப்பாடம்

# சென்னை அருங்காட்சியகம்

(ஆசிரியர் வகுப்பினுள் நுழைய, அதுவரை சலசலத்துக் கொண்டிருந்த மாணாக்கர்கள் அமைதியாக எழுந்து நிற்கிறார்கள்.)

மாணாக்கர்கள் : வணக்கம், ஐயா!

ஆசிரியர் : வணக்கம் மாணாக்கர்களே! உட்காருங்கள். உங்களின் மலர்ந்த முகங்களைக் காணும்போது, என் உள்ளம் களிப்படைகின்றது. விடுமுறை நாள்களைப் பயனுள்ளதாகக் கழித்திருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். மேலும், நீங்கள் மகிழ்வுறும்வகையில் நான் கூறப்போகும் செய்தியும் அமையும்.

மாணவன் : ஐயா, அஃது என்னவென்று கூறுங்கள். நாங்கள் மிகவும் ஆவலாக உள்ளோம்.

ஆசிரியர் : இந்த ஆண்டு நாம் கல்விச்சுற்றுலா செல்ல இருக்கின்றோம். இடம் எது தெரியுமா? சென்னை அருங்காட்சியகம்.

மாணவன் : அப்படியா? எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. ஆனால்...

ஆசிரியர் : என்ன ஆனால்...? சொல்லுங்கள்.

மாணவன் : ஐயா, அருங்காட்சியகம்பற்றிக் கேள்விப்பட்டுள்ளோம். ஆயினும், அருங்காட்சியகம் பற்றி எதுவும் எங்களுக்குத் தெரியாதே!

ஆசிரியர் : சொல்கிறேன். ஆனால், விரிவாகவும் விளக்கமாகவும் அறிந்துகொள்ள வேண்டுமெனில், நாம் நேரடியாகச் சென்று அறிந்துகொள்வதுதான் சிறந்ததாகும். எனவே, அருங்காட்சியகம்பற்றிச் சுருக்கமாகச் சொல்கிறேன்.

மாணவன் : ஐயா, மிக்க மகிழ்ச்சி. அருங்காட்சியகம் என்பது என்ன?

ஆசிரியர் : அருங்காட்சியகம் என்பது அரிதான பழம்பொருள்களைத் தொகுத்து வைத்துள்ள இடமாகும்.

மாணவன் : சென்னையில் அருங்காட்சியகம் எங்குள்ளது? எப்போது தொடங்கப் பட்டது?

ஆசிரியர் : சொல்கிறேன். சென்னை எழும்பூரில் அருங்காட்சியகம் அமைந்துள்ளது. இது கி.பி. 1851ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இக்காட்சியகம் முதலில் மைய அருங்காட்சியகம் என்றழைக்கப்பட்டது.





மாணவன் : அருங்காட்சியகத்தில் நாம் என்னென்ன பொருள்களைப் பார்க்கலாம்?

ஆசிரியர் : அருங்காட்சியகத்தில் பதின்மூன்று காட்சியகங்கள் உள்ளன. இவை அனைத்தும் ஆறு கட்டடங்களில் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கட்டடத்திற்கும் தனித்தனிப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. அவை, தலைமைக் கட்டடம், முன் கட்டடம், வெண்கலக் காட்சிக்கூடம், சிறுவர் அருங்காட்சியகம், தேசிய ஓவியக் காட்சிக்கூடம் மற்றும் சமகால ஓவியக் காட்சிக் கூடம் என்பன.

மாணவன் : வியப்பாக இருக்கிறதே. இவையனைத்தையும் ஒரே நாளில் பார்க்க இயலுமா, ஐயா!

ஆசிரியர் : ஆம். முழுவதனையும் ஒரே நாளில் பார்க்க வேண்டுமானால் நேரம் போதாது. கல்விச் சுற்றுலாவில் நீங்கள் பார்க்காமல்விட்ட இடங்களை உங்கள் பெற்றோருடன் சென்று மீண்டும் காணலாம். ஆகவே, மன வருத்தம் கொள்ளாதீர்கள்.

மாணவன் : அவ்வாறே செய்கிறோம், ஐயா. ஆனால்...

ஆசிரியர் : மீண்டும் என்ன ஆனால்...

மாணவன் : நீங்கள் கூறிய ஆறு கட்டடங்களில் எவற்றையெல்லாம் வைத்துள்ளார்கள் என்று கூறுங்கள், ஐயா!

ஆசிரியர் : சொல்கிறேன். தலைமைக் கட்டடம் இரண்டு பகுதிகளாக அமைக்கப் பட்டுள்ளது. கீழ்த்தளத்தில் சிற்பங்கள், அமராவதி கற்சிலைகள், தஞ்சாவூர்த் தளவாடங்கள், தாமிரத்தகட்டுச் சாசனங்கள் உள்ளன. ஊர்வன, பறப்பன, பாலூட்டிகள் முதலிய விலங்கினங்கள் உயிருடன் இருப்பதனைப்போலப் பதப்படுத்தப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேல்தளத்தில் அஞ்சல்தலைகள், தாவரவியல் தொடர்பானவை, பவளப்பாறைகள், முதுகெலும்பற்ற உயிரினங்கள், மீன்கள், கல்வெட்டியல், சிந்துவெளி நாகரிகம் தொடர்பானவற்றைக் காணலாம்.



மாணவன் : இக்கட்டடத்திலுள்ளனவற்றைக் காண்பதற்கு நெடுநேரம் ஆகுமா ?

ஆசிரியர் : ஆமாம். அங்குள்ள பறவைகள், விலங்குகளை நீங்கள் மீண்டும் மீண்டும் காணவேண்டும் என நினைப்பீர்கள். ஆப்பிரிக்க யானையின் மிகப்பெரிய எலும்புக்கூட்டின் மாதிரி வடிவம், உலகிலேயே மிகப்பெரிய விலங்கான திமிங்கிலத்தின் எலும்புக்கூட்டின் மாதிரி வடிவம் ஆகியன உங்களை வியப்பில் ஆழ்த்தும்.

மாணவன் : ஐயா, முன் கட்டடத்திற்குள் சென்றால் எவற்றைப் பார்க்கலாம் ?

ஆசிரியர் : முன் கட்டடப் பகுதிக்குள் மானிடவியல் பகுதி அமைந்துள்ளது. தொல்லியல் பகுதியில் ஆதிகால மனிதனின் தோற்றம், வளர்ச்சி, பயன்படுத்திய கற்கருவிகள், வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ள மன்னர்களின் படைக்கருவிகள், பழங்கால இசைக்கருவிகள், கலை, பண்பாட்டை விளக்கும் பொருள்களும் இடம்பெற்றுள்ளன.

மாணவன் : நீங்கள் சொல்வதனைக் கேட்கும்போதே உடனே சென்று பார்க்கவேண்டும் என்று தோன்றுகிறது, ஐயா !







**ஆசிரியர்** : நீங்கள் கூறுவது உண்மைதான். காட்சியகத்திற்குள் நீங்கள் சென்று விட்டால், விரைவாக வெளியில் வருவதற்கு விரும்பமாட்டீர்கள். அங்குள்ள பொருள்களைக் காணவேண்டும் என்று உங்களிடையே ஆவல் எழுவது இயற்கைதானே! சரி, வெண்கலக் காட்சிக்கூடத்தில் நீங்கள் காண்பனவெல்லாம் என்ன தெரியுமா? தொல்லியல், நாணயவியல், வேதிக்காப்புப் பகுதிகளில் சைவ, வைணவ, பௌத்த, சமண மதங்களுக்கான வெண்கலச் சிற்பங்களைக் காணலாம். ஒவ்வொரு காலத்திலும் பயன்படுத்தப்பட்டு வந்த நாணயங்கள், பதக்கங்கள் ஆகியவற்றையும் பார்க்கலாம்.

**மாணவன்** : ஐயா, சிறுவர் அருங்காட்சியகத்தில் என்னென்ன பார்க்கலாம்?

**ஆசிரியர்** : அறிவியல், போக்குவரத்து, தொழில்நுட்பம், பல்வேறுவகை ஆடைகளுடன்கூடிய பொம்மைகள் முதலியவற்றைப் பார்க்கலாம். தேசிய ஓவியக் காட்சிக்கூடத்தில் மிகச் சிறந்த ஓவியங்கள், மரபு ஓவியங்கள், சிற்றோவியங்கள், தஞ்சாவூர் ஓவியம் முதலியவற்றைக் காணலாம். சமகால ஓவியக் காட்சிக்கூடத்தில் பிரித்தானிய ஓவியங்களும், தற்கால ஓவியங்களும் உங்கள் கண்களுக்கு விருந்தளிக்கும்வகையில் அமைக்கப் பட்டுள்ளன.

**மாணவன்** : எங்களையெல்லாம் எப்போது ஐயா அழைத்துச் செல்வீர்கள்? நாங்கள் அனைவரும் பார்ப்பதற்கு ஆர்வத்துடன் இருக்கிறோம்.

**ஆசிரியர்** : மிக்க மகிழ்ச்சி, மாணாக்கர்களே. தலைமையாசிரியருடன் கலந்துபேசி, குறிப்பிட்ட ஒரு நாளில் செல்வோம், மகிழ்ச்சிதானே.

(மணி ஒலிக்கிறது)

## மாதிரி வினா

### கட்டுரை வினா

சென்னை அருங்காட்சியகம் குறித்துக் கட்டுரை எழுதுக.

# வேற்றுமை

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : அனைவருக்கும் வணக்கம்.

கரும்பலகையில் எழுதிய தொடர்களைப் படித்துப் பாருங்கள்.

1. முருகன் வந்தான்.
2. முருகனைப் பார்த்தான்.
3. முருகனால் வரையப்பட்டது.

முதல் தொடரில் முருகன் என்னும் பெயர் எழுவாய்.

இரண்டாம் தொடரில் முருகன் என்னும் பெயர் செயப்படுபொருள்.

மூன்றாம் தொடரில் முருகன் என்னும் பெயர் செயப்படுபொருளாகவும் கருத்தாவாகவும் வேறுபடுகிறது.

இவ்வாறு பெயரை வேறுபடுத்துவது வேற்றுமை எனப்படும். அவ்வேற்றுமை எண் வகைப்படும்.

மாணவர் : இதனை ஏழாம் வகுப்பிலேயே படித்தோம், ஐயா. ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன வேற்றுமை உருபுகள், ஐயா.

ஆசிரியர் : மறக்காமல் சொன்னீர்கள், மகிழ்ச்சி. இவ்வகுப்பில் சிறிது விரிவாகத் தெரிந்து கொள்வீர்கள். இப்போது ஒவ்வொரு வேற்றுமை உருபு பற்றியும், அஃது எவ்வெப்பொருளில் வரும் என்பது பற்றியும் தெரிந்துகொள்ளுங்கள்.

மாணவர் : விளக்குங்கள், ஐயா.

ஆசிரியர் : ‘முகிலன் வந்தான்’ என்பது ஒரு தொடர். இத்தொடரில் முகிலன் என்பது எழுவாய். இந்த எழுவாய், வந்தான் என்னும் பயனிலையை ஏற்று இயல்பாக வருகிறது. இந்த எழுவாய் வினைமுற்று, பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றுள் ஒன்றனைப் பயனிலையாகக்கொண்டு முடியும். இவ்வாறு வருவது எழுவாய் வேற்றுமை அல்லது முதல் வேற்றுமை எனப்படும். இதற்கு உருபு இல்லை.

(எ.கா.) 1. மாடு வந்தது – வினைமுற்றைக்கொண்டு முடிந்தது.

2. வளவன் என் தம்பி – பெயர்ப்பயனிலையைக் கொண்டு முடிந்தது.

3. வளர்மதி யார்? – வினாப்பெயர்ப் பயனிலையைக்கொண்டு முடிந்தது.

மாணவர் : இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ'தானே, ஐயா.

ஆசிரியர் : ஆம். சரியாகச் சொன்னாய். 'முருகேசன் செடியை நட்டான்' இத்தொடரில் முருகேசன் என்பது எழுவாய். 'செடி' என்பதும் பெயர்ச் சொல்லே. அஃது 'ஐ' என்னும் உருபை ஏற்றுச் செயப்படுபொருளை உணர்த்துகிறது. இவ்வாறு ஒரு பெயர்ச்சொல்லின் பொருளைச் செயப்படுபொருளாக வேறுபடுத்துவது இரண்டாம் வேற்றுமை எனப்படும். இதனைச் செயப்படுபொருள் வேற்றுமை எனவும் வழங்குவர். இதன் உருபு 'ஐ'.

அஃது ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய அறுவகைப் பொருள்களில் வரும்.

| | | |
|---|---|---|
| வளவன் பள்ளியைக் கட்டினான் | – | ஆக்கல் |
| சோழன் பகைவரை அழித்தான் | – | அழித்தல் |
| தேன்மொழி கோவிலை அடைந்தாள் | – | அடைதல் |
| குழகன் சினத்தை விடுத்தான் | – | நீத்தல் |
| கயல்விழி குயிலைப் போன்றவள் | – | ஒத்தல் |
| கண்ணன் செல்வத்தை உடையவன் | – | உடைமை |

மாணவர் : மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன தாமே, ஐயா.

ஆசிரியர் : சரியாகச் சொன்னாய். இவை தம்மையேற்ற பெயர்ப்பொருளைக் கருவி, கருத்தா, உடனிகழ்ச்சிப் பொருளாக வேறுபடுத்தும். இவற்றுள் ஆல், ஆன் உருபுகள் கருவி, கருத்தா ஆகிய இருபொருள்களிலும் வரும். கருவி முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும்.

(எ.கா.) நாரால் கயிறு திரித்தான்.

முதற் கருவி (காரியமாக மாறி அஃதாகவே இருப்பது).

கையால் கயிறு திரித்தான்.

துணைக்கருவி (காரியம் செயல்படும்வரை துணையாக இருப்பது.)

இதேபோல் கருத்தாவும் இயற்றுதல் கருத்தா, ஏவுதல் கருத்தா என இருவகைப்படும்.

(எ.கா.) 1. தச்சனால் நாற்காலி செய்யப்பட்டது.

இயற்றுதல் கருத்தா. (தானே செய்வது.)

தமிழ்

2. கோவில் அரசனால் கட்டப்பட்டது. – ஏவுதல் கருத்தா.
(தான் செய்யாமல் பிறரைச் செய்ய வைப்பது.)

மாணவர் : ஐயா, உடனிகழ்ச்சி என்றால் என்ன ?

ஆசிரியர் : ஓர் எழுவாயின் செயலுடன் பிறிதொன்றனது செயலும் உடனிகழ்வது உடனிகழ்ச்சிப் பொருள் எனப்படும்.

(எ.கா.) தாயொடு குழந்தை சென்றது.

நாயொடு குட்டியும் சென்றது.

கருவிப்பொருளில் கொண்டு என்னும் சொல்லும் உடனிகழ்ச்சிப் பொருளில் உடன் என்னும் சொல்லும் சொல்லுருபுகளாக வரும்.

(எ.கா.) நூல்கொண்டு தைத்தான்.

ஆறுமுகனுடன் வள்ளி சென்றாள்.

மாணவர் : நான்காம் வேற்றுமை உருபு 'கு' தானே, ஐயா.

ஆசிரியர் : வரிசையாகக் கேட்கிறாய், மகிழ்ச்சி. இது கொடை, பகை, நட்பு, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை எனப் பல பொருளில் வரும்.

(எ.கா.)

| | | | |
|---|---|---|---|
| 1. | புலவர்க்குப் பரிசு கொடுத்தார். | – | கொடை |
| 2. | நோய்க்குப் பகை மருந்து. | – | பகை |
| 3. | பாரிக்கு நண்பர் கபிலர். | – | நட்பு |
| 4. | வீட்டுக்கு ஒரு பிள்ளை. | – | தகுதி |
| 5. | வளையலுக்குப் பொன். | – | அதுவாதல் |
| 6. | கூலிக்கு வேலை. | – | பொருட்டு |
| 7. | கோவலனுக்கு மனைவி கண்ணகி. | – | முறை |
| 8. | திருத்தணிக்கு வடக்கே வேங்கடம். | – | எல்லை |

'கு'வுக்குப் பதிலாகப் பொருட்டு, நிமித்தம் என்பன சொல்லுருபுகளாக வரும்.

(எ.கா.) கூலியின்பொருட்டு வேலை செய்தான்.

வேலையின் நிமித்தம்அயலூர் சென்றான்.

கு உடன் ஆக என்பதும் சேர்ந்து வரும்.

(எ.கா.) கூலிக்காக வேலை செய்தான்.

மாணவர் : ஐந்தாம் வேற்றுமை உருபுகள் இல், இன் என்பனதாமே ,ஐயா.

ஆசிரியர் : சரியாகச் சொன்னாய். இவை தம்மை ஏற்ற பெயர்ப்பொருளை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப்பொருள்களாக வேறுபடுத்தும்.

(எ.கா.) 1. தலையின் இழிந்த மயிர் – நீங்கல்

2. பாலின் நிறம் கொக்கு – ஒப்பு

3. சென்னையின் மேற்கு வேலூர் – எல்லை

4. அறிவில்மிக்கவர் ஔவை – ஏது

இருந்து, நின்று, விட, காட்டிலும் என்பன ஐந்தாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபுகள் ஆகும்.

(எ.கா.) 1. வேலன் ஊரிலிருந்து வந்தான். – இருந்து

2. அரசன் தேரினின்று இறங்கினான். – நின்று

3. கயல்விழி என்னைவிடப் பெரியவள் – விட

4. தமிழைக்காட்டிலும் சுவையான மொழி உண்டா ?– காட்டிலும்

மாணவர் : ஆறாம் வேற்றுமை உருபுகள் அது, ஆது, அ என்பவைதாமே, ஐயா.

ஆசிரியர் : சரியாகச் சொன்னாய். அது, ஆது என்பன ஒருமைக்கும், அ என்பது பன்மைக்கும் வரும். இவ்வுருபுகள் கிழமைப் (உரிமை) பொருளில் வரும்.

(எ.கா.) 1. எனது வீடு.

2. எனாது நூல்.

3. தை, மாசி எனத் தமிழ் மாதங்கள் பன்னிரண்டு.

ஆறாம் வேற்றுமைக்கு உடைய என்பது சொல்லுருபாக வரும்.

(எ.கா.) 1. என்னுடைய வீடு.

2. நண்பனுடைய சட்டை.

மாணவர் : ஏழாம் வேற்றுமை உருபுகள் கண், கால், மேல், கீழே, இடம், இல் முதலியனதாமே, ஐயா.

ஆசிரியர் : சரியாகச் சொன்னாய். இப்போது சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

(எ.கா.) 1. மணியில் ஒலி. – இல்

2. வீட்டின்கண் பூனை. – கண்

3. அவனுக்கு என்மேல் வெறுப்பு. – மேல்

4. பெட்டியில் பணம் உள்ளது. – இல்

குறிப்பு: ‘இல்’ என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபு ஒப்பு, ஏது, நீங்கல் ஆகிய பொருளில் வரும். ஏழாம் வேற்றுமை உருபு இல் இடப்பொருளில் வரும்.

(எ.கா.) 1. மாலையில் மலர்கள்.

இல் ஏழாம் வேற்றுமை உருபு இடப்பொருளில் வந்தது.

2. மாலையிலிருந்து மலரைப் பிரித்தான்.

இல் ஐந்தாம் வேற்றுமை உருபு நீங்கல் பொருளில் வந்தது.

மாணவர் : தெளிவாகப் புரிந்தது, ஐயா. எட்டாம் வேற்றுமை, விளிவேற்றுமை தானே!

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய். படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக்கி அழைக்க இவ்வேற்றுமை பயன்படுகிறது. இதனை விளிவேற்றுமை என வழங்குவர். (எ.கா.) கண்ணா வா!, கிளியே பேசு!

பயிற்சி : உரிய விடையைத் தேர்ந்து எழுதுக.

1. வினைமுற்று, பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இவற்றினைப் பயனிலையாகக்கொண்டு முடிவது.

அ) நான்காம் வேற்றுமை ஆ) இரண்டாம் வேற்றுமை

இ) முதல் வேற்றுமை ஈ) ஆறாம் வேற்றுமை

2. பெயர்ச்சொல்லைக் கருத்தாவாக மாற்றுவது.

அ) முதல் வேற்றுமை ஆ) மூன்றாம் வேற்றுமை

இ) இரண்டாம் வேற்றுமை ஈ) ஐந்தாம் வேற்றுமை

3. கிழமைப்பொருளில் வருவது.

அ) மூன்றாம் வேற்றுமை ஆ) ஆறாம் வேற்றுமை

இ) எட்டாம் வேற்றுமை ஈ) ஐந்தாம் வேற்றுமை

4. இராமனுக்குத் தம்பி இலக்குவன். இதிலுள்ள வேற்றுமை உருபு பொருளில் வந்துள்ளது.

அ) கொடை ஆ) பகை

இ) நட்பு ஈ) முறை

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இரண்டாம் வேற்றுமை உருபு ______________ எனவும் அழைக்கப்பெறும்.
2. கருவி, கருத்தா ஆகிய பொருள்களில் ______________ உருபு வரும்.
3. ஐந்தாம் வேற்றுமையில் வரும் ‘இல்’உருபு ______________ பொருளில் வரும்.
4. எட்டாம் வேற்றுமை ______________ பொருளில் வரும்.
5. வாலிக்குப் பகைவன் சுக்ரீவன் இத்தொடரில் உள்ள ‘கு’ உருபு ______________ என்னும் பொருளில் வந்துள்ளது.
6. முதல் வேற்றுமைக்கு ______________ இல்லை.

தமிழ்

2. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. காட்டை அழித்தான் | – | ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபு |
| 2. புலியைப் போன்றவன் | – | பொருட்டு |
| 3. கூலியின்பொருட்டு வேலை | – | அழித்தல் |
| 4. என்னுடைய வீடு | – | ஒத்தல் |
| | – | எல்லை |

2.1. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. முதல் வேற்றுமை | – | கிளையின்கண் காக்கை |
| 2. மூன்றாம் வேற்றுமை | – | கல்வியில் பெரியர் கம்பர் |
| 3. ஐந்தாம் வேற்றுமை | – | மரத்தால் செய்தது. |
| 4. ஏழாம் வேற்றுமை | – | அவன் யார் ? |
| | – | வீட்டைக் கட்டினான். |

ஆ) குறுவினாக்கள்

1. வேற்றுமையாவது யாது ? அதன் வகைகளைக் கூறுக.
2. இரண்டாம் வேற்றுமை உருபு எவ்வெப்பொருளில் வரும் ?
3. மூன்றாம் வேற்றுமை உருபுகள் யாவை ?
4. கருத்தா எத்தனை வகைப்படும் ? சான்று தருக.
5. நான்காம் வேற்றுமை உருபு யாது ? அஃது எவ்வெப்பொருளில் வரும் ?
6. ஆறாம் வேற்றுமையில் ஒருமைக்கு வரும் உருபுகள் யாவை ? சான்று தருக.

இ) செயல் திட்டம்

1. நும் பாடப்பகுதியில் உள்ள வேற்றுமை உருபுகளுடன் கூடிய தொடர்களைத் தொகுக்க.
2. தொகுத்த வேற்றுமை உருபுகளை வகைப்படுத்துக.

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

கீழ்க்காணும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

ஆக்கம் தரும் அறிவியல் வளர்ச்சி

ஆ) படித்தல் திறன்

கீழுள்ள பகுதியைப் படித்து நயம் உணர்க.

இராமானுசக் கவிராயர் என்பவர் இலக்கணப் புலவர்; நன்னூலுக்குக் காண்டிகையுரை கண்டவர். ஒருமுறை புலவர் பலர், அவருடன் இலக்கணம்பற்றி உரையாடிக்கொண்டிருந்தனர். புலவர் ஒருவர், கவிராயரிடம் குற்றிலுகரத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுக் கூறுங்கள் என்றார். கவிராயர் 'தெரியாது' என்றார். இவ்வளவு பெரிய இலக்கணப் புலவர் குற்றியலுகரம் தெரியாது என்கிறாரே என்று ஒருவரை ஒருவர்

பார்த்துக்கொண்டனர். நிலைமையை உணர்ந்த கவிராயர் குற்றியலுகரத்திற்கு எடுத்துக்காட்டுதானே கேட்டீர்கள். நான் சொன்னது எடுத்துக்காட்டு இல்லையா ? தெரியாது என்னும் சொல்லில் ஈற்றிலுள்ள உகரம் குற்றியலுகரம்தானே என்றார். புலவர் அனைவரும், கவிராயரின் சொல்லாட்சியை எண்ணி வியந்தனர்.

### இ) எழுதுதல் திறன்

விளம்பரங்கள் / அறிவிப்புகள் பார்த்துப் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடையளிக்க.

**வேலைவாய்ப்பு**

சென்னையில் அமைந்துள்ள புகழ்பெற்ற நிறுவனத்திற்கு

**வரவேற்பாளர்கள் தேவை**

கல்வித்தகுதி : முதுகலை நிருவாகவியல்

தமிழிலும் ஆங்கிலத்திலும்

தங்குதடையின்றிப் பேசத் தெரிந்திருத்தல் வேண்டும்.

நேர்காணல் : 15.09.2013 காலை 10.00 மணி

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**கலைவாணி கல்வியியல் நிறுவனம்,**

67, அம்மையப்பன் தெரு, சென்னை – 600 002.

தமிழ்

### வினாக்கள்

1. இந்த விளம்பரம் எதனைப்பற்றியது ?
2. வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனம் எங்கு அமைந்துள்ளது ?
3. விண்ணப்பிப்போர் பெற்றிருக்கவேண்டிய தகுதிகள் யாவை ?
4. நேர்காணல் எப்போது ?
5. விண்ணப்பிக்கும் பணியின் பெயர் என்ன ?

### ஈ) கலந்துரையாடுதல் திறன்

ஐந்து குழுக்களாகப் பிரிந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு துறையில் சாதனை படைத்த அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்துக்கொண்டு வாருங்கள்; தொகுத்த கருத்துகளை வகுப்பில் கலந்துரையாடுங்கள் .

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | இலக்கியம் | – | மகாகவி சுப்பிரமணிய பாரதியார் |
| | மருத்துவம் | – | முத்துலட்சுமி அம்மையார் |
| | பொறியியல் | – | விசுவேசுவரய்யா |

## மொழித்திறன் பயிற்சி

### 1. மரபுத்தொடர்களை அமைத்து எழுதுதல்

(எ.கா.) 1. கண்ணனுக்கு வேலை கிடைக்கவில்லை, உணவுக்கே தாளம் போடுகின்றான்.

தாளம் போடுதல் – மரபுத்தொடராகும். இதன் பொருளாவது, துன்பப்படுதல்.

2. முருகனுக்குக் கயிறு திரிப்பதே வேலையாகிவிட்டது. (இல்லாததனைச் சொல்லுதல்)

3. பாவேந்தர் பாரதிதாசன் தமிழிலக்கிய வானில் கொடிகட்டிப் பறந்தார். (தனிப்புகழோடு வாழ்ந்தார்)

4. தான் பணத்தைத் திருடவில்லையென்று கண்ணன் முதலைக்கண்ணீர் வடித்தான். (பொய்யாக அழுதல் / ஏமாற்றுதல்)

5. செய்தி தெரியுமா ? வேலனுக்கு ஆணை வந்துவிட்டது. (வேலை கிடைத்துவிட்டது.)

பயிற்சி : கீழ்க்காணும் மரபுத்தொடர்களை உரிய இடங்களில் பொருத்தி எழுதுக.

(புத்தகப்பூச்சி, வாழையடிவாழையாக, மலையேறிவிட்டது, பெருஞ்செலவாணி, சீட்டுக் கிழிந்துவிட்டது)

அ) அவன் குடும்பம் ________________ ஊருக்குக்குத் தொண்டாற்றி வருகிறது.

ஆ) அலுவலகத்தில் வேலை நேரத்தில் தூங்கியதனால் கந்தனுக்கு ________________.

இ) கதிரவனுக்கு உலகில் நடப்பது எதுவும் தெரியாது. அவன் ஒரு ________________.

ஈ) சிறுவயதிலேயே பெண்களுக்குத் திருமணம் செய்வது இன்று ________________.

உ) முருகன் கையிலிருந்த பொருளை இழந்துவிட்டான். அவன் ________________.

### 2. தமிழெண்களுக்குரிய அரபு எண்களைப் பொருத்துக.

1. உ + சு = 14
2. அ + உ = 19
3. ரு + கூ = 12
4. க0 + உ = 10
5. கஅ + க = 6

### 3. கட்டுரைப் பயிற்சி : எங்கும் கணினி எதிலும் கணினி

## பண்பு

பேருந்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. கால் வைப்பதற்கும் இடமில்லாமல் அனைவரும் அல்லல்பட்டுக்கொண்டு பயணம் செய்தனர்.

பேருந்துநிறுத்தத்தில் நின்றபோது, பெண்மணி ஒருத்தி, கையில் ஒரு குழந்தையும், இடுப்பில் ஒரு குழந்தையுமாய்ப் பேருந்தில் ஏறினாள். எப்படியோ உள்ளே நுழைந்த அவள் ஓரிடத்தில் நின்றுகொண்டாள்.

ஆனாலும் இடுப்பில் இருந்த குழந்தை கூட்ட நெரிசலில் சிக்கி வீறிட்டு அழத்தொடங்கியது.

அருகில் நின்றுகொண்டு இருந்தவர்கள், "ஏம்மா உட்கார்ந்திருக்கிறவங்க யார்கிட்டயாவது குழந்தையைக் கொடும்மா; இல்லாவிட்டால் யாரையாவது எழுந்திருக்கச் சொல்லும்மா" என்று கூறினர்.

ஆனால், பேருந்தில் உட்கார்ந்திருந்தவர்கள் யாரும் எழுந்து இடம் தரவில்லை.

### கூடிப் பேசுவோம்

1. பேருந்தில் பயணம் செய்யும்போது இதுபோன்ற நிகழ்வுகளை நீங்கள் கண்டதுண்டா ?
2. பேருந்துப்பயணத்தில், உன் அருகில் முதியவரோ மாற்றுத்திறனாளியரோ நின்றிருந்தால் நீ எழுந்து இடம் கொடுப்பாயா ?

## வாழ்க்கைத்திறன்

### கூர்சிந்தனைத்திறன்

கண்ணன் சிறந்த கால்பந்து விளையாட்டு வீரன். கோடைவிடுமுறையில் கால்பந்து விளையாட்டுக்கான பயிற்சி வகுப்பில் சேர விரும்பினான்; பெற்றோரிடமும் ஒப்புதல் பெற்றுவிட்டான். எதிர்பாராதவிதமாக ஊரிலிருந்து வந்த அவனுடைய அத்தையும் மாமாவும் கோடைவிடுமுறையைத் தங்களோடுதான் கழிக்கவேண்டும் என்று வற்புறுத்துகின்றனர். கண்ணனுக்குக் கால்பந்து விளையாட்டுப்பயிற்சியை விடுவதற்கு மனமில்லை; பெரியவர்களின் பேச்சுக்கும் மதிப்புக் கொடுக்க விரும்புகிறான்.

இந்த நிலையில் கண்ணன் என்ன முடிவு எடுத்திருப்பான் ?

கண்ணன் விளையாட்டுக்கு முன்னுரிமை கொடுப்பானா ? பெரியவர்களை மதிப்பானா ?

நீங்களாக இருந்தால் என்ன செய்திருப்பீர்கள் ?



## மதிப்புக்கல்வி

### மாற்றுத்திறனாளிகளை மதித்தல்

முத்துசாமி என்பவர் மாற்றுத்திறனாளி. ஒருமுறை, நோயுற்ற தன் மனைவிக்கு மருந்து வாங்குவதற்காக ஊன்றுகோலைத் தட்டிக்கொண்டு கடைத்தெருவில் நடந்து சென்றுகொண்டிருந்தார். மருந்து வாங்க வைத்திருந்த பணம், பையில் உள்ளதா என்று அறிவதற்காக, அதனைக் கையில் எடுத்தார்.

எதிரில் வந்துகொண்டிருந்த ஒருவர், எதிர்பாராமல் அவரை இடித்துவிட்டுச் சென்றார். அப்போது முத்துசாமியின் கையில் இருந்த பணம் தவறிச் சாலையில் விழுந்தது.

தடுமாறிய முத்துசாமி, கீழே உட்கார்ந்து கைகளால் தடவிக்கொண்டு பணத்தைத் தேடினார். இந்தக் காட்சியை அவரைநோக்கி வந்துகொண்டிருந்த பள்ளி மாணவர் இருவர் பார்த்தனர். அவர்களுள் ஒருவன் மகிழ்ச்சியோடு, "எனக்குத்தான் அந்தப்பணம்" என்று கூறிக்கொண்டே எடுக்கச் சென்றான். மற்றொருவனோ, "வேண்டா, பாவம். பார்வையற்ற அவரை நாம் ஏமாற்றுதல் கூடாது. அவருக்கு அந்தப் பணம் கிடைக்க உதவி செய்வோம், வா" என்று அழைத்தான்.

இரண்டு நண்பர்களுள் யார் செய்தது சரி ?

சமுதாயத்தில் மாற்றுத்திறனாளியரிடம் நாம் எவ்வாறு நடந்துகொள்ளுதல் வேண்டும் ?

# வளரறி செயல்பாடுகள்

## பேசுதல்

| செயல்பாடு : 1 | கலந்துரையாடல் |
|---|---|

அழிந்துவரும் விலங்கினங்கள் குறித்த செய்திகளைத் திரட்டிவந்து குழுக்களாகப் பிரிந்து கலந்துரையாடுக.

## எழுதுதல்

| செயல்பாடு : 2 | குறிப்புகளை விரித்து எழுதுதல் |
|---|---|

பாரதிதாசனின் வாழ்க்கைக்குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அக்குறிப்புகளைக்கொண்டு, உரைப்பகுதியாக எழுதுக.

பிறப்பு : 29.04.1891
இடம் : புதுச்சேரி
இயற்பெயர் : சுப்புரத்தினம்
பெற்றோர் : கனகசபை – இலக்குமி

சிறப்பு : பாரதியாருடன் கொண்ட நெருங்கிய தொடர்பினால், பாரதிதாசன் எனத் தன்பெயரை அமைத்துக் கொண்டார்.



தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கவிதை வடிவில் தந்தவர்.
பாவேந்தர்,
புரட்சிக்கவி எனச் சிறப்புப் பெயர்களும் உண்டு.

இயற்றிய நூல்கள் :
பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, கண்ணகி புரட்சிக் காப்பியம், தமிழியக்கம் முதலியன.
இறப்பு : 21. 04.1964

| செயல்பாடு : 3 | விடை எழுதுதல் |
|---|---|



கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

படத்தில் நீங்கள் காணும் பறவை மரகதப் புறாவாகும். தமிழ்நாட்டின் தேசியப் பறவையாக இது விளங்குகிறது. இப்பறவை மழைக்காடுகளிலும், அடர்ந்த ஈரமான இடங்களிலும் வாழ்கின்றது. இப்பறவையின் இறக்கைகள் மரகதப்பச்சை நிறத்தில் இருக்கும்.

மரகதப்புறா, பறப்பதனைவிட நிலத்தில் நடப்பதனையே மிகவும் விரும்புகிறது. இப்பறவை விதைகள், பழங்கள், பல்வேறுவகையான தாவரங்களை

விரும்பி உண்ணும். இப்பறவை மரங்களில் கூடுகட்டி, முட்டையிடுகிறது. இப்பறவையின் முட்டை மஞ்சள் கலந்த வெண்ணிறத்தில் காணப்படும். இப்பறவை எளிதாகப் பழகக்கூடிய வகையில் உள்ளது.

வினாக்கள்

1. தமிழ்நாட்டின் தேசியப் பறவை எது ?
2. மரகதப்புறா எங்கு வாழ்கிறது ?
3. மரகதப்புறா எதனை விரும்பி உண்கிறது ?
4. மரகதப்புறா முட்டையின் நிறம் யாது ?
5. நிரப்புக. மரகதப்புறா, பறப்பதனைவிட ________________ விரும்புகிறது.

## படைப்பாற்றல்

| செயல்பாடு : 4 | படம் வரைதல் |
| --- | --- |

பாடப்பகுதியில் அமைந்துள்ள செய்யுளுக்குப் படம் வரைக.

| செயல்பாடு : 5 | படைப்பாற்றல் |
| --- | --- |

காட்டுயிரிகள் பாடத்தில் இடம்பெறும் பாடப்பொருளுக்கேற்ப எளிய உணவுச் சங்கிலி ஒன்றனை வரைக.



(எ.கா.) தாவரம் மான் புலி

## தொகுத்தல்

| செயல்பாடு : 6 | செயல்திட்டம் |
| --- | --- |

பயன்தரும் தாவரங்கள், நன்மை செய்யும் விலங்குகள் பறவைகள் பற்றிய படங்களையும், செய்திகளையும் திரட்டித் தொகுப்பேடு தயாரிக்க.

# கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

**அ. பொருள் தருக.** 5 x 1 = 5

1. சோலை = ____________ 2. வனம் = ____________ 3. திறல் = ____________

4. மறவர் = ____________ 5. தூலம் = ____________

**ஆ. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5 x 1 = 5

அருவிகளைக் காணச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் பலர் அருவியில் நீராடி மகிழ்கின்றனர். மூலிகைகள் கலந்து வீழும் அருவியில் இயற்கையாகக் குளிக்காமல், செயற்கை வேதிப்பொருள்களைக் (சோப்பு, ஷாம்பு) குளிக்கப் பயன்படுத்துகின்றனர். அங்கு வாழும் காட்டுவிலங்குகள் இயற்கை நீரைக் குடிக்க இயலாத நிலைக்குத் தள்ளப்படுகின்றன. நீர் மாசடைய நாமே காரணமாக இருக்கிறோம்.

வானில் பறக்கும் பறவையோ நீரில் நீந்தும் மீனோ நீர்நிலைகளை மாசுபடுத்துவதில்லை. மரம் வளர்ப்போம்; மழை பெறுவோம் என்பதனை நீ அறிந்துள்ளாய் அல்லவா ? இந்தியாவில் எட்டில் ஒரு பங்கு அளவே காடுகள் உள்ளன. இவை மழைவரக் காரணமாக உள்ளதோடு மட்டுமல்லாமல், வனவிலங்குகளுக்குப் புகலிடமாகவும் உள்ளன.

மண் அரிப்பைத் தடுத்தல், சிற்றாறுகள் தோன்றக் காரணமாக இருத்தல், தொழில் வளர்ச்சிக்கு உதவுதல், மருந்துப் பொருள்கள், மூலிகைகள் தருதல் என எண்ணற்ற நன்மைகள் நமக்குக் காடுகளால் கிடைக்கின்றன. காட்டு விலங்குகளிடமிருந்து தந்தம், தோல், நறுமணப்பொருள், தேன் முதலிய பல்வகைப் பொருள்கள் கிடைக்கின்றன.

வினாக்கள்

1. அருவிநீர் மாசடையக் காரணம் என்ன ?
2. இந்தியாவில் எத்தனை மடங்கு காடுகள் உள்ளன ?
3. தாவரங்கள் நமக்கு எவ்வாறு உதவுகின்றன ?
4. காட்டுவிலங்குகளினால் நமக்கு விளையும் நன்மைகள் யாவை ?
5. தாவரங்களைப் பாதுகாக்கும் வழிமுறைகளுள் இரண்டனைக் கூறுக.

தமிழ்

## "என்னால் முடியும், நானே செய்தேன்"

## ('I can, I did')

### மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

| வ.எண் | நாள் | பாட எண் | பாடத்தலைப்பு | செயல்பாடு | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

தமிழ்நாடு அரசு

# எட்டாம் வகுப்பு

## மூன்றாம் பருவம்

### தொகுதி 1

## தமிழ்

## ENGLISH

விற்பனைக்கு அன்று

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு
இலவசப்பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

© தமிழ்நாடு அரசு

முதற் பதிப்பு – 2012

திருத்திய பதிப்பு – 2013

(பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

நூல் அச்சாக்கம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

இந்நூல் 80 ஜி. எஸ். எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

விலை : ரூ.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

பாடநூல் வலைதளம்

www.textbooksonline.tn.nic.in

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

## THE NATIONAL ANTHEM

Jana–gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Punjaba-Sindhu-Gujarata-Maratha-
Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
Uchchhala-jaladhi-taranga
Tava subha name jage,
Tava Subha asisa mage,
Gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
Bharata-bhagya-vidhata
Jaya he, jaya he, jaya he,
Jaya jaya, jaya, jaya he.

- Rabindranath Tagore.

### AUTHENTIC ENGLISH TRANSLATION OF THE NATIONAL ANTHEM

Thou art the ruler of the minds of all people,
Thou dispenser of India's destiny.
Thy name rouses the hearts of the Punjab, Sind,
Gujarat and Maratha, of Dravid, Orissa and Bengal.
It echoes in the hills of the Vindhyas and Himalayas,
mingles in the music of the Yamuna and Ganges
and is chanted by the waves of the Indian Sea.
They pray for Thy blessings and sing Thy praise
The saving of all people waits in Thy hand,
Thou dispenser of India's destiny.
Victory, Victory, Victory to Thee.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

## INVOCATION TO GODDESS TAMIL

Bharat is like the face beauteous of Earth clad in wavy seas;

Deccan is her brow crescent-like on which the fragrant 'Tilak' is the blessed Dravidian land.

Like the fragrance of that 'Tilak' plunging the world in joy supreme reigns Goddess Tamil with renown spread far and wide.

Praise unto 'You, Goddess Tamil, whose majestic youthfulness, inspires awe and ecstasy.'

## THE NATIONAL INTEGRATION PLEDGE

"I solemnly pledge to work with dedication to preserve and strengthen the freedom and integrity of the nation."

"I further affirm that I shall never resort to violence and that all differences and disputes relating to religion, language, region or other political or economic grievances should be settled by peaceful and constitutional means."

## A STUDENT'S VOW BEFORE MOTHER INDIA

Name :

Class : School :

I shall overcome the obstacles raised by caste and communal prejudices and work for the greatness of my Motherland putting to the fullest use the benefits that I derive through education.

Vande mataram!

Signature

# பொருளடக்கம்

## தமிழ் (1 – 76)


| இயல் | | தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 1. | செய்யுள் | திருக்குறள் | 2 |
| | | திருவருட்பா | 5 |
| | உரைநடை | தமிழர் வானியல் | 7 |
| | துணைப்பாடம் | கலீலியோ கலிலி | 12 |
| | இலக்கணம் | புணர்ச்சி : இயல்பு, விகாரம் | 15 |
| 2. | செய்யுள் | வில்லிபாரதம் | 29 |
| | | யார் கவிஞன் ? | 31 |
| | உரைநடை | தேவநேயப் பாவாணர் | 33 |
| | துணைப்பாடம் | மணம் நுகர்ந்ததற்குப் பணம் | 36 |
| | இலக்கணம் | புணர்ச்சி : உயிரீறு, உடம்படுமெய், மெய்யீறு | 39 |
| 3. | செய்யுள் | முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் | 52 |
| | உரைநடை | இலக்கியத்தில் நகைச்சுவை | 55 |
| | துணைப்பாடம் | குழந்தையின் இயல்பு | 60 |
| | இலக்கணம் | யாப்பு, அணி | 63 |


### மனப்பாடப் பகுதி

| இயல் | செய்யுள் | அடிகள் |
|---|---|---|
| 1. | திருக்குறள் ( 1,2,5,6,7 ) | 10 |
| | திருவருட்பா | 4 |
| 2. | வில்லிபாரதம் | 4 |
| | யார் கவிஞன் ? | 8 |
| | மொத்தம் : | 26 |

* உடுக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப் பகுதி

# தமிழ்

## எட்டாம் வகுப்பு

### மூன்றாம் பருவம்

# திருக்குறள்

## பண்புடைமை

1. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. *

பொருள் : யாரிடத்தும் எளிமையாகப் பழகினால் பண்புடைமை என்னும் நன்னெறியை அடைதல் எளிது.

சொற்பொருள் : வழக்கு – நன்னெறி.

2. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. *

பொருள்: அன்புடையவராகத் திகழ்தல், உயர்ந்த குடிப்பிறப்பு ஆகிய இவ்விரண்டும் பண்பாளரின் இயல்பு.

சொற்பொருள் : ஆன்ற – உயர்ந்த.

3. உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.

பொருள் : உடம்பால் ஒத்திருத்தல் மக்களோடு ஒப்புமை அன்று. பொருந்தத்தக்க பண்பால் ஒத்திருத்தலே மக்களாகக் கொள்ளத்தக்க ஒப்புமையாகும்.

4. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

பொருள் : நேர்மையையும் அறத்தையும்கொண்டு பிறருக்கு உதவுதல் வேண்டும். அத்தகைய பண்பாளரையே உலகம் போற்றும்.

சொற்பொருள் : நயன் – நேர்மை; நன்றி – உதவி.

5. நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. *

பொருள் : விளையாட்டாக ஒருவரை இகழ்ந்து பேசுதலும் துன்பத்தைத் தரும். பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவரிடத்தில் பகைமையிருப்பினும் நல்ல பண்புகள் இருக்கும்.

சொற்பொருள் : நகையுள்ளும் – விளையாட்டாகவும்; பாடறிவார் – நெறியுடையார்.

6. பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன். *

பொருள் : உலகம் பண்புடையவர்களாலே நிலைபெற்று இருக்கிறது. இல்லையெனில், இவ்வுலகம் மண்ணோடு மண்ணாகிஅழிந்துவிடும்.

சொற்பொருள் : மாய்வது – அழிவது.

7. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்(பு) இல்லா தவர். *

பொருள் : அரம்போன்ற கூர்மையான அறிவுடையாராக இருப்பினும், மக்களுக்குரிய பண்பு இல்லாதவர் ஓரறிவுடைய மரமாகவே கருதப்படுவார்.

சொற்பொருள் : அரம் – வாளைக் கூர்மையாக்கும் கருவி.

8. நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றா ராதல் கடை.

பொருள் : நட்புக்கொள்ள இயலாதவராய்த் தீங்கு செய்பவரிடத்திலும் பண்புடையவராய்ப் பழக இயலாதது இழிவான செயலாகும்.

சொற்பொருள் : நண்பு – நட்பு; நயம்இல – தீங்கு, இனிமையற்ற; கடை – இழிவு.

9. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்.

பொருள் : பிறரோடு பழகிப் பேசிச் சிரித்து மகிழ இயலாதவருக்கு மிகப்பெரிய இவ்வுலகம் பகலிலும் இருளாகவே தோன்றும்.

சொற்பொருள்: நகல்வல்லர் – சிரித்து மகிழ்பவர்; மாயிரு ஞாலம் – மிகப்பெரிய உலகம்.

10. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று.

பொருள் : பண்பிலாதவன் பெற்ற பெருஞ்செல்வமானது, பாத்திரத்தின் தன்மையால் நல்ல பால் திரிந்ததுபோன்றது.

சொற்பொருள் : திரிந்தற்று – திரிந்ததுபோன்றது.

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. பொருள் எழுதுக.

| | | |
|---|---|---|
| 1. மாய்வது = ________ | 3. மண்புக்கு = ________ | 5. அரம் = ________ |
| 2. நயமில = ________ | 4. ஞாலம் = ________ | 6. கலம் = ________ |

2. பிரித்து எழுதுக.

1. எளிதென்ப = ______________  4. பயனுடையார் = ______________
2. பண்புடைமை = ______________  5. பண்புடையார் = ______________
3. மக்களொப்பு = ______________

3. சேர்த்து எழுதுக.

1. அன்பு + உடைமை = ____________  4. பண்பு + ஒத்தல் = ____________
2. மக்கள் + பண்பு = ____________  5. பண்பு + இலான் = ____________
3. திரிந்து + அற்று = ____________

4. எதிர்ச்சொல் அறிக.

1. எளிது X ______________  4. பயனுடையார் X ______________
2. பாராட்டு X ______________  5. நகை X ______________
3. பகை X ______________  6. பகல் X ______________

5. சீர் பிரித்து எழுதுக.

அன்புஉடைமைஆன்றகுடிப்பிறத்தல்இவ்விரண்டும்
பண்புஉடைமைஎன்னும் வழக்கு.

6. முறைமாறிய அடிகளை முறைப்படுத்தி எழுதுக.

பகையுள்ளும் பண்புள பாடறிவார் மாட்டு
நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி.

7. உவமையைப் பொருளுடன் பொருத்தி எழுதுக.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

ஆ) குறுவினாக்கள்

1. உலகம் நிலைபெற்றிருக்கக் காரணம் யாது ?
2. மரம்போல்வர் – யார் ? ஏன் ?
3. பகலும் இருளாகத் தோன்றும் – யாருக்கு ?
4. பண்பில்லாதவன் பெற்ற செல்வம் எத்தகையது ?

இ) சிறுவினாக்கள்

1. உயர்ந்த பண்பாளரின் இயல்புகள் யாவை ?
2. உலகத்தாரால் பாராட்டப்படுபவர் யார் ? ஏன் ?

ஈ) நெடுவினா

பண்புடைமையைப்பற்றி வள்ளுவர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

## திருவருட்பா

* வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேர்உறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன். *

– இராமலிங்க அடிகளார்



பொருள் : “ நீரின்றி வாடித் துவண்டுகிடந்த பயிர்களைக் கண்டபோது மனம் பெரிதும் வாட்டமடைந்தேன் ; வயிறார உண்ணும் வாய்ப்பின்றிப் பசித்துயரால் களைப்புற்று, வீடுதோறும் இரந்தும் போதிய உணவின்றி உடல்மெலிந்த வறியோரைக் கண்டு உள்ளம் பதைப்புற்றேன் ; தீராத கொடிய பிணியால் துன்புற்றோரைக் கண்டு உள்ளம் துடித்தேன்; பிறரிடம் இரப்பதற்கு நாணி உடலும் உள்ளமும் நைந்த ஏழைகளைக் கண்டு உள்ளம் மெலிவுற்றேன்” என வள்ளலார், தம் மனத்துயரை வெளிப்படுத்துகிறார்.

சொற்பொருள் : பசியறாது – பசித்துயர் நீங்காது; அயர்ந்த – களைப்புற்ற; நீடிய – தீராத.

ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| பெயர் | : | இராமலிங்க அடிகளார் |
| பெற்றோர் | : | இராமையா – சின்னம்மை |
| ஊர் | : | சிதம்பரத்துக்கு அருகிலுள்ள மருதூர் |
| சிறப்புப் பெயர் | : | திருவருட்பிரகாச வள்ளலார். |
| சிறப்பு | : | வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க சங்கம், சத்திய ஞானசபை, சத்திய தருமச்சாலை ஆகியவற்றை நிறுவினார். |
| இயற்றிய நூல்கள் | : | திருவருட்பா, சீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம் முதலியன. |
| காலம் | : | 05. 10. 1823 முதல் 30. 01. 1874 வரை |

நூற்குறிப்பு : திரு + அருள் + பா = திருவருட்பா. இறைவன் திருவருளைப் பெறுவதற்காகப் பாடிய பாடல் என்றும், இறைவனின் திருவருளால் பாடிய பாடல் என்றும் இருவகையாகப் பொருள் கூறலாம். இஃது ஐயாயிரத்து எண்ணூற்றுப் பதினெட்டுப் பாடல் கொண்டது. நம் பாடப்பகுதி பிள்ளைப் பெருவிண்ணப்பம் என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது.

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. பொருள் எழுதுக.

   1. இரந்தும் = ____________
   2. அயர்ந்த = ____________
   3. பசியறாது = ____________

2. பிரித்து எழுதுக.

   1. கண்டபோதெல்லாம் = ____________
   2. பசியறாது = ____________
   3. வீடுதோறிரந்தும் = ____________
   4. கண்டுளம் = ____________

3. சேர்த்து எழுதுக.

   1. நேர் + உற = ____________
   2. நெஞ்சு + இளைத்தவர் = ____________

4. கோடிட்ட இடத்தை நிரப்புக.

   1. திருவருட்பாவை இயற்றியவர் ____________.
   2. திருவருட்பாவில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை ____________.

ஆ) குறுவினாக்கள்

1. 'திருவருட்பா' – குறிப்பு எழுதுக.
2. இராமலிங்க அடிகளார் மனம் பதைத்ததற்கான காரணம் யாது ?

இ) சிறுவினாக்கள்

1. இராமலிங்க அடிகளார் – குறிப்பு எழுதுக.
2. வள்ளலார் வருந்தக் காரணம் என்ன ?

# தமிழர் வானியல்

பண்டைத் தமிழர் அறிவியல்துறையில் பெரும்புலமை பெற்று இருந்தனர் என்பதனைப் பழந்தமிழ் இலக்கியங்கள் உணர்த்துகின்றன. மேலைநாட்டார் கண்டறிந்ததாகக் கூறப்படும் பல உண்மைகளைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழரும் அறிந்திருந்தனர். தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், திருமந்திரம், திருவாசகம் முதலிய நூல்களின் மூலம் பழந்தமிழர் கையாண்ட அறிவியல் நுணுக்கங்களைக் காணலாம்.

## வானியல் அறிவு

தமிழரின் அறிவியல் சிந்தனையில் குறிப்பிடத்தக்கது வானியல் பற்றிய அறிவாகும். ஞாயிறு, திங்கள் என ஆராய முற்பட்டபோதே வானியல் ஆய்வு தோன்றிவிட்டது எனலாம். உலகில் தோன்றிய பல்வேறு அறிவியல் கல்விகளில் மிகத் தொன்மையானது, பழைமையானது வானியல் கல்வி.

உலகம் ஐம்பூதங்களாகிய நிலம், நீர், வெப்பம், காற்று, வானம் ஆகிய ஐந்தும் உள்ளடக்கியது எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் ஆதலின்...' (தொல்காப்பியம், பொருள். 635)

இதுபோன்றதொரு குறிப்பைப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் உணர்த்தும்.

மண்திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும்பூதத்து இயற்கை போல்... (புறம், 2)

## உலகம் தட்டையா ? உருண்டையா ?

அண்ட வெளியில் சுற்றும் இந்த உலகம்பற்றியும் தமிழர் ஆய்ந்துள்ளனர். மேலை நாட்டார், பதினைந்தாம் நூற்றாண்டிற்கு முன்புவரை, உலகம் தட்டையானது என்றே நம்பி வந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டில்தான் போலந்து நாட்டைச் சார்ந்த நிக்கோலஸ்கிராப்ஸ் என்பவர் உலகம் தட்டை இல்லை, உருண்டையானது என



முறையாகக் கணித்துக் கூறினார். ஆனால், அதனை எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த கலீலியோ, உலகம் உருண்டையானது என்பதனைத் தம் தொலைநோக்கியால் கண்டுபிடித்துச் சொன்ன பிறகுதான் மக்கள் ஏற்றுக்கொண்டனர். மேலை நாட்டினர் கண்டறிந்ததற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சொல்லியது ஒரு தமிழ்க்குரல். அந்தக்குரலுக்கு உரியவர் திருவள்ளுவர். இவர்,



சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை' – குறள், 1031

என்னும் குறட்பாவில் உலகம் சுழல்கிறது எனக் கூறுகின்றார். உருண்டையான பொருள்தான் சுழலும் என்பது அறிவியல் உண்மை. எனவே, உலகம் உருண்டையாக இருக்கும் என்பதனை எந்தக் கருவியும் இல்லாத அக்காலத்தில் வள்ளுவர் உணர்ந்து தம் குறளில் கையாண்டுள்ளமை வியப்புக்குரியது.

### ஞாயிற்றுக்காட்சி

வானவெளியில் மிகப்பெரிய விண்மீன் ஞாயிறு. ஞாயிற்றை வழிபடும் வழக்கம் வானவியல் மரபால் உண்டானது எனலாம். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் என ஞாயிற்றைப் போற்றியுள்ளமையைக் காணலாம். ஞாயிற்றைச் சுற்றியுள்ள பாதையை ஞாயிற்று வட்டம் என்றனர் பழந்தமிழர் எனப் புறநானூறு குறிப்பிடுகின்றது.

செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும் – புறம், 30

இப்பாடலின் வாயிலாக ஞாயிற்று வட்டம், அதன் இயக்கம், அந்தரமாய் நிற்கும் வான்வெளி மண்டலம் என்பனபற்றிய வானியல் அறிவை உணரமுடிகின்றது.



### திங்கள் தோற்றம்

தானே ஒளிவிடக்கூடிய ஞாயிற்றை நாள்மீன் எனவும், ஞாயிற்றிடமிருந்து ஒளிபெற்று ஒளிவிடக்கூடியவற்றைக் கோள்மீன் எனவும் பண்டைத்தமிழர் குறிப்பிட்டுள்ளனர். திங்கள், தானாக ஒளிவீசுவதில்லை. இந்த வானியல் உண்மையைத் திருக்குறள் வெளிப்படுத்துகிறது.

> மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
> காதலை வாழி மதி. – குறள், 1118

இக்குறளில் திங்களுக்குத் தானாக ஒளிவிடும் தன்மை இல்லை என்னும் வானியல் உண்மையை அறியலாம். திங்களைப் பாம்பு கொண்டற்று (குறள், 1146) என்னும் குறள் தொடர், திங்கள் மறைப்புப் (சந்திரகிரகணம்) பற்றியதாகும். திங்களின் நிலையைக் கருதித் தேய்பிறை, வளர்பிறை எனவும் குறித்துள்ளனர்.

### கோள்கள் பற்றிய தமிழரின் கருத்து

உலகிற்கு ஒளி ஊட்டும் ஞாயிற்றையும் திங்களையும் தாம் கண்டறிந்த கோள்களையும் இணைத்துக் கிழமையாக்கி ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி எனக் கண்டு, தம் வாழ்வியலோடு இணைத்துக்கொண்டவர்கள் தமிழர்கள். அவர்கள் விண்ணிலே மின்னும் விண்மீன்களையும் திரியும் கோள்களையும் கண்டு, அறிவியல் வழியில் தெளிவான வானியல் அறிவுபெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். கோள்களின் நிறம், வடிவம் முதலியவற்றைப்பற்றியும் தமிழர் அறிந்திருந்தனர்.

செந்நிறமாய் இருந்த கோளைச் செவ்வாய் என அழைத்தனர். இன்றைய அறிவியல் வல்லுநர்கள் செவ்வாய்க்கோளில், மண் சிவப்பு நிறமாய் இருப்பதனை அங்குச் சென்றுள்ள செயற்கைக்கோள் அனுப்பும் ஒளிப்படங்கள் வாயிலாய் வெளிப்படுத்தியுள்ளனர்.

வெண்மை நிறமுடைய கோளை வெள்ளி என அழைத்தனர். வெள்ளிக்கோளில் வெள்ளித்தாது இருப்பதனை இன்று அறிவியல் ஆய்வு புலப்படுத்தியுள்ளது. ஞாயிறு

உதயத்திற்கு முன்பே வெள்ளி எழுந்து விடியலை உணர்த்துவதனால் இதனை விடிவெள்ளி என்றனர்.

புதிதாகக் கண்டறிந்த கோளைப் புதன் என அழைத்தனர். புதிதாக அறிந்ததனால் அதற்கு, ‘அறிவன்’ எனவும் பெயருண்டு.

வியா என்றால் பெரிய, நிறைந்த எனப் பொருள்படும். வானில் பெரிய கோளாக வலம் வருவதனையே வியாழன் என்றனர்.

சனிக்கோளைக் காரிக்கோள் என அழைத்தனர். இக்கோளில் கந்தகம் இருப்பதாக இன்றைய அறிவியல் ஆய்வு கூறுகிறது. இதனால் கோள்களின் நிறம், வடிவம், அதன் தன்மை முதலியவற்றைத் தமிழர்கள் அறிந்திருந்தார்கள் என்பது தெளிவாகிறது.

### வான்வழிப் பயணம்

வானம், ஞாயிறு, திங்கள், விண்மீன், கோள்கள் என்பன மனிதருக்கு வியப்புப் பொருள்களாகத்தான் இருந்திருக்கின்றன. இருப்பினும், மனிதர்களின் அறிவினாலும் ஆற்றலினாலும் தொடர் முயற்சியினாலும் வானியல் புதிர்கள் நாள்தோறும் சிறிது சிறிதாக விடுவிக்கப்பட்டு வருகின்றன. வானில் பறவை பறப்பதனைக் கண்ட மனிதன், தானும் பறக்க முடியுமா எனக் கற்பனை செய்தான். அக்கற்பனை உண்மையானபொழுது, வானூர்தி உருவாகியது. பழந்தமிழ் இலக்கியங்களில் வான்வழிப் பயணங்கள் இடம்பெற்றுள்ளன.

வலவன் ஏவா வானவூர்தி (புறம், 27:8) என்னும் புறப்பாடல் வரி, சங்க காலத்திலேயே ஓட்டுநர் இல்லா வானவூர்தி இருந்தது என்னும் வியக்கத்தக்க செய்தியைத் தருகிறது. வானூர்தி ஓட்டுகிறவனைத் தமிழில் வலவன் என அழைக்கிற சொல்லோடு வானூர்தியைக் கண்டறிந்த புறநானூற்றுத் தமிழன் நமக்கு முன்னோடிதானே. நம்மால், இவற்றை யெல்லாம் கற்பனை என்று ஒதுக்கிவிட இயலுமா ?

சிலம்பு, மணிமேகலையில் வான்வழிப் பயணங்கள்பற்றிய குறிப்புகளும், சீவகசிந்தாமணியில் மயிற்பொறி விமானத்தின் செயல்திறனும், கம்பராமாயணத்தில் இராவணன் செலுத்திய புட்பக விமானமும், பெருங்கதையில் வானூர்தி வடிவமும், அதனை இயக்கும் முறைமையும்பற்றிய வான்பயணச் செய்திகள் காணப்படுகின்றன. ஆகவே, பழந்தமிழர் நிலத்தையும் கடலையும் மட்டுமல்லாமல் நீலவானத்தையும் ஆளுமை செய்தவர்கள் என்பது வெளிப்படை.

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. பிரித்து எழுதுக.

   1. வானியல் = ____________

   2. தென்திசை = ____________

3. ஐம்பூதம் = ____________

4. பழந்தமிழர் = ____________

5. வானூர்தி = ____________

2. சேர்த்து எழுதுக.

1. காலம் + தோறும் = ____________

2. செம்மை + ஞாயிறு = ____________

3. மயில் + பொறி = ____________

4. பெருமை + புலமை = ____________

3. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. தமிழரின் அறிவியல் சிந்தனையில் குறிப்பிடத்தக்கது ____________.

2. உலகம் ____________ ஆனது எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

3. 'உலகம் உருண்டை வடிவமானது' எனக் கூறிய முதல் தமிழ்க்குரல் ____________.

4. வான்வெளியில் உள்ள மிகப்பெரிய விண்மீன் ____________.

5. தாமே ஒளிவிடக் கூடியவை ____________ எனப்பட்டன.

ஆ) குறுவினாக்கள்

1. பண்டைத்தமிழர் அறிவியல் அறிவைப் பெற்றிருந்தனர் என்பதனைப் புலப்படுத்தும் இலக்கியங்கள் யாவை ?

2. ஐம்பூதங்கள்பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடும் செய்தி யாது ?

3. உலகம் உருண்டை வடிவமானது எனக்கூறிய மேலைநாட்டவர் யாவர் ?

4. 'உலகம் சுழல்கிறது' என்பதனைத் திருக்குறள்வழி விளக்குக.

5. 'திங்களைப் பாம்பு கொண்டற்று' விளக்குக.

இ) சிறுவினாக்கள்

1. கோள்களின் நிறம், வடிவம்பற்றி விளக்குக.

2. ஞாயிற்று வட்டம் என்பதனைப் பழந்தமிழர் எவ்வாறு அறிந்திருந்தனர் ?

3. வான்வழிப் பயணம் – குறிப்பு எழுதுக.

ஈ) நெடுவினாக்கள்

1. தமிழர் வானியல் அறிவில் சிறந்து விளங்கினர் என்பதனை நிறுவுக.

2. பண்டைத்தமிழ் இலக்கியங்களில் வானூர்திபற்றிய குறிப்புகளைப் புலப்படுத்துக.

# கலீலியோ கலிலி

இத்தாலி நாட்டின் பைசா நகரத்தின் ஒரு மாலைப்பொழுதில் தலைமைக் கிறித்தவக் கோவிலில் வழிபாடு நடந்து கொண்டிருந்தது.



அனைவரின் பார்வையும் ஆண்டவனை நோக்கி இருந்தது; ஆனால், ஒரு சிறுவனின் பார்வை மட்டும் அங்கு ஊசலாடிக் கொண்டிருந்த தொடர்விளக்கின்மீது இருந்தது.

அச்சிறுவனின் வயது பதினேழுதான். இதற்கு முன்னால்கூட எத்தனையோமுறை அவன் கோவிலுக்கு வந்திருந்தாலும், இன்றுபோல அத்தொடர்விளக்கின் ஊசலாட்டம் அவனைப் பாதித்ததில்லை. அது விரைவாக ஆடினாலும், மெதுவாக ஆடினாலும் ஒருமுறை ஆடுவதற்கு, அஃது எடுத்துக்கொண்ட நேரம் ஒன்றாகவே இருப்பதனை அவன் உணர்ந்தான்.

இதனை எப்படிச் சரிபார்ப்பது ? அவன், தனது நாடித்துடிப்பையே அளவாகக்கொண்டு சரிபார்த்தான். தான் எண்ணிய கருத்துச் சரியானதுதான் என அறிந்தபோது மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அச்சிறுவனுடைய முதல் அறிவியல் கண்டுபிடிப்பே மருத்துவத்துறையில் நாடித்துடிப்பைக் கணக்கிடும் கருவியைக் கண்டுபிடிக்கத் தூண்டுகோலாய் அமைந்தது.

கடிகாரத்தின் பெண்டுலத்தை – ஊசலை –அமைத்து நேரத்தைக் கணக்கிடவும் உதவியது.

ஊசல் விதி கண்டுபிடித்த அச்சிறுவன்தான் வானியல் ஆய்வுக்கு முன்னோடியாக விளங்கிய கலீலியோ கலிலி.

## இளமைப்பருவம்

கலீலியோ இத்தாலி நாட்டிலுள்ள பைசா நகரத்தில் 1564ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பதினைந்தாம் நாள் பிறந்தார். அவரின் தந்தையார் பெயர் வின்சென்சோகலீவீ. வணிகரான அவர், இசையிலும் ஓவியத்திலும் தேர்ச்சிபெற்று விளங்கினார். கலீலியோ, தம் இளமைக்காலத்திலிருந்தே இயற்கைமீதும் அறிவியல்மீதும் மிகுந்த ஆர்வம் உடையவராய் விளங்கினார். மருத்துவம் படிப்பதில் தமக்கிருக்கும் விருப்பத்தைத் தந்தையாரிடம் வெளிப்படுத்தினார்.

## கணக்கியல் வல்லுநர்

கலீலியோ, பைசா நகரப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறையில் மாணவராய்ச் சேர்ந்த குறுகிய காலத்திற்குள் அறிவியலில் அவர்தம் முதல் கண்டுபிடிப்பு நிகழ்ந்தது. அதுதான் ஊசல்விதி. பல்கலைக்கழகத்தில் அவர் பயிலும் துறையில் கணக்குப் பாடமாக அமையவில்லை. ஒருமுறை கணக்கு வல்லுநர் ஒருவர் சுவையாகக் கணக்கு நடத்திக் கொண்டிருந்ததனைத் தற்செயலாக அவர் கேட்டார். பல நாள், அவர் கணக்கியல் விரிவுரையாளரின் அறையில் மறைந்திருந்து கணக்குப் பாடங்களைக் கேட்டார். ஆகவே, கணக்கில் மிகவும் நாட்டம்கொண்டு, சிறந்த பல ஆய்வுகளை வெளியிட்டார். அதனால், தம்முடைய இருபத்தைந்தாம் அகவையிலேயே பைசாநகரப் பல்கலைக்கழகத்தில் கணக்கியல் பேராசிரியராகப் பணியமர்த்தப்பட்டார்.

## அறிவியல் ஆய்வு

கலீலியோ, பைசாநகரப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த காலத்தில் அறிவியல் ஆய்வுகளைச் செய்து காட்டினார். ஒருசமயம், தத்துவமேதை அரிஸ்டாட்டிலின் கண்டுபிடிப்பு ஒன்றனைக் கலீலியோ படிக்க நேர்ந்தது. அரிஸ்டாட்டிலின் கருத்துப்படி, ஒரே நேரத்தில் உயரத்திலிருந்து எறியப்படும் பொருள்களுள் எடை மிகுந்த பொருள் விரைவாகவும், எடை குறைந்த பொருள் மெதுவாகவும் நிலத்தை வந்தடையும் என்றிருந்தது.

பல ஆண்டாக அரிஸ்டாட்டில் கூறிய இக்கருத்துச் சரியானதுதான் என்று பொதுமக்களும் நம்பி வந்தனர். ஆனால், கலீலியோ இக்கருத்தை ஒப்புக் கொள்ளவில்லை. எனவே, தம்முடைய கருத்தை ஆய்வின்மூலம் மெய்ப்பித்துக் காட்ட விரும்பினார். பொதுமக்கள் முன்னிலையில் பைசா கோபுரத்தில் தாமே ஏறி நூறு பவுண்டு (கிலோ) எடையும், ஒரு பவுண்டு (கிலோஎடையும் கொண்ட இரு இரும்புக்குண்டுகளை ஒரே நேரத்தில் மேலிருந்து கீழே விழச்செய்தார். அவை இரண்டும் ஒரே நேரத்தில் தரையைத் தொட்டன. இதனைக்கண்ட பொதுமக்கள் கலீலியோ கூறியதனை ஒப்புக்கொண்டனர். இதனால், கலீலியோவின் புகழ் ஒருபுறம் பரவியது; இன்னொருபுறமோ பகைமை வளர்ந்தது.

கலீலியோ, 1592ஆம் ஆண்டில் பதுவா பல்கலைக்கழகத்தில் கணக்கியல் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இவர், கணக்கும் வானியலும்பற்றி விரிவுரை ஆற்றினாலும், நிலைஇயக்கவியலிலும் பொறியியலிலும் ஆய்வு நிகழ்த்திக் கொண்டிருந்தார். இவர், காற்று மற்றும் வெப்பஅளவியை முதன்முதலாக உருவாக்கினார்; இராணுவப் பொறியாளர்களும் துப்பாக்கி வீரர்களும் எளிதாகக் கணக்கிடுவதற்குக் கணக்குக்கருவியை வடிவமைத்தார்.

## வானியல் ஆய்வு

கலீலியோவிற்கு முன்பு வானியல்பற்றிய கொள்கைகளை வெளியிட்ட அரிஸ்டாட்டிலும், தாலமி முதலிய வானியலாளரும் நிலம் அண்டத்தின் மையப்பகுதி எனவும், அஃது அசையாதது, நிலையானது எனவும் கூறிவந்தனர். சூரியனைச் சுற்றியே

புவி நகர்கிறது என்பது வானியல் அறிஞர் கோபர்நிகசின் வானியல் கொள்கையாகும். ஆனால், அவர்தம் கருத்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

வானியல் ஆய்வில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது கலீலியோவின் தொலைநோக்கி. தொலைவில் உள்ள பொருளிலிருந்து வரும் ஒளிக்கதிரைக் கோளஆடியின்மூலம் ஒருங்குதிரட்டிக் கருவிழிக்குக் கொடுத்தால், அதன் திறன் மிகும் என்பதனை உணர்ந்தார். இதனடிப்படையில் 1610ஆம் ஆண்டில் தொலைநோக்கியை அமைத்து விண்வெளியை ஆய்வு செய்தார். பால்வீதி என்பது பலகோடி விண்மீன்களின் தொகுதி என மெய்ப்பித்தார். 'நிலவின் மேற்பரப்புக் கரடுமுரடானது என்றும், மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்தது' என்றும் தொலைநோக்கிமூலம் கண்டறிந்து கூறினார்.

அறிஞர் கோபர்நிகசு கூறிய கருத்தானது, அண்டத்தின் மையம் பூமியன்று, சூரியனே. சூரியனைப் பூமியும் பிற கோள்களும் சுற்றி வருகின்றன. இவர், சூரியன் நகருவதாகத் தோன்றுவது பூமியின் சுழற்சியினால்தான் என்னும் கருத்தை மெய்ப்பித்தார். தொலைநோக்கி வழியாக இதனை அனைவருக்கும் உணர்த்தினார். வியாழன்கோளைச் சுற்றி நான்கு சிறு கோள்கள் சுற்றி வருவதனையும் வெளிப்படுத்தினார். ஆனால், கலீலியோ வாழ்ந்த காலத்தில் அவருடைய கருத்துகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இவை மதக் கொள்கைகளுக்கு எதிரானவை என்றும், கோபர்நிகசு கூற்றை உறுதிப்படுத்தியது குற்றம் என்றும், கலீலியோ தம்கொள்கைகளை விலக்கிக்கொள்ளவேண்டும் என மதவாதிகள் வற்புறுத்தினார்கள். அவர்களின் பிடிவாதத்தால் 1616ஆம் ஆண்டில் அவர், வீட்டில் சிறை வைக்கப்பட்டார்.

### இறுதிக்காலம்

பல்வேறு துன்பங்களுக்கு இடையில் 1632ஆம் ஆண்டில் உலகத்தின் முதன்மையான இரு முறைமைகளைப்பற்றிய உரையாடல் என்னும் தலைப்பிலும், அவரது கண்பார்வை பெரிதும் மங்கிய நிலையில், 1638ஆம் ஆண்டில் புதிய அறிவியலைச் சார்ந்த இரு உரையாடல் என்னும் தலைப்பிலும் மிகச்சிறந்த நூல்களை எழுதி வெளியிட்டார். அந்நூல்களை அடிப்படையாகக்கொண்டே அறிவியல்அறிஞர் ஐசக் நியூட்டன் தம்முடைய கொள்கைகளை உருவாக்கினார். இறுதிக்காலம் முழுவதனையும் துன்பத்துடன் கழித்த கலீலியோ, 1642ஆம் ஆண்டு சனவரித் திங்களன்று இவ்வுலக வாழ்வை நீத்தார்.

கலீலியோ கண்டுபிடித்த அறிவியல் உண்மைகளை அவர் காலத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், அவர் கண்டுபிடிப்புகள் சரியானவை என்று இன்றைய அறிவியல் துறை ஏற்றுக்கொண்டதே, அவருடைய கடின உழைப்புக்கு மிகப்பெரிய ஏற்பு ஆகும்.

## மாதிரி வினா

### கட்டுரை வினா

கலீலியோவின் அறிவியல் கண்டுபிடிப்புகள் குறித்து எழுதுக.

# புணர்ச்சி : இயல்பு, விகாரம்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். உட்காருங்கள். திருமணம் நடைபெறும் வீட்டிற்குச் சென்றிருக்கிறீர்களா ?

மாணவர் : சென்றிருக்கிறோம், ஐயா.

ஆசிரியர் : சரி சரி. நாம் செல்லுமிடங்களில் எல்லாம் நடைபெறும் நிகழ்வுகளை நன்றாக உற்றுநோக்குதல் வேண்டும்; உற்றுநோக்கித் தெரிந்து கொள்வதும் கல்விதான். நிகழ்வுகளையும் செயல்களையும்பற்றி ஏன், எப்படி, எவ்வாறு, எதனால் என நமக்குள்ளேயே வினாக்கள் எழுப்பிச் சிந்தித்தல் வேண்டும். விடைகிடைக்காதபோது பெரியவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். சரி. திருமண வீட்டின்முன் எந்த மரத்தைக் கட்டுவார்கள் ?

மாணவர் : வாழைமரம், ஐயா.

ஆசிரியர் : நன்கு உற்றுநோக்கியிருக்கிறாய். மகிழ்ச்சி. இறைவனுக்குத் தேங்காய், பூமாலை இவற்றுடன் எந்தப் பழத்தை வைப்பார்கள் ?

மாணவர் : வாழைப்பழம், ஐயா.

ஆசிரியர் : ஆம். வாழைமரம், வாழைப்பழம். இவ்விரு சொற்களையும் நோக்குங்கள். முதல் சொல்லில் வாழை + மரம் = வாழைமரம் என இருசொற்கள் இணைந்து எத்தகைய மாற்றமும் இல்லாமல் அப்படியே சேர்ந்துள்ளன. இரண்டாவது சொல்லில் வாழை + பழம் = வாழைப்பழம் என இருசொற்கள் இணையும்போது வல்லின மெய் (ப்) சேர்ந்து வந்துள்ளது. இவ்வாறு இருசொற்கள் இணைவதற்குப் புணர்ச்சி என்பது பெயர்.

மாணவர் : ஐயா, இந்த இரு தொடர்களிலும் நீங்கள் சொல்கிற புணர்ச்சி ஒன்றுபோல் இல்லையே !

ஆசிரியர் : சரியாகச் சொன்னாய். முதல் தொடரில் இயல்புப்புணர்ச்சியும் இரண்டாவது தொடரில் விகாரப்புணர்ச்சியும் இடம்பெற்றுள்ளன. நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது எவ்விதமாற்றமும் ஏற்படவில்லையென்றால், அஃது இயல்புப்புணர்ச்சியாகும். நீங்களே எடுத்துக்காட்டைக் கூறுங்கள்.

மாணவர் : பொன் + வளையல் = பொன்வளையல்; மலர் + மாலை = மலர்மாலை; பனை + மரம் = பனைமரம்.

ஆசிரியர் : தெளிவாகச் சொன்னாய். இணையும் இருசொற்களில் முதல்சொல் நிலைமொழி எனப்படும். நிலைமொழியின் இறுதி, புள்ளிஎழுத்தாக (மெய்யாக) இருந்தால் மெய்யீறு எனச் சொல்லுதல் வேண்டும். உயிர்மெய்யாக இருந்தால், உயிரீறு எனச் சொல்லுதல் வேண்டும்.

பொன் + வளையல் – நிலைமொழியில் ன் மெய்யீறு.

பனை + மரம் – நிலைமொழி இறுதி எழுத்தாகிய னை ( ன்+ ஐ ) உயிரீறு.

குறிப்பு : 1. ஓர் எழுத்துச் சொல்லில் மட்டும் உயிர் ஈறு வெளிப்படையாகத் தெரியும். ( தீ + பிடித்தது = தீப் பிடித்தது )

2. ஓர் எழுத்துச் சொல்லாக உயிர்மெய் எழுத்து வரும்போது (ப் + ஊ) எனப் பிரித்து உயிர் ஈற்றைக் காணுதல் வேண்டும். பூ (ப் + ஊ) + பூத்தது = பூப்பூத்தது.

மாணவர் : புரிகிறது, ஐயா. வருமொழியை எவ்வாறு அழைக்கலாம் ?

ஆசிரியர் : நல்ல கேள்வி. வருமொழியின் முதல் எழுத்து உயிர்மெய்யாக இருந்தால், மெய் முதல் எனச் சொல்லுதல் வேண்டும். உயிராக இருந்தால் உயிர்முதல் எனச் சொல்லுதல் வேண்டும்.

(எ.கா.) பொன் + வளையல் = பொன் வளையல் (வ் + அ) இங்கு 'வ்' மெய்முதல். கண் + அழகு = கண்ணழகு (இங்கு அ உயிர்முதல்) நிலைமொழி ஈற்றையும் வருமொழி முதலையும் நன்றாகத் தெரிந்து கொண்டால்தான் புணர்ச்சியைப் புரிந்துகொள்ளுதல் இயலும்.

மாணவர் : நன்றாகப் புரிந்தது, ஐயா.

ஆசிரியர் : நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது மாற்றங்கள் ஏற்படுமானால், அதனை விகாரப்புணர்ச்சி என்பர்.

(எ.கா.) 1. பலா + சுளை = பலாச்சுளை – மெய் தோன்றியது.

2. படம் + காட்சி = படக்காட்சி – நிலைமொழி ஈறுகெட்டு மெய் தோன்றியது. ( ம் மறைந்து க் தோன்றியது)

3. பொன் + சிலை = பொற்சிலை – நிலைமொழி ஈறு திரிந்தது. (ன்–ற் ஆனது)

இவ்வாறு விகாரப்புணர்ச்சி தோன்றல், கெடுதல், திரிதல் என மூவகைப்படும்.

விகாரப்புணர்ச்சிக்குச் சில எடுத்துக்காட்டுகள் கூறுங்கள்.

மாணவர் : மா + பழம் = மாம்பழம், வடக்கு + திசை = வடதிசை, மணம் + கோலம் = மணக்கோலம், அல் + திணை = அஃறிணை.

ஆசிரியர் : அருமை அருமை. புணர்ச்சியின் வகைகளைக் கரும்பலகையில் அட்டவணைப்படுத்தலாம்.

தமிழ்

புணர்ச்சி

| இயல்புப்புணர்ச்சி | விகாரப்புணர்ச்சி |
|---|---|
| வாழை + மரம் = வாழைமரம் | 1. தோன்றல் : திரு + குறள் = திருக்குறள் (க்) |
| | 2. கெடுதல் : மரம் + வேர் = மரவேர் (ம்) |
| | 3. திரிதல் : பல் + பொடி = பற்பொடி (ற்) |

பயிற்சி

விடுபட்ட இடங்களை நிரப்புக.

1. வாழை + ________ = வாழைப்பழம்
2. வட்டம் + பலகை = ________
3. பசுமை + ________ = பைங்கூழ்
4. பனை + மரம் = ________

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. பொருத்துக.

1. இயல்புப்புணர்ச்சி – பாடம் + வேளை
2. தோன்றல் – பொன் + குடம்
3. திரிதல் – வாழை + குலை
4. கெடுதல் – தமிழ் + மண்

2. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. நிலைமொழி ஈற்றெழுத்தும் வருமொழி முதலெழுத்தும் சேர்வதற்கு ________ என்பது பெயர்.
2. அல் + திணை என்பது ________ எனப் புணரும்.
3. தோன்றல், திரிதல், கெடுதல் என்பன ________ புணர்ச்சி ஆகும்.

3. உரிய விடையைத் தேர்ந்து எழுதுக.

1. வாழை + தோட்டம் என்பது ________ புணர்ச்சி.

அ) இயல்புப்புணர்ச்சி  ஆ) விகாரப்புணர்ச்சி  இ) திசைப்பெயர்ப்புணர்ச்சி

2. நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இல்லாமல் புணர்வது ________ .

அ) இயல்புப்புணர்ச்சி  ஆ) விகாரப்புணர்ச்சி  இ) பண்புப்பெயர்ப்புணர்ச்சி

3. விகாரப்புணர்ச்சி ________ வகைப்படும்.

அ) ஐந்து  ஆ) ஆறு  இ) மூன்று

ஆ) குறுவினாக்கள்

1. புணர்ச்சி என்றால் என்ன ? சான்று தருக.
2. விகாரப்புணர்ச்சி எத்தனை வகைப்படும் ? திரிதல் விகாரம் சான்று தருக.
3. பாடம் + புத்தகம். இதனைச் சேர்த்தெழுதி, எவ்வகைப் புணர்ச்சி என்பதனைக் குறிப்பிடுக.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

கீழ்க்காணும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

நான் திரைப்படக் கவிஞனானால்...

### ஆ) படித்தல் திறன்

கீழ்க்காணும் பத்தியைப் படித்து நயம் அறிக.

எட்டயபுரத்து அரசவையில் இருந்த காந்திமதிநாதன் என்பவருக்குப் பாரதியார்மீது வெறுப்பு ஏற்பட்டது. பாடல் புனைவதில் வல்லவரான பாரதியைப் பாடலாலேயே சிறுமைப்படுத்த வேண்டும் என்று நினைத்தார். எனவே, பாரதி சின்னப் பயல் என்னும் ஈற்றடியைக் கொடுத்துப் பாரதியாரிடம் பாடல் ஒன்றனைப் பாடச்சொன்னார். காந்திமதிநாதனின் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்ட பாரதியார், பாடலைப் பாடி முடித்தார். அவர், அப்பாடலைக் கீழுள்ளவாறு அமைத்திருந்தார்.

காந்திமதிநாதனைப்பார் அதி சின்னப்பயல்

### இ) எழுதுதல் திறன்

படங்கள் வாயிலாகக் கருத்துகளை வெளிப்படுத்தும் திறன்.

(எ.கா.) காந்தியடிகளும் பாரதியாரும் நேருக்கு நேராகச் சந்தித்தால் என்ன பேசிக் கொள்வார்கள் ? உரையாடல் வடிவத்தில் ஒரு பக்கத்திற்கு மிகாமல் எழுதுக.



காந்தியடிகள் : வாருங்கள், பாரதியாரே ! நலமாக இருக்கிறீர்களா ?

பாரதியார் : விடுதலை, விடுதலை, விடுதலை.

காந்தியடிகள் : என்ன, ஐயா ! உங்கள் நலத்தைக் கேட்டால் விடுதலை என்று கூறுகிறீர்களே ? யாருக்கு விடுதலை வேண்டும் ?

பாரதியார் : மகாத்மா அவர்களே, எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய இந்நாட்டைக்காண ஆவலோடு ஓடி வந்தேன். என்னே வியப்பு! நான் முதலில் நுழைந்தது ஒரு கல்லூரி வகுப்பினுள்; ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காணென்று பாடினேனே, அதனை என் கண்களால் அங்குக் கண்டேன். ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் அங்குக் கல்வியறிவு பெறுகின்றனர். நாட்டுக்கும் விடுதலை, பெண்ணுக்கும் விடுதலை. இப்போது புரிந்ததா நான் ஏன் விடுதலையைப்பற்றிக் கூறினேன் என்று ? ஐயா, நீங்கள் எங்குச் சென்றீர் ? யாரைக் கண்டீர் ?

காந்தியடிகள் : ஒரு பள்ளிக்குச் சென்றேன். அங்கு மாணாக்கர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள். அதனைக் கண்டு மிகவும் வியப்படைந்தேன்.

பாரதியார் : அப்படியென்ன அங்குக் கண்டீர் ?

காந்தியடிகள் : அவரவர் தாய்மொழியில் கல்வி கற்க வேண்டுமென்பதே என் விருப்பம். அப்பள்ளியில் தாய்மொழிவழிக்கல்வி நடைபெற்றுக்கொண்டிருந்தது. என் விருப்பம் நிறைவேறியதனைக் கண்டு மிகவும் மகிழ்வடைந்தேன்.

பாரதியார் : நம் இருவரின் எண்ணங்களும் நிறைவேறியதனைக் கண்டு எனக்கும் மகிழ்ச்சியாக உள்ளது.

நன்றி, ஐயா. மீண்டும் சந்திப்போம்.

காந்தியடிகள் : நன்றி, நானும் சென்று வருகிறேன்.

## படைப்பாற்றல்



இவை சந்தித்தால் என்ன பேசிக் கொள்ளும் ?

## மொழித்திறன் பயிற்சி

### 1. வல்லினம் மிகும் இடங்கள் சிலவற்றை அறிவோம்

அ , இ என்னும் சுட்டெழுத்துகளின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) அ + கனி = அக்கனி, இ + புத்தகம் = இப்புத்தகம்

எ என்னும் வினா எழுத்தின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) எ + பொருள் = எப்பொருள்

அந்த, இந்த என்னும் சுட்டுத்திரிபுகளின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) அந்த + பையன் = அந்தப் பையன், இந்த + பள்ளி = இந்தப் பள்ளி

அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) அப்படி + கேள் = அப்படிக்கேள், இப்படி + செய் = இப்படிச்செய்

எப்படி + படித்தான் = எப்படிப் படித்தான்

அவ்வகை, இவ்வகை, எவ்வகை என்னும் சொற்களின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) அவ்வகைப் பேச்சு

இனி, தனி, மற்று, மற்ற, மற்றை என்னும் சொற்களின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) இனிப் பேசுவான்.

இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை விரியின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) படத்தைப் பார்த்தான், அவனுக்குக் கொடு.

இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகையின்பின் வல்லொற்று மிகும்

(எ.கா.) தயிர்க்குடம்

மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகையின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) பட்டுச்சேலை

நான்காம் வேற்றுமையில் அஃறிணைப் பெயர்களின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) கூலித்தொழில்

ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகையின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) விழிப்புனல்

ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகையின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) நீர்ப்பாம்பு

ஏழாம் வேற்றுமைத்தொகையின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) குடிப்பிறந்தார்

பயிற்சி

அ) தேவையான இடங்களில் வல்லின மெய்யிட்டு எழுதுக.

1. வெள்ளி கிண்ணம் விலையதிகம்.
2. நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளை காட்டும் கண்ணாடி.
3. தைதிங்கள் நன்னாளில் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது.
4. பால்பருக தந்தான்.
5. உறுதியாக செய்வேன் என்று வாக்கு கொடுத்தான்.
6. அந்த பையனா இப்படி சொன்னான்?
7. இந்த செயலை எப்படி செய்தாய்?

ஆ) வல்லினமெய் சேர்த்தெழுதுக.

1. தனி + பையன் = ____________ 2. இனி + பேசு = ____________

3. நீர் + குடம் = ____________ 4. பாம்பு + தோல் = ____________

**2.** தமிழெண்களின் கூடுதல் காண்க.

1. ௧ + ௮ = ____
4. ௨ + ௧௨ = ____
2. ௧ + ௫ = ____
5. ௧ + ௧ = ____
3. ௩ + ௮ = ____

**3.** கட்டுரைப் பயிற்சி : உழைப்பே உயர்வு

தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்

அப்பா : ‘வீக் எண்ட்ல பீச்சுக்கு வந்தாலே இதுதான் பிராப்ளம், பார்த்தாயா ? காரைக்கூடப் பார்க்செய்ய முடியல.

மகன் : டாடி, அங்கே பாருங்க, அங்க ஒரு ப்ளேஸ் இருக்கு.

அப்பா : அப்பாடா ! ஒரு வழியா பார்க் செய்தாச்சி. மீனா, பாபு, உங்களோட திங்க்ஸ் எல்லாம் எடுத்துக்குங்க. மம்மி கிட்ட கொடுத்துட்டு நீங்க ப்ளே பண்ணலாம். ஒகே தானே.

மகன் : டாடி, ஐஸ்கிரீம் வருது பாருங்க. எனக்கு வாங்கித்தாங்க.

அப்பா : நோ, நோ உனக்கு ஏற்கெனவே பீவர் ஆக இருக்கு. ஐஸ்கிரீம் சாப்பிட்டால் நாளைக்கு ஸ்கூலுக்குப் போக முடியாது.

மேற்கண்ட உரையாடலில் இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள் அமைத்து எழுதுக.

## வாழ்க்கைத்திறன்

### சிக்கலுக்குத் தீர்வு காணல்

கயல்விழி நன்றாகப் படிப்பாள். ஆனால், தேர்வு எழுதும் நேரத்தில் மட்டும், அவள் படித்தவற்றை மறந்துவிடுவாள். இதனால், அவளால் அதிக மதிப்பெண் பெற முடியவில்லை. பெற்றோரும் ஆசிரியரும் அவள் நன்றாகப் படிக்கக்கூடியவள் என்பதனை அறிவார்கள். முதல்மதிப்பெண் பெற, அவள் மேலும் முயற்சி செய்யவேண்டும் என்று எண்ணுகின்றனர். ஆனால், படித்தவற்றைத் தேர்வு நேரத்தில் மறந்துவிடுவது அவளுக்கு மட்டும்தான் தெரியும்.

கயல்விழிக்கு ஏற்பட்ட சிக்கல் என்ன **?**

இச்சிக்கலுக்கு எவ்வாறு தீர்வு காண்பாள் **?**

நினைவாற்றலை வளர்த்துக்கொள்வது எப்படி **?**

## மதிப்புக்கல்வி

### நகைச்சுவையுணர்வு

காந்தியடிகளும், நேருவும் ஒருமுறை நடைப்பயணம் மேற்கொண்டிருந்தனர். அப்போது வழியில் மூன்றடி அகலமுள்ள கால்வாய் ஒன்று குறுக்கிட்டது. அதனைக் கண்ட நேரு, சிறிது பின்னோக்கிச் சென்று கால்வாயைத் தாண்டினார். ஆனால், காந்தியடிகள் கால்வாயிலிருந்த கற்களின்மீது கால் வைத்துத் தாண்டிச்சென்றார். அப்போது நேரு காந்தியடிகளிடம், “இந்தக் கால்வாயை ஒரேமுறையில் உங்களால் தாண்ட முடியாதா **?**” என்று கேட்டார்.

அதற்குக் காந்தியடிகள் “நான் நினைத்திருந்தால் தாண்டியிருப்பேன். ஆனால், மூன்றடி தூரம் முன்னோக்கிச் செல்வதற்கு ஆறடித் தொலைவு பின்னோக்கிச் செல்ல வேண்டுமா **?** போர்முனையில் பின்வாங்கக் கூடாதல்லவா **?** ” என்று கூறி நகைத்தார்.

காந்தியடிகள் நகைச்சுவை உணர்வுமிக்கவர் என்பதனை இந்நிகழ்வு எடுத்துரைக்கிறது.

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
| --- | --- |

கீழ்க்காணும் உரைப்பத்தியை ஆசிரியர் படிக்க, மாணவர்கள் உற்றுக்கேட்டு, வினாக்களுக்கு விடை அளிக்கவும்.

வ. சுப. மா., எனச் சுருக்கமாக அழைக்கப்படும் வயிரவன்கோவில் சுப்பிரமணியனார் மகனார் மாணிக்கம் என்பார் பல்லாண்டுகளாகத் தமிழுக்கு நிலைத்த தொண்டாற்றியவர். அவர்தம் இளமைக்காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி. வ. சுப. மா., தம் பதினெட்டாம் வயதில், பர்மாவின் ( இன்றைய மியான்மர் ) தலைநகரான இரங்கூனில் ஓர் அங்காடியில் வேலை செய்தார். ஒருநாள், அங்காடியின் உரிமையாளர் தம்மைத் தேடி ஒருவர் வருவார் எனவும், அவர் வரும்போது தாம் இல்லை எனக் கூறும்படியும் வ. சுப. மாணிக்கத்துக்குக் கட்டளையிட்டார். ஆனால், அவருக்கு மறுமொழியாக, 'அங்காடியின் உரிமையாளர் வெளியில் சென்றிருந்தால் இல்லை என்பேன்; அவர் இருக்கும்போது கேட்டால் எவ்வாறு இல்லை எனச் சொல்வது ? நான் அப்படியெல்லாம் பொய் கூறமாட்டேன்' என உரிமையாளரிடம் வ. சுப. மாணிக்கம் உறுதியாகக் கூறினார். இதனால், சினம் கொண்ட உரிமையாளர் அன்றே அவரை வேலையிலிருந்து நீக்கி, இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பிவிட்டார். இந்நிகழ்வே, பிற்காலத்தில் வ. சுப. மாணிக்கத்தைப் 'பொய் சொல்லா மாணிக்கம்' எனப் பெருமையோடு அழைக்கக் காரணமாக அமைந்தது.

### வினாக்கள்

1. உரைப்பத்தியில் கூறப்பெறும் தமிழறிஞர் யார் ?
2. வ. சுப. மா., தம்முடைய பதினெட்டாம் வயதில் எங்கு வேலை செய்தார் ?
3. அங்காடி உரிமையாளரிடம் வ. சுப. மா., கூறிய மறுமொழி யாது ?
4. வ. சுப. மா., வின் வாழ்வில் நடந்த நிகழ்வு அவரை எங்ஙனம் பெருமைப்படுத்தியது ?
5. இவ்வுரைப்பத்தியால் நீ அறிந்துகொள்வது என்ன ?

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
| --- | --- |

இருவர் உரையாடல்

கீழ்க்காணும் உரையாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் உணர்ச்சி வெளிப்படுமாறு பேசுக.

அதியமான் : அன்னையே! நின்னையே தொழுதேன்! தங்கள் வரவு நல்வரவாகுக! இருக்கையில் உட்காருங்கள்.

ஔவையார் : மகிழ்ச்சி! மகிழ்ச்சி! நிலவுலகம் போற்றும் நீடுபுகழ் அதியா, நின் கொற்றம் வாழ்க! நின் புகழ் ஓங்குக!

அதியமான் : தங்கள் புகழுரைக்குச் சிரம் தாழ்த்திப் பணிகின்றேன். அன்னையே! அரிதினும் அரிதான ஒரு பொருளை உங்களுக்கு அளித்து அழியாப்புகழ் பெற விரும்புகின்றேன்.

ஔவையார் : அரிதினும் அரிதான பொருளா ? அஃதென்ன ? அதனை அறிய நான் மிகவும் ஆவலாக உள்ளேன்.

அதியமான் : ஔவையே, இதோ அந்த அரிய பொருள்; எடுத்து உண்ணுங்கள்.

ஔவையார் : என்ன இது ? நெல்லிக்கனியா ?

| | | |
|---|---|---|
| அதியமான் | : | ஆம். ஔவையே, இந்நெல்லிக்கனியை எளிதாக எண்ணிவிடாதீர்கள்; சுவைத்துப் பாருங்கள். |
| ஔவையார் | : | (வாயிலிட்டுச் சுவைக்கின்றார்.) ஆ! என்ன சுவை, என்ன சுவை! இதனைத்தான் அமிழ்தம் என்றார்களோ? இக்கனியின் இனிய சுவை என்றும் என் நினைவில் நிலைத்திருக்கும். இவ்வளவு சுவையான கனியை நீ உண்ணாமல் எனக்களித்த காரணம் என்ன? |
| அதியமான் | : | சொல்கிறேன், ஔவையே. இந்நெல்லிக்கனியை உண்டவர் நெடுங்காலம் நீடுழி வாழ்ந்திருப்பர். |
| ஔவையார் | : | அப்படியென்றால், நீயல்லவா இக்கனியை உண்டிருத்தல் வேண்டும்? மக்கள் குறிப்பறிந்து நிறைவேற்றுகின்ற நீயல்லவோ நெடுங்காலம் வாழ்தல் வேண்டும்? நரை மூதாட்டியாகிய எனக்களித்ததேன்? |
| அதியமான் | : | அன்னையே! அரசாட்சி செய்கின்ற என்னைவிட அமுதத்தமிழில் அழகிய பாடல்களை எந்நாளும் இயற்றும் நீங்கள்தான் இக்கனியை உண்பதற்குத் தகுதியானவர். அதனால், நீங்கள் வாழும் நாள்வரை தமிழும் வாழ்ந்திருக்கும் அல்லவா! |
| ஔவையார் | : | அதியா, உன் செயல்கண்டு யான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். தமிழ்மீது நீ கொண்டுள்ள பற்று என்னைப் பெருமை கொள்ளச் செய்கின்றது. தரணிமீதில் தமிழ் உள்ளவரை நின் பெயரும் நிலைத்திருக்கும். ஓங்குக நின் தாய்மொழிப்பற்று! |
| அதியமான் | : | மிக்க மகிழ்ச்சி! மீண்டும் ஒருமுறை தங்களைப் பணிந்து வணங்குகின்றேன். |

தமிழ்

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் பொருள் விளங்கக் குரலேற்ற இறக்கத்துடனும் உணர்ச்சி வெளிப்படுமாறும் படித்துக்காட்டுக.

மறக்குடி மங்கையொருத்தி, பகைவரை வென்று, 'வெற்றி வீரனாக வருக' என வாழ்த்தித் தன் மகனைப் போருக்கு அனுப்பியிருந்தாள். ஆனால் நடந்ததென்ன? ஒரு வீரன் வந்து, 'அம்மா! உன் மகன் போரில் புறங்காட்டி ஓடி விட்டான்' என்றான்.

அதனைக் கேட்ட முதியவள் கொதித்தெழுந்தாள். 'மகனே! உன்னைப்பற்றி இப்படியொரு இழிவான சொல்லைக் கேட்கவா நான் வாழ்ந்திருந்தேன்? இதற்காகவா நான் உன்னைப் பெற்றுப் பெருமையாக வளர்த்தேன்? நான் ஊட்டிய வீரவுணர்ச்சி யெல்லாம் எங்கே போய் ஒளிந்தன? அந்தோ! வழிவழியாக வந்த நம் மறக்குடிக்கு மாசுண்டாக்கிவிட்டாயே! இனி, நான் என் செய்வேன்? எவ்வாறு பிறர் முகத்தில் விழிப்பேன்? அட பதரே! நீ எங்கிருந்து வந்து எனக்கு மகனாகப் பிறந்தாய்? உன் உயிரென்ன அவ்வளவு பெரிதா? அட, போருக்கு அஞ்சிப் புறங்காட்டி ஓடும் கோழையே! நீயும் ஒரு தமிழனா?' என்று கடுஞ்சினம் கொண்டு புலம்பியவாறே போர்க்களம் நோக்கி ஓடினாள். அங்கு இறந்து கிடக்கும் பிணங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள். ஆனால், அவள் அங்குக் கண்டதென்ன? தன் மகன், நெஞ்சில் அம்பு பாய்ந்து இறந்து கிடந்ததனைக் கண்டாள். கண்டதும் அவனைப் பெற்றபோது உவந்ததனைவிடப் பெரிதும் உவந்தாள்.

| எழுதுதல் திறன் | |
|---|---|
| சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைத்தல் | செயல்பாடு – 4 |

கீழ்க்காணும் பண்புகளைத் தொடரின் முதலிலோ இடையிலோ இறுதியிலோ பயன்படுத்தித் தொடர்களை நிறைவு செய்க.

(அன்பு, அடக்கம், இனிமை, ஈகை, உண்மை, உதவு, எளிமை, கனிவு, துணிவு, தூய்மை, பணிவு, பொறுமை)

அன்பே ஆருயிர் மருந்தாகும்.

அடக்கம் வாழ்வின் உயர்வாகும்.

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

| வகைப்படுத்தி எழுதுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கீழ்க்காணும் பண்புகளை அட்டவணைப்படுத்துக.

இரக்கம், எளிமை, கடுமை, தன்னலம், அழுக்காறு, ஒப்புரவு, அடக்கம், நடுவுநிலைமை, பொய் பேசாமை, எதிர்த்துப் பேசுதல்

| நற்பண்பு | தீய பண்பு |
|---|---|
| இரக்கம் | கடுமை |
| | |
| | |
| | |
| | |

தமிழ்

| குறிப்பெடுத்தல் | செயல்பாடு – 6 |
|---|---|

விடுபட்ட கட்டங்களில் காந்தியடிகளின் பிற பண்புகளை எழுதி நிரப்புக.

| | | |
|---|---|---|
| | எளிமை | |
| |  | பொறுமை |
| | | |
| | | |

| படைப்பாற்றல் | செயல்பாடு – 7 |
|---|---|

கீழ்க்காணும் படம் உணர்த்தும் கருத்துகளை ஐந்து வரிகளில் எழுதுக.



| சொல்லுருவாக்குதல் | செயல்பாடு – 8 |
|---|---|

கீழ்க்காணும் சொற்களிலிருந்து புதிய சொற்களை உருவாக்குக.

(எ.கா.) நகைச்சுவை – நகை, சுவை, நவை, கை, கை வை, வைகை, நச்சு, வை.

1. மிருதங்கம் – ______________________
2. விழுதுகள் – ______________________
3. காவியம் – ______________________
4. மருத்துவத்துறை – ______________________
5. கருத்தரங்கம் – ______________________

| பொருளறிதல் | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் தொடர்களில் ஒருசொல் மீண்டும் மீண்டும் வருவதனைக் காண்க. ஒவ்வொரு தொடரிலும் அச்சொல் தரும் பொருளை அறிந்து எழுதுக.

1. ஒன்று பட்டால் உண்டு வாழ்வே – ஒற்றுமை
2. ஒன்றே குலம் ஒருவனே தேவன் –
3. தான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் –
4. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே –
5. எல்லாரும் ஒன்றெனும் காலம் வந்ததே –
6. பாருக்குள்ளே தெய்வம் ஒன்று –

| முறைப்படுத்தி எழுதுதல் | செயல்பாடு – 10 |
|---|---|

கீழ்க்காணும் குறட்பாக்களை உரியவாறு முறைப்படுத்தி எழுதுக.

1. எண்பதத்தால் எய்தல் யார்மாட்டும் எளிதென்ப
   பண்புடைமை என்னும் வழக்கு.
2. அன்புடைமை குடிப்பிறத்தல் ஆன்ற இவ்விரண்டும்
   வழக்கு என்னும் பண்புடைமை.
3. நகையுள்ளும் பாடறிவார் மாட்டு பண்புள
   பகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி.
4. பண்புடையார் உலகம் பட்டுண்டு அதுவின்றேல்
   மாய்வது மண்புக்கு மன்.
5. அரம்போலும் மக்கட்பண்பு இல்லா தவர்
   கூர்மையரேனும் மரம்போல்வர்.

| பொருள் மாற்றம் அறிந்து எழுதுதல் | செயல்பாடு – 11 |
|---|---|

கீழ்க்காணும் சொற்றொடர்களில் வல்லினம் இட்டும் இடாமலும் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மாற்றத்தை எழுதுக.

(எ.கா.) நாடி துடித்தது – கையில் உள்ள நாடியானது துடித்தது.

நாடித் துடித்தது – தேடித் துடித்தது.

தந்த பெட்டி – ______________________

தந்தப்பெட்டி – ______________________

மருந்து கடை – ______________________

மருந்துக்கடை – ______________________

தமிழ்

வேலை கொடுத்தான் – ____________________

வேலைக்கொடுத்தான் – ____________________

தேரைக் கண்டான் – ____________________

தேரை கண்டான் – ____________________

| வகைப்படுத்தி எழுதுதல் | செயல்பாடு – 12 |
|---|---|

கீழ்க்காணும் சொற்றொடர்களை இயல்புப்புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி என வகைப்படுத்துக.

வாழைப்பூ, வீட்டுச்சிறை, விண்மீன், மேற்பரப்பு, தொலைநோக்கி, சிறுகோள், கண்பார்வை, மாலைப்பொழுது, நீலவானம், மயிற்பொறி, வளர்பிறை, பாடநூல், அருட்பா, கலந்தீமை, மக்கட்பண்பு

| இயல்புப்புணர்ச்சி | விகாரப்புணர்ச்சி | | |
|---|---|---|---|
| | தோன்றல் | திரிதல் | கெடுதல் |
| | | | |

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

1. ஓரிரு சொற்களில் விடையளிக்கவும். 6 X 1 = 6

அ. அறிவியல் கல்வியில் மிகத் தொன்மையானது எது ?

ஆ. ஐம்பூதங்களைக் குறிப்பிடுக.

இ. ‘சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்’ எனக் கூறியவர் யார் ?

ஈ. வானவெளியில் மிகப்பெரிய விண்மீன் எது ?

உ. ஞாயிற்றின் பல பெயர்களுள் ஐந்தனை எழுதுக.

ஊ. மதி என்னும் சொல்லுக்கு இரு பொருள் தருக.

2. பொருத்துக. 4 X 1 = 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கட்டு + சோறு | = | கட்டுச்சோறு | – | இயல்பு விகாரம் |
| 2. | கண் + மலர் | = | கண்மலர் | – | கெடுதல் விகாரம் |
| 3. | வளம் + நூல் | = | வளநூல் | – | திரிதல் விகாரம் |
| 4. | முள் + செடி | = | முட்செடி | – | தோன்றல் விகாரம் |

தமிழ்



## வில்லிபாரதம்

*வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன்
மதிபெற்ற திருவுளத்தால் மதிக்கப் பெற்றேன்
தேன்பெற்ற துழாய் அலங்கல் களப மார்பும்
திருப்புயமும் தைவந்து தீண்டப் பெற்றேன்
ஊன்பெற்ற பகழியினால் அழிந்து வீழ்ந்தும்
உணர்வுடன்நின் திருநாமம் உரைக்கப் பெற்றேன்
யான்பெற்ற பெருந்தவப்பே(று) என்னை அன்றி
இருநிலத்தில் பிறந்தோரில் யார்பெற் றாரே. *

– வில்லிபுத்தூரார்

பொருள்: “அன்று உலகினை அளப்பதற்கு நீ திருவடியைத் தூக்கியபோது, நான்முகன் உன் திருவடியைத் தன் கமண்டல நீரால் வழிபாடு செய்தான். அதுவே ஆகாய கங்கையாகியது. அத்தகைய திருவடிமலரை யான் வணங்கும் பேறுபெற்றேன். குளிர்ச்சியான மதியினைத் தோற்றுவித்த உன் திருவுள்ளத்தால் ஒருபொருளாகக் கருதப்பெற்று யான் உயர்வுபெற்றேன். தேன்கமழும் துளசி மாலையும் சந்தனமும் அணியப்பெற்ற நின் திருத்தோள்களால் என்னைத் தழுவியதனால் பேரின்பம் கொண்டேன். அருச்சுனனுடைய கூரிய அம்பினால் துளைக்கப்பெற்று வலிமையிழந்து நான் வாடினாலும் உணர்வு உடையவனாகி உன்னுடைய திருப்பெயரை உரைக்கும் பேறுபேற்றேன். நான் பெற்ற பெரும்பேறு இவ்வுலகில் யார்தாம் பெற்றார் ?” எனக் கூறிக் கன்னன், கண்ணனைப் போற்றி வணங்கினான்.

சொற்பொருள்: வான்பெற்ற நதி – கங்கையாறு; துழாய் அலங்கல் – துளசிமாலை; களபம் – சந்தனம்; புயம் – தோள்; தைவந்து – தொட்டுத்தடவி; ஊன் – தசை; பகழி – அம்பு; நாமம் – பெயர்; இருநிலம் – பெரிய உலகம்.

### ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | வில்லிபுத்தூரார் |
| தந்தையார் | : | வீரராகவர் |
| ஆதரித்தவர் | : | வக்கபாகையை ஆண்ட வரபதி ஆட்கொண்டான் |
| காலம் | : | பதினான்காம் நூற்றாண்டு |

நூல் குறிப்பு : வில்லிபாரதம் பத்துப் பருவம் கொண்டது. நாலாயிரத்து முந்நூற்றைம்பது விருத்தப் பாடலால் ஆனது. இப்பாடல், வில்லிபாரதத்தில் எட்டாம் பருவமாகிய கன்னபருவத்தில் இடம்பெற்றுள்ளது.

தமிழ்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. பொருள் எழுதுக.

1. களபம் = ________ 3. துழாய் = ________ 5. அலங்கல் = ________
2. புயம் = ________ 4. பகழி = ________ 6. நாமம் = ________

2. பிரித்து எழுதுக.

1. திருவுளம் = ________ 3. இருநிலம் = ________
2. திருப்புயம் = ________ 4. பெருந்தவம் = ________

3. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. வில்லிபாரதத்தைப் பாடியவர் ________ .
2. வில்லிபுத்தூராரை ஆதரித்தவர் ________ .

### ஆ) குறுவினாக்கள்

1. வில்லிபுத்தூரார் – குறிப்பு எழுதுக.
2. தான்பெற்ற பெரும்பேறாகக் கன்னன் கூறியது என்ன ?

## யார் கவிஞன்?

* காசுக்குப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
கைம்மாறு விழைந்துபுகழ் பெறுதல் வேண்டி
மாசற்ற கொள்கைக்கு மாறாய் நெஞ்சை
மறைத்துவிட்டுப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
தேசத்தைத் தன்னினத்தைத் தாழ்த்தி விட்டுத்
தேட்டையிடப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
மீசைக்கும் கூழுக்கும் ஆசைப் பட்டு
மேல்விழுந்து பாடுபவன் கவிஞன் அல்லன்;

ஆட்சிக்கும் அஞ்சாமல், யாவ ரேனும்
ஆள்களனத் துஞ்சாமல், தனது நாட்டின்
மீட்சிக்குப் பாடுபவன் கவிஞன் ஆவன்;
மேலோங்கு கொடுமைகளைக் காணும்போது
காட்சிக்குப் புலியாகிக் கொடுமை மாளக்
கவிதைகளைப் பாய்ச்சுபவன் கவிஞன் ஆவன்;
தாழ்ச்சிசொலும் அடிமையலன் மக்கட் கெல்லாம்
தலைவனெனப் பாடுபவன் கவிஞன், வீரன். *

– முடியரசன்

பொருள்: செல்வத்துக்காகவும் பயனும் புகழும் கருதியும் குற்றமில்லாத கொள்கைக்கு மாறாக மனச்சான்றை மறைத்தும், தன்னலத்துக்காக நாடு, இனத்தை இழிவுபடுத்திக் கூழுக்கும் மீசைக்கும் ஆசைப்படுபவராய், தகுதியற்றவரை வலிந்து போற்றிச் செல்வம் திரட்டப் பாடுபவன் கவிஞன் அல்லன்.

ஆட்சியாளரின் அடக்குமுறைக்கு அஞ்சாமல், எவர் ஆண்டாலென்ன என இருந்துவிடாமல், தன் நாட்டின் மேன்மைக்குக் குரல் கொடுப்பவனே கவிஞன் ஆவான். கொடுமைகளைக்கண்டு மனங்கொதித்துப் புலியாகி, அக்கொடுமைகள் நீங்குமாறு பாடல்கள் தீட்டுவோனே கவிஞன் ஆவான். எதற்கும் தலைவணங்கும் அடிமையாகாமல், மக்களின் தலைவனாகத் தன்னை எண்ணிப் பாடுபவனே உண்மை மறவன்; அவனே கவிஞன்.

சொற்பொருள் : கைம்மாறு – பயன்; மாசற்ற – குற்றமற்ற; தேட்டையிட – செல்வம் திரட்ட; மீட்சி – மேன்மை; மாள – நீங்க.

## ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| பெயர் | : | முடியரசன் |
| இயற்பெயர் | : | துரைராசு |
| பெற்றோர் | : | சுப்பராயலு – சீதாலட்சுமி |
| ஊர் | : | தேனி மாவட்டத்திலுள்ள பெரியகுளம். |
| இயற்றிய நூல்கள் | : | பூங்கொடி, காவியப்பாவை, வீரகாவியம், முடியரசன் கவிதைகள் முதலியன. |
| பணி | : | தமிழாசிரியர், மீ.சு. உயர்நிலைப் பள்ளி, காரைக்குடி. |
| பட்டம் | : | பறம்புமலையில் நடந்த விழாவில் கவியரசு என்னும் பட்டம் குன்றக்குடி அடிகளாரால் வழங்கப்பெற்றது. |
| பரிசு | : | பூங்கொடி என்னும் காவியத்துக்காக 1966இல் தமிழக அரசு, பரிசு வழங்கியது. |
| சிறப்பு | : | முடியரசன், பாரதிதாசன் பரம்பரைத் தலைமுறைக் கவிஞருள் மூத்தவர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் நெருங்கிப் பழகியவர். |
| காலம் | : | 07. 10. 1920முதல் 03. 12. 1998வரை |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. பொருள் எழுதுக.

1. மாசு = ________ 2. கைம்மாறு = ________ 3. மாள = ________

2. பிரித்து எழுதுக.

1. மாசற = ________ 2. தன்னினம் = ________ 3. தலைவனென = ________

3. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கவிஞர் முடியரசனின் இயற்பெயர் ________ .
2. முடியரசன் பிறந்த ஊர் ________ .
3. தமிழக அரசின் பரிசு பெற்ற முடியரசனின் காவியம் ________ .

### ஆ) குறுவினாக்கள்

1. கவிஞனாகும் தகுதி இல்லாதவன் என்று முடியரசன் யாரைக் குறிப்பிடுகிறார்?
2. உண்மையான கவிஞன் எவ்வாறு இருக்க வேண்டும் என முடியரசன் கருதுகிறார்?

### இ) சிறுவினாக்கள்

1. முடியரசன் – குறிப்பு எழுதுக.
2. கவிஞரல்லாதார் இயல்புகளையும், கவிஞர்க்குரிய இயல்புகளையும்பற்றி முடியரசன் எடுத்துரைப்பன யாவை ?

# தேவநேயப் பாவாணர்



பால் வாங்கிக்கொண்டு தெருவில் வந்தவர்மீது மிதிவண்டியொன்று மோதியது; அதனால், அவர் செம்பிலிருந்த பால் சிந்தியது; கை கால்களில் சிறு சிறு காயங்கள் ஏற்பட்டன. மிதிவண்டிக்காரர், “ஐயா, மன்னித்துக் கொள்க” என்றார். அதற்கு அவர், மன்னிப்பு உருதுச்சொல்; பொறுத்துக்கொள்க எனத் தமிழில் சொல்லுங்கள் எனக் கூறி, மிதிவண்டிக்காரரையும் சொல்லச் செய்தார். அவர்தாம் அன்னைத் தமிழுக்கு அரும்பணியாற்றிய தேவநேயப் பாவாணர்.

தமிழின் தொன்மையை உலகறியச் செய்தவர் கால்டுவெல். தனித்தமிழுக்கு வித்திட்டவர் பரிதிமாற் கலைஞர். தமிழைத் தழைக்கச் செய்த செம்மல் மறைமலையடிகள். தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் தேவநேயப் பாவாணர்.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் தனித்தமிழ் ஊற்று; செந்தமிழ் ஞாயிறு; இலக்கியப் பெட்டகம்; இலக்கணச் செம்மல்; தமிழ்மானங் காத்தவர்; தமிழ், தமிழர் நலம் காப்பதனையே உயிர்மூச்சாகக்கொண்டவர்.

உலக முதன்மொழி தமிழ்; இந்திய மொழிகளுக்கு மூலமும் வேரும் தமிழ்; திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் என வாழ்நாள் முழுவதும் ஆய்வுசெய்து நிறுவிய செம்மல் தேவநேயப் பாவாணர். உலகின் முதல் மாந்தன் தமிழன்; தமிழன் தோன்றிய இடம் குமரிக்கண்டமே என்பதும் மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் பழந்தமிழர் நாகரிகமே என்பதும் பாவாணரது ஆய்வுப்புலத்தின் இரு கண்களாம். அவர், தமிழை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான் என்று கூறினார்.

| | | |
|---|---|---|
| பெற்றோர் | : | ஞானமுத்து – பரிபூரணம் |
| ஊர் | : | சங்கரன்கோவில் |
| கல்வி | : | பண்டிதர், புலவர், வித்துவான், முதுகலைத் தமிழ், பி.ஓ.எல்., |
| காலம் | : | 07.02. 1902 – 15.01. 1981 |
| சிறப்பு | : | செந்தமிழ்ச் செல்வர், செந்தமிழ் ஞாயிறு, தமிழ்ப்பெருங் காவலர் என 174 சிறப்புப் பெயர்கள் |

கோவில்களில் தமிழில் வழிபாடு நடைபெறவேண்டும் எனவும், பிறப்பு இறப்புத் தொடர்பான சடங்குகள் யாவும் தமிழில் நடைபெறவேண்டும் எனவும் பாவாணர் வலியுறுத்தினார். அவர், ஒருமுறை ஆசிரிய நண்பர் சிலருடன் தாரைமங்கலம் (தாரமங்கலம்) என்னும் ஊருக்குச் சென்று, அங்கே இரவு தங்கிவிட்டு மறுநாள் காலையில் திரும்பினார். அவரை அன்பர் சிலர் சூழ்ந்துகொண்டு, ஊர்சென்று வந்ததனைப்பற்றிக் கேட்டனர். அவருள் ஒருவர், ஐயா பகலுணவும் இராவுணவும் எவ்வாறு இருந்தன ? எனக் கேட்டார். பாவாணர் பகலுணவு, பகல் உணவாகவும், இராவுணவு இரா உணவாகவும் இருந்தன என்றார்.

பகல் உணவு என்பதனில், பகலில் கிடைத்த சிறிதளவு உணவையே அனைவரும் பகுத்துண்ண நேர்ந்ததெனவும், இரா உணவு என்பதனில், அனைவரும் உணவின்றி இரவைக் கழிக்க வேண்டியிருந்தது எனவும் உணர்ந்துகொண்டனர். தமிழ் வளர்த்தால் பசியும் பட்டினியும் பஞ்சாய்ப் பறந்துவிடும் என எண்ணியவர் பாவாணர்.

சொற்றொகுப்புக் கருதி நீலமலைக்குச் (நீலகிரி) சென்றார் பாவாணர். ஆங்குப் பாவாணரிடம் பெரும்பற்றுக்கொண்ட கிருட்டினையா என்பார் இல்லத்தில் தங்கியிருந்தார். காலை உணவுக்குப்பின் பாவாணரை வீட்டில் தங்கவைத்துவிட்டுக் காட்டுக்குச் சென்று திரும்பினார் கிருட்டினையா. மீள வந்தபோது பாவாணர் வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு வீட்டின்முன்னால் கிடந்த விறகுக்கட்டையைக் கோடரியால் பிளந்து கொண்டிருப்பதனைக் கண்டு, "இதனை நீங்கள் ஏன் செய்கிறீர்கள் ? விடுங்கள்" எனத் தடுத்தார் கிருட்டினையா. ஒன்றுமில்லை, உண்ட வீட்டிற்கு ஏதாவது செய்தல் வேண்டும்; உட்கார்ந்துகொண்டு உண்டு செல்வது நன்றாகாது என்றார்.

### தேவநேயப் பாவாணரின் படைப்புப் பணி

பாவாணர், தமிழ் வரலாறு, முதல் தாய்மொழி, தமிழ்நாட்டு விளையாட்டுகள், தமிழர் திருமணம், வடமொழி வரலாறு, தமிழர் மதம், மண்ணிலே விண், பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், உயர்தரக் கட்டுரை இலக்கணம், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், திருக்குறள் மரபுரை முதலான நாற்பத்துமூன்று நூல்களைப் படைத்துள்ளார்.

பாவாணர், சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்குநராக 08.05.1974அன்று பணியமர்த்தப்பட்டு, அரசின் உதவியோடு சொற்பிறப்பியல் அகரமுதலி தொகுதிகள் சிலவற்றை வெளிக்கொணர்ந்தார்; இருநூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

தாம் பணியாற்றிய கல்வி நிறுவனமொன்றில் தொடர்ந்து பணியாற்ற இயலாத சூழல் நேர்ந்தபோது, எனக்கு வறுமையும் உண்டு; மனைவி மக்களும் உண்டு; அவற்றோடு மானமும் உண்டு என்று வெளியேறிய தன்மானமிக்க பாவாணரின் உறுதியுரை நம்மை வியக்க வைக்கிறதே! அவர், வறுமையில் வாடினாலும் பணம் கைக்குக் கிடைத்தால் நூல்களே வாங்குவார்; புலமைச் செருக்கில்லாமல் மிகவும் எளிமையான வாழ்வு வாழ்ந்தவர்; அன்பு கசியும் நெஞ்சத்தில் ஆழமான நன்றியுணர்வுமிக்கவர்.

தேவநேயப் பாவாணர் பெயரில் சென்னை அண்ணாசாலையில் மாவட்ட மைய நூலகம் செயல்பட்டு வருகிறது. இவர் படித்துப் பணியாற்றிய இராசபாளையத்திற்கு

அருகிலுள்ள முறம்பு என்னும் இடத்தில் பாவாணர் கோட்டம், அவர்தம் முழு உருவச்சிலை, அவர் பெயரில் நூலகம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. அவை, பாவாணரின் புகழ்பேசும் மையங்களாகத் திகழ்கின்றன.

மதுரையில் 05.01.1981அன்று நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின்போது, மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும் என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றித் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்தார். அஃது அவரின் நிறைவுப் பணியாகவும், நம் மனத்தில் நீங்கா நினைவாகவும் என்றும் நிலைத்திருக்கும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. பிரித்து எழுதுக.**

1. அரும்பணி = ____________
2. தமிழன்னை = ____________
3. தனித்தமிழ் = ____________
4. செந்தமிழ்ச்செல்வி = ____________
5. நன்றியுணர்வு = ____________

**2. சேர்த்து எழுதுக.**

1. உறுதி + உரை = ____________
2. உணவு + இன்றி = ____________
3. சொல் + பொழிவு = ____________
4. சொல் + ஆராய்ச்சி = ____________
5. உருவம் + சிலை = ____________

**3. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. தனித்தமிழுக்கு வித்திட்டவர் ____________ .
2. சென்னையில் ____________ பெயரில் நூலகம் உள்ளது.
3. மதுரையில் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்ற ஆண்டு ____________ .
4. பாவாணர் அரசின் உதவியோடு ____________ அகரமுதலியை வெளியிட்டார்.

### ஆ) குறுவினாக்கள்

1. தேவநேயப்பாவாணர் எங்கு எப்போது பிறந்தார் ?
2. தமிழ்மொழிமீது பற்றுக்கொண்டவர் பாவாணர் என்பதற்கு ஒரு சான்று தருக.
3. பாவாணரின் சொல்லாட்சிச் சிறப்பினை விளக்குக.

### இ) சிறுவினாக்கள்

1. பாவாணரின் படைப்புகளைக் குறிப்பிடுக.
2. பாவாணர் பெற்ற பட்டங்கள் யாவை ?

### ஈ) நெடுவினாக்கள்

1. தேவநேயப்பாவாணர் தமிழுக்கு ஆற்றிய தொண்டினை விவரிக்க.
2. தேவநேயப்பாவாணரின் பண்புநலன்கள் குறித்து எழுதுக.

# மணம் நுகர்ந்ததற்குப் பணம்

பரமார்த்தகுருவும் அவருடைய மாணவர்களும் வெளியூரில் நடைபெற்ற கோவில் திருவிழாவில் கலந்துகொள்வதற்காகப் புறப்பட்டனர். கடுமையான வெயில் நிலவியதனால் வழியிலிருந்த ஓர் உணவகத்திற்குச் சென்றனர். அந்த உணவகத்தில் பகற்பொழுதைக் கழித்துவிட்டு வெயில் தாழப் புறப்படலாம் என முடிவு செய்தனர்.

அந்த உணவகம் வழிப்போக்கர் தங்குவதற்குக் கட்டணமின்றி அனுமதியளித்தது. ஆனால், உணவு தேவைப்பட்டால் அதற்கொரு குறிப்பிட்ட அளவு கட்டணம் கொடுத்தல் வேண்டும். பரமார்த்தகுரு, விடுதியாளரை அணுகி, ‘‘நாங்கள் பகற்பொழுது மட்டும் இங்குத் தங்கி இளைப்பாறிச் செல்ல முடிவெடுத்திருக்கிறோம்’’ என்றார். ‘‘நீங்கள் அனைவரும் கட்டணமின்றித் தங்கலாம். உணவு தேவையானால் அதற்குமட்டும் கட்டணம் உண்டு. உங்களுக்கு உணவு தேவைப்படுமா ?’’ என விடுதியாளர் கேட்டார்.

‘‘நாங்கள் கட்டுச்சோறு கொண்டுவந்திருக்கிறோம்’’ என்றார் பரமார்த்தகுரு. விடுதியாளர் , அவர்கள் தங்குவதற்கு இடமளித்தார்.

சிறிது நேரங்கழித்துச் செல்வர் குடும்பம் ஒன்று விடுதிக்கு வந்தது. விடுதியாளர் அவர்களை மிகவும் அன்போடு வரவேற்றார். ‘‘எங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் சுவையான நல்ல உணவு ஏற்பாடு செய்யுங்கள். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகின்றோம்’’ என்று கூறிய செல்வர், பெருந்தொகையை விடுதியாளரிடம் அளித்தார்.

மிகவும் மகிழ்ந்த விடுதியாளர் அறுசுவை உணவு சமைத்து, அவர்களுக்கு அன்பாக வழங்கினார். அறுசுவை உணவின் நறுமணம் பரமார்த்தகுருவின் மூக்கைத் துளைத்தது. ‘‘மாணவர்களே, இது நல்லநேரம். அறுசுவை மணம் மூக்கைத் துளைக்கிறது. கட்டுச்சோற்று மூட்டையை அவிழ்த்துக் கொள்ளுங்கள். விடுதியாளர் செய்த சமையலின் மணத்தை நுகர்ந்துகொண்டே உண்ணலாம்’’ என்றார் பரமார்த்தகுரு. ‘‘இது நல்ல ஏற்பாடுதான்’’ எனக் கூறியவாறு மாணவர்கள் கட்டுச்சோற்று மூட்டையை அவிழ்த்து உணவு உண்டுகொண்டிருந்தனர்.

அந்த நேரத்தில் விடுதியாளர் அங்கு வந்தார். பரமார்த்தகுரு அவரை நோக்கி, ‘‘விடுதியாளரே, உங்களுக்கு நன்றி சொல்லுதல் வேண்டும். நீங்கள் சமைத்த அறுசுவை உணவின் மணத்தை நுகர்ந்துகொண்டே நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாக உண்கிறோம்’’ என்றார். அவர்கள் உண்டு முடித்ததும் விடுதியாளர் பரமார்த்தகுருவைப் பிடித்துக் கொண்டார். நீங்கள் கட்டணம் செலுத்தியாகவேண்டும் என்றார் விடுதியாளர்.



" இஃது எப்படி முறையாகும்? நீங்கள் சமைத்த அறுசுவை உணவையா நாங்கள் உண்டோம்? அந்த மணத்தை மட்டும்தானே நுகர்ந்தோம். அதற்குக் கட்டணம் கேட்கிறீரே. இது கடவுளுக்கே அடுக்காதே'' எனப் பரமார்த்தகுரு புலம்பினார்.

"நான் செய்த சமையலின் மணத்தை நுகர்ந்ததனால்தானே மனநிறைவோடு உண்ண முடிந்தது எனக் கூறினீர்கள். நீங்கள் மனநிறைவோடு உண்ண என் சமையல் துணை செய்ததனால், அதனை நீங்கள் உண்டதாகவே ஆகிவிட்டது. எனவே, நீங்கள் கட்டணம் கொடுத்தாகவேண்டும்'' என்று விடுதியாளர் வற்புறுத்தினார்.

ஆனால், கட்டணம் தரமாட்டேன் எனப் பரமார்த்தகுரு திட்டவட்டமாகக் கூறினார். எனவே, அவர்கள் அவ்வூரில் உள்ள நடுவரிடம் சென்று முறையிட்டனர்.

நடுவர், இருவரின் கருத்தையும் கேட்டறிந்தார். பின்னர், "ஐயா, விடுதியாளரே உம்முடைய வழக்கில் உண்மை இருக்கிறது. உம்முடைய சமையல் மணத்தை நுகர்ந்தவாறு

இந்தக் குருவும் மாணவர்களும் உண்டதனால், இவர்கள் உனக்குக் கட்டணம் செலுத்தித்தான் ஆகவேண்டும்'' என்று நடுவர் கூறினார்.

நடுவர் கூறியதனைக் கேட்டதும் விடுதியாளர் மகிழ்ச்சியில் துள்ளினார். ஆனால், பரமார்த்தகுருவுக்கும் அவர் மாணவர்களுக்கும் தலையில் இடிவிழுந்ததுபோல் ஆயிற்று. அவர்கள் அடைந்த மனவருத்தத்துக்கு அளவே இல்லை.

நடுவர், தமது தீர்ப்பைத் தொடர்ந்து, வேலையாளை அழைத்துப் பணமுடிப்பு ஒன்றனைக் கொண்டுவரச் செய்தார்.

வேலையாள் கொண்டுவந்து தந்ததும், அதனைப் பெற்றுக்கொண்ட நடுவர், அம்முடிப்பை விரைந்து ஆட்டினார். விடுதியாளரை நோக்கி, "இதனுள் என்ன இருக்கிறது தெரியுமா ?'' எனக் கேட்டார்.

விடுதியாளரும் அம்முடிப்பினுள் பணமுள்ளது, ஐயா என்றார். "பணமுள்ளது என்பது உங்களுக்கு எப்படித் தெரியும் ?'' என்று நடுவர் கேட்டார். "ஐயா, நீங்கள் அந்தப் பணமுடிப்பை ஆட்டியபோது, எழுந்த ஓசையைக்கொண்டு அறிந்துகொண்டேன்.'' என்றார் விடுதியாளர்.

"அப்பணமுடிப்பின் ஓசையை நீங்கள் காதுகொடுத்துக் கேட்டீர்கள், அப்படித்தானே ?'' என்ற நடுவரிடம், "ஆம், ஐயா.'' என்றார் விடுதியாளர்.

"மெத்தசரி. நீங்கள் போகலாம்.'' என்றார் நடுவர்.

ஆனால், விடுதியாளரோ,"ஐயா, பரமார்த்தகுருவிடமிருந்து எனக்குச் சேரவேண்டிய பணத்தைப் பெற்றுக்கொடுங்கள்'' என மீண்டும் வேண்டினார்.

"நீர் செய்த சமையலை உண்ணாமலேயே அதன் மணத்தை நுகர்ந்தது உணவு உண்டதற்குச் சமம் என்று கூறினீர்கள் அல்லவா ? சமையலின் மணம் உண்டதற்குச் சமம் என்றால் பணத்தின் ஓசை, பணத்தைப் பெற்றுக் கொண்டதற்குச் சமம்தானே'' என்று தீர்ப்பின் முடிவை அறிவித்தார் நடுவர். தீர்ப்பின் முடிவைக் கேட்டதும், விடுதியாளரின் பேராசை ஒழிந்தது; பரமார்த்தகுருவோ மகிழ்ச்சியடைந்தார்.

நன்றி : ஸ்ரீமதி எஸ். இலட்சுமி, பார் புகழும் பரமார்த்தகுரு கதைகள்.

## மாதிரி வினா

### கட்டுரை வினா

மணம் நுகர்ந்ததற்குப் பணம் என்னும் கதையைச் சுருக்கி எழுதுக.

# புணர்ச்சி : உயிரீறு, உடம்படுமெய், மெய்யீறு

## உயிரீற்றுப் புணர்ச்சி

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம், குழந்தைகளே! புணர்ச்சி குறித்து முன்வகுப்பில் கற்றீர்கள். ஏதும் விளக்கம் வேண்டுமா ?

மாணவர் : புணர்ச்சி குறித்துத் தெளிவாகத் தெரிந்துகொண்டோம், ஐயா.

ஆசிரியர் : மகிழ்ச்சி. அவ்வகுப்பில் நிலைமொழி குறித்தும் வருமொழி குறித்தும் கூறினேன். பல, பலா, கனி, தீ இச்சொற்களை ஒலித்துப் பாருங்கள். இச்சொற்களில் கடைசி எழுத்து உயிர்மெய் எனினும், உயிர் ஈறாகக் கொள்ளுதல் வேண்டும்.

மாணவர் : ஆமாம், ஐயா. 'பல' இச்சொல்லில் (ல் + அ = ல) 'அ' உயிர் ஈறுதானே, ஐயா.

ஆசிரியர் : தெளிவாகச் சொன்னாய். உயிர் ஈற்றுச் சொல்முன் வல்லின எழுத்துகள் வந்தால், அதன் மெய்யெழுத்து மிகும்.

(எ.கா.) 1. பலா + சுளை = பலாச்சுளை

2. பனி + போர் = பனிப்போர்

3. தினை + துணை = தினைத்துணை

மாணவர் : நன்றி, ஐயா.

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும்வித வாதன மன்னே — நன்னூல், 165

## உடம்படுமெய்

(உயிர்முன் உயிர்)

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். உட்காருங்கள். முன் வகுப்பில் நிலைமொழி ஈறு, வருமொழிமுதல்பற்றிக் கற்றோம்! நிலைமொழி ஈறு உயிராகவும், வருமொழிமுதல் உயிராகவும் இருந்தால், எவ்வாறு புணரும் என்பதனை இன்று பார்ப்போம். உயிர்ஈற்றுச் சொற்கள் சில கூறுங்கள்.

மாணவர் : பலா, மணி, அண்ணி, பூ, பனை, வீடு, பசு, அழகு, பிள்ளை, பள்ளி.

ஆசிரியர் : போதும். இப்பொழுது உயிர்முதல் சொற்களைக் கூறுங்கள்.

மாணவர் : அணில், ஏணி, ஏற்றம், ஐவர், ஔவை, இரும்பு, ஈயம், உண்டு, உயிர், ஊர்வலம், ஒடு.

ஆசிரியர் : போதும். மகிழ்ச்சி. 'மணி + அடி'. இங்கு மணி என்பது நிலைமொழி. இதன் ஈறு (ண் + இ) உயிர். அடி என்பது வருமொழி. அதன் முதல் எழுத்து அ – உயிர். இவ்விரண்டும் ஒன்றாகச் சேரும்போது மணி + அடி = மணி +ய் + அடி= மணியடி என இணையும்போது, இடையில் 'ய்' என்னும் மெய் தோன்றி, மணியடி என்னும் சொல்லாகிறது. பூவழகு என்னும் சொல்லை எவ்வாறு பிரிக்கலாம் ?

மாணவர் : பூ + அழகு. 'பூவழகு' என வரும், ஐயா.

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய். ஆனால், பூவழகு என்னும் சொல், பூ + அழகு = பூ + வ் + அழகு = பூவழகு. இடையில் இங்கு 'வ்' என்னும் மெய் எழுத்துத் தோன்றுகிறது. சேவடி என்பது எவ்வாறு பிரியும் ?

மாணவர் : சே + வ் + அடி... 'சேவடி' என வரும், ஐயா. இங்கே 'வ்' என்னும் மெய் வந்துள்ளது, ஐயா.

ஆசிரியர் : நன்று நன்று. சே + அடி = சே + வ் + அடி = சேவடி; மேலும், சே + ய் + அடி = சேயடி எனவும் வரும்.

மாணவர் : ஐயா, இன்னும் சில எடுத்துக்காட்டுகள் கூறுங்களேன்.

ஆசிரியர் : கூறுகிறேன்.

1. கிளி + அலகு = கிளி + ய் + அலகு = கிளியலகு
2. தீ + எரிகிறது = தீ + ய் + எரிகிறது = தீயெரிகிறது.
3. பனை + ஓலை = பனை + ய் + ஓலை = பனையோலை

இ, ஈ, ஐ ஆகியனமுன் உயிர்வரின் ய் தோன்றும்.

அடுத்து,

1. குண + அழகி = குண + வ் + அழகி = குணவழகி
2. பலா + இலை = பலா + வ் + இலை = பலாவிலை
3. திரு + ஆரூர் = திரு + வ் + ஆரூர் = திருவாரூர்
4. பூ + அழகி = பூ + வ் + அழகி = பூவழகி
5. கோ + இல் = கோ + வ் + இல் = கோவில்

அ, ஆ, உ, ஊ, ஒ முன் வ் தோன்றும்.

அடுத்து, தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்

அவனே + அரசன் = அவனே + ய் + அரசன் = அவனேயரசன்

ஏ முன் உயிர்வரின் வ், ய் இரண்டும் வரும்.

மாணவர் : ய், வ் வருவதற்குப் புணர்ச்சியில் ஏதேனும் பெயர் உண்டா ? ஐயா.

ஆசிரியர் : உண்டு. நிலைமொழி ஈற்று உயிரும், வருமொழிமுதல் உயிரும் இணையும்போது வ் அல்லது ய் இடையில் தோன்றும். இதற்கு உடம்படுமெய் என்பது பெயர்.

இஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும் – நன்னூல்,162

## மெய்யீற்றுப் புணர்ச்சி

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். உட்காருங்கள். முன்வகுப்பில்புணர்ச்சி,நிலைமொழி,வருமொழி ஆகிய சொற்கள் ஒன்றனோடு ஒன்று சேரும்போது ஏற்படும் மாற்றங்கள் குறித்துக் கற்றீர்கள்.

மாணவர் : ஆம், ஐயா. அவை நன்றாக நினைவில் இருக்கின்றன.

ஆசிரியர் : மகிழ்ச்சி. மேலும் சில புணர்ச்சிமுறைகளைப் பார்ப்போம். ‘நூல் + ஆடை’ என்பதனில், நூல் என்பது நிலைமொழி. ஆடை என்பது வருமொழி. நூல் என்னும் நிலைமொழியின் ஈறு என்ன ?

மாணவர் : மெய் எழுத்து உள்ளது. அதனால் மெய்யீறு, ஐயா.

ஆசிரியர் : மிக்க மகிழ்ச்சி. மெய்யீற்று நிலைமொழிமுன், உயிர்முதல் வருமொழிச் சொற்கள் வந்தால், எவ்வாறு புணரும் என்பதனைப் பாருங்கள்.

மாணவர் : அணில், ஆடை, இலை ... என வரும் சொற்கள்தாமே உயிர்முதல் மொழிகள், ஐயா.

ஆசிரியர் : அவையேதாம். பால் + ஆடை என்பதனில், பால் மெய்யீற்று நிலைமொழி முன் ஆடை உயிர்முதல் வருமொழி சேரும்போது, மெய் (ல்) உயிரோடு (ஆ) சேர்ந்து பாலாடை என்றாகிறது. ஏனெனில்,மெய் தனித்து இயங்காது; உயிருடன் சேர்ந்துதான் இயங்கும். இதுவே இயல்பு.

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – நன்னூல், 204

(உடல் – மெய்) இங்கு உடல் என்பது மெய்யெழுத்தைக் குறித்தது. இதுபோல் சிலவற்றைக் கூறுங்கள்.

மாணவர் : மலர் + அடி = மலரடி; கனல் + எரி = கனலெரி; கடல் + ஓரம் = கடலோரம்.

ஆசிரியர் : மகிழ்ச்சி. நன்றாகச் சொன்னாய். கண், கல், பொன், மண் என்பனவும் மெய்யீற்று நிலைமொழிகளே. முன்பு சொன்ன மெய்யீறுகள் நெடிலடுத்தும், இரண்டு முதலாகப் பல எழுத்துகள் சார்ந்தும் வந்தவை. இவை....

மாணவர் : குறிலடுத்து வந்த மெய்யீறுகள், ஐயா.

ஆசிரியர் : நல்லது. இவற்றின்முன் உயிர்முதல் வருமொழி வந்தால் கண் + அழகு = கண் + ண் + அழகு = கண்ணழகு என்னுமாறு இணையும்.

மாணவர் : ஐயா, மற்றொரு மெய்யும் சேர்ந்தல்லவா வருகிறது.

ஆசிரியர் : ஆம். நன்றாக உற்றுநோக்குகிறாய்.

தனிக்குறில் முன்னொற் றுயிர்வரி னிரட்டும் – நன்னூல், 205

நான் கூறியதுபோலவே, வேறு எடுத்துக்காட்டுகள் தரமுடியுமா ?

மாணவர் : கல் + அணை = கல்லணை; கண் + ஆடி = கண்ணாடி; பல் + அழகு = பல்லழகு; விண் + அரசு = விண்ணரசு

ஆசிரியர் : மகிழ்ச்சி.

பயிற்சி :

கீழுள்ளவற்றுள் விடுபட்ட இடங்களை நிரப்புக.

1. பனி + ________ = பனித்துளி
2. பூ + ________ = பூவழகு
3. மா + இலை = ________
4. மண் + அகல் = ________

தமிழ்

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. பொருத்துக.

1. இடை + அழகு – மெய்ம்முன் மெய்
2. மண் + அகல் – உயிர்முன் மெய்
3. கிளி + மூக்கு – மெய்ம்முன் உயிர்
4. மரம் + கிளை – உயிர்முன்உயிர்

2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. பாடும் பாடல் – இத்தொடரில் பாடல் என்பது ________________ .

அ) நிலைமொழி ஆ) வருமொழி இ) பொதுமொழி

2. பலவாண்டு – இச்சொல் பிரியும் முறை ________________

அ) பல் + ஆண்டு ஆ) பல + வாண்டு இ) பல + ஆண்டு

3. பனை + ஓலை – இரண்டிற்கும் இடையில் ________________ தோன்றும்.

அ) வ் ஆ) ய் இ) எதுவுமில்லை

ஆ) குறுவினாக்கள்

1. உயிரெழுத்தினை முதலாக உடைய சொற்கள் நான்கு கூறுக.
2. உயிர்ஈற்றுச் சொற்கள் நான்கு கூறுக.
3. மெய்யீற்றுச் சொற்கள் நான்கு கூறுக.
4. உடம்படுமெய் என்றால் என்ன ? சான்று தருக.

இ) தொடர்பணி

1. நும் பாடப்பகுதியிலுள்ள ஐந்து உயிரீற்றுச் சொற்களை எடுத்தெழுதுக.
2. நும் பாடப்பகுதியிலுள்ள ஐந்து மெய்யீற்றுச் சொற்களை எழுதுக.

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

கீழ்க்காணும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

மலைவளமும் மழைவளமும்

ஆ) படித்தல் திறன்

கீழுள்ள பகுதியைப் படித்து நயம் உணர்க.

ஒருநாள் ஊற்றுமலையரசர் மருதப்பரும் கவிஞர் அண்ணாமலையாரும் உலாச் சென்றனர். மருதப்பர் முன்னே சென்றார்; பின்னால், அண்ணாமலையார் தொடர்ந்தார். சிறிது தொலைவு சென்றபின் மருதப்பர் திரும்பிப் பார்த்தார். அண்ணாமலையார் மிகவும் பின்தங்கி இருந்தார். உடன் வந்தவர் ஏன் பின்தங்கிவிட்டார் என்று எண்ணினார் மருதப்பர்.

அண்ணாமலையார் தம் அருகில் வரும்வரை காத்திருந்தார். அவர் வந்ததும் ஏன் இவ்வளவு பின்தங்கிவிட்டீர்கள் என வினவினார். முட்டாளுடன் வந்ததனால், பின்தங்க நேர்ந்தது என்றார் அண்ணாமலையார். மருதப்பர் அதிர்ச்சியும் வியப்பும் அடைந்தார். இவர் நம்முடன்தானே வந்தார். நம்மையா முட்டாள் என்கிறார் எனத் திகைத்து நின்றார்.

மன்னரின் திகைப்பைக் கண்டு நகைத்த அண்ணாமலையார், வழியில் முள்ளொன்று என் காலில் தைத்துவிட்டது. அந்த முள் தாளுடன் (முள் குத்திய காலுடன்) வந்ததனால் பின்தங்க நேர்ந்தது என்று விளக்கம் தந்தார்.

அண்ணாமலையாரின் சொல்வன்மை கண்ட அரசர் அவரைப் பெரிதும் பாராட்டினார்.

இ) எழுதுதல் திறன்

முறைமாறி அமைந்த சொற்றொடர்களை முறைப்படுத்திப் பத்தியமைத்தல்.

(எ.கா.) 1. இளையவன் மெழுகுவத்தியை வாங்கி வந்து ஏற்றி வைத்து, அறையெங்கும் ஒளிவீசச் செய்தான்.

2. வயதான தந்தைக்கு இரு மகன்கள் இருந்தார்கள்.

3. ஒருநாள் இருவரையும் அழைத்துச் சிறிது பணம் கொடுத்தார். இந்தப் பணத்தைக் கொண்டு அவரவர் அறையை நிரப்புங்கள் என்றார் தந்தை.

தமிழ்

4. அவர்களிருவரில் பொறுப்பானவரைத் தேர்ந்தெடுத்துத் தன் உழைப்பின் பயனாய் விளைந்த செல்வத்தைக் கொடுக்க தந்தை விரும்பினார்.

5. மூத்தவன் வைக்கோல் போரை வாங்கி வந்து அறை முழுவதும் நிரப்பினான்.

6. இளையவன்தான் பொறுப்பானவன் என்று தந்தை உணர்ந்தார்.

7. அறையெங்கும் ஒளிவீசச் செய்தவனிடத்தில் பொறுப்புகளை ஒப்படைத்தார்.

முறைப்படுத்தப்பட்ட பத்தி

வயதான தந்தைக்கு இருமகன்கள் இருந்தார்கள். அவர்களிருவரில் பொறுப்பானவனைத் தேர்ந்தெடுத்துத் தன் உழைப்பின் பயனாய் விளைந்த செல்வத்தைக் கொடுக்க தந்தை விரும்பினார். ஒருநாள் இருவரையும் அழைத்துச் சிறிது பணம் கொடுத்தார். இதனைக்கொண்டு அவரவர் அறையை நிரப்புங்கள் என்றார் தந்தை.

மூத்தவன் வைக்கோல் போரை வாங்கி வந்து அறை முழுவதும் நிரப்பினான். இளையவன் மெழுகுவத்தியை வாங்கி வந்து ஏற்றி வைத்து அறையெங்கும் ஒளிவீசச் செய்தான். இளையவன்தான் பொறுப்பானவன் என்று தந்தை உணர்ந்தார். அறையெங்கும் ஒளிவீசச் செய்தவனிடத்தில் பொறுப்புகளை ஒப்படைத்தார்.

பயிற்சி

கீழுள்ள முறைமாறி அமைந்த சொற்றொடர்களை ஒழுங்குபடுத்திப் பத்தியாக்குக.

1. சித்தார்த்தர் புறாவை எடுத்து அன்புடன் தடவிக் கொடுத்தார். அதன் காலுக்கு மருந்திட்டார்.

2. அப்போது புறா ஒன்று வானில் மகிழ்ச்சியாகப் பறந்து விளையாடிக் கொண்டு இருப்பதனைக்கண்டார்.

3. சித்தார்த்தர் தாமே புறாவைக் காப்பாற்றியதாகவும், எனவே தமக்கே உரிமை என்றும் கூறினார்.

4. அப்போது அங்கு வந்த தேவதத்தன், புறாவைத் தான் அம்பு எய்து வீழ்த்தியதாகவும், புறாவைத் தன்னிடம் தருமாறும் வேண்டினான்.

5. மன்னர் சித்தார்த்தர், ஒருநாள் மாலைப்பொழுதில் தமது அரண்மனைப் பூந்தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தார்.

6. திடீரென்று எங்கிருந்தோ விரைந்து வந்த ஓர் அம்பு புறாவின் காலில் பாய்ந்தது. அம்பினால் காயம்பட்ட புறா, சித்தார்த்தரின் காலடியில் விழுந்தது.

## மொழித்திறன் பயிற்சி

1. வல்லினம் மிகா இடம் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கதை + சொன்னான் | = | கதை சொன்னான் (இரண்டாம் வேற்றுமைத்தொகை) |
| 2. | அழகனோடு + சென்றான் | = | அழகனோடு சென்றான் ( மூன்றாம் வேற்றுமை விரி) |
| 3. | வீட்டிலிருந்து + பார்த்தான் | = | வீட்டிலிருந்து பார்த்தான் ( ஐந்தாம் வேற்றுமை விரி) |
| 4. | எனது + புத்தகம் | = | எனது புத்தகம் ( ஆறாம் வேற்றுமை விரி) |
| 5. | சுடு + சோறு | = | சுடுசோறு (வினைத்தொகை) |
| 6. | கல்வி + கேள்வி | = | கல்விகேள்வி (உம்மைத்தொகை) |

தமிழ்

7. படித்த + பாடம் = படித்த பாடம் (பெயரெச்சம்)

8. கோழி + கொக்கரித்தது = கோழி கொக்கரித்தது (எழுவாய்த்தொடர்)

9. வாழ்க + செந்தமிழ் = வாழ்க செந்தமிழ் (வியங்கோள் வினைமுற்று)

10. அது, இது, எது என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது. (எ.கா.) அது + தான் = அதுதான்
அன்று, இன்று, என்று என்னும் சொற்களுக்குப்பின் மிகாது. (எ.கா.) அன்று கொடுத்தேன்.

11. அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது.
(எ.கா.) எத்தனை + பொருள் = எத்தனை பொருள்

12. 'படி' என முடியும் வினையெச்சம், உகரவீற்று வினையெச்சம், எதிர்மறைப்பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகாது. (எ.கா.) வரும்படி கூறினாள் ('படி' என்னும் சொல்)

பயிற்சி : வல்லினமெய் இட்டும் நீக்கியும் எழுதுக.

1. சித்திரை திங்களில் வந்து பார்க்கும்படிக் கூறினார்.
2. வ. உ. சிதம்பரனார்ச் செய்ந்நன்றி மறவா செம்மல் ஆவார்.
3. இராமன் மாயமானை தேடி சென்றான்.
4. சொற்களை பகாபதம், பகுப்பதம் என இருவகைபடுத்துவர்.
5. சிரிக்க தெரியாதவர்களுக்கு பகல் பொழுதும் இருள் ஆகும்.

2. அரபு எண்ணுடன் பொருந்தாத தமிழெண்ணை வட்டமிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. | க | – | 1 |
| 2. | உ | – | 2 |
| 3. | கஉ | – | 17 |
| 4. | ரு | – | 5 |
| 5. | உ0 | – | 10 |

3. கட்டுரைப்பயிற்சி : சுற்றுச்சூழல் பாதுகாப்பு

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்

பொது இடத்தில் ......

ஒருவர் : இந்த பார்மைக் கொஞ்சம் பில் பண்ணிக் கொடுங்க.
மற்றொருவர் : என்ன பார்ம் அது ? எதுக்கு அப்ளைப் பண்றீங்க ? ஒ ரேசன் கார்டுக்கா ?
ஒருவர் : நானே பில்லப் பண்ணிடுவேன். ஆனால், கொஞ்சம் டீடெய்ல்ஸ் புரியவில்லை.
மற்றொருவர் : நான் ஹெல்ப் பண்றேன். கேக்கிற கொஸ்டின்ஸ்க்கு ஆன்சர் பண்ணுங்க, அதுபோதும்.
ஒருவர் : சரி, கேளுங்க.
மற்றொருவர் : உங்க நேம் சொல்லுங்க.
ஒருவர் : என் பெயர் சீனிவாசன்.
மற்றொருவர் : எங்க ஒர்க் பண்றீங்க ?

தமிழ்

ஒருவர் : பிரிண்டிங் பிரஸ்ல ஆபிஸ் அசிஸ்டெண்ட்டாக இருக்கேன்.

மற்றொருவர் : உங்க வீட்டு அட்ரஸ் சொல்லுங்க.

ஒருவர் : நம்பர் சிக்ஸ், அண்ணா ஸ்டீரிட், டிரிப்ளிகேன், சென்னை.

மற்றொருவர் : இந்தாங்க.

மேற்கண்ட உரையாடலைப் பிறமொழிச் சொற்களும் பேச்சுவழக்குச் சொற்களும் கலவாமல் மீண்டும் எழுதுக.

## வாழ்க்கைத்திறன்

### மன எழுச்சிகளை எதிர்கொள்ளும்திறன்

மாறனுக்கு எந்த ஒரு பொருளும் அதனதன் இடத்தில் ஒழுங்காக இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால், அவனுக்குச் சினம் வந்துவிடும். விடுமுறையில் அவனுடைய அத்தையின் மகன், மாறன் வீட்டிற்கு வருகிறான். அவன் விளையாட்டுப் பொருள்களையெல்லாம் அங்குமிங்கும் இறைப்பது மாறனுக்குப் பிடிக்கவில்லை. அத்தை மகன் மிகவும் சிறியவனாக இருப்பதனால், அடிப்பதற்கும் தயங்குகிறான். இந்த நிலையில் மாறன் தன்னுடைய சினத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவான் ?

நீங்கள் மாறனாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?

## மதிப்புக்கல்வி

### படைப்புத்திறன்

மைக்கேல் ஏஞ்சலோ என்பவர் மிகச்சிறந்த சிற்பி. ஒருநாள் கடைத்தெரு வழியாக அவர் நடந்து சென்றார். அப்போது ஒரு கடையில் சலவைக்கல் ஒன்று யாராலும் பயன்படுத்தப்படாத நிலையில் மிகவும் அழுக்கடைந்து இருந்தது. அக்கடைக்குள் சென்ற மைக்கேல், கடைக்காரரிடம் “ ஐயா, இந்தச் சலவைக்கல்லை எனக்குத் தர முடியுமா ?” என்று பணிவுடன் கேட்டார். அதற்குக் கடைக்காரர் “ஓ! நீங்கள் தாராளமாக எடுத்துச் செல்லுங்கள், எனக்கு ஒன்றும் தடையில்லை” என்றார். மைக்கேல் ஏஞ்சலோ மிகவும் மகிழ்வுடன் அதனைத் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றார். சிலநாள் கழித்து, அந்தக்கடைக்காரரைத் தன்னுடைய வீட்டிற்கு வருமாறு அழைத்தார். வீட்டிற்கு வந்த கடைக்காரர் வரவேற்பறையில் இருந்த அழகான சிலையைப் பார்த்து வியந்தார்.

“இந்தச் சிலையை எங்கே வாங்கினீர்கள் ? நன்றாக இருக்கிறதே!” என்று கேட்டார்.

அதற்கு மைக்கேல் சிரித்துக்கொண்டே, “ஐயா! மறந்துவிட்டீர்களா ? உங்கள் கடையில் பயன்படாமல் இருந்த சலவைக்கல்லில் செய்த சிலைதான் இது” என்றார்.

படைப்புத்திறன் இருந்தால் கல்லிலும் கலைவண்ணம் காணலாம்.

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
| --- | --- |

கீழ்க்காணும் உரைப்பத்தியை ஆசிரியர் படிக்க, மாணவர்கள் உற்றுக்கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்கவும்.

சுவாமி வேதாசலத்தின் மகள் நீலாம்பிகை அம்மையார் ஆவார். அவர், தம் தந்தையாரையே நல்லாசிரியராகப் பெறும் பேறு பெற்றார். தம் தந்தையாரிடம் தமிழும் இசையும் பயின்றார். அவர்தம் முயற்சியால் பதின்மூன்றாம் வயதிலேயே மேடையேறிச் சொற்பொழிவாற்றினார்.

ஒரு நாள் மாலையில், சோலையில் நீலாம்பிகையுடன் உலாவிக் கொண்டிருந்தார் வேதாசலம். அப்போது இராமலிங்க வள்ளலார் அருளிய திருவருட்பாப் பாடலை அடிகள் பாடினார்.

'பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும் . . . .' என்னும் அப்பாடலை உள்ளமுருக, உயிருருக ஓதி முடித்தார். பின்னர், மகளிடம், 'நீலா! இப்பாடலில் உள்ள 'தேகம்' என்னும் வடசொல்லுக்கு மாறாக, 'யாக்கை' என்னும் தமிழ்ச்சொல் ஆளப்பட்டிருந்தால் இப்பாடலின் சொல்லோசை மேலும் இனிமையாக இருக்குமன்றோ? பிறமொழிச் சொற்கள் தமிழில் கலப்பதனால்தான் தமிழின் இனிமை குறைகிறது' என்றார் வேதாசலம்.

அது கேட்ட மகள் தந்தையாரிடம், 'அப்படியானால் நாம் இனிப் பிறமொழிச் சொற்களை நீக்கித் தனித்தமிழிலேயே பேசுதல் வேண்டும்' என்றார். மகளின் அன்பும் அறிவும் கலந்த வேண்டுகோளை ஏற்று, சுவாமி வேதாசலம் என்னும் தம் வடமொழிப் பெயரைத் தனித்தமிழில் மறைமலையடிகள் என்று மாற்றி வைத்துக்கொண்டார்.

வினாக்கள்

1. உரைப்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழறிஞர் யார்?
2. சுவாமி வேதாசலம் என்னும் பெயர் எங்ஙனம் மறைமலையடிகள் ஆயிற்று?
3. 'தேகம்' எனவும் 'யாக்கை' எனவும் குறிப்பிடப்படும் சொல்லின் பொருள் யாது?
4. திருவருட்பாப் பாடலை இயற்றியவர் யார்?
5. உன் நண்பனின் பெயர் வடசொல்லில் அமைந்திருந்தால், அதனை எவ்வாறு தனித்தமிழில் கூறுவாய்?

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
| --- | --- |

உரையாடலை நிறைவு செய்க.

(போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கும் கன்னனைக் காண கண்ணன் அந்தணர் வடிவில் வருகின்றான். அவ்விருவருக்கும் நடைபெறும் உரையாடலின் தொடக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு உரையாடலை அமைத்து வகுப்பில் பேசுக.)

கண்ணன் : வரையாது வாரி வழங்கும் வள்ளலே! உம்மை இந்தக் கோலத்திலா யான் காணுதல் வேண்டும்? என் உள்ளம் பதறுகின்றதே!

கன்னன் : ஐயா, வாருங்கள். உங்களுக்கு உதவ இயலாத நிலையில் உள்ளதனைக் கண்டு நான் மிகவும் வருந்துகின்றேன்.

கண்ணன் : இவ்விடத்தில் என்னிடம் கொடுக்க உம்மிடம் ஒன்றுமில்லை என்று யானும் அறிவேன். அதனால், . . . . . . . . . . . .

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து இன்புறுக.

### தமிழின் இனிமைச்சிறப்பு

கொல்லிமலைக் காட்டிலுள்ள ஓர் ஆளிடம் தேன் கொண்டுவரச் சொல்லியிருந்தேன். அவன் அன்று வராமல் மறுநாள்வந்து வெறுங்கையுடன் நின்றதால் அவனைச் சினந்தேன். அவன் பேசினான்.

'நான் நேற்றே மலைக்கு நடந்தேன்; பல இடங்களில் அலைந்தேன்; இறுதியில் பெரும் பாறைத்தேன் கண்டு சிறிது மலைத்தேன்; ஒரு கொடியைப் பிடித்தேன்; ஏறிச்சென்று கலைத்தேன்; பானையில் பிழிந்தேன்; நன்றாக வடித்தேன்; அதனைக்கண்டு மகிழ்ந்தேன்; அத்தேனில் சிறிது குடித்தேன்; களித்தேன்; களைத்தேன்; அயர்ந்தேன்; மறந்தேன்; இன்று காலை எழுந்தேன்; நினைத்தேன்; தேனை அடைத்தேன்; எடுத்தேன்; விரைந்து நடந்தேன்; வந்தேன்; சேர்ந்தேன்; இப்பொழுதுதான் உங்கள் வீட்டில் கொடுத்தேன்'.

நானும் இதனைக் கேட்டு மகிழ்ந்தேன்; அவனுக்கு உரியதனையும் தந்தேன்; அடடா! எப்படித் தேன்? எவ்வளவு தேன்? ஒவ்வொரு சொல்லிலும் தேன் சொட்டுகிறதே? 'இதனைப் பார்த்தேன்; குடித்தேன் எனக் கூறாமல் படித்தேன் எனக் கூறுங்கள். அப்பொழுதுதான் ஒவ்வொரு சொல்லிலும் ஒவ்வொரு படி 'தேன்' என இனிக்கும்'. என்னே, தமிழின் இனிமை!

கி.ஆ.பெ. விசுவநாதம், தமிழின் சிறப்பு

## எழுதுதல் திறன்

| சொல்லுருவாக்குதல் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழ்க்காணும் விடைக் குறிப்புகளைக்கொண்டு, கட்டங்களில் மேலும் கீழும், குறுக்கும் நெடுக்கும், இடமும் வலமும் இடம்பெற்றுள்ள சொற்களைக் கண்டறிந்து வட்டமிடுக. வட்டமிட்ட சொல்லைக் கோடிட்ட இடத்தில் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தா | ள் | உ | லை | மா | ச |
| யா | கா | ள் | று | ஆ | ந் |
| ன் | த் | ள | த | ம | த |
| ல் | அ | ம் | பு | க | ன |
| டு | ம | பெ | ய | ர் | ம் |
| ஏ | தி | சி | ய் | ழா | து |

தமிழ்

பாதம் என்னும் வடசொல்லுக்குரிய தமிழ்ச்சொல் ____________________ .

மனம், நெஞ்சு, ____________________ என்றாலும் ஒரே பொருள்.

திருமாலுக்கு அணிவிக்கும் மாலை ____________________ .

உடலில் ____________________ பூசினால் மணம் வீசும்; குளிர்ச்சி தரும்.

வில், ______________ இவ்விரண்டனையும் தனித்தனியாகப் பயன்படுத்துதல் இயலாது.

நாமம் என்பதன் தமிழ்ச்சொல் ____________________ .

____________________ யினால் சதியை வெல்லலாம் என்பர்.

நான் என்னும் சொல்லின் திரிபு ____________________ .

நதி என்பதன் தமிழ்ச்சொல் ____________________ .

அலங்கல் என்பதன் பொருள்____________________ .

| தமிழெண்களை எழுதுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கீழ்க்காணும் வினாக்களுக்கான விடைகளைத் தமிழெண்களில் எழுதி, அவற்றைக் கட்டங்களில் நிரப்புக.

1. ஆய கலைகள் ____சூச____ என்பர்.
2. ஆலும் வேலும் பல்லுக்குறுதி; ______________ இரண்டும் சொல்லுக்குறுதி.
3. கீழ்க்கணக்கு நூல்கள் ______________ .
4. தமிழில் ______________ மாதங்கள் உள்ளன.
5. சுவை ______________ வகைப்படும்.
6. தமிழிலக்கணம் ______________ வகைப்படும்.
7. செல்வங்கள் ______________ என்பர்.
8. பசி வந்திடப் ______________ பறந்து போம்.
9. சிற்றிலக்கியங்கள் ______________ வகை என்பர்.
10. நீ பயிலும் வகுப்பு ______________ .

| | | | | |
|---|---|---|---|---|
| 1 சூ | ச | | 2 | |
| 3 | | | 4 | |
| 5 | | 6 | | |
| 7 | | 8 | | |
| 9 | | | 10 | |

| வகைப்படுத்தி எழுதுதல் | செயல்பாடு – 6 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியிலிருந்து உயிரீறு, மெய்யீறு அமைந்த சொற்களை எடுத்தெழுதுக.



தமிழ்நாட்டில் ஏட்டுத்தமிழுக்கும் வீட்டுத்தமிழுக்கும் வேற்றுமையுண்டு. அதர் என்பது ஒரு பழைய தமிழ்ச்சொல். வழி என்பது அச்சொல்லின் பொருள். காற்று வருவதற்காக வீட்டில் அமைக்கும் ஜன்னலுக்குக் காலதர் என்று பண்டைத்தமிழர் பெயரிட்டனர். ஜன்னல் என்பது தமிழ்ச்சொல்லன்று; போர்ச்சுக்கீசியப் பதம். போர்ச்சுக்கீசியர் தமிழ்நாட்டுக்கு வருவதற்கு முன் நம் வீட்டுச் சன்னலுக்கு ஒரு பெயர் இருந்திருத்தல் வேண்டும் அன்றோ ? அப்பெயர்தான் காலதர். கால் என்றால் காற்று; அதர் என்றால் வழி. காலதர் என்றால் காற்று வரும் வழி. இக்காலத்தில் பேச்சுவழக்கில் இல்லாத அதர் என்னும் சொல்லைத் திருக்குறள் முதலிய பல பழைய உரைநூல்களில் காணலாம்.

ரா.பி.சேதுப்பிள்ளை, தமிழ் விருந்து.

| உயிரீற்றுச் சொற்கள் | மெய்யீற்றுச் சொற்கள் |
|---|---|
| வேற்றுமையுண்டு (ட்+உ) | தமிழ்நாட்டில் |

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 7 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக்கேட்டு எழுதுக.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் தனித்தமிழ் ஊற்று; செந்தமிழ் ஞாயிறு; இலக்கியப் பெட்டகம்; இலக்கணச் செம்மல்; தமிழ்மானங் காத்தவர்; தமிழ், தமிழர் நலம் காப்பதனையே உயிர்மூச்சாகக்கொண்டவர். உலக முதன்மொழி தமிழ்; இந்திய மொழிகளுக்கு மூலமும் வேரும் தமிழ்; திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் என வாழ்நாள் முழுவதும் ஆய்வுசெய்து நிறுவிய செம்மல் தேவநேயப் பாவாணர்.

தமிழ்

| மயங்கொலிச் சொற்களை அறிதல் | செயல்பாடு – 8 |
| --- | --- |

கீழ்க்காணும் தொடர்களில் கோடிட்ட இடத்தில் உரிய மயங்கொலிச் சொற்களைக்கொண்டு நிரப்புக.

1. 'இன்று ________ ப்பொழிவு மிகுதியாக உள்ளதனால், இரவுப் ________ செய்வது கடினம்' எனக் கண்ணன் கூறினான். ( பணி, பனி )
2. வேல்விழி கோடை விடுமுறையைக் ________ப்புடன் ________க்க விரும்பினாள். ( கலி, கழி, களி )
3. ________ சுழன்று வீசியதனால் ________ தவறிய வளவன் கல்லில் மோதிக் கீழே விழுந்து ________யால் துடித்தான். ( வலி, வளி, வழி )
4. யாரோ தன்னை------க்கும் குரல் கேட்ட முருகன், கண் ________த்துப் பார்த்தான். ( விழி, விளி )
5. ________யில் நீர் நிரம்பியதனைக் காண விரும்பிய எழிலன் அருகில் இருந்த மரத்தின்மீது ________னான். ( ஏரி, ஏறி )
6. பரந்துபட்ட ________யின்மீது ________ பறந்து சென்றது. ( பரவை, பறவை )
7. ________ பொய்த்ததனால் மனம் வருந்திய மக்கள் இடம் ________ ச்சென்றனர். ( மாரி, மாறி )
8. ________யின் ஒரு பகுதியில் மட்டுமே ________ பெய்தது. ( மழை, மலை )
9. ஆடையில் ________ இருப்பதனைக்கண்ட முகிலன், அதனை நீக்குவதற்காக அருகில் இருந்த ஆற்றங் ________க்குச் சென்றான். ( கரை, கறை )
10. வயலில் ________ந்த சோளக்கதிர்களை ________க்கு விற்க வளவன் முடிவெடுத்தான். ( விலை, விளை )

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

கோடிட்ட இடத்தை நிரப்புக. 5 X 1 = 5

அ. வான் பெற்ற நதி ________.
ஆ. துழாய் அலங்கல் என்பதன் பொருள் ________ .
இ. காசுக்குப் பாடுபவன் ________ அல்லன்.
ஈ. தாழ்ச்சி என்பதன் எதிர்ச்சொல் ________ .
உ. அடிமையலன் – இச்சொல்லைப் பிரிக்கும் முறை ________ .

ஓரிரு சொற்களில் விடையளிக்கவும். 5 X 1 = 5

அ. 'மன்னிப்பு' – இச்சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் யாது ?
ஆ. பகலுணவு, இராவுணவு குறித்துப் பாவாணர் யாது கூறுகின்றார் ?
இ. பாவாணர் எழுதிய நூல்களுள் இரண்டனைக் குறிப்பிடுக.
ஈ. தமிழின் தொன்மையை உலகறியச் செய்தவர் யார் ?
உ. தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் யார் ?

# முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

## வருகைப் பருவம்

உலகு குளிர எமது மதியில் ஒழுகும் அமுத கிரணமே
உருகும் அடியர் இதய நெகிழ உணர்வில் எழுநல் உதயமே
கலையும் நிறையும் அறிவு முதிர முதிரு மதுர நறவமே
கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதியே
அலகில் புவனம் முடியும் வெளியில் அளியும் ஒளியின் நிலயமே
அறிவுள் அறிவை அறியும் அவரும் அறிய அரிய பிரமமே
மலையின் மகள்கண் மணியை அனைய மதலை வருக வருகவே
வளமை தழுவு பருதி புரியின் மருவு குமரன் வருகவே.

– குமரகுருபரர்

பொருள் : உலகம் குளிரும்படி எமது அறிவில் ஒளிவீசும் முழுநிலவே! அடியார்களின் உள்ளம் நெகிழ அவர் அறிவில் தோன்றும் கதிரவனே! நூல்களால் நிறைந்த அறிவுணர்வும் முதிருமாறு விளைந்துள்ள இனிய தேனே! குற்றமற்ற ஞானியர் விரும்பும் கருணைக் கடலே! அளவிலா உலகங்கள் அனைத்தும் முடிகின்ற வெளியிடத்துத் தோன்றும் ஒளியின் இருப்பிடமே! அறிவின் உள்ளுணர்வை அறியவல்ல ஞானிகளும் அறிவதற்கு அரிதான முழுமுதற் பொருளே! மலைமகளின் கண்மணியொத்த முத்துக்குமரப் பெருமானே! வளங்கள் பொருந்திய வைத்தீசுவரன் கோவிலில் எழுந்தருளியுள்ள குமர வள்ளலே! வருக வருகவே!

சொற்பொருள் : மதி – அறிவு; அமுதகிரணம் – குளிர்ச்சியான ஒளி; உதயம் – கதிரவன்; மதுரம் – இனிமை; நறவம் – தேன்; கழுவு துகளர் – குற்றமற்றவர்; சலதி – கடல்; அலகு இல் – அளவில்லாத; புவனம் – உலகம்; மதலை – குழந்தை; பருதிபுரி – கதிரவன் வழிபட்ட இடம் (வைத்தீசுவரன் கோவில்).



ஆசிரியர் குறிப்பு

பெயர் : குமரகுருபரர்

பெற்றோர் : சண்முகசிகாமணிக் கவிராயர்
சிவகாம சுந்தரியம்மை

ஊர் : திருவைகுண்டம்

இயற்றிய நூல்கள் : கந்தர் கலிவெண்பா,
மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ்,
மதுரைக் கலம்பகம்,
சகலகலாவல்லி மாலை,
திருவாரூர் மும்மணிக்கோவை,
நீதிநெறி விளக்கம் முதலியன.

சிறப்பு : தமிழ், வடமொழி, இந்துத்தானி ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர். திருப்பனந்தாளிலும் காசியிலும் தம்பெயரால் மடம் நிறுவி உள்ளார்.

இறப்பு : காசியில் இறைவனது திருவடியடைந்தார்.

காலம் : பதினேழாம் நூற்றாண்டு.

நூற்குறிப்பு : தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று பிள்ளைத்தமிழ். இறைவனையோ நல்லாரையோ பாட்டுடைத் தலைவராகக்கொண்டு அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடப்பெறுவது பிள்ளைத்தமிழ். பத்துப் பருவங்கள் அமைத்துப் பருவத்திற்குப் பத்துப் பாடலென நூறு பாடலால் பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்து இயம்புவது பிள்ளைத்தமிழ்.

இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். பத்துப் பருவங்களில் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி ஆகிய ஏழு பருவங்களும் இருபாற் பிள்ளைத்தமிழுக்கும் பொதுவானவை. இறுதி மூன்று பருவங்களான சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆண்பாலுக்கும், அம்மானை, கழங்கு (நீராடல்), ஊசல் என்பன பெண்பாலுக்கும் உரியன.

புள்ளிருக்குவேளூரில் (வைத்தீசுவரன் கோவில்) எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானின் பெயர் முத்துக்குமாரசுவாமி. அவர்மீது பாடப்பட்டமையால் இது முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் எனப் பெயர் பெற்றது.

நமக்குப் பாடப்பகுதியாக உள்ள பாடல் வருகைப்பருவத்தில் இடம்பெற்றுள்ளது. இது நூலின் ஆறாவது பருவமாகும்; குழந்தையின் பதின்மூன்றாம் திங்களில் நிகழ்வது. தளர்நடையிட்டு வரும் குழந்தையின் சிறப்புகளை எடுத்துக்கூறி, அருகில் வருக வருக என வாய்குளிர, மனங்குளிர அழைக்கும் பாடல்களைக் கொண்டதாய் இப்பருவம் அமைந்துள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக.**

1. அமுதம் = ________________
2. கிரணம் = ________________
3. நெகிழ = ________________
4. உதயம் = ________________
5. மதுரம் = ________________
6. சலதி = ________________
7. புவனம் = ________________
8. மதலை = ________________
9. பருதி = ________________

**2. பிரித்து எழுதுக.**

1. அமுதகிரணம் = ________________
2. பிள்ளைத்தமிழ் = ________________

**3. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழை இயற்றியவர் ________________ .
2. இறைவனையோ நல்லாரையோ பாட்டுடைத்தலைவராகக்கொண்டு அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடப்படும் சிற்றிலக்கிய வகை ________________ .
3. பிள்ளைத்தமிழிலுள்ள பருவங்களின் எண்ணிக்கை ________________ .
4. பிள்ளைத்தமிழ் ________________ வகைப்படும்.
5. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல் ________________ பருவத்தில் அமைந்துள்ளது.

### ஆ) குறுவினாக்கள்

1. பிள்ளைத்தமிழ் – குறிப்பு எழுதுக.
2. குமரகுருபரர் – குறிப்பு எழுதுக.
3. ஆண்பாற்பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்கள் யாவை ?
4. பெண்பாற்பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்கள் யாவை ?

### இ) சிறுவினா

குமரகுருபரர், முத்துக்குமாரசுவாமியை எங்ஙனம் போற்றுகிறார் ?

### ஈ) செயல்திட்டம்

நாட்டுப்புறப்பாடல் தொகுப்பிலிருந்து தாலாட்டுப்பாடல்கள் சிலவற்றைத் தொகுக்க.

# இலக்கியத்தில் நகைச்சுவை

இலக்கியச் சுவைகளில் மிகவும் நுட்பமானது நகைச்சுவை. இச்சுவையை உணர்ந்து போற்றுவதற்குத் தனி ஆற்றல் வேண்டும். நகைச்சுவையைப் போற்றுவதற்குத் தேவைப்படும் ஆற்றல், அதனைக் கவிதைகளில் வடிப்பதிலேயே உள்ளது.

தொல்காப்பியம் ‘எள்ளல், இளமை, அறியாமை, மடமை’ ஆகிய நான்கு காரணங்களால் நகைச்சுவை தோன்றும் என்கிறது. நகைச்சுவையின் இன்றியமையாமையைப் புலப்படுத்த வந்த வள்ளுவர்,

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள். – குறள், 999

என நகைச்சுவையுணர்வு இல்லாதவர்க்குப் பகலும் இருளாகத் தோன்றும் என்கின்றார். காந்தியடிகள், நகைச்சுவை உணர்வு மட்டும் தனக்கு இல்லையெனில், எப்பொழுதோ தனது வாழ்க்கையை இழந்திருக்கக்கூடும் எனக் கூறினார்.

## நகைச்சுவையின் தேவை

மனித இனம் மட்டுமே நகைச்சுவையை வெளிப்படுத்தக்கூடிய ஆற்றல் பெற்றிருக்கின்றது. உடலில் குருதி ஓட்டம் கூடுவதற்கும், மூளையில் புத்துணர்ச்சி ஏற்படுவதற்கும் நல்ல நகைச்சுவை துணைபுரிகின்றது. நாம் நாள்தோறும் காணும் காட்சிகளும் கேட்கும் செய்திகளும் நிகழும் நிகழ்ச்சிகளும் நம்மை அறியாமலேயே நகைக்க வைக்கின்றன.

நகைச்சுவை நிகழ்ச்சிகள் நெடுநேரம் தங்காமல், தோன்றி மறையும் தன்மை வாய்ந்தவை. ஆனால், இவை இலக்கியத்தில் இடம்பெறும்போது, நமக்கு மாறாத மகிழ்ச்சியை வழங்குகின்றன. கூத்துகளில் கோமாளிகளும், அரசவைகளில் விகடகவிகளும் நகைச்சுவைக்காகவே படைக்கப்பட்டார்கள்.

நகைச்சுவையுணர்வு ஒன்றுதான் மனிதர்களை, முழுமையானவர்களாக மாற்றும் ஆற்றல் கொண்டது. நகைக்கத் தெரியாதவர்கள் அரைமனிதர்களாகக் கருதப்படுவார்கள். பிறர் மனம் புண்படாதவகையில் நகைச்சுவை அமைதல் வேண்டும். ‘‘உடல் நலத்திற்கும், மனநலத்திற்கும், எழுச்சிக்கும் நகைப்பு ஓர் அறிகுறி’’ என மேனாட்டு அறிஞர்கள் கூறுவது சிந்தனைக்குரியது.

## இலக்கியங்களில் நகைச்சுவை

பண்டைத்தமிழ் இலக்கியங்களில் நகைச்சுவையுணர்வு ததும்பும் படைப்புகள் பல காணப்படுகின்றன. கம்பரின் நகைச்சுவை உணர்வினை, அவர்தம் பாடல்வழி நோக்குவோம்.

அஞ்சலை அரக்க! பார்விட் டந்தர மடைந்தா னன்றே
வெஞ்சின வாலி, மீளான், வாலும்போய் வீழ்ந்ததன்றே....

– கம்பராமாயணம்

சீதையைத் தேடித் தன்முன் வந்து நின்ற அனுமனைப் பார்த்து இராவணன், "வாலி நலமா?" என்று வினவுகின்றான். வானரத்தலைவன் வாலியின் வாலினால் பிணைக்கப்பட்டு அரக்கர்கோன் இராவணன் அடைந்த இழிவை அனுமன் நன்கறிவான். ஆகவே, அவன் "அஞ்ச வேண்டா! அரக்கர் தலைவா, வாலியும் இறந்தான், அவனது வாலும் இறந்துவிட்டது! ஆனால், சூரியகுலத் தோன்றலாகிய வாலியின் அழிவுக்குக் காரணமானது இராமனின் ஒரு கணையே என்பதனை மட்டும் மறந்துவிடாதே!" என மறுமொழி கூறுகின்றான்.

இராவணனுக்கு வாலியைப்பற்றிக் கவலை இல்லை. அவன் வாலைப்பற்றித்தான் கவலை. வாலி வானுலகம் போயிருக்கலாம். ஆனால், அவன் வால் மண்ணுலகில் வைக்கப்பட்டிருந்தால் என்ன செய்வது? அது வந்து நலிவுறுத்துமோ? வாலி மீளாது போயினும், அவன் வால் மீண்டுவிட்டால் என்ன செய்வது என்ற அச்சம் இராவணனுக்கு இருக்கலாம் அல்லவா? அந்த அச்சத்தையும் தீர்த்து வைக்கிறான் அனுமன்.

வாலும்போய் வீழ்ந்ததன்றே, வால் இறந்துபோய்விட்டது என்று இராவணனுக்குத் துணிவூட்டுவதுபோல் இகழ்ச்சி மேலிட இராவணனை, நகைப்பிற்கு உரியவன் ஆக்குகின்றான்.

சிற்றிலக்கியங்களுள் ஒன்றான கலிங்கத்துப் பரணியில் சயங்கொண்டார் நகைச் சுவையுணர்வு தோன்ற, பல பாடல்களைப் பாடியுள்ளார். காணமுடியாத பேய்களை உருவாக்கி, உயிருள்ள உண்மைப்பிறவிகள்போல நம் கண்முன்னே நடமாடவிட்டு, நகைச்சுவைக்குரிய செயல்களை அவற்றிடையே காட்டியுள்ளார்.

காளிதேவியைச் சூழ்ந்திருந்த பேய்களின் தோற்றத்தைப்பற்றிக் கூறும்போது, கன்னங்கரேலென்று நெடிய வாயும் பனைகளை ஒத்த காலும் கையுமுடையனவாய் பேய்கள் இருந்தன. அப்பேய்களின் வாய்கள் பெரிய குகைகள்போல் காட்சியளித்தன. பேய்கள் உட்கார்ந்திருந்தால் அவற்றின் முழங்கால்கள், முகங்களுக்கு மேலே மூன்று முழம் உயர்ந்திருப்பதுபோல் காணப்பட்டன. அவற்றின் மூக்கிலுள்ள முடமயிர்கள் பெரும்பாம்புகள்போலத் தொங்கிக்கொண்டிருந்தன. செவிகளிலே ஆந்தைகள்

உள்ளொதுங்கியிருக்க, வௌவால்கள் அங்குமிங்கும் பறந்தன. அவற்றின் தலைகள் வானத்தைத் தாக்கித் தகர்ப்பதுபோலவும் உதடுகள் மார்புவரை தாழ்ந்தும் காணப்பட்டன என்று பேய்களின் தோற்றம் குறித்து நகைச்சுவை ததும்பும்படி சயங்கொண்டார் கூறுகின்றார்.

கவி காளமேகம் இருபொருள் தருமாறு சொற்களைப் பாட்டில் அமைத்துப் பாடுவதில் வல்லவர். நாங்கள் கவிராசர்கள் என்று செருக்குடன் கூறிய புலவர்களின் செருக்கை அடக்கும்படி, கவி என்பதற்குக் குரங்கு என்னும் பொருள் தோன்றுமாறு,

வாலெங்கே ? நீண்டுஎழுந்த வல்லுகி ரெங்கே ? நாலு
காலெங்கே ? ஊன்வடிந்த கண்ணெங்கே ? – சாலப்
புவிராயர் போற்றும் புலவர்காள் ! நீங்கள்
கவிராயர் என்றிருந்தக் கால்.

என்னும் பாடலைப் பாடினார்.

“அரசர்கள் புகழ்ந்து போற்றும் புலவர்களாகிய நீங்கள் குரங்கரசர்களாக இருந்தால், உங்களுக்கு இருக்கவேண்டிய நீண்ட வாலும், கூர்மையான நகங்களும் ஊன்வடிந்த கண்களும் உங்களிடம் இல்லையே ! அப்படி இருக்கும்போது, நீங்கள் எப்படிக் கவிராயர்கள் என்று கூறிக்கொள்ள முடியும் ?” எனக்கேட்டு அவர்களை எள்ளி நகையாடினார்.

காளமேகம், ஒருமுறை ஆய்ச்சியரிடமிருந்து பருகுவதற்காக மோர் வாங்கினார். அவர் கண்ணுக்கு மோர், மோராகத் தெரியவில்லை; வெறும் நீராகத் தெரிந்தது. உடனே, ஒரு பாடலும் அவர் மனத்தில் தோன்றியது.

“கார் என்று பேர்படைத்தாய்....” எனத் தொடங்கும் பாடலை அமைத்து, அப்பாடலில் நீ வானவெளியில் மேகமாகத் திரியும்போது கார் என்றும், மழையாகப் பூமியில் பெய்யும்போது நீர் என்றும், ஆய்ச்சியர் கையில் வந்தவுடன் மோர் என்றும் முப்பேரும் பெற்றாய் எனக்கூறி நகைக்க வைக்கிறார்.

அழகிய சொக்கநாதர் என்பவரும் நகைச்சுவையாகப் பாடுவதில் வல்லவர். ஒருபாடலில், ஒருவன் மிருதங்கம் வாசிப்பதனை நகைப்புடன் கூறுகிறார். மிருதங்கத்திலிருந்து எழும் ஓசை இனிமையாக இல்லாமல், எரு தட்டும் ஓசைபோல் இருந்ததாம். அதனைக்கேட்ட பெண்கள் எரு வாங்க, கூடையை எடுத்துக்கொண்டு, ஓசை வந்த திசையை நோக்கி ஓடினார்களாம்.

ஒரு வீட்டில் பெண் ஒருத்தி பாடிக் கொண்டிருந்தாள். ஆனால், உண்மையில் அவள் பாடவில்லை, கத்திக் கொண்டிருந்தாள். அவள் பாட்டைக் கேட்டு, காணாமல்போன தன் கழுதை திரும்ப வந்தது என்று எண்ணிக் ‘கண்டேன் கண்டேன்’ என்று, அதன் உரிமையாளர் ஓடி வந்தாராம் என மற்றொரு பாடலில் நகைச்சுவை தோன்றப் பாடியுள்ளார்.

இக்காலக் கவிஞர்கள் தாங்கள் கையாளுகின்ற கற்பனைகளிலும் உவமைகளிலும் நகைச்சுவையை அழகுற அமைத்துக் காட்டுகிறார்கள். கவிஞர் பாரதிதாசன் மயிலின் கழுத்து நீண்டு இருப்பதனை நகைச்சுவையாக விளக்குகிறார்.

அயலான் வீட்டில் அறையில் நடப்பதை
எட்டிப் பார்க்கா திருப்ப தற்கே
இயற்கை யன்னை இப்பெண் கட்கெல்லாம்
குட்டைக் கழுத்தைக் கொடுத்தான்; உனக்கோ
கறையொன் றில்லாக் கலாப மயிலே!
நிமிர்ந்து நிற்க நீள் கழுத்து அளித்தான்.

“பெண்களின் கழுத்து நீண்டிருந்தால், அண்டைவீட்டு அறையிலே நடப்பதனை ஆர்வத்தோடு பார்ப்பார்களாம்; மயில் அப்படிப் பார்க்காதாம்” எனக் கூறுகிறார் கவிஞர்.

மற்றொரு பாடலில் ஆலமரத்திலிருந்து தொங்கிய ஒரு பாம்பை விழுது என நினைத்துப் பற்றியது மந்தி; பாம்பென உணர்ந்ததும் விளக்கைத் தொட்ட குழந்தையைப் போல வெடுக்கெனக் குதித்தது. மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாகத் தோன்றுவதுபோலப் பின்னர் விழுதுகள் எல்லாம் அக்குரங்குக்குப் பாம்பாகத் தெரிந்தன.

அதனால், தலைகால் புரியாமல் தாவிச் சென்ற குரங்கு மரஉச்சிக்குச் சென்று திரும்பிப் பார்த்தது. தனது வாலைக்கண்டதும் பதறி, அதுவும் பாம்போ என நினைத்துத் திடுக்கிட்டதாம். இவ்வாறு நகைச்சுவை உணர்வு தோன்றப் பாடியுள்ளார் பாரதிதாசனார்.

நாஞ்சில் நாட்டுக் கவிஞர் தேசிக விநாயகனாரின், ‘மருமக்கள்வழி மான்மியம்’ ஒரு நகைச்சுவைக் களஞ்சியம் என்பர். இக்கதையில் மருமகனாக வருகின்றவன், பள்ளியில் பயில்கின்ற முறை நகைப்பூட்டுகின்றது. படிக்கச் சென்றவன் எவற்றையெல்லாம் பணயம் வைக்கிறான் பாருங்கள்!

ஆமை வடைக்காய் அரைஞாண் பணயம்
போளிக் காகப் புத்தகம் பணயம்
சீடைக் காகச் சிலேட்டு பணயம்
முறுக்குக் காக மோதிரம் பணயம்
காப்பிக் காகக் கடுக்கன் பணயம்
கூத்துக் காகக் குடையும் பணயம்

‘இப்படிப் பணயம் வைத்தால், படித்து எங்கே முன்னேற்றமடையப் போகிறான்?’ என நடைமுறைச் சமுதாயத்தை எள்ளுகின்றார்.

நாட்டுப்புறப்பாடல்களிலும் நகைச்சுவையுணர்வு மிகுந்திருப்பதனைக் காணலாம்.

‘முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டினேன்’ எனத் தொடங்கும் நாட்டுப்புறப்பாடல் நகைச்சுவை உணர்வுமிக்கது. இக்காலப் புதுக்கவிதைகளிலும் நகைச்சுவை அமைய கவிஞர்கள் பாடியுள்ளார்கள்.

இவ்வாறாகப் பழங்காலம்முதல் இக்காலம்வரை இலக்கியத்தில் நகைச்சுவை அமைந்து மக்களை மகிழ்வித்து வருகின்றது. சிரிக்கத் தெரிந்தவரே வாழத் தெரிந்தவர் என்பதனை உணர்ந்து சிரித்து வாழ்வோம்; சிந்தை மகிழ்வோம்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. பிரித்து எழுதுக.**

1. நகைச்சுவை = ____________
2. மண்ணுலகம் = ____________
3. உள்ளொதுங்கி = ____________
4. புத்துணர்ச்சி = ____________
5. சிற்றிலக்கியம் = ____________

**2. சேர்த்து எழுதுக.**

1. அங்கும் + இங்கும் = ____________
2. வால் + எங்கே = ____________
3. இயற்கை + அன்னை = ____________
4. குரங்கு + அரசர் = ____________

**3. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. இலக்கியச் சுவைகளில் மிகவும் நுட்பமானது ____________ .
2. நகைச்சுவையுணர்வு இல்லாதவருக்குப் பகலும் ____________ தோன்றும்.
3. கம்பர் இயற்றிய நூல் ____________ .

### ஆ) குறுவினாக்கள்

1. நகைச்சுவைபற்றிக் காந்தியடிகள் கூறியதனை எழுதுக.
2. ‘மருமக்கள்வழி மான்மியம்’– குறிப்பு எழுதுக.

### இ) சிறுவினாக்கள்

1. நகைச்சுவை – குறிப்பு எழுதுக.
2. கம்பரின் நகைச்சுவையுணர்வை அவர்தம் பாடல்வழி விளக்குக.
3. மயிலின் கழுத்து நீண்டிருப்பதற்குப் பாரதிதாசனார் புனையும் கற்பனை யாது ?

### ஈ) நெடுவினாக்கள்

1. கலிங்கத்துப்பரணியில் அமைந்துள்ள நகைச்சுவை நயத்தை விளக்குக.
2. காளமேகப்புலவரின் நகைச்சுவையுணர்வை விவரிக்க.

# குழந்தையின் இயல்பு

அக்பரின் அரசவையில் பீர்பால் என்னும் அமைச்சர் ஒருவர் இருந்தார். பீர்பால் கூறும் நயவுரைகள், அக்பருக்கு மிகவும் பிடித்தமையால், அவரைக் கேட்காமல் எந்த ஒரு முடிவும் எடுக்கமாட்டார்.

ஒருநாள், வழக்கம்போல அரசவை தொடங்கியது. அக்பரும் வந்துவிட்டார். ஆனால், பீர்பாலைக் காணவில்லை. காலம்கடந்து கொண்டிருந்ததே தவிர, பீர்பால் வருவதுபோல் தெரியவில்லை. என்ன ஆயிற்று பீர்பாலுக்கு, ஏன் இன்னும் அரசவைக்கு வரவில்லை? உடல் நலமில்லையோ? இவ்வாறு பலவாறாகச் சிந்திக்கத் தொடங்கினார் அக்பர். பொறுமையிழந்த அவர், பீர்பால் வீட்டிற்கு ஆள் அனுப்பி அவரை வரவழைத்தார்.

அக்பர் : வாருங்கள் அமைச்சரே, ஏன் இவ்வளவு தாமதம்? காரணம் என்னவென்று நான் தெரிந்து கொள்ளலாமா?

பீர்பால் : அரசே, தாமதத்திற்குப் பொறுத்துக்கொள்ள வேண்டுகிறேன். என் மகனின் அழுகையை நிறுத்திவிட்டு வருவதற்குத் தாமதம் ஆயிற்று.

அக்பர் : பீர்பால் நீங்கள் சொல்வது மிகவும் வியப்பாக இருக்கிறதே! ஒரு குழந்தையின் அழுகையை நிறுத்துவது அவ்வளவு கடினமான செயலா?

பீர்பால் : ஆம், அரசே! குழந்தையின் அழுகையை நிறுத்துவது அவ்வளவு எளிதன்று.

அக்பர் : பீர்பால், நீங்கள் சொல்வதனை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது. அரசவையில் கடினமாகத் தோன்றும் வழக்குகளைக்கூட எளிதாகத் தீர்க்க எனக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறீர்கள். ஆனால், ஒரு குழந்தையை உங்களால் சமாதானம் செய்ய முடியவில்லை என்று கூறுவது நம்பக் கூடியதாக இல்லையே.

பீர்பால் : அரசே! பெரியவர்களின் வழக்குகளைக்கூட எளிதாகத் தீர்த்து வைத்துவிடலாம்; ஆனால், அடம்பிடிக்கின்ற குழந்தைகளிடம் நம்முடைய வாய்ச்சொல் எடுபடாது.

அக்பர் : அப்படியா சொல்கிறீர்கள்?

பீர்பால் : ஆம், அரசே. அதனை நான் இப்பொழுதே மெய்ப்பித்துக் காட்டுகிறேன்.

அக்பர் : எப்படி மெய்ப்பிப்பீர்கள்? சொல்லுங்கள், பீர்பால்.

பீர்பால் : அரசே, நான் சில மணி நேரத்திற்குக் குழந்தையாக உங்கள் முன் அழுது அடம் பிடிக்கின்றேன். என்னைச் சமாதானம் செய்யுங்கள் பார்க்கலாம்.



அக்பர் : அவ்வளவுதானே, நீங்கள் குழந்தையாக நடிக்கத் தொடங்குங்கள், நான் எவ்வளவு எளிதாகச் சமாளிக்கிறேன், பாருங்கள்.

பீர்பால் தன்னைக் குழந்தையாக நினைத்துக்கொண்டு கை கால்களைத் தரையில் உதைத்துக் கொண்டு அழத் தொடங்கினார்.

அக்பர் : அடடே, ஏனப்பா அழுகிறாய்? என்ன வேண்டும் உனக்கு? அழாதே, குழந்தாய். நீ என்ன கேட்டாலும் வாங்கித் தருகிறேன். நல்ல பிள்ளையாய் அழாமல் இரு, சரிதானே!

பீர்பால் : உக்கும்.....அதெல்லாம் முடியாது. எனக்கு ஒரு யானை வேணும்......

அக்பர் : யானைதானே இதோ வரவழைக்கிறேன். யாரங்கே? உடனே ஒரு யானைப்பொம்மையைக் கொண்டு வா.

(உத்தரவு அரசே என்று ஒரு காவலாளி ஓடிச்சென்று யானைப்பொம்மையைக் கொண்டு வந்தான். பீர்பால் மீண்டும் பெருங்குரலெடுத்து அழத் தொடங்கினார்.)

பீர்பால் : இந்த யானை இல்லே, நான் கேட்டது பெரிய யானை. எனக்கு யானை வேணும்... இப்பவே வேணும்.

அக்பர் : ஓ! உனக்கு உண்மையான யானை வேண்டுமா? சரி... சரி... அழாதே, யாரங்கே, நம்முடைய பட்டத்து யானையை இங்கே அழைத்து வா.

(பட்டத்து யானையும் அரசவைக்குள் நுழைந்தது. யானையைப் பார்த்த பின்னும் பீர்பால் மீண்டும் அழத் தொடங்கினார்.)

அக்பர் : நீ கேட்டதனைத்தான் வரவழைத்துவிட்டேனே, இன்னும் என்ன வேண்டும் உனக்கு? ஏன் மீண்டும் அழுகிறாய்?

பீர்பால் : எனக்கு இப்ப ஒரு ........ஒரு பானை வேணும்..........

அக்பர் : பானையா! காவலாளி, உடனே சென்று ஒரு பானை கொண்டு வா.... இம்...இம்...விரைவாக...

(காவலாளி கொண்டுவந்த பானையைப் பார்த்த பீர்பால் மீண்டும் கைகால்களைத் தரையில் உதைத்துக்கொண்டு அழத் தொடங்கினார்.)

அக்பர் : நீ கேட்டவற்றைத்தான் தந்துவிட்டேனே! மீண்டும் மீண்டும் ஏன் அடம் பிடிக்கிறாய் ?என்று கூறிய அக்பரின் குரலில் சினம் எட்டிப் பார்த்தது.

பீர்பால் : போப்பா !நீ சினம் கொண்டால் நான் எதுவும் சொல்லமாட்டேன். ம்.........ம்..... என்று மறுபடியும் அழத் தொடங்கினார், பீர்பால்.

அக்பர் : அழாதேடா செல்லம். நீ கேட்டவற்றைத்தான் உடனே தருகிறேனே, அப்புறமும் ஏன் அழுகிறாய் ?

பீர்பால் : அப்பா...அப்பா...யானையை இந்தப் பானைக்குள்ளே போட்டுத் தாப்பா....

அக்பர் : என்னது ? இவ்வளவு பெரிய யானையை எப்படி இந்தச் சிறிய பானைக்குள் போட முடியும் ? அதனைச் செய்ய முடியாதுடா கண்ணா.

பீர்பால் : போப்பா, நான் எது சொன்னாலும் முடியாதுன்னே சொல்றீங்க, எனக்கு இப்பவே யானையைப் பானைக்குள்ளே போட்டுக் கொடுங்க இம்.... இம்...

(பெருங்குரல் எடுத்து அழத் தொடங்கினார் பீர்பால். ஒரு குழந்தையை அமைதிப்படுத்துவது அவ்வளவு எளிதான செயலன்று என்பதனை அப்போதுதான் அக்பர் உணரத் தொடங்கினார்.)

அக்பர் : இதோ பாரு செல்லம், யானையைப் பாரு, எவ்வளவு பெரிய உருவம்; ஆனால், அப் பானையைப் பார்த்தாயா, இவ்வளவு சிறிய வடிவம். நீ சொல்வதுபோலச் செய்ய முடியாதுடா, உனக்கு வேறு ஏதாவது வேண்டுமா சொல், இப்பொழுதே கொண்டுவரச் செய்கிறேன்.

பீர்பால் : அது முடியாது. நான் சொல்வதனைச் செய்து காட்டுங்க.

( இம்......இம்.... என்று மீண்டும் அழத்தொடங்கினார். )

அக்பர் : போதும் பீர்பால், போதும். நான் என் தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்.

பீர்பால் : இப்போது புரிந்துகொண்டீர்களா ? என் மகனும் இப்படித்தான் அழுது அடம் பிடித்தான். அவன் அழுகையை நிறுத்துவதற்கே எனக்குப் பல மணி நேரம் ஆயிற்று.

அக்பர் : நீங்கள் என்னை வென்றுவிட்டீர்கள்.

(சிரித்தபடியே எழுந்த பீர்பால், தம் இருக்கைக்குச் சென்றார்.)

## மாதிரி வினா

கட்டுரை வினா

'குழந்தையின் இயல்பு' என்னும் கதையைச் சுருக்கி எழுதுக.

தமிழ்

# யாப்பு, அணி

## யாப்பிலக்கணம்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். அன்பு, தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்?

மாணவர் : ஐவகைப்படும், ஐயா. அவை: எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என்பன.

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய், மகிழ்ச்சி. இன்று உங்களுக்கு யாப்பிலக் கணத்தைப் பற்றிக் கற்றுத்தருகிறேன்.

மாணவர் : ஐயா, யாப்பிலக்கணம் என்றால் என்ன?

ஆசிரியர் : யாப்பு என்றால் கட்டுதல் என்பது பொருள். யாக்கை – யாத்தல் = யாப்பு. எலும்பு, தசை, நரம்பு முதலியவற்றால் உடல் கட்டப்பட்டு இருப்பதுபோலச் செய்யுளுக்கு உரிய உறுப்புகளைக்கொண்டு பாடலை உருவாக்குதலே யாப்பு எனப்படும்.

மாணவர் : ஐயா, செய்யுள் உறுப்புகள் யாவை?

ஆசிரியர் : எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறும் யாப்பின் உறுப்புகளாகும்.

மாணவர் : அவற்றைக் குறித்துச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : ஓரெழுத்து தனித்தோ இணைந்தோ ஒலிப்பது அசை. அது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

அசைகள் பல சேர்ந்து அமைவது, சீர் எனப்படும்.

சீர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்த அமைவது தளை எனப்படும்.

இரண்டு அல்லது பல சீர்கள் சேர்ந்து அமைவது அடி எனப்படும்.

அடிகள் இரண்டு முதலியனவாகத் தொடர்ந்து அடுக்கிப் பாடுவது, பா எனப்படும். இவ்வண்ணம், செய்யுள் இலக்கணத்தைக் கூறுவது யாப்பிலக்கணம் எனப்படும்.

மாணவர் : செய்யுள் என்றாலும் பாட்டு என்றாலும் ஒன்றுதானே, ஐயா.

ஆசிரியர் : ஆம். கவிதை என்றும் தூக்கு என்றும்கூடச் சொல்லலாம்.

மாணவர் : பாவின் வகைகளைக் கூறுங்கள், ஐயா.

ஆசிரியர் : வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகியன பாவின் வகைகள். ஓசைநயத்தை வேறுபடுத்தி அறிவதற்காக நால்வகைப் பாக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாணவர் : வெண்பாவுக்கு ஒரு பாட்டுச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : ஆயிரத்து முந்நூற்று முப்பது திருக்குறளும் வெண்பாதான். ஆனால், இரண்டடிகள் மட்டும் வருவதனால், குறள் வெண்பா என அழைப்பர்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

இது குறள் வெண்பா.

கண்இமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால் – எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு.

இது நேரிசை வெண்பா.

மாணவர் : ஆசிரியப்பாவுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தாருங்கள், ஐயா.

ஆசிரியர் : நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

மாணவர் : கலிப்பாவுக்கு ஒரு பாடல் கூறுங்கள், ஐயா.

ஆசிரியர் : உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே.

மாணவர் : வஞ்சிப்பாவுக்கும் பாடல் ஒன்று சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : வளையாடு மலர்ச்சுனை நீரினிடை
வளையாடுகை மங்கைய ரன்னமென
விளையாடுவ ரோடுவர் கூடுவர்பின்
விளையாடுவர் பைங்கிளி மேவுறவே!

## அணியிலக்கணம்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். இன்று நீங்கள் அணியிலக்கணம்பற்றிக் கற்கப் போகிறீர்கள்.

மாணவர் : அணி என்றால் என்ன, ஐயா ?

ஆசிரியர் : அணி என்றால் அழகு என்பது பொருள். புலவர்கள், பொருளழகும் சொல்லழகும் தோன்றக் கவிதைகளை இயற்றிக் கற்போரை மனங்குளிரச் செய்வார்கள். இதனை விளக்கும் இலக்கணமே அணியிலக்கணம் .

மாணவர் : அணியிலக்கணத்திற்கென நூல்கள் உண்டா ?

ஆசிரியர் : உண்டே. தண்டியலங்காரம், மாறனலங்காரம் என்பன அணியிலக்கணம் குறித்த தமிழ் நூல்கள். அணிகள் பல. உவமையணி குறித்து இன்று கற்போம்.

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

ஊர் நடுவே உள்ள குளம் நிரம்பினாற்போன்றதே உலக உயிர்களையெல்லாம் விரும்பி உதவிசெய்யும் பேரறிவு உடையானிடம் சேர்ந்த செல்வம்.

இப்பாடலில், ஊருணி நீர்நிறைதல் என்பது உவமை. உலகவாம் பேரறிவாளன் திரு என்பது உவமேயம். அற்று என்பது உவம உருபு.

இவ்வாறு உவமை, உவமேயம் இவ்விரண்டனையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படுமாறு வரப்பாடுவது உவமையணி ஆகும்.

மாணவர் : எடுத்துக்காட்டு உவமையணி என்றால் என்ன, ஐயா ?

ஆசிரியர் : சொல்கிறேன்.

புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

ஒருவனது உடல் தூய்மை நீரில் குளிப்பதனால் புலப்படும். உண்மையைப் பேசுவதனால், உள்ளத்தின் தூய்மை புலப்படும்.

இப்பாடலில், உடம்பின் தூய்மை நீரால் அமையும் என்பது உவமை.

உள்ளத்தின் தூய்மை உண்மை பேசுவதனால் உண்டாகும் என்பது உவமேயம். இவ்விரண்டனையும் இணைக்கும் உவம உருபு இல்லை. இப்பாடலில் உவமை, உவமேயம் இரண்டும் தனித்தனியாகக் கொடுக்கப்பட்டு இடையில் உவம உருபு மறையுமாறு அமைக்கப் பட்டுள்ளது. எனவே, இப்பாடல் எடுத்துக்காட்டு உவமை அணி.

மாணவர் : உருவகஅணி பற்றிச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : சொல்கிறேன்.

இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

இப்பாடலில் இன்சொல் – விளைநிலம்; ஈதல் – விதை, வன்சொல் – களை; வாய்மை – உரம் (எரு); அன்பு – நீர்; அறம் – கதிர் என உருவகிக்கப் பெற்றுள்ளதனால், இப்பாடல் உருவக அணியாகும்.

இவ்வாறு உவமானம் வேறு, உவமேயம் வேறு எனத் தோன்றாத வகையில், உவமானத்தின் இயல்புகளை உவமேயத்தின்மேல் ஏற்றிக் கூறுவது உருவக அணி யாகும்.

மதிமுகம் – மதிபோன்ற முகம் – உவமை

முகமதி – முகம் ஆகிய மதி – உருவகம்

பயிற்சி :

1. யாப்பு என்றால் __________ என்பது பொருள்.

அ) அடித்தல் ஆ) சிதைத்தல் இ) கட்டுதல்

2. காற்று அல்லது நீர் என்னும் தலைப்பில் எட்டு வரிகளில் கவிதை ஒன்று எழுதுக.

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்ந்து எழுதுக.

1. அசை __________ வகைப்படும்.

அ) நான்கு ஆ) மூன்று இ) இரண்டு

2. செய்யுள் இயற்றும் இலக்கணத்துக்கு __________ எனப் பெயர்.

அ) அணியிலக்கணம் ஆ) பொருள் இலக்கணம் இ) யாப்பிலக்கணம்

3. உவமானத்தின் தன்மையை உவமேயத்தின்மேல் ஏற்றிக்கூறுவது __________ அணி.

அ) உவமையணி ஆ) உருவக அணி இ) இயல்பு நவிற்சி அணி

2. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அசைகள் பல சேர்ந்து அமைவது __________ எனப்படும்.

2. உவம உருபு வெளிப்பட வருவது __________ அணி.

3. மதிமுகம் – உருவகமாக மாறும்போது __________ எனவரும்.

ஆ) குறுவினாக்கள்

1. செய்யுள் உறுப்புகள் எத்தனை ? அவை யாவை ?

2. பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

3. அணி என்றால் என்ன ?

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

நகைச்சுவையாகப் பேசுவது ஒருகலை. பிறர் மனம் புண்படாதவகையில் நகைச்சுவை அமைதல் வேண்டும். நீங்கள் கேட்டும் பார்த்தும் கண்டும் சுவைத்த ஏதாவது ஒரு நிகழ்வினை நகைச்சுவை கலந்து ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

கீழ்க்காணும் பத்தியைப் படித்து நயம் உணர்க. உணர்ந்ததனை மற்றவருக்கு எடுத்துச் சொல்லுக.

ஒருமுறை மன்னரும், புலவரும் ஆற்றுநீர் காலில்படும்படி நடந்து சென்றனர். அப்போது புலவர் ஆற்றுநீரை அள்ளிக் குடித்தார். அதனைப் பார்த்த மன்னர், "புலவரே! என் காலில் விழுந்த நீரைத்தானே குடித்தீர்" என்றார். உடனே புலவர், "நீரே என்காலில் விழுந்தால் நான் என்ன செய்வது ?" என்று நயம்படக் கூறினார்.

### இ) எழுதுதல் திறன்

உரையாடலை நிறைவு செய்யும் திறன்

(எ.கா.)

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். நேற்று நீ ஏன் பள்ளிக்கு வரவில்லை ?

மாணவர் : உடல்நலம் இல்லாததனால் நேற்றுப் பள்ளிக்கு வரவில்லை, ஐயா.

ஆசிரியர் : மருத்துவரைப் பார்த்தாயா ? என்ன கூறினார் ?

மாணவர் : மலேரியாக் காய்ச்சலாக இருக்கலாம் என்று மருத்துவர் கூறினார், ஐயா.

பயிற்சி : வேலைவேண்டி நேர்காணலுக்குச் சென்ற முருகனுக்கும் நிறுவன மேலாளருக்கும் இடையே நடைபெறும் உரையாடல். கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்றொடர்களால் நிரப்புக.

முருகன் : வணக்கம் ஐயா.

மேலாளர் : வணக்கம். உட்காருங்கள்.

முருகன் : ______________________

மேலாளர் : உங்களுடைய சான்றிதழ்களைக் கொடுங்கள். இதற்குமுன் எங்கு வேலை பார்த்தீர்கள் ?

முருகன் : ______________________

மேலாளர் : அப்படியா, நல்லது. பெங்களூரிலேயே புகழ்பெற்ற நிறுவனமாயிற்றே. ஆனால், அங்கு வேலையை விட்டுவிட்டுச் சென்னையில் ஏன் பணிபுரிய வந்தீர்கள் ?

முருகன் : பெற்றோரின் உடல்நலனைக் கவனிக்கும்பொருட்டு, அவர்கள் இருக்கும் இடத்திற்கு இடமாறுதலும் பணிமாறுதலும் பெற்று வந்தேன்.

மேலாளர் : ______________________

முருகன் : என் கடமையைத்தான் நான் செய்தேன்.

மேலாளர் : உங்களைப்போன்ற பொறுப்பானவர்களைத்தான் நான் தேடிக்கொண்டு இருக்கிறேன். நீங்கள் நாளைமுதல் இங்குப் பணிபுரிய வரலாம். உங்களுடைய பணியமர்வு ஆணையைச் சிறிதுநேரம் காத்திருந்து பெற்றுச் செல்லுங்கள்.

முருகன் : ________________________

## மொழித்திறன் பயிற்சி

### 1. நிறுத்தக்குறிகள்

நாம் பேசும்போது கருத்துகளுக்கேற்ப, நிறுத்திப் பேசுகிறோம். எழுதும்போது, நிறுத்துமிடங்களைக் காட்ட நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்துகிறோம். இவற்றைக் குறிக்காவிடில், சொற்றொடரின் பொருளைப் புரிந்துகொள்வதில் குழப்பம் ஏற்படும்.

முன் வகுப்பில் நிறுத்தக்குறிகளைப்பற்றியும் அவற்றை எங்குப் பயன்படுத்த வேண்டும் என்பதனைப் பற்றியும் அறிந்திருக்கிறீர்கள். அவற்றை நினைவுகூர்ந்து, கீழ்க்காணும் பயிற்சிகளைச் செய்க.

பயிற்சி

அ) கீழ்க்காணும் உரைநடைப்பகுதிகளுக்குப் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுக.

1. எல்லை காத்தனர் தொல்லை தவிர்த்தனர் ஆனால் அவர் வாழ்வில் துன்பத்திற்கோர் எல்லையில்லை தொல்லைக்கோர் அளவில்லை
2. ஒரு கவிதையென்றால் கற்பனை உணர்ச்சி கருத்து வடிவம் ஆகிய நான்கும் இருக்க வேண்டும் என அறிஞர் கூறுவர்
3. திருக்குறள் ஒரு வாழ்வு நூல் அது தமிழகத்தின் செல்வம் அதன் திரண்ட கருத்தெல்லாம் ஒன்றே ஒன்று அது மக்களாய்ப் பிறந்தோரெல்லாம் மக்கட்பண்போடு வாழ்தல் வேண்டும்
4. சேரநாடு வேழமுடைத்து பாண்டிநாடு முத்துடைத்து சோழநாடு சோறுடைத்து தொண்டைநாடு சான்றோருடைத்து என்பது ஔவையின் வாக்கு
5. சிலப்பதிகாரம் தமிழில் முதன்முதலில் தோன்றிய காப்பியமாகும் இதனைக் குடிமக்கள் காப்பியம் என அறிஞர் போற்றுவர்

ஆ) கீழ்க்காணும் தொடர்களில் உரிய நிறுத்தக்குறிகளை இடுக.

1. நான் தண்டமிழைக் கற்று என் வாழ்வில் உயர்ந்தேன் என்று தமிழாசிரியர் கூறினார்
2. அண்ணா சிந்தி சீர்தூக்கு செயல்படு என்று கூறினார்
3. தமிழ் இலக்கணம் ஐவகைப்படும் அவையாவன எழுத்து சொல் பொருள் யாப்பு அணி
4. அடடே ஏனப்பா அழுகிறாய் என்னவேண்டும் உனக்கு
5. அனுமனைப் பார்த்து இராவணன் வாலி நலமா என்று கேட்டான்

தமிழ்

தமிழ்

2. நினைவு கூர்க.

கட்டங்களில் தமிழெண்களை எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 6 | | 11 | | 16 | |
| 2 | | 7 | | 12 | | 17 | |
| 3 | | 8 | | 13 | | 18 | |
| 4 | | 9 | | 14 | | 19 | |
| 5 | | 10 | | 15 | | 20 | |

3. கட்டுரைப்பயிற்சி

தீ விபத்தும் தடுக்கும் முறைகளும்

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்

கவிதாவும், மாலாவும் தோழிகள். ஒருநாள் பகலுணவு வேளையின்போது மாலா வகுப்புக்கு வருகிறாள்.

கவிதா : “மாலா, வா வா. என்னப்பா ஹாப்டே லீவா ? ஏன் காலையில் கிளாசுக்கு வரவில்லை. லேட்டாக எழுந்தாயா ?”

மாலா : “நோ, கவிதா, ஸ்கூலுக்குக் கிளம்பும்போது எங்க மம்மி போஸ்ட்ஆபிசுக்குப் போகச் சொல்லிட்டாங்க. ஊரிலிருக்கின்ற எங்க ஆன்டிக்கு இமிடியட்டா மணியாடர் அனுப்பனும்னு சொன்னாங்க. அதனால்தான் மார்னிங் வரமுடியல. சரி, தமிழ் டீச்சர் டெஸ்ட் வைத்தார்களா ?

கவிதா : வைத்தார்கள். ஆனால், என்னால் எல்லாக் கொஸ்டினுக்கும் ஆன்ஸர் எழுதமுடியல. அதற்குள் பெல் அடித்து விட்டது.

மாலா : அப்படியா ? டோன்ட் வொரி, டீச்சர் மறுபடியும் டெஸ்ட் வைப்பார்கள் அப்போது நன்றாக எழுதலாம்.

இருவரும் பேசிய உரையாடலைப் படித்தீர்களா ?

தமிழும், ஆங்கிலமும் கலந்து பேச வேண்டுமா ?

மேற்கண்ட உரையாடலைப் பிறமொழிச் சொற்கள் கலவாமல் மீண்டும் எழுதுக.

## வாழ்க்கைத்திறன்

### ஒருவரோடு ஒருவர் பழகும் திறன்

அழகனுக்கு அவனுடைய தந்தை புதிய மிதிவண்டி ஒன்றனை வாங்கிக் கொடுத்தார். அழகன் தந்தையின் அறிவுரைப்படி அதனை மிகவும் விழிப்புடன் பாதுகாத்தான். ஒருநாள், அழகனின் நண்பன் சோழன் மிதிவண்டியை ஓட்டிப் பார்ப்பதற்காக அவனிடம் கேட்டான். அழகனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. மிதிவண்டி பழுதாகிவிடுமோ என்று அஞ்சினான். அதேநேரம் மிதிவண்டியைக் கொடுக்காவிட்டால், நண்பன் விலகிச் சென்றுவிடுவானோ என்றும் அச்சம் கொண்டான்.

இந்நிலையில் அழகன் எத்தகைய முடிவு எடுத்திருப்பான் ?

## மதிப்புக்கல்வி

### நன்றியுணர்வு

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த மாவீரன் நெப்போலியன் இராணுவக் கல்லூரி ஒன்றில் படித்துக் கொண்டிருந்தார். அங்கு வயதான பெண்மணி ஒருத்தி பழம் விற்றுக்கொண்டிருந்தார். அவரிடம் நெப்போலியன் எப்போதும் பழம் வாங்குவார். பணம் இல்லையென்றாலும் கடனுக்கு வாங்கி அதனை இரண்டு மூன்றுநாளில் திருப்பிச் செலுத்திவிடுவார். ஒருமுறை அவர் கடனுக்கு வாங்கிய நேரம், இராணுவக் கல்லூரியை விட்டுச் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. கடனைத் திருப்பிச் செலுத்தாமலேயே அவர் சென்றுவிட்டார். இராணுவத்தில் உயர்ந்த பதவியில் சேர்ந்தார். மீண்டும் அதே ஊருக்குத் திரும்பி வந்தார். அப்போது, தான் கடன் சொல்லிவிட்டுச் சென்றுவிட்ட அந்த வயதான பெண்மணியைக் காணச் சென்றார். அப்பெண்மணி வழக்கம்போல, அதே இடத்தில் பழம் விற்றுக்கொண்டிருந்தார். அங்குச் சென்ற நெப்போலியன் அவரிடம் பழம் வாங்கினார். வாங்கியதற்கு அதிகமாகவே பணத்தைக் கொடுத்தார். பணத்தை வாங்கிய அந்தப் பெண்மணி திகைத்தார். “என்ன பாட்டி, என்னை அடையாளம் தெரியவில்லையா ? நான்தான் உங்களிடம் வழக்கமாகப் பழம் வாங்கிய நெப்போலியன். அன்று உங்களிடம் வாங்கிய பழத்திற்குப் பணம் கொடுக்கவில்லை அல்லவா ? இப்போது சேர்த்து வாங்கிக் கொள்ளுங்கள்” என்றார்.

நெப்போலியனின் நன்றியுணர்வைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?

நீங்களும் நெப்போலியனைப்போன்று நன்றியோடு இருந்து வாழ்ந்து காட்டுங்கள்.

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
|---|---|

கீழ்க்காணும் பத்தியை ஆசிரியர் படிக்க மாணவர்கள் உற்றுக்கேட்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

கட்டுரை எழுதத் தொடங்கும்முன் அதனைப்பற்றிய கருத்துகள் பல எழுதுபவரின் எண்ணத்தில் தோன்றுதல் வேண்டும். பொருளுக்கேற்பக் கூறுதல், வரிசைப்படுத்துதல், சுருக்கமாகக் கூறுதல் முதலிய சிறந்த இயல்புகளைக் கேட்டல் திறன் வாயிலாக ஒருவர் கற்றுக் கொள்ளலாம். கற்றல் கேட்டல் ஆகிய இவ்விரண்டனை மட்டும் பெற்றிருக்கும் ஒருவர், ஓர் அகரமுதலிக்கு இணையானவர் ஆவார். ஏனெனில், அகரமுதலி ஒருவர் அறிந்துகொள்ள விரும்பும் விவரங்களை மட்டும் தருமேயன்றி, அவற்றைத் தொடர்புபடுத்திக் கூறாது. ஒருவர் தாம் அறிந்து கொண்டதனைப்பற்றி நன்கு சிந்தித்து ஆராய்தல் வேண்டும். சிந்தனையின் விளைவே சிறந்த அறிவாகும். கருத்துகளை ஆராய்ந்து தொடர்புபடுத்துதலே தெளிந்த அறிவாகும். ஒருவர் புத்தகப்பூச்சியாக மட்டும் இருந்துவிடாமல், இயற்கையில் உள்ளனவற்றையும் காணுதல் வேண்டும். ஏனெனில், பட்டறிவுக்கல்வி அனைவருக்கும் இன்றியமையாததாகும். 'மற்றவர்கள் கூறுவதனைவிட நான் என்ன காண்கின்றேன் ?' என்னும் வினா ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் எழுதல் வேண்டும். நாள்தோறும் நம்வாழ்வில் காண்பனவற்றை எழுதியும், வருணித்தும், விவரித்தும்வரின் நமது சிந்திக்கும் திறனும் கட்டுரை எழுதும் வன்மையும் பெருகும் என்பது திண்ணம்.

வினாக்கள்

1. உரைப்பத்தியின் மையக் கருத்து யாது ?
2. அகரமுதலிக்கு இணையானவர் யார் ?
3. புத்தகப்பூச்சி என யாரை அழைக்கிறோம் ?
4. பட்டறிவுக்கல்வி ஏன் தேவை ?
5. சிந்தனையின் விளைவாகத் தோன்றுவது எது ?

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

கீழ்க்காணும் உரையாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் பேசுக.

(சேரமான் கணைக்கால் இரும்பொறைக்கும் சோழன் கோச்செங்கணானுக்கும் நடைபெற்ற போரில், சேரமான் கணைக்கால் இரும்பொறை தோல்வியுறுகின்றான். அவனைச் சிறையில் அடைத்துத் துன்புறுத்துகின்றான் கோச்செங்கணான். சிறையில் வாடிய இரும்பொறைக்கும் சிறைக் காவலர்களுக்கும் இடையே நடைபெறும் உரையாடல் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது.)

இரும்பொறை : ஆ ! தண்ணீர், தண்ணீர். என் நா உலர்ந்துவிட்டது. யாரங்கே ? குடிக்க நீர் கொணருங்கள். நான் அழைப்பது உங்கள் செவிகளில் விழவில்லையா ?

சிறைக்காவலர் – 1 : ஆகா ! நன்றாகக் கேட்கிறது.(செவியில் விழாததுபோல்) யாரோ ஒருவன் தண்ணீர், தண்ணீர் என்று அலறுகின்றான்.

சிறைக்காவலர் – 2 : ஐயோ பாவம் ! தண்ணீர் கேட்டுத் தவிப்பவன் சேர மன்னன் இரும்பொறை போலிருக்கிறதே !

தமிழ்

சிறைக்காவலர் – 1 : ஆமாம். நம் அரசனிடம் போரிட்டுத் தோல்வியுற்ற இரும்பொறைதான்.

சிறைக்காவலர் – 2 : நம் அரசனிடம் போரிட்டுத் தோற்ற பின்பும், அவனது ஆணவம் குறையவில்லையே! குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டுமாம். தண்ணீர் வேண்டுபவன் தாழ்மையுடன் அல்லவா கேட்டல் வேண்டும்?

சிறைக்காவலர் – 1 : உடனடியாக நீர் தராவிட்டால் இறந்தா போய்விடுவான்? இன்னும் சிறிது நேரம்தான் புலம்பட்டுமே!

இரும்பொறை : சிறைக் காவலர்களே! என்னையும் குற்றவாளி என நினைத்துக் கொண்டீரோ! நான் சேரநாட்டு அரசன் கேட்கிறேன். என் நீர்வேட்கையைத் தீருங்கள்.

(சிறிதுநேரம் கழித்து)

சிறைக்காவலர் – 1 : தண்ணீர், தண்ணீர் என்று அலறியது நீதானா? இதோ, தண்ணீர். பெற்றுக்கொள்.

(தண்ணீருக்காகச் சேரன் கை நீட்டும்பொழுது வேண்டுமென்றே காவலர்கள் கொடுப்பதுபோல் கொடுத்து ஏமாற்றுதல். குவளையில் சிறிதளவு மட்டுமே தண்ணீர் இருத்தல். அதனைச் சேரன் பெறுதல். ஆனால், அத்தண்ணீரை அருந்தாமல் ஓர் ஓரமாக வைத்தல்.)

இரும்பொறை : 'சிறைக் காவலர்களே! போர்க்களத்தில் வாளினால் வீழ்ந்துபட்டவர்களுக்கே தேவருலகம் கிட்டும். இறந்து பிறக்கும் குழந்தையும் உருவின்றிப் பிறக்கும் குழந்தையும் வாள் வடுவினைப்பெறும் வாய்ப்புப் பெறா. எனினும், அவற்றையும் தேவருலகம் அனுப்ப புல்மீது கிடத்தி, 'வெற்றி வீரர் சென்ற வழியே இவையும் செல்க' என வாழ்த்தி, வாளால் வெட்டிப் புதைப்பர். இத்தகைய பண்புநலம் வாய்க்கப்பெற்ற அரச மரபிலே தோன்றிய என்னை, நீவிர் மதியாது போயினீர். நீர்வேட்கையைப் பொறுத்துக் கொள்ளாமல் யான் உங்களைக் கெஞ்சிக் கேட்டும், காலந்தாழ்த்தித் தண்ணீர் தந்தீர். தன்னை மதியாதார் தந்த நீரைப் பருகும் இழிநிலையுடைய கீழ்மகனாக இவ்வுலகத்தில் பிறந்திலன்'. (என்று கூறியவாறே சேரமான் கணைக்கால் இரும்பொறை கவி பாடிக் கலங்கி மயங்கி விழுந்தான்.)

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் பாடலை ஓசைநயத்துடன் பாடிக்காட்டுக.

| | |
|---|---|
| பள்ளிக்குச் செல்கின்ற தம்பி – நன்கு<br>பாடங்கள் பயின்றிடு நம்பி!<br>துள்ளிநீ குதித்தாடு தம்பி – இன்பம்<br>துய்க்கின்ற நீஅன்றோ தும்பி!<br><br>அமிழ்தான பாடல்கள் பாடு – புது<br>அறிவூட்டும் நூல்களை நாடு!<br>தமிழ்தந்த கலையாவும் தேடு – பகை<br>தனைக்கண்டால் நீயங்குச் சாடு! | ஏழைக்கு நீஅன்பு காட்டு – உனை<br>எதிர்த்தாரை நீபொங்கி ஓட்டு!<br>கோழைக்கு வீரத்தை ஊட்டு – உயர்<br>கொள்கைக்காய் நீவாழ்ந்து காட்டு!<br><br>ஒளிமிக்க எதிர்காலம் கண்டு – நீ<br>உயர்வாய் அந்நம்பிக்கை உண்டு !<br>களிஇன்ப நல்வாழ்வு கொண்டு – கன்னித்<br>தமிழுக்கு ஆற்றுக தொண்டு!<br><br>கோ. அ. அப்துல் லத்தீப், என் தமிழ் |

## எழுதுதல் திறன்

| சொற்பொருளறிதல் | செயல்பாடு – 4 |
|---|---|

| ஒரு பொருள் | பல சொற்கள் |
|---|---|
| சோறு | அடிசில், அமலை, அயினி, உண்டி, உணா, ஊண், கூழ், சொன்றி, துற்றி, பதம், பாத்து, பாளிதம், புகா, புழுக்கல், புற்கை, பொம்மல், மடை, மிசை, மிதவை, மூரல், வல்சி |

இவை, ஒரு பொருள் குறித்த பல சொற்கள் என வழங்கப்படுகின்றன. இத்தகைய ஒரு பொருள் குறித்த பல சொற்களைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்துவதனைச் சொல்லாட்சி என்பர்.

(எ.கா.) சோறு என்னும் பொருளில் இடம்பெற்றுள்ள பாடல் அடிகள்

உண்டி – அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட . . . . ( நாலடியார், 1 )
கூழ் – கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியனகர் . . . . (புறநானூறு, 70)
புழுக்கல் – உப்பிலிப் புழுக்கல் . . . . ( சீவகசிந்தாமணி, 2984)
பொம்மல் – இறடிப்பொம்மல் பெறுகுவீர் . . . . (மலைபடுகடாம், 169)
மூரல் – பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர் . . . . (பெரும்பாணாற்றுப்படை, 168)
வல்சி – வளைகதிர் வல்சிகொண் டளைமல்க . . . (புறநானூறு, 190)

பயிற்சி

ஒரு பொருள் உணர்த்தும் பல சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பொருத்துக.

| வ.எண் | ஒரு பொருள் | பல சொற்கள் |
|---|---|---|
| 1. | மிகுதி | கூறு, விளம்பு, மொழி, இயம்பு, உரை |
| 2. | பேசு | ஞாயிறு, கதிரவன், பரிதி, பகலவன், வெய்யோன் |
| 3. | சூரியன் | சால, தவ, நனி, கூர், கழி |
| 4. | குழந்தை | புவி, தரணி, நானிலம், பார், வையம் |
| 5. | உலகம் | பிள்ளை, குழவி, மகவு, சேய் |

| விடுகதைகளுக்கான விடை காணல் | செயல்பாடு – 5 |
|---|---|

நாட்டுப்புறப் பாடல்களில் வழங்கும் விடுகதைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளைக் கண்டறிந்து எழுதுக.

1. பூட்டில்லாப் பெட்டி, பெட்டிக்குள் வைரம், வைரத்து ஒளியாலே வையகமே தெரியுது – அஃதென்ன ?
2. எட்டாத தூரத்திலே எவரும் இல்லாக் காட்டினிலே
   எழிலான பெண்ணொருத்தி இரவெல்லாம் சிரிக்கின்றாள் – அவள் யார் ?
3. தன்னைத்தான் பலி கொடுப்பான் மற்றவருக்கு ஒளி கொடுப்பான் – அவன் யார் ?

| |
|---|
| 4. உப்பை உண்டவன் உறங்காமல் அலைகிறான். அவன் யார் ? |
| 5. அக்காள் வீட்டுக்குத் தங்கை போகலாம்; தங்கை வீட்டுக்கு அக்காள் போக முடியாது. அவையென்ன ? |

விடைகள் வளரறி செயல்பாடுகளின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

## சொல்லுருவாக்குதல் — செயல்பாடு – 6

கீழ்க்காணும் எழுத்துகளை முதல் எழுத்தாக அமைத்துப் பெயர், ஊர்/இடம், பொருள், பறவை, விலங்கு, பூ, தொழில், கருவி ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களைக் கண்டறிந்து அட்டவணையை நிரப்புக.

| எழுத்து | பெயர் | ஊர்/இடம் | பொருள் | பறவை | விலங்கு | பூ | தொழில் | கருவி |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | ஆதவன் | ஆடுதுறை | ஆடை | ஆந்தை | ஆமை | ஆவாரம்பூ | ஆசிரியர் | ஆணி |
| வா | | | | | | | | |
| கா | | | | | | | | |
| செ | | | | | | | | |
| தி | | | | | | | | |
| பொ | | | | | | | | |

## பழமொழிகளின் பொருளறிதல் — செயல்பாடு – 7

பொருத்துக.

| பழமொழி | பொருள் |
|---|---|
| தாயைப்போலப் பிள்ளை, நூலைப்போலச் சேலை. | அறிவுரை |
| ஆடிப்பட்டம் தேடி விதை. | நம்பிக்கை |
| மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே. | உறவுமுறை |
| தை பிறந்தால் வழி பிறக்கும். | நகைச்சுவை |
| பசியாமல் இருக்க வரந்தருவேன், கொஞ்சம் பழையது இருந்தால் போடு. | உழவு |

## கோடிட்ட இடத்தைப் பொருளறிந்து நிரப்புதல் — செயல்பாடு – 8

பொருள் மயக்கம் தரும் சொற்கள் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் பொருளறிந்து கீழ்க்காணும் தொடர்களை நிரப்புக.

1. உன் வீட்டில் ______________ அறைகள் உள்ளன ? ( எத்தனை, எத்துணை )

தமிழ்

2. தாயைக் கண்டதும் குழந்தைக்குத்தான் __________ மகிழ்ச்சி. ( எத்தனை, எத்துணை )

3. __________க்கின்ற நாய் கடிக்காது. ( குரை, குலை )

4. தென்னைமரத்தில் தேங்காய்கள் __________யாகத் தொங்குகின்றன. ( குரை குரை, குலை குலை )

5. நாள்தோறும் விடியற்காலையில் எழுவது என் __________ . ( வழக்கம், பழக்கம் )

6. விளையாட்டு வீரர் சச்சின் இடக்கை __________ உடையவர். ( வழக்கம், பழக்கம் )

7. இன்று மாலை நடைபெறும் கூட்டத்தில் __________ கலந்து கொள்ளுதல் வேண்டும். ( தவறாமல், தவிராமல் )

8. பூம்புகார்ப் __________ ஒரு காலத்தில் சிறந்த கடற்கரை நகரமாக விளங்கியது. ( பட்டினம், பட்டணம் )

| செயல்பாடு ஐந்துக்கான விடைகள் |
| --- |
| **1.** கண் **2.** நிலவு **3.** மெழுகுவத்தி **4.** கடல் **5.** உழக்கு, படி. |

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

1. கோடிட்ட இடத்தை நிரப்புக. 5 X 1 = 5

அ. இலக்கியச் சுவைகளில் மிகவும் நுட்பமான சுவை __________ .

ஆ. நகைச்சுவையுணர்வு இல்லாதவருக்குப் பகலும் __________ ஆகத் தோன்றும்.

இ. கம்பராமாயண வானரத்தலைவன் __________ .

ஈ. கலிங்கத்துப்பரணியின் ஆசிரியர் __________ .

உ. மருமக்கள் வழி மான்மியம் ஒரு __________ களஞ்சியம்.

2. கீழ்க்காணும் குறட்பாவில் பயின்றுவரும் அணியைத் தேர்ந்தெடுக்கவும். 2 X 1 = 2

அ. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.
(உவமையணி, எடுத்துக்காட்டு உவமையணி)

ஆ. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.
(உவமையணி, எடுத்துக்காட்டு உவமையணி)

3. கீழ்க்காணும் உரைப்பத்தியில் இடம்பெற்றுள்ள நகைச்சுவையை விளக்குக. 3 X 1 = 3

தமிழறிஞர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள், பேசுவதற்காக ஓர் ஊருக்குச் சென்றார். தொடர்வண்டியில் சென்று காலையில் அவ்வூரில் இறங்கினார். அவரைப் பேசுவதற்கு அழைத்தவர்கள் மாலையிட்டு அவரை வரவேற்றார்கள். அதனைக் கண்ட கி. வா. ஜகந்நாதன், 'ஏதேது ? காலையிலே மாலை வந்துவிட்டதே!' என்றார் .

தமிழ்

# “என்னால் முடியும், நானே செய்தேன்”

## (‘I can, I did’)

### மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

| வ.எண் | நாள் | பாட எண் | பாடத்தலைப்பு | செயல்பாடு | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |